# அகமும்-புறமும்

## அகம்

அ. ச. ஞானசம்பந்தன்

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

முதற்பதிப்பு: ஏப்ரல், 1956
இரண்டாம் பதிப்பு: மார்ச்சு, 1960

உரிமையாளர்: ஞா. இராசம்மாள்

விலை ரூ. 3—0—0

முத்தமிழ் அச்சகம், காஞ்சீபுரம், 1960.

# முகவுரை

பழந்தமிழனுடைய ஒப்பற்ற வாழ்வின் புறப்பகுதியைக் கூறும் ‘புறம்’ என்ற நூலை அடுத்து வெளி வரும் இந்நூல் அவனுடைய குடும்ப வாழ்வு பற்றிக் கூறுகிறது. ஒரு சமுதாயத்தார் சிறந்த நாகரிகமும் பண்பாடும் பெற்றுச் சிறந்து வாழ்ந்தனராயின், அதன் அடிப்படை அவர்களுடைய குடும்ப வாழ்விலேதான் காணப்பெறும். வீட்டில் நல்வாழ்வைப் பெறாத சமுதாயம், வெளியில் சிறந்த வாழ்வைப் பெறுதல் என்பது வேரில்லாத மரம் தழைத்தது என்பது போலத்தான். அகவாழ்வு நன்கு சிறவாமையாலேதான் ரோம, கிரேக்க, எகிப்திய நாகரிகங்கள் இன்று சரித்திரத்தில் மட்டும் இடம் பெறும் நிலையை அடைந்துவிட்டன. எனவே, பழந்தமிழர் நாகரிகத்தின் ஆணி வேராய் விளங்கிய அகவாழ்வை மூன்று பிரிவாகக் காண்கின்றது இந்நூல்.

முதல் பிரிவில் ‘அகம்’ என்பதன் அடிப்படையும், மனத் தத்துவமும், குறிக்கோளும் பயனும் ஆயப்படுகின்றன. உலகுக்கு ஒரு பொது மறையாகிய குறள் கருத்துப்படி அமையும் இல்வாழ்வு எத்தகையதாய் அமைதல் வேண்டும் என்பதைக் காண்பதே அடுத்த பிரிவு. இந்த இரண்டு இலக்கணங்களையும் கொண்டு சில அகப்பாடல்கள் ஆயப்படுகின்றன, மூன்றும் பிரிவாகிய ‘இலக்கியத்தில் வாழ்வு’ என்னும் பகுதியில்.

இந்நூலில் வேண்டும் திருத்தங்களைச் செய்து உதவிய உயர்திருவாளர் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கும், வழக்கம் போல நன்முறையில் இதனை அச்சியற்றித்தந்த முத்தமிழ் அச்சக உரிமையாளர் திருவாளர் S. காளப்ப முதலியாருக்கும் நன்றியுடையேன்.

ஆசிரியன்

# உள்ளுறை


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. அகத்தின் அடிப்படை | ... | 1 |
| 2. வள்ளுவர் கண்ட அகவாழ்வு | .... | 25 |
| 3. இலக்கியத்தில் வாழ்வு | ... | 87 |

# அகத்தின் அடிப்படை ★ ★

தமிழனுடைய புறவாழ்வின் சிறப்பைப்பற்றி முற்பகுதியில் கண்டோம். இவ்வளவு சீரும் சிறப்புடனும், உயர்ந்த குறிக்கோளுடனும் ஒரு சமுதாயம் வாழவேண்டுமாயின், அவ்வாழ்வில் அமைதி நிறைந்திருத்தல் வேண்டும். அமைதி இல்லாத வாழ்வில் பண்பாடு, நாகரிகம், குறிக்கோள் என்பவை தோன்றா; தோன்றினாலும், நிலைத்து வளரா. பழந்தமிழன் வாழ்வில் சிறந்த குறிக்கோளும், பண்பாடும் நிறைந்து காணப்பெற்றன எனில், அவனுடைய வாழ்வு அமைதி நிறைந்ததாய் இருந்திருக்கும் என்று கூறத் தேவை இல்லை. அமைதி என்பது புறத்தே இருந்து வருவதன்று; அகத்தே தோன்றுவது. எத்துணை விரும்பினும், விலை கொடுக்க முயன்றாலும் சிலருக்குக் கிட்டாத இவ்வமைதி, ஒரு சிலருக்கு எளிதாகக் கிடைத்துவிடுகிறது.

### அமைதி தோன்றுவது எங்கே?

அமைதி அகத்தே தோன்றி மலர்வதாயினும், அதனுடைய வளர்ச்சிக்குப் புறமும் ஓரளவு உதவி புரிகின்றது. பல சந்தர்ப்பங்களில் புறப்பொருள்கள் அமைதியின் வளர்ச்சிக்குத் துணை புரியாவிடினும், இடையூறு செய்யாமல் இருந்தாற் போதும் என்று கூறத் தோன்றுகிறது. இதனாலேயே அமைதியை நாடி அலையும் பெரியோர்கள் மக்கட் கூட்டம் இல்லாத காடு முதலியன நோக்கி ஓடிவிடுகிறார்கள்போலும்! காடு நோக்கி ஓடினாலும் புறத்தே அமைதியான சூழ்நிலையை உண்டாக்கிக்கொள்ளலாமே தவிர, அகத்தே—மனத்தினுள்ளே—அமைதியைப் பெற முடியாது. அது தானே முகிழ்ப்பது. அகத்தே அமைதி பிறக்கப் புறச்சூழ்நிலை ஓரளவு துணைக் காரணமாகலாம்.

### அமைதி வேட்டை

உலகில் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் இவ்வமைதியை நாடி அலைகிறான். எத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தால் இது எளிதிற்கிட்டும் என்றறியப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மனித சமுதாயம் வாழ்ந்து பார்க்கின்றது. தனி வாழ்க்கை சமுதாய வாழ்க்கை, கூட்டு வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை என்ற பல வகை வாழ்க்கையினும் மனிதன் நாடி அலைவது இவ்வமைதியையே!

### தமிழன் கண்ட விடை

ஏனைய சமுதாயத்தார் இத்தகைய அமைதி வேட்டையில் இறங்குமுன்னரே தமிழன் அமைதியை அடைய மிகுதியும் உதவும் ஒரு சூழ்நிலையைக் கண்டான். அதுவே இல்வாழ்க்கை எனப்படும்.

பிற நாட்டார் இல் வாழ்வின் இன்றியமையாமையை அறியுமுன்னரே இவன் அதன் பெருமையைய நன் குணர்ந்தான.

'அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.' (குறள். 49)

என்றும,

'இல்லறம் அல்லது நல்லறம் அன்று.'

என்றும எழுந்த கூற்றுககள இவவுண்மையை உணர்த்துகின்றன. அறத்தின் வழி வாழ்வதன் சிறப்பை உணாததிய வள்ளுவர், அடுத்து 'அறன எனபபட்டதே இலவாழககை' என்று கூறுவா ராயின, இல வாழ்வின் சிறபபை வேறு எவவாறு விளக்குவது? மேலும், அறம என்ற சொல்லையே பெய்து 'இலலறம' என்று பெயரும இடுவராயின, எததுணைத் தூரம அதன் சிறப்பை அறிநதிருந் தனர் இத்தமிழா எனபது கூறவும வேணடுமோ?

## இரு வகை அறிவு

மிகப பழைய காலததேகூட மனிதன தன வாழவு முழுததனமையுடையதாய இருத்தல வேணடும என்று விருமபினன. முழு வாழவு என்று எதனைக குறிககின்றோம? மனிதனிடத்துக் காணபபடும பொறிபுலனகளும அறிவும நன்கு பயன படும பொழுது அதனை முழு வாழவு எனக கூறு கிறோம. ஏனைய விலஙகினஙகளிலிருந்து மனித னைப பிரிபபது அவனுடைய றுண்மை பொருந் திய மூளை. இமமூளையின பயனாக அவனுக்குக் கிடைத்தது அறிவு. அறிவு ஆயப் பயனபட்டது, பரந்துபட்ட உலகில பல்வேறு வடிவுடனும் உரு வுடனும இயலபுடனும பொருளகள காட்சி வழஙகு கின்றன. வடிவு, உருவு, இயல்பு என்ற இவற்றை

நன்கு ஆய்ந்து இப்பொருள்களின் இடையேயுள்ள வேற்றுமையைக் காண்கிறது சாதாரண அறிவு. அது கண் முதலாய பொறிகளின் வழிப்பட்ட அறிவும் ஆம். இதனையடுத்து நுண்ணிய அறிவு தொழிற்படத் தொடங்குகிறது. பொருள்களின் இடையே காணப்படும் இவ்வேற்றுமைகளில் பொதுத்தன்மை உண்டாவென ஆய்கிறது அந் நுண்ணறிவு. பொதுத் தன்மையைக்கண்டு வேறு பட்ட வடிவு, உருவு, இயல்புடைய பொருள்களில் ஒற்றுமையைக் காண முற்படுகிறது நுண்ணறிவு. சுருங்கக் கூறின், வேற்றுமையில் ஒற்றுமையும் ஒற்றுமையில் வேற்றுமையையும் காண்பதே நுண்ணறிவாகும். பொறிகளின் மூலம் கண்டோ கேட்டோ பொருள்களின் வேறுபாட்டை அறியும் அறிவைப் பொதுமறை,

> 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு' (குறள், 423)

என்றும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் நுண்ணறிவை,

> 'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு.' (குறள், 355)

என்றும் கூறிச் செல்கிறது. பின்னையது முன்னையதைவிடச் சிறந்தது என்பதையும் எளிதில் உணரலாம். அதனாலேயே வள்ளுவரும் பொருளின் தன்மையை அறியும் நுண்ணறிவை 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தில் வைத்துள்ளார். இரண்டையும் 'அறிவு' என்றே குறள் குறிப்பிட்டாலும், இரண்டிற்கும் ஓரளவு வேறுபாடு உண்டென்பதை யாரும் எளிதில் அறிய முடியும்.

## முழு வளர்ச்சி

மனிதன் முழுத்தன்மையடைய[1] இவ்வறிவு மிகவும் இன்றியமையாதது. ஆனால், எத்துணைச் சிறந்ததாயினும் அறிவு ஒன்றைமட்டும் வைத்துக்கொண்டு மனிதன் வாழ முடியாது. வாழ்ந்தாலும், அதனை முழு வாழ்வு என்று கருத முடியாது. மனித வளர்ச்சியில் அறிவு ஒரு பகுதியேயாம். அளவு மீறி இதனையே பெரிதெனப் போற்றி வளர்த்தால் மற்றொரு பகுதியின் வளர்ச்சியை இது தாக்கும்.

## உதாரணம்

குத்துச் சண்டை செய்கிறவர்களைப் பார்க்கிறோம். அவர்கட்குப் போரில் பயன்படுவன இரண்டு கைகளுமே. ஆனால், கைகளில் மட்டும் முழு வன்மையைப் பெற்றுவிட்டதால் ஒருவன் சிறந்த குத்துப் போர் வீரன் ஆதல் இயலுமா? இயலவே இயலாது. ஏனைய உறுப்புக்களையும் உடன் வளர்க்காமல் கைகளை மட்டும் வலுவடையச் செய்த ஒருவன் குத்தினால் அதைப் பொறுப்பது எதிரிக்கு இயலாதுதான். ஆனால், பொறுத்துக்கொண்டு அவன் மீட்டும் குத்தினால் அதனைப் பொறுக்கவும் நைவின்றி ஏற்றுக்கொள்ளவும் இவனுக்கு மார்பிலும் முகத்திலும் வலு வேண்டாவா? குத்துப் போர் வீரன் உடல் முழுவதும் வன்மை பெறாமல் கையில் மட்டும் வன்மை பெற்றிருந்தால், அவன் 'வீரன்' என்ற பெயருக்கு இலக்காக முடியுமா? அவன் முழு வீரன் ஆதல் கூடுமா? வீரன்* என்ற பெயருக்கு உரியவனாக வேண்டுமாயின், முழு உடலிலும் வன்மை பெற்றிருக்க

1. Development of full personality

வேண்டும்; எல்லா உறுப்புக்களிலும் வளமை பெற்றிருக்க வேண்டும்.

## வேண்டப்படுவன இரண்டு

அதே போன்று 'மனிதன்' என்ற பெயருக்கு ஏற்ப ஒருவன் வாழ வேண்டுமாயின், அவனுக்கு இன்றியமையாமல் வேண்டப்படுவன இரண்டு. முதலாவது உள்ளத்து உணர்வு, இரண்டாவது அறிவு. இரண்டும் வளம் பெற்றாலன்றி, அவன் முழுத் தன்மையுடையவன் எனக் கருதப்படான். ஒன்றைச் சுருக்கி மற்றொன்றை வளர்ப்பதால் விளைவது தீங்கேயாம். உலக சரித்திரத்தை ஒரு முறை நோக்கினால், இவ்வுண்மை நன்கு விளங்கும். எத்தனையோ சமுதாயங்கள் மிக்க சிறப்புடன் வாழ்ந்தும் நிலைபேறில்லாமல் அழிந்தொழிந்தன. காரணம் யாது? உணர்வு, அறிவு என்ற இரண்டையும் ஒருங்கே வளர்த்திருந்தால் அவை நிலைபெற்றிருக்கக் கூடும். பலமான காற்றடித்தாலும், பிறர் தள்ளிவிட நேர்ந்தாலும் இரண்டு கால்களையும் ஊன்றி நிற்பவன் நன்கு நிற்றல் கூடும். அவ்வாறன்றி ஒரே காலில் நிற்பவன் உயிரைப் பிடித்துக்கொண்டு நிற்றல் கூடுமே தவிரப், பிறர் தாக்கினால் விழாதிருத்தல் இயலாது. அதே போலச் சமுதாய வாழ்வுக்குத் தேவையான உணர்வு, அறிவு என்ற இரண்டு கால்களினாலும் நிற்கும் சமுதாயம், காலம் என்னும் பேய்க்காற்றாலும், பிற நாகரிகம் என்ற தாக்கு முயற்சியாலும் வீழ்வதில்லை. இதன் மறுதலையாக ஒரு காலில் நிற்கும் நிலை ஏற்பட்ட சமுதாயங்கள் நிலைபெறவில்லை. உணர்வையே பெரிதாகக் கொண்ட நாகரிகம் படைத்த சமுதாயமும் வீழ்ச்சியுற்றது; அறிவையே பெரிதாகக்

கொண்ட சமுதாயமும் வீழ்ச்சியுற்றது. பழந்தமிழன் வாழ்வின் சிறப்பு யாதெனில், உணர்வு, அறிவு என்ற இவ்விரண்டையும் ஒரு சேர வளர்க்க முற்பட்டமையேயாம்.

அறிவு வளர்ச்சியின் பயன்

மனிதன் அறிவை வளர்ப்பதால் பெறும் பயன் விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல் முதலியவை களாம். இவற்றின் வளர்ச்சியால் மனிதனின் புற வாழ்வு செம்மையடைந்தது. வெயிலிலும் மழை யிலும் அவதியுற்ற மனிதன், வீடு கட்டி, நெருப்பு வளர்த்து, வண்டி செய்து வாழக் கற்றுக்கொண் டது விஞ்ஞான அறிவை வளர்த்ததன் பயன். நிலத் திற் கிடைக்கும் பயனை நாளைக்கு வேண்டும் என்று சேமித்து வைத்துப் பிறருக்கும் பகிர்ந்து அளித்து வாழத் தொடங்கியது பொருளாதார அறிவை வளர்த்ததன் பயன். கூட்டங்கூடி வாழத் தொடங்குகையில் ஒருவனைத் தலைவன் என வைத் துக்கொண்டு சட்ட திட்டங்களை ஏற்படுத்தி அவற் றிற்குக் கட்டுப்பட்டு வாழத் தொடங்கியது அரசியல் அறிவு வளர்ந்ததன் பயன். இவற்றை மேலும் மேலும் வளர்ப்பதால் மனிதனுடைய அறிவு வளர்ந்தது. மனிதன் நன்முறையில் சமுதாயத்தில் பிறருடன் கூடி வாழும் கலையைக் கற்றுக்கொண் டான். குறைந்த காலத்தில் குறைந்த முயற்சியில் நிறைந்த பொருளைப் பெற்று, நிறைந்த அளவு ஓய்வு நேரத்தையும் பெற வழி செய்துகொண்டான். இவை யாவும் அறிவு வளர்ச்சியால் அவனுடைய புறவாழ்வு பெற்ற பயன்களாகும்.

இனி, மனிதனால் தோற்றுவிக்கப்பெறும் நூல் களும் இரு வகைப்படும். ஒரு வகை, அறிவின் துணை

கொண்டு ஆக்கப்பெறும் அறிவியல் நூல்கள். ஏனையவை உணர்வின் துணைகொண்டு செய்யப் பெறும் உணர்வு நூல்கள். இவற்றையே இலக்கியம் என்று கூறுகிறோம். முதல் தொகுப்பில் உள்ளனவாகிய அறிவியல் நூல்கள் கால தேச வர்த்தமானங்களால் அழிவுறுபவை. ஓரளவு எல்லையுடைய அறிவின் திறங்கொண்டு ஆக்கப்பெறும் இந்நூல்கள் மக்கள் சமுதாயம் அறிவு வளர்ச்சி பெற்ற பிறகு தங்கள் பயனை இழந்துவிடுகின்றன. விஞ்ஞான உலகின் திறவுகோல் என்று கூறப்பெற்ற 'நியூட்டனின்' இயக்கச் சட்டங்கள் (Laws of motion) 'ஐன்ஸ்டீன்' தோன்றிய பிறகு ஐயுறுதற்கும் ஏதுவாய்விட்டன. அன்றைய அறிவு நிலையில் உண்மையாகக் கருதப்பெற்ற ஒன்று, இன்றைய அறிவு நிலையில் மாறிவிட்டது. உடைக்க முடியாதது என்று கருதி 'அணு' (atom) என்று பெயரிட்டார் டால்டன் என்ற பெரியார் நுண்மைப் பொருளுக்கு. அன்றைய அறிவுத் திறத்துக்கு அது சரி. ஆனால், இன்றைய அறிவு நிலை, அணுவைத் துளைத்து அதனுள் ஓர் உலகத்தையே காண்கிறது. நேற்றுவரை உண்மையென்று கருதப்பட்ட ஒன்று இன்று பொய்யாவதைக் காண்கிறோம். இன்றைய உலகம் உண்மை என்று நம்புவது நாளை உலகால் எள்ளவும் நகையாடவும்படலாம். இங்ஙனம் வளர்ச்சியடைந்த இந்நூல்கள் அனைத்தும் அறிவின் துணைகொண்டுமட்டும் ஆக்கப்பெற்றவை. உணர்விற்கு இங்கு வேலையே இல்லை. உணர்வின் உதவியின்றித் தோன்றும் இவற்றால் நற்பயன் விளைவது ஐயத்திற்கிடமாயினும், தீப்பயன் தோன்றத்தான் செய்கிறது. அணுவைத் துளைத்து மின்

அணு, பரமாணுவாகப் பிரித்தால் பயன் உண்டா இல்லையா என்பது ஒரு புறம் இருக்கத் தீப்பயன் உடன் விளைந்துவிட்டது. உணர்வின் உதவி இன்றி அறிவின் பயனாகத் தோன்றினமையாலேதான் அணுவைத் துளைக்கும் ஆராய்ச்சி 'அணுக்குண்டி'ல் முடிந்தது. உணர்வும் அறிவும் சேர்ந்து வளர்ந்திருந்தால், இவ்வாறு 'அணுக்குண்டு' தோன்றி இருப்பினும், அது 'நாகசாகி, ஹிரோஷீமா' மக்கள் தலையில் விழாமல் சமுதாய நன்மைக்குப் பயன் பட்டிருக்கும்.

அறிவின் உதவியால் மட்டும் தோன்றும் பொருள்கள், அவ்வறிவு வளர்ச்சி பெற்றபின் பயன் படாமல் ஒழிவதைக் காண்டோம். ஆனால், பின்னாகக் கூறப்பெற்ற உணர்வின் அடிப்படையில் தோன்றும் இலக்கியம் இவ்வாறு பயனற்றுப் போவதில்லை. எத்துணைக் காலஞ் சென்றாலும், மக்கள் சமுதாயம் எவ்வளவு அறிவு வளர்ச்சியடைந்தாலும், இவை பழமையானவை என்று கருதப்படுவதில்லை. ஒரு காலத்து வாழ்ந்த மக்கட்கு மட்டுமே விரும்பத்தக்க தாய் இருந்தது என்று கூறுவதற்கில்லாமல் எக் காலத்தும் எவ்விடத்தும் வாழும் மக்கள் அனை வருக்கும் விரும்பத்தக்கதாய் உள்ள பெருமை இலக் கியத்திற்கு மட்டுமே உண்டு. சுருங்கக் கூறின், கால தேச வர்த்தமானம் கடந்த ஒன்றாய் மிளிர்வது உணர் வின் பயனாகத் தோன்றும் இலக்கியம் எனலாம்.

## உணர்வு வளர்ச்சி

உணர்வு வளர்ச்சியாலேதான் மனிதனுடைய மனம் நிறைவடைய வேண்டும். எத்துணை அறிவை வளர்த்துக்கொண்டு போனாலும், மனம் நிறைவடை

யாது. இது கருதியே போலும் தாயுமானவ அடிகளார்,

‘சினம்இறக்கக் கற்றாலும் சித்திஎலாம் பெற்றாலும்
மனம்இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே!’

(பராபரக்கண்ணி, 169)

என்று கூறிப்போனார்! அறிவு வளர்ச்சியால் மட்டும் மன நிறைவடைய முடியாது என்பதற்கு அமெரிக்கா, இரஷ்யாப் போன்ற மேனாடுகள் உதாரணமாகும். இத்தகைய ஓர் இக்கட்டான நிலை தோன்றக்கூடும் என்பதை அன்றைத் தமிழன் நன்கு அறிந்தமையின், உணர்வையும் அறிவுடன் வளர்க்கத் தலைப்பட்டான். அதன் பயனே அக வளர்ச்சியாம். உணர்வு வளர்ச்சியை ‘அகம்’ என்று கூறினான் பண்டைத் தமிழன். அகமாவது யாது?

“ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்தது எனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாகலின், அதனை அகம் என்றார் ... இன்பமே யன்றித் துன்பமும் அகத்தே நிகழுமாலெனின், அதுவும் காமம் கண்ணிற்றேல் (கருதினால்) இன்பத்துள் அடங்கும்.”

(தொல். அகத்திணை. சூ. 1, நச்சி. உரை.)

அகம் என்பதற்குப் பண்டைத் தமிழர் கண்ட விரிவுரையாகும் இது. ‘யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து,’ என்று கூறினமையின், இது உணர்வை வளர்க்கும் வழி என்பது அறிய முடிகிறது.

## அகத்திணையும் தமிழரும்

உணர்வை வளர்க்கும் அகத்திற்குத் தமிழன் பெருமதிப்பைக் கொடுத்தான்; வாழ்விலும் அதனைப் புறத்தைக்காட்டிலும் உயர்ந்தது என்று கருதினன். இலக்கணம் வகுத்த தொல்காப்பியனாரும் புறத்திணை இயல் என்ற ஓரே இயலால் புறத்தைப் பற்றிக் கூறினர். ஆனால், அகத்தின் சிறப்பை அறிவிக்கப் போலும் அதனை 'அகத்திணை இயல், களவியல், கற்பியல்' என்ற மூன்று இயல்களாற்பேசினர்! அவ்வாறு இலக்கணம் செய்ய ஒரு தனிக்காரணமும் உண்டு. இலக்கியம் கண்டதற்குத்தானே இலக்கணம் கூறினர் ஆசிரியர்? இலக்கியம் எவ்வாறு வாழ்க்கையைக் கண்டது? இலக்கியம் தன்னிற் பெரும்பகுதியை அகத்திற்கே தந்துவிட்டது. பத்துப்பாட்டு என்றொரு பெரிய தொகை நூல் சங்க இலக்கியத்தில் உண்டு. அதில் உள்ள பத்துப் பாடல்களும் புறப்பொருள் பற்றியே பேசுவதாகக் கூறப்படுகிறது. ஆனால், உண்மையை ஆய்ந்தால் 'முல்லைப் பாட்டு', 'குறிஞ்சிப் பாட்டு', 'நெடுநல் வாடை' என்ற மூன்றும் அகத்தைப் பற்றிய பாடல்களேயாம். இலக்கண நுணுக்கம் காரணமாக இவை புறத்துள் அடக்கப் பெற்றுள்ளன.

அடுத்து எட்டுத் தொகை என்றதொரு தொகுப்பு உண்டு. தொகை நூல்களாக எட்டு நூல்கள் குறிக்கப்படுகின்றன. இவற்றில் 'புறநானூறு,' 'பதிற்றுப் பத்து' என்ற இரண்டு தவிர, ஏனைய ஆறும் அகப்பகுதி நூல்களேயாகும். முழுவதும் புறம் என்று கூறப்படும் பத்துப் பாடல்களில் மூன்று அகம் பற்றியன; எட்டு நூல்களில் ஆறு அகம் பற்றியன. இவற்றிலிருந்து இத்தமிழர் அகம்

பற்றி எத்துணைப் பெருமை கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறதன்றோ?

ஐந்திணைப்பிரிவு

அகம் எதனைப் பற்றிப் பேசுகிறது? ஒருவனும் ஒருத்தியும் பிறர் உதவியின்றித் தாமே எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். (இவ்வாறு எதிர்ப்படுதலுக்கு 'விதி கூட்டுவதால்' என்று பழைய நூல்கள் காரணம் கூறும்). பார்வை நோக்கமாக முடிகிறது. அந்நோக்கத்தில் ஒருவரை ஒருவர் ஈர்க்கின்றனர். இருவரும் தம் நிலைமை மாறி ஒருவர் இன்றி மற்றவர் வாழ முடியாதென்ற நிலையை அடைகின்றனர்; மனத்தால் கூடிய பிறகு உடலாலும் கூடுகின்றனர்; இவ்வாறு பிறர் அறியாமல் பன்முறை கூடுகின்றனர். இதனைக் 'குறிஞ்சித் திணை' என்று இலக்கணம் கூறும்.

இந்நிலை நீடிக்கையில் இவர்கள் தொடர்பைத் தலைவியினுடன் ஓயாமல் காலங்கழிக்கும் தோழி மெல்ல அறிகிறாள். தலைவனும் தலைவியும் தம் இன்பமே பெரிதென்று வாழ்ந்து வருகின்றனர். ஆனால், இருவரும் உலகில் வாழ்கின்றவர்தாமே! எனவே, இவர்கள் இவ்வாறு கூடிப் பிரிவதால் சமுதாயத்தில் மற்றவர்கள் இவர்களைப் பற்றி யாது பேசுவர் என்பதைத் தலைவியும் தலைவனும் நினைக்க நேரமில்லாவிடினும், தோழி நினைந்து பார்க்கிறாள். அவள் தலைவனைப் பார்த்து விரைவில் மணஞ் செய்துகொள்ள வேண்டும் என்று கேட்கிறாள். இதுவும் குறிஞ்சித் திணையின்பாற்படும்.

திருமணம் செய்வது என்றால் தலைவனுக்குக் கையில் பொருள் வேண்டுமே! எனவே,

யைப் பிரிந்து தலைவன் பொருள் தேடச் செல்கிறான். திருமணம் நிகழ்ந்த பின்னும் பொருள் தேடச் செல்வதுண்டு. இவ்வாறு தலைவன் பிரிந்து செல்வதையும் அதற்குரிய ஏற்பாடுகளையும் கூறுவது 'பாலைத்திணை' என்று இலக்கணம் கூறும்.

திருமணம் முடிந்து இல்லறம் நடத்தும் நாளில் தலைவன் பிரிந்து செல்வதும் உண்டு. அந்நிலையில் தலைவி தன் கடமைகளைச் செய்துகொண்டு வீட்டில் இருப்பாள். இதனை முல்லைத்திணை என்பர்.

சென்ற தலைவன் குறித்த காலத்தில் மீளாவிடின், தலைவி மிகவும் வருந்துவாள். அவள் வருத்தம் அடக்கும் நிலை நீங்கி வாய் விட்டு அரற்றும் அளவிற்குச் செல்லுதலும் உண்டு. இவ்வாறு அரற்றுவதை நெய்தல் திணை என்பர்.

பொருள் முதலியன தேடி மீண்டு வந்த தலைவன் வீட்டிலிருந்து இன்பமாகப் பொழுது போக்குகிறான். அதிக வேலை இல்லையாதலின், அவன் மனம் சும்மா இருப்பதில்லை, ஓரளவு சோம்பியுள்ள மனத்தில் 'சாத்தான்' குடி புகுகின்றான். எனவே, தலைவன் தவறான வழிகளில் செல்லத் தொடங்குகிறான். பரத்தையர் நட்பைத் தேடிச் செல்லும் அவனுக்கும் தலைவிக்கும் மன வேறுபாடு தோன்றுகிறது. அது காரணமாகப் பூசலும் புலவியும் ஏற்படுகின்றன. இது பற்றிக் கூறுவதை மருதத் திணை என்பர்.

### தனி இரு திணைகள்

இவ்வாறு ஐந்து வகையாக நடைபெறும் வீட்டு வாழ்வை—உணர்வு வாழ்வை—அகம் என்று கூறினர். இவற்றையல்லாமல், சில புறநடைகளும்[1]

1. Exceptions.

உண்டு. சில சமயங்களில் தலைவர் சிலர் தலைவி தம்மை விரும்புகிறாளா என்பது பற்றிக் கவலையுறாமல் காதல் புரிய முற்படுவதுமுண்டு. ஒருதலைக் காமமாகிய இதனைக் கைக்கிளைத்திணை[1] என்பர். சில சந்தர்ப்பங்களில் தம்மைவிட வயதில் மூத்தாரிடம் தலைவர்கள் அன்பு செய்ய முற்படுவதும் உண்டு. இதனைப் பெருந்திணை[2] என்பர்.

## அகத்திணையின் மதிப்பு

பெரும்படியாகக் கூறுமிடத்து அகப் பகுதியின் அடிப்படை இவையே. இவை அனைத்தும், நான்கு சுவர்களை எல்லையாக உடைய வீட்டினுள் நடைபெறுவனவே என்று கூறத் தேவை இல்லை. பரந்துபட்ட புற உலகில் நடைபெறும் வாழ்வு முழுவதையும் புறம் என்ற ஒரு பிரிவாகப் பிரித்து 'சிறிய அளவுடைய வீட்டினுள் நடைபெறும் வாழ்வை அகம் என்று ஒரு பிரிவாகப்பிரித்தனர் பழந்தமிழர். இதன் காரணம் யாது? பரந்த இடத்தில் நடைபெற்றாலும் குறுகிய இடத்தில் நடைபெற்றாலும் இவை இரண்டும் ஒத்த மதிப்புடையன எனக் கருதக் காரணம் யாது? அளவால் இவை மாறுபடினும், தன்மையால் ஒத்த மதிப்புடையவை என்றே கருதினர்

தொகை நூல்கள் செய்தவர்கள் இதனை நன்குணர்ந்ததோடல்லாமல் ஒரு படி மேலேயும் சென்றுவிட்டார்கள். எட்டுத்தொகை நூல்களுள் ஆறு அகத்திற்குத் தரப்பட்டன. ஏன்? புறத்தைவிட அகம் சிறந்தது என்று அவர்கள் கருதியதே காரணமாகும். ஏன் அவ்வாறு கருதினார்கள்? குறுகிய

1. Supnormal love    2. Apnormal love

இடத்தில் நடைபெறுவதாயினும், அகம் சிறப்படையாவிடில், புறம் சிறக்க முடியாது. பெரிய மரமாகப் புறத்தே ஒரு பொருள் காட்சி நல்கினாலும் கண்ணுக்குத் தெரியாத சிறிய வேர்களாலேயே மரத்தின் வாழ்வு நடைபெறுகிறது. இச்சிறிய வேர்கள் நன்கு அமையாவிடில் அப்பெரிய மரம் நன்கு வாழ முடியாது. அதே போலப் பிறர் அறிய முடியாத சூழ்நிலையில் சிறிய வீட்டில் நடைபெறும் அக வாழ்வு செம்மையாக அமைந்தால்தான் புற வாழ்வு செம்மைப்படும். குடும்பம் நன்கு அமைந்தால்தான் சமுதாயம் நன்கு அமைய முடியும்! தனி மனிதன் சீர்திருந்தினாலன்றிச் சமுதாயச் சீர்திருத்தம் என்பது குதிரைக் கொம்புதான்.

### வள்ளுவர் வழி

இவ்வுண்மையை நன்கு உணர்ந்த காரணத்தாலேதான் பொது மறை தந்த பெரியார், உலகம் முழுவதற்கும் நல்வழி வகுக்கத் தொடங்குகையில் புது முறையைக் கையாளுகிறார். அவருக்கு முன்னால் தோன்றிய பிளேட்டோ போன்றவர்கள் நாடு நலம் பெறும் வழியைக்கூறினார்கள். ஆனால், வள்ளுவர் இவ்வழியை விட்டுத் தனி மனிதன், அவன் குடும்பம் என்ற இரண்டையும் முதலில் பேசுகிறார். இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், வெஃகாமை, பயனில சொல்லாமை முதலிய அதிகாரங்கள் தனிப்பட்ட மனிதனும் அவனுடைய குடும்பமும் செம்மையடையக் கூறப்பெற்ற வழிகள் அல்லவா? குடும்பம் செம்மைப்பட்டாலன்றிச் சமுதாயமும் நாடும் செம்மையடைதல் இயலாதென்பதை நன்கறிந்தமையின், வள்ளுவர் இவ்வழியைப்

மேற்கொண்டார். இக்கருத்துப் பின்னரும் விரிவாக ஆய்ப்படும் (பக்கம் 25).

குடும்ப வாழ்க்கை மனிதனைச் செம்மைப்படுத்த அவ்வளவு இன்றியமையாததா? ஆம் என்றே கருதினார் பழந்தமிழர்; அதனாலேயே அகத்திற்கு அத்துணை மதிப்புத் தந்தனர். இது ஏன் என்பதைச் சற்று விரிவாகக் காண்போம்.

மனிதன் பிறந்து வளர்வதன் நோக்கம் முழுத் தன்மை[1] அடைவதேயாம். மனிதன் பிறக்கும் பொழுது தன்னலப் பிண்டமாகவே பிறக்கிறான். காட்டு மனிதனுக்குப் பிறர் உதவியை நாடாமல் வாழ்கின்ற காலத்தில் இதனால் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், நாகரிகம் மிகுந்த சமுதாயத்தின் ஓர் உறுப்பாக அவன் வரவேண்டியநிலையில் இத் தன்னலம் ஊறு செய்யும். எனவே, எத்துணைக்கெத் துணை தன்னலத்தை ஒழிக்கிறானோ அத்துணைக் கத்துணை அவன் சிறந்த மனிதனாக வாழ முடியும். முழுத்தன்மை பெற இது மிகவும் இன்றியமை யாதது. அவ்வாறாயின், தன்னலத்தை உதறித் தள்ள வழியாது? இல்லறமே சிறந்த வழி. இவ் வாறு கூறுவதால் துறவறத்தை நேரடியாக மேற் கொண்டோர் சிறந்தவர்களாக முடியாது என்பது கருத்தன்று. அவ்வாறு ஆகின்றவர் ஒரு சிலரே யாவர். அன்னார் புறனடையாவரே[2] தவிர விதியாகார்.

## தலைவனும் தலைவியும்

"இல்லறத்தைத் தமிழன் கூறியமுறையில் மேற் கொள்வதால் மனிதன் தன்னலத்திலிருந்து விடு பட முடியுமா?" என்பதே அடுத்து வரும் வினா.

1. Prefection. 2. Exception.

ஏனைய நாட்டினரைப்போலத் திருமணத்தைக் கூறுமல் தமிழர் அதனைக் 'களவு' என்றும் 'கற்பு' என்றும் பிரித்தனர். முதலில் களவு தொடங்கும் பொழுதே தலைவன் ஒன்றை இழக்கிறான். அவ்வாறு இழக்கப்படுவது அவனுடைய அகங்காரம். தலைவனும் தலைவியும் ஒத்த பெருமையுடையவர்கள் எனக் கூற வந்த தொல்காப்பியர், அடுத்துத் தலைவன் சற்று உயர்ந்தவனாயினும் தவறு இல்லை எனக் கூறுகிறார்.

"ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே"

(களவியல், 2.)

என்பதால் தலைவன் பெருமையை ஒருவாறு அறியலாம்.

இத்துணைச் சிறந்த தலைவன் தன் பாங்கரும் ஏவலரும் நண்பரும் புடைசூழ வேட்டை மேற் சென்றவன், தலைவியைக் காண்கின்றான். அவளைக் காணுமுன்னர் அவனைப்பற்றி நினைப்பவர்கட்கு அவன் பெருமை தோன்றுமற்போகாது. இத்துணைப் பெருமை காரணமாக அவனிடம் ஓரளவாவது ஆணவம் இல்லாமற்போகாது. மேலும், அவன், 'அறிவும் ஆற்றலும் புகழும் கொடையும் ஆராய்தலும் பண்பும் நண்பும் பழிபாவம் அஞ்சுதலும் முதலியனவாய மேற்படும் பெருமைப் பகுதியும் கடைப்பிடியும் நிறையும் கலங்காது துணிதலும் முதலிய வலியின் பகுதியும் உடையவன்,' எனத் தொல்காப்பியம் கூறுகிறது. 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' (களவு. 7). இவ்வளவு சிறப்பும் உடைய ஒருவன் தன்னைப்பற்றி உயர்வான எண்ணங் கொண்டு தருக்கி நிற்றலில் தவறு இல்லை.

### அகங்காரம் அழிதல்

அகங்காரம் அளவு மிஞ்சினால் பிழையே தவிர, அளவுடன் இருப்பதை யாரும் குறை கூறார். இவ்வாறுள்ள தலைவன் சமுதாயத்திற்கு யாது பயனை விளைத்தல் கூடும்? மேலே அவனிடம் காணப்படுவனவாகக் கூறிய சிறப்புக்கள் அனைத்தும் அவன் பெருமையை மிகுதிப்படுத்தப் பயன்படுவனவே தவிரப் பிறருக்கு எவ்வாறு பயன்படும்? இத்துணைச் சிறப்பும் உடையான் மனத்தில் அன்பு என்பது பிறந்தாலன்றோ அவனால் பிறர் பயன் பெறமுடியும்? இதுவரைத் தனது நலத்தின்பொருட்டே பிறர் வாழ்கின்றார்கள் என்ற கருத்துடனேதான் அவன் வாழ்கிறான். இன்றேல், பாங்கரும் நண்பருமாய பலர் தன்னைப் புடை சூழ்ந்து வரவேண்டும் என்று அவன் நினைவானா? தலைவியைப் பார்க்கின்ற வரை அவன் தன்னைப் பற்றியும் உலகைப் பற்றியும் கொண்டுள்ள எண்ணமே வேறு. அவளைப் பார்த்தவுடன் அவனது மனத்தில் முதலில் தோன்றும் எண்ணம் அவள் அழகைப் பற்றியது தான். அழகைக்கண்ட பொழுது அனுபவிப்பதில் தவறு இல்லையாயினும், அவன் அதனைத் தன்னலத்துடனேதான் காண்கிறான். ஆனால், சில நேரத்தில், இவ்வனுபவத்தில் அவன் ஒன்ற ஒன்ற அவனுடைய நிலைமை மாறுபடுகின்றது. தான் என்ற முனைப்புக் கொஞ்சங்கொஞ்சமாகக் கழன்றுவிட அழகில் தன்னை அடிப்படுத்தும் நிலையை அவன் அடைந்துவிடுகிறான். இன்னுஞ் சிறிது நேரம் ஆனவுடன் அவளில்லாமல் தன் வாழ்க்கை முற்றுப் பெறாது என்று அறிகிறான்—அல்ல—உணர்கிறான். இப்பொழுது அவனுடைய பெருமையும் மதிப்பும்,

உரனும், நண்பர் குழாமும், தன் மதிப்பும் பொருளற்ற வெறுங்கூட்டமாய்க் காட்சியளிக்கின்றன அவனுக்கு. முழு வாழ்வின் முதற்படியில் கால் வைத்துவிட்டான் தலைவன். இதுவரைத் தன்னையே முதலாக வைத்து எண்ணிய தலைவன், இனித் தன்னினும் உயர்ந்த ஒரு பொருளைக் கண்டுவிட்டான். அவள் இல்லாமல் தனக்கு வாழ்வு இல்லை என்பதை உணர்ந்த அந்த விநாடியிலேயே தலைவனுக்குப் புது வாழ்வு பிறந்துவிடுகிறது.

## முழுத்தன்மையின் வளர்ச்சி

தலைவி தனக்கு இன்றியமையாதவள் என்று தலைவன் கருதும் பொழுதுகூடத் தன்னலமே அங்குக் காட்சியளிக்கிறது. என்றாலும், தானே உலகம் என்ற நிலையிலிருந்து இறங்கிவிட்டான் இப்பொழுது. அவன் அவளை அடைந்து இன்பம் பெற வேண்டும் என்ற நினைவிலும் ஓரளவு தன்னலத்தைக் காண்கிறோம். களவிற்கூடி அவர்கள் இன்பம் பெறுகிறார்கள். இதன் பின்னர்ச் சில காலம் பிறர் அறியாமலும், சில காலம் தோழி, பாங்கன், பின்னர் ஊரார் என்பவர்கள் அறியவும் கூடுகிறார்கள். இக்கூட்டத்தினால் இருவரும் இன்பம் பெறினும் தலைவன் இன்னும் தன்னலக் கலப்புடையவனாகவே இருக்கிறான்; பிறர் பழி தூற்றல் முதலியவற்றால் தலைவி வருந்துவாளே என்பதைப் பற்றி அதிகக் கவலை கொள்ளாமல் களவுக் கூட்டத்தையே விரும்புகிறான். இச்சூழ்நிலை இன்னும் அவன் தனது இன்பத்தையே பெரிதாகக் கருதுகிறான் என்பதையே அறிவிக்கின்றது. தோழி பன்முறை அவனைக் கண்டு அவன் செயல் தகாதது என்று இடித்துக் கூறிய பின்னரே திரு

மணத்திற்கு ஏற்பாடுகள் செய்கிறான் தலைவன். சில சந்தர்ப்பங்களில் அவனுடைய அன்பின் ஆழத்திற்குச் சோதனை நிகழ்வதும் உண்டு. தலைவி தனக்குக் கிடைக்க மாட்டாள் என்ற நிலை ஏற்படுமாயின், தலைவன் 'மடலூர்தல்' என்பதை மேற்கொண்டேனும் தன்னுடைய அன்பை வெளியிட முயல்கிறான்.

## அன்புக்குச் சோதனை

'மடலூர்தல்' என்பது பழைய வழக்கம். பனங்கருக்கினால் குதிரை ஒன்று செய்து தான் விரும்பும் தலைவியின் படத்தை எழுதிக்கொண்டு தலைவன் அப்பொம்மைக் குதிரையின்மேல் ஏறிக் கொள்வான். தெருப்பிள்ளைகள் அக்குதிரையை இழுக்கும்பொழுது தலைவனுடம்பிலிருந்து குருதி பெருகும். இதனைக் கண்ட ஊரார் அப்பெண்ணை அவனுக்கு மணம் முடிக்க முந்துவர்; இப்பழக்கம் எத்தகையதாயினும் தலைவனுடைய மனவளர்ச்சியில் ஒரு படியைக் காட்டுகிறது. தலைவியைப் பெற வேண்டித் தன்மானத்தையும் துறந்து பனங்கருக்கினால் செய்த குதிரையில் ஏறத் தலைவன் முற்பட்டான் எனில், அவன் அகங்காரம் முற்றும் அழிந்து விட்டதென்பதற்கு இதனினும் சான்று வேறு வேண்டுமோ?

## வீட்டு ஆட்சி அவளுடையதே?

இத்துணையளவு பண்பட்டுவிட்ட தலைவன், தன் மனத்துக்கிசைந்த மங்கை நல்லாளுடன் இல்லறம் தொடங்குகிறான். வீட்டு வாழ்க்கையில் நல்ல அனுபவம் பெற்ற தமிழர் தலைவனுடைய உரிமைக்கும் அதிகாரத்திற்கும் வரம்பு கட்டினர். வீட்டினுள் தலைவன் தலைவி என்ற இருவர் இருப

பதால் கொண்டு செலுத்தும் உரிமை யாருடையது என்ற வினாத் தோன்றுமன்றோ? இருவரும் அதிகாரம் செலுத்தத் தொடங்கினால் அது இரட்டை ஆட்சி[1]யாக மாறித் தீமை பயக்குமே தவிர நன்மை பயவாது. எனவே, பெருமையும் உரனும் தன்னியல்பாகக் கொண்ட தமிழ் மகன், வீட்டு ஆட்சியைத் தலைவியிடம் ஒப்படைத்துவிட்டான். அதனால், அவளுக்கு இல்லாள் என்ற பெயர் தோன்றலாயிற்று. எல்லாப் பெண்பாற் பெயர்கட்கும் ஆண்பாற்பெயர் ஒன்றைக் கூறிய தமிழ் மொழியில் இல்லாள் என்பதற்கு ஏற்ற ஆண்பால் பெயரே இல்லாது போயிற்று. இது எதனை உணர்த்துகின்றது? வீட்டைப் பொறுத்த வரை அவளே அரசி என்பதையும் வீட்டினுள் தலைவனுடைய அதிகாரம் செல்வதில்லை என்பதையும் உணர்த்துகின்றதன்றோ? ஆண்மகன் தன் மதிப்பை இன்னுங் கொஞ்சம் விட்டுக் கொடுத்துவிட்டான். வீடு வைத்தமையின் அவனுடைய அகங்காரம் பெரும்பகுதி அழியத் தொடங்கிவிட்டது. அகங்காரம் அழியத் தொடங்கவே, அன்பு வளரத் தொடங்குகிறது. தன்னைப்பற்றி மட்டும் அன்பு கொண்டிருந்த தலைவனுக்குத் தன்னையல்லாத பிறரிடமும் அன்பு செய்யும் வாய்ப்பைத் தேடித்தந்தது குடும்பமேயன்றோ?

## அன்பின் விரிவு

தலைவியினிடம் சென்ற அன்பு, பின்னர் அவளுடைய உயிர்த்தோழி, தாயர், சுற்றத்தார் என்ப பலரிடத்தும் பரவுகின்றது. இதனையடுத்துத் தனக்குப் பிறக்கும் குழந்தைகளிடம் அன்பு விரிகின்றது. இந்த

1. Dual government.

அளவு வரைத் தலைவனுடைய அன்பு விரிந்து அகங்காரம் குறைந்தது உண்மைதான். ஆனாலும், பிறருக்காகத் தன்னலத்தை முழுவதும் விட்டுக் கொடுக்கும் சந்தர்ப்பம் இன்னும் ஏற்படவில்லை. எனினும், குடும்பத் தலைவனானவுடன் புதிய கடமைகள் தோன்றுகின்றன அவனுக்கு!

தான் குடும்பம் வைத்தது தன்னுடைய இடையறா இன்பத்தின் பொருட்டே என்று நினைத்தான் தலைவன்; ஆனால், இப்புதிய கடமைகள் தன்னுடைய இன்பத்திற்கு இடையூறாய் நிற்றலைக் கண்டான். ஒரு பெரிய போராட்டம் நிகழ்கின்றது. அவன் ஓயாது வேண்டி நிற்கும் இன்பத்திற்கும் அவனைப் பிடித்து உந்தும் கடமைக்கும் இடையே பெரும்போராட்டம் நிகழ்கிறது. கடமையை நிறைவேற்ற வேண்டுமாயின், அருமைக் காதலியைப் பிரிந்து செல்ல வேண்டிய கட்டுப்பாடு ஏற்படுகிறது. என்ன செய்வான் தலைவன்! பல நாள் அதுபற்றிச் சிந்திக்கின்றான். இறுதியாகக் கடமை உணர்வே எஞ்சுகின்றது. இல்லறம் நடத்துவதன் பயன் இத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதே என்பதை அறிகின்றான். மேலும், இக்கடமைகளை நிறைவேற்றுவதில் அவன் புதியதோர் இன்பத்தைக் காண்கிறான். தலைவியுடன் உறைவதே இன்பம் என்று நினைத்திருந்த தலைவனுக்கு இவ்வின்பம் புதுமையாய் உளது. அவன் தனது இன்பத்தை விட்டுக் கொடுத்துப் பிறருக்கு மகிழ்வூட்டப் பழகுகிறான். இதனால், மேலும் அவனுடைய மனம் விரிவடைகின்றது.

### குறிக்கோள் மாற்றம்

இவ்வாறு பிறருக்காக வாழ்வதில் இன்பங்

காணத் தலைப்படுவதால் விரிவடைந்த அவனது மனம், தன் குடும்பம், சுற்றம், அண்டை வீட்டார், தெருவார், ஊரார், நாட்டார் என்ற முறையில் விரிந்துகொண்டே செல்கிறது. இறுதியில் அவன்

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்.' (புறம் 192)

என்ற உணர்வைப் பெறுகின்றான். இதுவே மனிதன் பெறுகின்ற முழு வாழ்வாகும். தன்னல வடிவாய் இருந்த மனிதனைப் பிறர் நலம் பேணும் பெருந்தகையாக மாற்றியது இல்லறம் என்னும் நல்லறம். தான் பெறும் இன்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்த மனிதனுக்கு அக்குறிக்கோள் நாளா வட்டத்தில் மாறத் தொடங்குகிறது. நல்ல முறையில் இல்லறம் நடத்திவரத் தொடங்குகையில் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் ஆவதே அவனது குறிக்கோளாக மாறிவிடுகின்றது. இத்தகைய உயர்ந்த பண்பை அகவாழ்வு நல்குவதாலேதான் புறத்தை விட அகத்திற்கு அதிக மதிப்புத் தந்தனர் தமிழர்.

இல்லறத்தின் பயன் தன்னலத்தை ஒழித்து வாழ்தலே என்பதைக் கண்டோம். தன்னலம் சிறிது ஒழியத் தொடங்குகையில் அவ்விடத்தில் அன்பு பிறக்கின்றது என்பதையும் கண்டோம். இறுதியாக அவனுடைய குறிக்கோள் மாறுபட்டுத் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக மாறும்பொழுது அன்பு என்ற சிறிய பொருள் இருந்த அவனுடைய மனத்தில் 'அருள்' என்னும் புதிய ஒளி தோன்றுகிறது. தொடர்புடையாரிடம் மட்டுஞ் செல்வதை அன்பென்றும், தொடர்பில்லாதாரிடத்துஞ் செல்வதை அருள் என்றுங் கூறுவர். இல்லறத்தால்—

அகவாழ்வால்—கிடைக்கும் இவ்வருட்பெருக்கத்தைப் பொதுமறையாசிரியர்,

'அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.'' (குறள், 757)

என்று குறிக்கிறார்.

மனிதன் முழு வாழ்வு பெறும் பொழுது அருள் அவனிடம் முழுவதும் நிறைந்துவிடுகிறது. அக வாழ்வு வாழாமலும் ஒரு சில பெரியவர்கள் அருள் வாழ்வைப் பெறுவதுண்டு. இத்தகையார் விதி விலக்கேயாவர். இவர்களைக்கொண்டு அனைவருக்கும் இது இயலும் என்று நினைத்துவிடவேண்டா. அகவாழ்வு மனிதனை முழு வாழ்வு வாழப் பழக்குகிறது என்பது பொதுச்சட்டம். சட்டத்திற்கு விதி விலக்காகச் சிலர் அமைந்துவிடுவதால், சட்டம் பொய் என்று ஆகிவிடுவதில்லை. அவ்விதி விலக்கே சட்டத்தை நிலைநாட்டப் போதிய சான்றாகும்.

இதுகாறும் அகத்திணை வாழ்வின் அடிப்படைத் தத்துவம் யாதென்பதைக் கண்டோம். இத்துணைச் சிறந்த தத்துவங்களையும் மனத்துட்கொண்டு திருவள்ளுவர் தம்முடைய ஒப்பற்ற திருக்குறளில் அகவாழ்வு பற்றி விரித்துப் பேசுகிறார். அதனையும் சற்று விரிவாகக் காண்டல் வேண்டும். நீதிநூலாகலின், குறள் சிறந்த இல்லறம் அமைய வேண்டிய அடிப்படைத் தேவைகளையும், அத்தேவைகள் நிரம்ப ஏற்ற வழிகளையும் மட்டும் கூறிச் செல்கிறது. இலக்கியங்களிற் காணப்படுவதுபோல, தலைவர் தலைவியருடைய வாழ்வு எங்ஙனம் அமைய வேண்டும் என்பதைக் குறள் விரித்துக் கூறுவதைக் காணலாம்.

### மருதத்திணை வளர்ச்சி

மனிதன் ஆதியில் பச்சை இறைச்சியைத் தின்று பல காலம் வாழ்ந்தான்; அதன் பின்னர்ப் பல்லாயிரம் ஆண்டுகள் கழித்துச் சில விலங்குகளைப் பிடித்துப் பழக்கித் தனக்கு வேலை செய்ய அவற்றைப் பயன்படுத்தினான்; இதன் பின்னர்ப் பல ஆண்டுகள் கழித்துத்தான் 'குடும்பம்' என்ற ஒன்றை வைத்து நிலையான வாழ்க்கை வாழத் தொடங்கினான். இக்குடும்ப வாழ்க்கையிலேதான் தமிழ் இலக்கணங் கூறும் 'மருதத்திணை' தோன்றலாயிற்று. மருதத் திணையில் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழ வழி வகுத்துக்கொண்டன. இப்பொழுதுதான் மனிதனுடைய சமுதாய வாழ்க்கை[1] தொடங்கிற்று. இத்தகைய வாழ்க்கையில் பல அல்லல்களும் உடன் தோன்றின. நன்மையும் தீமையுங் கலந்துதானே உலகம் வாழ்கிறது! இது வரை ஒருவரைப் பற்றியுங் கவலை கொள்ளாமல்

1. Social life.

தன் நலன் ஒன்றையே கருதி வாழ்ந்த மனிதனுக்கு, இப்பொழுது புதிய அனுபவங்கள் தோன்றலாயின. இவற்றில் ஓரளவு மகிழ்ச்சியும் ஓரளவு வெறுப்புங் காணலாயினன் மருத நில மனிதன். தன்னுடன் வாழ்க்கை நடத்த வந்துள்ள ஒரு பெண்ணின் நலந் தீங்குகளில் தானும் பங்கு கொள்ளத் தொடங்கியதே அவனது புதிய அனுபவம். மேலும், வீட்டினுள் தங்கியிருக்கும் அவளுக்கும் சேர்த்து உணவு தேடவேண்டிய பொறுப்பும் அவனதாயிற்று. நாளாவட்டத்தில் அவர்கள் வாழ்வின் பயனாகத் தோன்றியுள்ள புது உயிர்கட்கும் உணவு சேகரிக்க வேண்டிய கடமை அவனதாயிற்று. இக்கடமைகளில் ஓரளவு மகிழ்ச்சி இருந்ததை அம்மனிதன் உணராமற்போகவில்லை. இம்மகிழ்ச்சியே உலகிடை மனிதன் சமுதாய வாழ்க்கை வாழ வழி செய்தது. தனிக் குடும்பங்கள் பல ஓரிடத்தில் தங்கி வாழ வேண்டுமாயின், ஒவ்வொருவரும் தம் உரிமையைச் சிறிது இழக்கத்தான் வேண்டும். சுதந்தரத்துடன் வாழ்ந்து பழகிய மனிதனுக்குத் தன் விருப்பம் போலச் செயல் செய்யும் உரிமை, சிறிது குறைந்தாலும் அதிக மனக் கசப்புத் தோன்றத்தானே செய்யும்? அவ்வித நிலைமையிலிருந்து அவன் விடுபட ஒரே ஒரு வழிதான் உண்டு. அவ்வழிதான் ஊர் முழுவதையும் ஒரு குடும்பமாக நினைத்து வாழும் முறை. இவ்வித வாழ்க்கை முதலில் வருத்தத்தைத் தருவது ஒன்றாயினும், நாளடைவில் ஓர் இன்பத்தையும் தரலாயிற்று. 'பிறர்க்கென வாழும் வாழ்க்கையில் ஒப்பற்ற இன்பம் இருத்தலை உணரத் தலைப்பட்ட அன்றுதான் மனிதன் விலங்கிலிருந்து வேறு பிரிந்து வாழ்ந்தான் என்று கூறவேண்டும்.

## இரு வகை அறம்

மேற்கூறிய முறையில் ஒரு சமுதாயம் அமைய வேண்டும். ஆனால், சுலபமாகக் கூறிவிட்டோமே தவிர, வாழ்க்கையில் இந்நிலை அமையப் பல காலம் செல்லும். இத்தகைய சமுதாயத்தை அமைக்கவே குறள் அடிகோலிற்று. உலகிடைப் பிறந்த ஒவ்வொருவனும் வாழ உரிமை பெற்றவன்தான். அவ்வாழ்க்கை எத்தகையதாக அமைதல் வேண்டும்? இல்வாழ்க்கை என்று கூறப்பெறும் இருவர் கூடி வாழும் வாழ்க்கையும், துறவறம் என்று ஒருவனே வாழும் வாழ்க்கையும் உலகிடை உண்டு. இவ்விரு வகையினுள் எதனைக் குறள் போற்றிக் கூறிற்று? இவ்வினாவிற்கு விடை பலர் பலவாறுகக் கூறினர். ஆனால், இவை இரண்டின் அடிப்படையையும் நன்கு ஆய்ந்தால், சில உண்மைகள் நன்கு விளங்கும். துறவி எதன்பொருட்டு வாழ்கிறான்? தன் ஆன்ம ஈடேற்றத்தின்பொருட்டு என்று கூசாமல் விடை கூறலாம். ஆனால், இல்வாழ்வான் தன் வாழ்வோடு, பிறர் வாழ்வையும் பயனுடையதாகச் செய்யவே வாழ்கிறான்.

> " இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை "

என்பது குறள். எனவே, இரு பயன் எய்த வாழும் இல்வாழ்வையே வள்ளுவர் பெரிதும் விரும்புகிறார் என்பதில் ஐயமின்று. இது கருதியே அவர், 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்று கூறுகிறார். இல்வாழ்க்கை என்ற ஒன்றிலேயே உலகம் நன்கு வாழமுடிகிறது. தான் ஒருவன் மட்டும் வாழ வழி செய்யும் துறவறத்தைக்காட்டிலும் இல்லறத்தையே இத்தமிழ்ச் சமுதாயம் பெரிதும் விரும்பியது. அது கருதியே போலும் இறைவனைக்கூட

‘அம்மையப்ப’னைக் இச்சமுதாயம் கண்டது! மேலும், இயற்கையோடு ஒன்றிய வாழ்வு நடத்துதலே மனிதனுக்கு ஏற்றது. இயற்கை வெள்ளத்தை எதிர்த்து நீந்திச் செல்லுதல் என்பது ஒரு சிலருக்கு ஒவ்வுவதே தவிர, அனைவரும் செய்தற்கு ஏற்றதன்று. மேலும், பலருடைய நன்மை கருதி வாழும் ஒரு வாழ்க்கை, தன் நன்மை ஒன்றையே கருதி வாழும் வாழ்க்கையைவிடச் சிறந்த தென்பதில் தடை என்னை? அன்றியும், உயிர் வாழ்வின் அடிப்படையில் அமைந்திருப்பது ‘அன்பு’ என்ற ஒன்றாகும். அதன் இன்றியமையாமை பற்றிப் போலும் ஓர் அதிகாரமே வகுக்கிறது குறள்! அன்புடைமை அத்துணைச் சிறந்ததாயின், அதனை வளர்க்கும் வழி என்ன? இல்வாழ்க்கையைவிட அன்பை வளர்க்கும் உறுகருவி ஒன்று உண்டோ? இவை எல்லாவற்றையும் ஊன்றி நோக்கின், ‘அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை’ என்பதன் பொருள் ஆழம் விளங்காமற் போகாது.

## அறம் என்பது யாது?

மேல் அதிகாரத்தில் அறத்தின் சிறப்பையும், உயிர்கள் அறஞ்செய்யவேண்டிய இன்றியமையாமையையும் நன்கு வலியுறுத்தினார். ‘செயற்பாலது ஓரும் அறனே. அறத்தான் வருவதே இன்பம்,’ என்றெல்லாம் கூறி, அறன் வலியுறுத்தினால், ‘அறன் என்பது யாது?’ என்ற வினாத் தோன்றத் தானே செய்யும்? அவ்வினாவிற்கு விடை கூறுவார் போல ‘அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை.’ என்கிறார் ஆசிரியர்; ‘எனப்பட்டது’ என்று கூறுவதால் ‘அறம்’ என்றாலும் ‘இல்வாழ்க்கை’ என்றாலும் ஒன்றே என்பதைப் பெறவைக்கிறார். இவை இரண்டும் ஒரு பொருள் குறித்த இரு சொல் என்ற பொரு

ளும் அங்குக் காண்க. இனியும் ஐயப்படுவார் இருப்பின், அவர் தம் ஐயத்தினையும் அறுத்தற்கு 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது,' என்ற குறளால் இல்வாழ்வின் பயன் அறமாகும் என்றும் கூறினார். 'இல்வாழ்வு' அல்லது 'அறம்' என்னும் பயன் விளைய வேண்டுமாயின், ஒரு பண்பு வேண்டும்; அதுவே அன்பு என்பது. அன்பெனும் பண்பு அறம் என்னும் பயனை விளைக்கிறது. வேறு ஒரு வகையாகக் கூறுமிடத்து அன்பில் அறம் தோன்றுகிறது என்னலாம். அன்பில்லாவிடத்து அறம் தோன்றாது. அன்பு, இல்வாழ்வில் தோன்றும் என்றால், அறமும் அங்கேதானே தோன்றும்? எனவே, எவ்வகையில் கண்டாலும் சமுதாய வளர்ச்சிக்குக் காரணமான இல்வாழ்வையே வள்ளுவர் போற்றிக் கூறுகிறார் என்பது நன்கு விளங்கும். இனி, அதுவே உலகிடை வாழும் வாழ்க்கையில் சிறந்தது என்பதை வேறொரு வகையிலும் கூறுகிறார். 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்று கூறிய குறளின் அடுத்த பாட்டாகக் காட்சியளிப்பது எது? 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்' என்ற அருங்கருத்தன்றோ? வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பது இல்லறத்தில் நிற்றலே என்பதற்கு இதைவிட வேறு என்ன கூறமுடியும்? 'வாழ்வாங்கு' என்பதற்குப் பரிமேலழகரும் 'இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால்' என்றுதானே பொருள் கூறுகிறார்? இதுகாறுங் கூறியவாற்றான் வாழ்க்கையில் செம்மையானது இல்லறமே என வள்ளுவர் கருதிக் கூறியது அறியப்படும். இனி அவ்வில்லறம் அமைய வேண்டிய முறைபற்றிக் காணலாம்.

## அன்பில்லாத இல்லறம்

குறள் கண்ட செம்மையான வாழ்க்கை இல்வாழ்க்கையே என்பதைக் கண்டோம். இல்வாழ்க்கை என்று கூறினவுடன் எத்தனை குடும்பங்கள் மனக் கண்முன் தோன்றுகின்றன! ஆம்! பொருந்தாக் குடும்பங்களைத்தான் கூறுகிறேன். ‘வற்றல் மரம் அனையானுக்கு இந்த மானை வகுத்திட்ட பிரமனை யான் காணப்பெறின்—அற்ற தலை போக அறாத தலை நான்கினையும் பற்றித் திருகிப் பறியேனோ!’ என்று ஔவைப் பாட்டி பாடினாளாம் ஒரு பொருந்தாக் குடும்பத்தைப் பார்த்துவிட்டு! பாவம்! பாட்டி இக்காலத்தில் இருந்திருந்தால் முற்பகுதியைப் பன்மையாக வைத்தன்றோ பாடியிருப்பாள்! அமெரிக்காவைச் சுற்றுப்பாருங்கள்! ஆம்! பணத்தில் புரண்டு ஒப்பற்ற கொழுப்பில் கூத்திடும் அமெரிக்காதான்! மூன்று திருமணங்களில் இரண்டு வீதம் திருமண விடுதலை பெறுகின்றனவாம்! ஏன்? வாழ்க்கையின் அடிப்படை தெரியாமையாலேதான். ‘அன்பும் அறனும் உடைத்தாயின்’ அன்றோ அது இல்வாழ்க்கை எனப்படும்? இவை இரண்டும் சிறு அளவும் இல்லாது நடைபெறும் வாழ்க்கையை என்னென்பது? அது ஒரு வகைக் கூட்டு வியாபாரம். ஆனால், வாணிகங்கூட இருவர் சேர்ந்து நடத்துவதானால், ஓரளவு ஒத்து நடக்கும்; அன்பு இல்லையேல் முறியும். அங்ஙனம் இருக்கக் குடும்பம் எவ்வாறு நடைபெறும்?

## எத்தகைய மனைவி?

வள்ளுவர் இல்வாழ்க்கை இன்றியமையாதது என்று கூறிவிட்டமையின் இல்வாழ்வில் ஒருவன் ஈடுபடத் தொடங்குகிறான் என்று வைத்துக்கொள்

வோம். எப்படிப்பட்ட மனைவி இருந்தால் இல்வாழ்வு நன்கு நடைபெறும் என்பதை ஆராய வேண்டாவா? ஆராயாது ஒரு செயலைச் செய்தல் பேராபத்தில் அன்றோ கொண்டு விடும்? நட்புச் செய்தலைக்கூட ஆராயாமல் செய்தல் ஆகாது என்கிறார் ஆசிரியர். வேண்டாவிட்டால் விட்டுவிட்டு ஓடிவிடக்கூடிய நட்பிற்கே 'நாடாது நட்டலிற் கேடு இல்லை,' என்றால், விட்டு ஓட முடியாத இல்வாழ்விற் புகுவான் எவ்வளவு ஆராய வேண்டும்? ஆகவே, 'எத்தகைய மனைவி வேண்டும்?' என்ற வினாவிற்கு அவரையே விடைகேட்டல் நலம் தரும். 'மனைத்தக்க மாண்புடையளாகி' அவள் இருத்தல்வேண்டும் என்கிறார், மனை வாழ்க்கைக்கு ஏற்ற மாண்புகள் பலவற்றுள்ளும் சிறந்தது 'கற்பு' என்ற ஒன்றன்றோ? கற்பு என்பது என்னை? விடை விரியுமாயினும், சுருங்கக் கூற வேண்டுமாயின், ஒரு குறளே போதுமானது.

'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.'

என்பதே கற்பின் விரிவுரை. இவை அனைத்தும் செய்யக்கூடியவளே பெண் என்றால், இத்தகைய பெண்ணே இல்வாழ்விற்கு உகந்தவள் என்பது கூறவும் வேண்டுமோ?

### பெண்ணின் புற இயல்புகள்

இவ்வளவு சிறப்பும் அமைந்திருப்பினும், அப் பெண் வேறு ஓர் இயல்பும் உடையளாய் இருத்தல் வேண்டும். அதுவே குடும்பம் நடத்தும் முறை. இதனைச் சுருக்கமாகத் 'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை,' என்று குறள் கூறுகிறது. 'வளத்தக்காள்' என்பதற்குக் கணவன் வருவாய்க்கேற்ப வாழ்வு நடத்துபவள் என்பதே பொருள்.

எவளோ ஒரு பெண்ணை எவனோ ஓர் ஆண்மகன் மணந்துகொண்டு வாழ்தல்தான் இல்வாழ்க்கை என்ற எண்ணம் நம்மில் பலர் உள்ளத்தில் தோன்றி யிருக்கிறது. ஆனால், வள்ளுவர் வகுத்த வாழ்க்கை முறையில் காட்சி தரும் பெண், மேற் கூறிய இலக் கணம் அமைந்தவளாக இருத்தல் வேண்டும். 'இத் தகைய பெண் கிடைத்து வாழ்வு நடத்துகையில் வேறு எது இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன?' என்ற எண்ணம் தோன்றத்தானே செய் யும்! இங்ஙனம் குறளாசிரியர் மனத்திலும் தோன்றி யிருக்கும் போலும்! அதனாலேயே அவர்,

> இல்லதுஎன் இல்லவள் மாண்பானால்?
> உள்ளதுஎன் இல்லவள் மாணாக்கடை?'

என்று வினவுகிறார். இதே கருத்துப் பிற்காலத்தி லும் பேசப்படுகிறது. 'இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்றில்லை,' என்பது போன்ற உரைகள் இக்கருத்தை வலியுறுத்தல் காண்க. இதே கருத் தை மேனாட்டுக் கவிஞரான 'போப்பு' என்பவர்,

> 'All other goods by fortune's hands are given
> A wife is the peculiar gift of heaven.'

என்று கூறுதல் காண்க. பழைய விவிலிய வேத நூலும் 'A virtuous woman is a crown to her husband,' என்றே கூறுகிறது.

**நுண்ணிய கருத்து**

இத்துணைச் சிறந்த மனைவியை ஒருவன் பெற் றுக் குடும்பம் நடத்தத் தொடங்கியவுடன் இல்லறம் என்னும் நல்லறம் நன்கு நடைபெற்றுவிடும் என்று கூறிவிட முடியுமா? இவ்வறத்தின் அடிப்படை அறியப்படாவிடின் வள்ளுவர் வகுத்த வாழ்க்கை

நடைபெறுமா? பின்னர் அடிப்படை எங்கே உள்ளது? மனிதன் குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும் சிறப்படைய வேண்டுமாயின், அதற்கு அற அடிப்படை தெரிந்து இருத்தல் வேண்டும். அந்த அடிப்படையைக் குறள் 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்திலேயே சொல்லிச் செல்கிறது.

'மனத்துக்கண் மாசுஇலன் ஆதல்; அனைத்துஅறன்;
ஆகுல நீர பிற,'

என்ற குறளே அடிப்படை. இதனைக் கூறுதாரா இல்லை! ஆனால், இவ்வடிப்படையில் வாழ்வாரைக் காண்டலே அருமையினும் அருமை! அறம் என்று கூறினவுடன் அஞ்சிவிட வேண்டா; மனம் தூய்மையாக இருத்தலே அறம் என்று கூறுகிறது இக்குறள். இதைவிட எளிமையாக அறத்தைப்பற்றிக் கூறல் இயலாது. 'தருமத்தைச் செய,' என்று கூறும் வாழ்க்கை முறையைக்காட்டிலும் இது எவ்வளவு உயர்ந்தது என்பது கூறவும் வேண்டுமோ?

## குடும்பப் பரீட்சை

மனத்துக்கண் குற்றம் இல்லாது இருக்க வேண்டிய கூறுபாடு ஆண் பெண் என்ற இருபாலருக்கும் தானே கூறப்பெற்றது? எனவே, மனத் தூய்மை உடைய இருவர் இல்லறம் நடத்துதலே அறத்தின் அடிப்படையை அறிந்து வாழ்வதாகும். இங்ஙனம் வாழ்வு நடத்துபவர்கள் அறம் உணர்ந்தவர்களா என்பதை எவ்வாறு அறிவது? பிறர் அறிவது ஒரு புறம் இருக்கட்டும். வாழ்வு நடத்தும் இருவரும் ஒருவரையொருவர் தெரிந்துகொள்ள வேண்டாவா? தெரிந்துகொள்ள எளிய ஒரு வழி கூறுகிறார் ஆசிரியர். குடும்பம் நடத்துதல் அவ்வளவு எளிய காரியம் அன்று. இரண்டு வேறுபட்ட

மனங்கள் கருத்து ஒருமித்து வாழ வேண்டிய சமயத்தில் எத்தனை இடர்ப்பாடுகள் தோன்றும்! எல்லாவற்றையும்விடப் பெரிய ஓர் இடர்ப்பாட்டைக் கூறுகிறது குறள். இளம்பருவம் உடைய ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து வாழும் பொழுதுதான் இப் பெரிய இடர் தோன்றும். இதுவே ஒருவர்மேல் ஒருவர் கொள்ளும் ஐயம். ஐயோ! எத்தனை நல்ல வாழ்க்கைகள் இந்த மூன்று எழுத்துக்களால் (ஐ ய ம்) பாழாயின! ஐயம் என்ற ஒன்று புகுந்து விட்டால், அது முற்றச் சிறிது காலங்கூட வேண்டுவதில்லை. ஓயாது நெருங்கிப் பழக வேண்டிய கடப்பாடுடைய இருவருள் இது புகுந்து விட்டால், அதன் பின்னர் ஒவ்வொரு சொல்லும் செயலும் புதுப்பொருளுடனேதான் காட்சியளிக்கும். வெகு விரைவில் இது முற்றிக் கனிந்து பயனளித்து விடும். இதனால் விளையும் அல்லல் கொலை வரையிற் கொண்டு செல்லும் என்பதை 'ஷேக்ஸ்பியர்' எழுதிய 'ஒதெல்லோ' நாடகத்தால் அறிகிறோம். ஏன்? தினம் தினம் செய்தித் தாள்களில் வரும் இத்தகைய செய்திகளாலும் அறிகிறோம். ஆகவே, இதனைத் தடுக்கக் குறள் முற்படுகிறது. எவ்வாறு? 'மனத்து மாசில்லாது இருப்பதே அறம்,' என்று கூறி, 'செயற்பால தோறும் அறனே' என்று வலியுறுத்துவதால் மனத்தூய்மை எவ்வளவு இன்றியமையாதது என்பதைக் காண்கிறோம். மனத்தூய்மையுடைய இருவருள் ஒருவர் மற்றவர்மேல் 'ஐயம்' கொள்ளுதல் எவ்வளவு தவறானது! ஆனாலும், இத்தவற்றை இருபாலாரிலும் ஆண்பாலாரே மிகுதியுஞ் செய்பவராதலின், அவர்கட்காகவே இக் குறள் எழுந்தது. 'சிறைகாக்குங் காப்பு எவன்

செய்யும்?' அதாவது ஒரு பெண்ணைக் காக்கவேண்டும் என்று கருதி அவளை வெளியிற் போகவிடாது காப்பாற்றுவேன் என்று ஒருவன் புறப்படுவது எத்துணைத் தவறானது! இங்ஙனம் காவல் புரியத் துணிவது ஒரு பயனையும் விளைக்காது போவது ஒரு புறம் இருக்க, அதற்கு எதிர்ப்பயனைச் செய்தலும் கூடுமன்றோ? ஓயாது ஐயுற்ற மனம் வெறுப்புக் காரணமாகவேனும் கூடாத தவற்றை இழைக்க முற்படலாம் அன்றோ? மனித மனம் இவ்வளவு 'விந்தை' நிறைந்தது! தடுப்பில் வழி அடங்கி இருக்கும் குழந்தைகூட, ஓயாது ஒருவர் தடுத்துக்கொண்டிருந்தால் அத்தவற்றைச் செய்ய முற்படுதல் கண்கூடு. எனவே, இத்தகைய் காவல் ஒரு பயனையும் தாராது என்றார். அன்றியும், மனத்தூய்மையுடையான் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒருவன் இத்தகைய இழிசெயலில் இறங்குதல் தகுமா? அவனவனுடைய மனத் தூய்மையைப் பார்த்துக் கொள்வதற்கு ஒரு வழி இதுதான். காரணமின்றியும் அற்பக் காரணங்களைக்கொண்டும் பிறர் மேல் ஐயம் கொள்ளும் ஒருவன், தன்னை மனத்துக் கண் மாசில்லாதவன் என்று எவ்வாறு கூறிக் கொள்ள இயலும்! 'என்னளவிற் காவல் செய்யத் தேவை இல்லை; காவலே வேண்டாவா?' என்றால் அதற்கும் விடை கூறுவார்போல் ஆசிரியர் 'மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை,' என்கிறார்.

மனத்துக்கண் மாசில்லாத ஒருவனும் ஒருத்தியும், தம்முள் கருத்து ஒருமித்து, இல்வாழ்வில் ஈடுபடுவதே அறம் என்றும், அவ்வாழ்வில் முழு நம்பிக்கையுடன் இருப்பதே அவ்வறத்தின் அடிப்படை என்றும் காணலாம். இனி இங்ஙனம் வாழும்

வாழ்க்கை சமுதாயத்திற்கு உறுதுணையாக எங்ஙன் அமைகிறது என்பதைக் காண்போம்.

### வாழ்வின் பயன்

மனத்துக்கண் மாசு இல்லாத ஒருவனும் ஒருத்தியும், தமக்குள் கருத்து ஒருமித்து இல்வாழ்வில் ஈடுபடுகிறார்கள் என்றால், அதுவே அறவாழ்க்கை என்று கண்டோம். இத்தகைய வாழ்க்கையின் பயன் என்னை? பெறுதற்கரிய செல்வம் ஒன்றை அடைதலாம். வற்றல் மரம் போல உள்ள வாழ்க்கை தளிர்ப்புடைய வேண்டப்படுவது யாது? வாழ்க்கையெனும் போராட்டத்தில் அலைப்புண்டு தத்தளிக்கும் மனத்திற்கு அமைதி வேண்டுமானால், எங்கே செல்வது? அறவழி நிற்கும் ஒருவன் இல்வாழ்க்கை அவனுக்கும் பிறருக்கும் பயன்பட வேண்டுமாயின், ஒரு செல்வம் அவன் மாட்டு இன்றியமையாது இருத்தல் வேண்டும். அவ்வரிய செல்வம் 'மக்கட்பேறு' என்று கூறப்படும். எத்துணைச் சிறப்புடைய வாழ்க்கையாயினும், மக்கட்செல்வம் இல்லாத வாழ்க்கை சுவையற்றதுதான்.

"... . . இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்,
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே,' (புறம். 188)

என்று பாண்டியன் அறிவுடை நம்பி கூறியது ஆழ்ந்து சிந்திக்கற்பாலது. குழந்தைச் செல்வம் பெற்ற பின்னர்த்தான் மனிதமனம் விரிவடைகிறது. தன்னலம் ஒன்றால் சூழப்பட்டுள்ள மனித மனம் விரிவடைந்து, அன்பெனும் நலத்தால் பிறரைக் கட்டித் தமர் போல நேசிக்கிறது. சொல்வதற்கு

மிக எளிதாக உள்ள இச்செயல், செய்வதற்கு மிகவும் அருமையானது என்பது கூற வேண்டா. பிறரைத் தமர் போல நேசிக்கும் நிலை ஒருவனிடம் வரவேண்டுமாயின், அப்பழக்கத்திற்கு முதற்படி, இல்வாழ்விலேதான் அமைந்து கிடக்கிறது. பிறருக்காகத் தன்னலத்தை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை குடும்பத்திலல்லாமல் வேறு எங்கே தோன்ற முடியும்?

**மக்கட்செல்வம்**

இல்வாழ்க்கையிலும், குழந்தைச் செல்வம் ஏற்பட்ட பிறகு அக்கணவனும் மனைவியும் அடைகின்ற மனமாறுதலை நாம் உலக அனுபவத்தில் நன்கு காணலாம். எத்துணை வன்னெஞ்சராயினும் இச்செல்வம் ஏற்பட்ட பிறகு அந்நெஞ்சு மாறுதல் அடையக் காண்கிறோம். பொருந்தாத திருமணங்கள் கூட இச்செல்வம் ஏற்பட்ட பிறகு மனம் பொருந்திய வாழ்வாதலைக் காண்கிறோம்.

'இம்மை உலகத்து இசையொடும் பொருந்தி
மறுமை உலகமும் மறுஇன்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்' (அகம். 66)

என்று இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஒரு தமிழன் கூறினான் என்றால், இச்செல்வத்தின் பயனை இந்நாட்டார் நன்கு அறிந்திருந்தனர் என்பது கூற வேண்டுவதின்று.

இல்வாழ்வில் புகுந்த ஒருவன் சமுதாயத்திற்கு நன்கு பயன்பட வேண்டுமாயின், அவனுக்கு இச்செல்வம் மிகவும் இன்றியமையாதது என்பது கண்ட வள்ளுவப் பெருந்தகையார் '**புதல்வரைப் பெறுதல்**' என்ற ஓர் அதிகாரமே வகுத்துச் சென்றார்.

அம்மட்டோடு இல்லை. வாழ்க்கைத் சிறப்படைய இதுதான் இன்றியமையாதது என்றும் கூறினர். அவ்வதிகாரத்தின் இறுதிக் குறள்,

‘மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு.’ (குறள், 60)

என்று கூறுவதால், முன்னர்க் கூறப்பெற்ற கருத்துக்கள் வலியுறுதல் காணலாம்.

## எத்தகைய குழந்தை?

குழந்தைச் செல்வம் வேண்டுவது என்று கூறினவுடன் எத்தகைய குழந்தை என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? குழந்தைகள் என்ற பெயருடன் பேயும் பிசாசும் இருந்தால் அவ்வில்வாழ்வு சிறப்படையுமா? உறுதியாகச் சிறப்படையாது. எனவே, மக்கள் எத்தகையவர்களாக இருத்தல் வேண்டும் என்பதை ஆசிரியர் குறிப்பாகப் பெற வைக்கிறார்;

‘அறிவு அறிந்த மக்கள்’ (61)
‘பழி பிறங்காப் பண்புடை மக்கள்’ (62)

என்று கூறுவதால் இத்தகைய மக்கட்பேறுதான் வேண்டத்தருவது” என்பதைப் பெற வைக்கிறார். ‘பிறந்த பிள்ளைகள் பிற்காலத்தில் நல்லவர்களாகவோ, தீயவர்களாகவோ இருப்பதற்கு நாம் என்ன செய்ய முடியும்? அது அவர்களுடைய பொறுப்பே தவிர நம்மால் ஆவது ஒன்றும் இல்லை,’ என்று கூறுவார் உளராயின், அக்கூற்றை மறுக்கிறார் ஆசிரியர். பிள்ளைகள், பெற்றோர்க்கும் சமுதாயத்திற்கும் நன்முறையில் பயன்படுபவர்களாக இருக்குமாறு செய்தல் நமது கடமை. பயிற்சியால் இந்நற்பழக்கங்கள் அவர்கட்கு வருமாறு செய்வது ஒரு புறம். அடுத்து இயற்கையில் அமைந்துள்ள பண்புகளாயினவும் நற்பண்புகளாக அமைதல் வேண்டும். இவை இரண்டும் நன்கு அமைந்தால்

ஒழிய ஒருவன் முழுவதும் நல்லவனாக இருத்தல் இயலாது.

### இயற்கைப் பண்பு

இரண்டாவது கூறப்பெற்றதை முதலிற் காண்போம். குழந்தைக்கு இயற்கையாக அமையும் பண்புகள் நல்லனவாக இல்வழி, செயற்கையில் தரும் நற்பழக்கங்கள் சிறப்புடையா. இயற்கையாக அமையும் பண்புகட்கு யார் பொறுப்பாளர்? இக்கால விஞ்ஞானமும் மனத் தத்துவமும், தாய் தந்தையரே என விடை கூறுகின்றன. தாய் தந்தையர் நற்பண்புகள் உடையவராய் இருப்பின், குழந்தைகள் வேறு பண்புகள் உடையவர்களாக இருத்தல் இயலாது. மனத் தத்துவம் நன்குணர்ந்த வள்ளுவர் இக்கருத்தைப் பலவிடங்களில் வலியுறுத்திச் செல்கிறார்.

'மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும்'. (456)

'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்'. (114)

என்ற இவ்விரண்டு குறள்களும் ஒரு பெரிய உண்மையை நமக்குக் கூறுகின்றன.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறன்'. (34)

என்று கூறிய ஆசிரியர், ஒருவன் அற வாழ்க்கை வாழ்கிறான் என்று அறிந்துகொள்ள இங்கு வழி கூறுகிறார். எவ்வளவுதான் ஆராய்ந்தாலும் ஒருவனுடைய புற வாழ்க்கையை வைத்துக்கொண்டு அது அறவாழ்வு என்ற முடிவுக்கு வர முடியாது. தூய்மையும், செம்மையும் உடைய வாழ்வு, பிறரை

ஏமாற்றக்கூட நடத்தப்படலாம். அவ்வொழுக்கை அத்துணைச் சிறப்புடையது அன்று என்று குறிக்கவே 'ஆகுல நீர பிற' என்றும் கூறினர் ஆசிரியர். மனத்துக்கண் உள்ள தூய்மையை அறிய, சொல்லும் செயலும் பயன்படுதல் உண்மையாயினும், சில சமயங்களில் மனத்தூய்மை இன்றியும் புறத்தூய்மை காணப்பெறுகிறது. இத்தகைய நடிகர்களின் அந்தரங்கத்தை அறிய ஏதேனும் வழி உண்டோ? வெளியில் இவ்வளவு தூய்மையுடைய இவர்களுடைய அகம் எத்தகையது என்று காண்டல் வேண்டுமே! இதோ வழி வகுக்கிறார் ஆசிரியர். யாரை ஆராய வேண்டும் என்று நினைக்கிறோமோ, அவர்களுடைய பிள்ளைகளைக்கொண்டு அவர்களின் அகத் தூய்மையை ஆராயலாம். 'அவர் மிகமிக நல்லவர், ஆனால், பூர்வ சென்மபாவம் பிள்ளைகள் மோசமாய் இருக்கின்றார்கள்!' என்று சிலரைப் பற்றிச் சொல்லக் கேட்கிறோம். இக்கூற்று உண்மையா? 'அன்று' என மறுக்கிறார் ஆசிரியர். மனம் தூயவராக ஒருவர் இருப்பாரேயானால், நிச்சயமாக அவருடைய எச்சமும்—பிள்ளைகளும்—நன்றாக இருக்கும் என்று உறுதியாகக் கூறுகிறார். எவ்வளவு புற உலகத்தைத் தமது வெளிவேடத்தால் ஏமாற்றினாலும், மனத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் தன்மை பிறக்கும் குழந்தைகளிடம் இருக்கின்றது. இதனை இன்னும் வலியுறுத்தவே 'தக்கார் தகவிலர் என்பதைஅறிய அவர்கள் எச்சமே சிறந்த கருவி', என்பது மீண்டும் குறிக்கப் பெறுகிறது.

இக்குறளுக்குப் பல்வேறு வகையாகப் பொருள் கூறப் பெறுகிறது. ஒப்பற்ற உரையாசிரியராகிய

பரிமேலழகருங்கூட மாறுபட்டே பொருள் கொள்கிறார். ஆசிரியர் வள்ளுவரின் மனத்தத்துவ நுணுக்கம் அறியப்படாமையின், இப்பிழைபாடு நேரிட்டதோ என்றுகூட நினைக்க வேண்டியுள்ளது. அன்றியும், பரிமேலழகரின் வடநாட்டு நாகரிகக் கொள்கையும் இவ்வாறு பொருள் கூறக் காரணமாய் இருந்திருக்கலாம். இக்காலத்தில் எச்சம் என்பதற்கு 'எஞ்சி நிற்கும் புகழ்' என்றுகூடப் பொருள் விரிக்கப்படுகிறது. எவ்வாற்றானும் தகுதி இல்லாதவர் புகழ் பெற்று வாழ்தலைக் கண்ட நாம், இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிற நாம், இவ்வாறு பொருள் கூறினால் அது பெருந்தவறாக அன்றோ முடியும்? இனி இக்கருத்தைச் சற்று விரிவாகக் காண்போம்.

### தாய் தந்தையர் காரணம்

தாய் தந்தையரின் அகமனம் எத்தகைய பண்பாட்டை அடைந்திருக்கிறதோ, அந்த அளவிற்குத் தான் மக்கள் மனமும் பண்பட்டு நிற்கும். ஒரோ வழி தக்கார் என்று நம்மால் கருதப்படுகிறவர்களுக்குத் தகவில்லாத பிள்ளைகள் பிறக்கக் காண்கிறோம். இத்தகைய சந்தர்ப்பங்களில் கொஞ்சம் நின்று ஆராய வேண்டும். ஒருவரைத் தக்கார் என்று நாம் முடிவு செய்ய என்ன முயற்சி எடுத்துக்கொண்டோம்? அவருடைய புற வாழ்க்கையைக் கூர்ந்து கவனிப்பது ஒன்று தவிர, வேறு என்ன வழியைக் கையாள முடியும்? பிறர் தன்னை நன்கு மதிக்க வேண்டும் என்று கருதுகிற ஒருவன், அப்பிறர் தன்னைக் காணும் நேரம் அனைத்திலும் செம்மையாகத்தானே நடந்துகொள்வான்? அதிலும் தன்னை எத்தகையவனாக உலகம் கருதவேண்டும் என்று நினைக்

கிறானோ, அவ்வகையில் தான் வாழ்வதாகப் பிறர் கருதுமாறு செய்வது ஒரு பெரிய காரியமா? உதாரணமாக ஒன்றைப் பார்ப்போம்: ஒருவன் 'பக்தன்' என்று தன்னைப் பிறர் கருத வேண்டும் என்று நினைக்கிறான். ஆகவே, காலையில் இரண்டு மணி நேரம் பூசையில் இருந்து பலத்த சத்தத்துடன் மணி அடிக்கிறான்; உட்கார்ந்தாலும், எழுந்தாலும் 'சிவ சிவா' என்று பலத்த சத்தம் இடுகிறான்; பக்தனுக்குரிய ஏனைய கோலங்களை அணிந்துகொள்கிறான். பல காலம் இந்நிலையில் அவனைக் காண்கிற உலகம் அவனைச் 'சிறந்த பக்தன்' என்று கூறுவதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், பூசையில் அமர்ந்த அவன், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' இறைவன் புகழை ஓதுகிறானா இல்லையா என்பதை யார் கூற முடியும்? கைகள் மணி அடிக்க, வாய் தேவாரத்தை ஓதலாம். ஆனால், இவை இரண்டின் செயலிலும் ஈடுபடாமல் அவன் மனம் இருட்டு மார்க்கட்டில் பொருள் சேகரிக்கும் வழியை ஆராய்ந்து கொண்டிருக்கலாமல்லவா? அல்லது வருமான வரியை ஏமாற்றப் பொய்க்கணக்கு எவ்வாறு புனைவது என்ற ஆழ்ந்த சிந்தனையில் செல்லலாமல்லவா? முன்னர்க்கூறிய இரண்டு செயல்களையுங் கொண்டு அவனை அன்பன் என்று கூறும் பிழை யாருடையது? இப்படிப்பட்ட அன்பர்கள் என்றும் இருந்திருப்பார்கள் போலும்! அல்லாவிடில்,

'பொக்க மிக்கவர் பூவும்நீ ருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே'' (5:90:9)

என்று திருநாவுக்கரசர் பெருமான் கூறுவாரா? இத்தகைய ஒருவனுக்கும் பிள்ளை பிறந்து அவன் தவறான வழியில் சென்றால், அதில் வியப்பு என்ன

இருக்கிறது? சில நாட்களுக்கு முன்னர், தேச பக்தர்' பலரைக் கண்டோம். அவர்களுடைய புற வாழ்க்கை ஒன்றை மட்டும் கண்டுவிட்டு மகாத்துமா வின் உண்மைச் சீடர்கள் என்று நாம் நினைத்த துண்டு. ஆனால், சந்தருப்பம் வாய்த்தவுடன் இந்த உண்மைச் சீடர்கள் அரிசியைப் பதுக்கவும் 'கள்ள மார்க்கெட்டு' வாணிபம் செய்யவும் சிறிதும் பின் வாங்கவில்லை. இத்தகைய கல் மனம் உடையார்க்கு எச்சம் (மக்கள்) எவ்வாறு நன்றாய் இருக்க முடியும்?

**அகமனம்**

பிறர் தம்மைக் காணுங்காலம் அனைத்திலும் போலியாகத் தூயவர் போல நடிக்கும் இவர்கள் மனம் உண்மையில் கருங்கல் தளமிட்டு மூடப்பட்ட சாக்கடையேயாகும். குழந்தை தரிக்கின்ற காலத்தில் இச்சாக்கடை திறக்கப்படுகிறது. கருத் தரிக்கும் காலத்தில் தாய் தந்தையர் என்ற இருவருடைய மனமும் எந்நினைவில் ஈடுபட்டிருக்கிறதோ, அதே பண்பு அமைந்துதான் குழந்தைகள் தோன்றும். இற்றை நாள் மனவியல் நூலார் கூறுவது ஒருபுறம் இருக்க, பழந்தமிழனும் இதை நன்கு அறிந்திருந்தான் என்பதை உதாரண மூகத்தாலும் அறியலாம்.

**உதாரணம்**

ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஒரு புரட்சி தேவையாய் இருந்தது. அப்புரட்சியை நடத்தி வைக்க ஒருவர் தேவைப்பட்டனர். தேவையைத் தமிழ் நாட்டார் பலரும் உணர்ந்தனர். ஆனால், இருவர் மட்டுந்தான் அத்தகைய புரட்சியாளர் தம் மிடம் தோன்றவேண்டும் என்று ஒருதலையாக நினைத் தனர். ஒருவர், பாண்டிமாதேவியாரான 'மங்கை யர்க்கரசியார்'. இரண்டாமவர், சோழ நாட்டில் சீர்

காழியில் வாழ்ந்த 'சிவபாத இருதயர்' என்ற பெரியார். ஆனால், முதலாமவராய் உள்ள அரசியாருக்கு இந்நினைவு பயன்பட வழியில்லை. ஏன்? அவர் இல் வாழ்க்கை பயனற்றதாகிவிட்டது. மேலும், அவர் மட்டும் இந்நினைவு கொண்டிருக்க, அவருடைய கணவன் வேறு நினைவில் இருந்தான். இரண்டு மாறுபட்ட கருத்துடைய அவர்கட்கு இத்தகையகுழந்தை பிறத்தல் இயலாததொன்று. எனவே, சீர்காழிக் குடும்பத்தார் எண்ணம் பூர்த்தியாகிறது. ஊராரைப்போல ஒரு சாதாரணக் குழந்தை வேண்டும் என்று மட்டும் அத்தாய் தந்தையர் நினைக்கவில்லை. தமிழ் நாட்டைச் சீர்படுத்த ஒரு புரட்சியாளர் தங்கட்கு மகனாகப் பிறக்கவேண்டும் என்றே அவர்கள் அல்லும் பகலும் நினைந்தார்கள். அவர்கள் நினைவையும் வாழ்க்கையையும் இதோ கவிஞர் சேக்கிழார் படம் பிடித்துக் காட்டுகிறார். (ஞா. பு. 19)

மனையறத்தில் இன்பமுறும் மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார்.

'திருஞான சம்பந்தர் ஏன் சீர்காழியில் தோன்றினார்? அப்படியானால், இன்றைக்கு நாட்டில் உள்ள குறைபாடுகளைப் போக்க ஏன் ஒருவர் தோன்றக்கூடாது?' என்றெல்லாம் பிதற்றும் பேதைகட்கு விடை கூறுவார் போலச் சேக்கிழார் பாடுகிறார். இதே குறிக்கோளுடன் தாயும் தந்தையும் இருந்ததனாலேதான் ஞான சம்பந்தர் அக்குடும்பத்தில் தோன்றினார். தாய் தந்தையர் தக்க மனத்திண்மையுடையவராயின், குழந்தையும் அவ்வாறே தோன்றும். 'உரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி' என்ற மாபெரு நூலை

இயற்றிய பெரியாராகிய 'கிப்பன்' என்பார், வீழ்ச்சியின் காரணங்கள் பல கூறுகிறார். அவற்றுள் ஒன்று வருமாறு: 'ரோமபுரிப் பெண்கள் வீரவழிபாடு செய்து ஓயாது வீரர்களைப்பற்றியே தியானம் செய்துகொண்டிருந்த நாளில் நல்ல வீரர்கள் அவர்கள் வயிற்றில் தோன்றினார்கள். ஆனால், அவர்கள் அக்குறிக்கோளை மறந்து களியாட்ட வாழ்க்கை நடத்த ஆரம்பித்தவுடன் அவர்கள் வயிற்றில் கோழைகள் தோன்றலானார்கள்'. இக்கூற்றை நன்கு ஆராய்ந்தால், நாம் இதுவரையிற் கூறியன எவ்வளவு உண்மை என்பது விளங்கும்.

### உண்மை வெளிப்பாடு

கருத்தரிக்கும் காலத்தே மனிதனுடைய அகமனம் எவ்வாறு உள்ளதோ, அவ்வாறே குழந்தை தோன்றும் என்பது எவ்வாறு எனக் காண்போம். போலி வாழ்வு வாழும் ஒருவன், ஓயாது விழித்திருந்து தன் சொற்கள் செய்கை என்ற இரண்டையும் காத்துக்கொள்கிறான்; இவை இரண்டினும் பிறர் அறியத் தவறு நேராமல் கவனித்துக்கொள்கிறான். ஆனால், உறக்கம், புணர்ச்சி, தடுக்கி விழும் நேரம், தும்மல் வந்த நேரம், எல்லையற்ற துக்கம் வந்த நேரம் ஆகிய இவற்றில் இப்போலி மனிதன் தான் வழக்கமாகக் கையாளும் விழிப்புத் தன்மையைக் கையாள இயலுவதில்லை. இந்நிலைகளில் இவன் அகமனத்தில் எந்த எண்ணம் குடிகொண்டிருக்குமோ, அதுவே வெளிப்படும். ஒரு மனிதன் உண்மைத் தன்மையை அறிய மேலே கூறிய நேரங்களே மிகவும் சிறந்தவைகள். கோபமே வாராது தனக்கு என்று கூறிப் பிறர் காணுகையில் அவ்வாறே நடந்துகொள்ளும் ஒருவனை ஆழ்ந்து

தூக்கத்தில் திடீரென்று எழுப்பினால், உண்மை விளங்கும். அவன் பழகாத நாய் போல் எழுப்பியவரைப் பிடுங்குதலைக் காணலாம். ஓயாது 'வேலும் மயிலுந் துணை,' என்று கூறுபவன், தும்மியவுடன் 'ஐயோ!' என்று கூறுதலையும் உலகிடைக் காணலாம். அகமனம் தூய்மை பெற்ற பெரியோர்கள் மட்டுமே இந்நிலையிலுங்கூடத் தவறாமல் இருப்பர். இது கருதியே போலும்,

'தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும் அம்மலர் அடியல்லால் அரற்றாது என்நா,; 'இடரினும் தளரினும் உனகழல் தொழுது எழுவேன், (.14: 4: 1) என்று ஞானசம்பந்தரும்,

'வழுக்கி வீழினும் உன் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம் (54:1) எனச் சுந்தரமூர்த்திகளும் அருளினர்! அகமனம் தூய்மை பெற்ற ஒருவனுக்குத்தான் கருத்தரிக்குங் காலத்திற்கூட மனம் தூய்மை பெற்ற ஒருவனுக்குத்தான் கருத்தரிக்குங் காலத்திற்கூட மனம் தூய்மையாக இருக்கும். அப்பொழுது தோன்றும் பிள்ளைகளும் உயர்ந்த பண்பு உள்ளவர்களாய் இருப்பார்கள். இக்கருத்துடன்,

'மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும்,'
'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.' (*456, 114*)

என்ற குறள்கட்குப் பொருள் காண்டல் எவ்வளவு எளிதாய் உள்ளது? இக்கருத்தை மேலும் வலியுறுத்துவார் போன்று ஆசிரியர்,

'நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.' (*958*)

என்றுங் கூறுதல் காண்க.

இவ்வாறு பொருள் கூறுவதால் இழுக்கின்மை'யும் அறிதல் வேண்டும். தக்கார் ஒருவருக்குப்

பிள்ளை இல்லை எனில், அதனால் அவரைக் குறை யுடையார் எனக் கூறல் வேண்டா. இவ்வாறன்றிப் பரிமேலழகர் 'தக்கார் தகவிலர்' என்ற குறளுக்குப் பொருள் கொள்வதுபோலக் கொண்டால், பல இடையூறுகள் வருதல் கண்கூடு. ஆசிரியர் பரிமேலழகர் இக்குறளுக்கு, 'இவர் நடுவுநிலை உடையார், இவர் நடுவுநிலை இலர் எனும் விசேடம் அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்,' என்று கூறுகிறார். இவ்வாறு கூறினால், மணஞ்செய்தும் பிள்ளைப்பேறில்லாத சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஞானசம்பந்தர், பெரியாழ்வார், சாக்கிரட்டீஸ் போன்ற பெரியார்களை நடுவுநிலையற்றவர்கள் என்று கூற வேண்டிய இடர்ப்பாடு வருதல் காண்க.

எனவே, நல்ல அறவாழ்க்கை உடைய ஒருவன் நடத்தும் இல்வாழ்க்கை செம்மையுடையதுதானா என்று காண வேண்டுமாயின், அவன் மக்களே தக்க உரைகல் என்று ஆசிரியர் கூறுகிறார்.

### பெருக்குப் பிள்ளை

வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தின் இறுதிக் குறள் நன்கு சிந்திக்கற்பாலதாகும். வழக்கம் போலப் பின்னர் வரும் அதிகாரத்திற்குத் தோற்றுவாயாக மட்டும் இக்குறள் அமையவில்லை. மனித வாழ்க்கையில் அனைத்தையும் பெறுவதற்கோ, அன்றி இழப்பதற்கோ காரணமாக இருப்பது மனை வாழ்க்கைதான். மனையாள் நற்பண்புடையவளாயின், வாழ்க்கை பயன் பெறலாம்; அன்றேல், அனைத்தும் இழந்ததாகவே கருதப்படும். இது கருதியே 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்றார். இனி இவ்வில்வாழ்க்கையின் பயன் மக்கட்பேறு என்றார். அதுவும் நன்மக்கள் பெற்றால் ஒழிய

பயனுக்குக் கருதப்படுவதில்லை. தம் குலம் விளங்கவோ, அன்றிப் 'புத்' என்னும் நரகில் வீழாமல் பெற்றோரைக் காக்கவோ 'புதல்வர்ப் பேறு' வேண்டும் என்பு பலரும் நினையலாயினர். ஆனால், வள்ளுவர் அவ்வாறு நினைத்தாரல்லர். முன்னவர் கருத்துப்படி பிறக்கும் குழந்தை எப்படி இருப்பினும் சரியே. 'பேதையாய் இருப்பினும், பிள்ளை பிள்ளைதானே? பேருக்கு ஒரு பிள்ளை என்று இருந்துவிட்டாலும் சரி,' என்பார் கருத்து வள்ளுவர்க்கு உடன்பாடு அன்று போலும்! அதனாலேயே மக்கள் என்று குறிப்பிடும் இடங்கள் அனைத்திலும் பெரும்பாலும் அடைமொழி கொடுத்தே கூறுகிறார். 'நன்கலம் நன்மக்கட் பேறு'; 'அறிவு அறிந்த மக்கட் பேறு' என்பன போன்ற இடங்கள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

### பண்புடை மக்கள்

புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரத்தின் முதலிரண்டு குறள்களும் மக்கள் என்ற பொதுச் சொல்லையே ஆள்கின்றன. எனவே ஆண் பெண் என்ற வேறுபாடு இன்றியே ஆசிரியர் பாடுகிறார் என்பது நன்கு தெரியப்படும். இந்த இரண்டு பாடல்களும் சிறந்த உட்கோளோடு திகழ்கின்றன.

'பெறும்அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.' [61]

'எழுபிறப்பும் தீயவை தீண்டா; பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.' [62]

வெண்பாவிற்கு அழகு செய்யும் யோனையைக் கூடத் துறந்துவிட்டு மக்கள் என்ற சொல்லுக்கு அடை வழங்குகிறார் ஆசிரியர். எத்தகைய மக்கள்

வேண்டும்? அறிவு நிரம்பிய மக்களே வேண்டும். மனிதனை ஏனைய விலங்கு உலகினின்றும் பிரிப்பது அவன் பெற்றுள்ள அறிவு ஒன்றேயாகும். எனவே, அதன் இன்றியமையாமை அதிகம் வலியுறுத்தப் படவேண்டுவதில்லை. என்றாலும், மக்களாய்ப் பிறந்தோர் பலர் இவ்வறிவு இல்லாதும், இருந்தும் பயன்படுத்தாதும் இருப்பக் காண்கிறோமாகலின், அறிவுடை மக்கள் வேண்டும் என்றார். எத்துணைச் சிறப்புடையதாயினும், இவ்வறிவு கூர்மையான வாள் போன்ற ஒன்றாகும். இதனைப் பெற்ற ஒருவன் தக்க பண்பில்லாதவனாயின், இவ்வறிவாகிய வாளைக் கொண்டு தனக்கும் பிறர்க்கும் தீங்கையே இழைப்பான். எனவே, அறிவு எனும் வாள் நன்கு பயன்பட வேண்டுமாயின், இதனினும் மேம்பட்ட ஒன்று கூடவே இருத்தல் வேண்டும். அதனை மனத்துட் கொண்ட ஆசிரியர் விடாது அதனை அடுத்த குறளில் கூறியுள்ளமை காண்க. சிறந்த அறிவாயினும், அது நன்முறையில் தனக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு செய்வது நற்பண்பே ஆகும். அப் பண்பு இல்வழி அறிவு நலன் விளைக்காததன்றித் தீமையே புரிதலுங்கூடும். இது கருதியே ஆசிரியர் அடுத்த குறளில் 'பண்புடை மக்கள்' வேண்டும் என்றார்.

## பண்புடன் கலந்த அறிவு

அறிவின் செயலும் பண்பின் செயலும் பகுத்தறியப்பட வேண்டுவனவாகும். இன்றைக்குப் பலரும் அறிவுக்குத் தலைமை இடம் அளித்து வழிபடத் தொடங்கி உள்ளனர். அவர் கருத்துப்படி அறிவு ஒன்று மட்டும் உலகை ஆளத் தொடங்கி விட்டால், அந்நாள் நன்னாளன்று. உலகம் அழியும்

னான் அன்றேயாகும். பொருள்களின் வேறுபாட்டைக் கூர்ந்து அறிவது அறிவு. பெரும்பாலும் ஒற்றுமைப்பட்ட இயல்புகள் வாய்ந்த இரு பொருள்களை ஆராய்ந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமை கருதி இரண்டாகப் பிரித்துக் கூறுவது அறிவின் வேலை. பயன் கருதாது ஆராய்ந்து சென்று பொருளின் உண்மைத் தன்மையைப் புலப்படுத்துவது அறிவின் தொழிலாகும். ஆனால், இங்ஙனம் செய்வதால் உள்ள நலந்தீங்குகளைப் பற்றி அறிவு கவலைப்படுவதில்லை. அணுவைப்பற்றி ஆராய முற்படுவது அறிவு. 'அணு' என்பது பகுக்க முடியாத ஒன்று,' என்று ஒரு காலத்தில் நினைத்ததும் கூறியதும் அறிவுதான். அதே அணுவைப் பயன் கருதாது உடைத்து அதனுள் இருக்கும் பொருள்களைக் காணத் துடித்துக் கண்டதும் அறிவுதான். இவ்வணுவின் சக்தி எவ்வளவு என்று காண முற்பட்டதும் அறிவுதான். அணுவைத் துளைத்து அளவற்ற ஆற்றலை வெளியிட்ட அறிவுக்கு வணக்கம்! ஆனால், இன்று நம்மில் பலரும் இவ்வாற்றலை வெளியிட்ட அறிவைப் போற்றி வியவாது தூற்றுகிறோம். நாகசாக்கி, ஹிரோஷிமா என்ற நகரங்களில் வாழ்ந்து இன்று எஞ்சியவர்கள் இந்த அறிவைப்போற்றுகிறார்களா என்பதை அவர்களைக் கேட்டால் அல்லவோ தெரியும்! காரணம் என்ன? அறிவு பண்பாட்டுடன் கலவாமல், கேவலம் அறிவு மாத்திரையாய் நின்று தொழிற்படுவதானால் இந் நிலைக்குத்தான் வர நேரிடும். தம் அறிவின் பயன் மக்கட்சமுதாயத்திற்கு நலம் விளைப்பதா, தீங்கு விளைப்பதா என்பது பற்றிக் கவலையுறாமல் செய்யப்படும் அறிவின் செயல் எதுவாயினும் அது உலகோரால் பழிக்கவே படும்.

இனிப் ‘பண்புடைமையாவது யாது?’ எனக் காண்டல் வேண்டும். இச்சொற்குப் பொருள் கூற வந்த ஆசிரியர் பரிமேலழகர், ‘பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்று எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்’ எனப் பொருள் கூறினர். கலித்தொகையில் பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்’ (கலி. 133) என வருவதும் காண்டற்குரியது. இப் பண்பாடு இல்லாத அறிவு, பெருந்தீங்கை விளைத்து ‘அணுகுண்டு’ தோற்றுவதற்கே பயனும். இது கருதியே போலும் ஆசிரியர்,

‘அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.’ (99)

எனக் கூறினர்! பண்பாடு இல்லாதவர் அறிவு, அழித்தல் ஒன்றிற்கே காரணமாகும் என்பதை இதனால் நன்கு அறியலாம். பண்பாட்டிற்கு, ஆசிரியர் தரும் சிறப்பு இத்துணையது என்று அறிந்த பின், மக்கட்பேற்றில் எடுத்துக் காட்டப்பெற்ற குறள்களின் பொருளை நன்கு சிந்திக்க முற்படல் வேண்டும். பிள்ளைகள் கூர்மையான அறிவும், சிறந்த பண்பும் அடையப்பெற்றவராக இருத்தல் வேண்டும் என்று கூறுவதன் கருத்தென்ன? பிள்ளைக்கலி தீர்ப்பதற்காகவே பிள்ளைப்பேறு வேண்டும் என ஆசிரியர் கூறி இருப்பின், இத்தனை அடைமொழிகள் தந்திரார். எனவே, இதனுள் உட்கோள் ஒன்று இருத்தல் வேண்டும். அது யாது? பிள்ளைகள் நாளைச் சமுதாயத்தின் தூண்களாக இருக்க வேண்டுபவரல்லரோ? அவர்களின் சிறப்பும் சிறப்பின்மையும் நோக்கித்தானே நாளைச் சமுதாயம் அமையப் போகிறது? எனவே, நல்ல சமுதாயம்

நாட்டில் அமைய வேண்டுமாயின், நன்மக்கட்பேறு வேண்டும் என ஆசிரியர் வலியுறுத்துகின்றார். வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் ஆசிரியர், நன்மக்கட்பேற்றையும் அதில் ஒரு கூறாக வைக்கிறார்.

## சமுதாயப் பிராணி

ஒரு மனிதன் வாழ்க்கை, அகம் புறம் என இரு பகுப்பாகி இயல்கிறது. அகம் பெரும்பாலும் வீட்டினுள் தலைவன் தலைவி மக்கள் சுற்றத்தார் என்பவருள் அடங்கிவிடுதலின், அதில் சமுதாயம் பற்றிய விளைவிற்குத் தேவை இல்லை. ஆனால், எத்தகைய மனிதனும் வீட்டினுள்ளேயே தங்கித் தன் காலத்தைக் கடத்திவிட முடியாது. வீட்டை விட்டு வெளியே வந்தவுடன் தன்னை ஒத்த மனிதர்களிடம் கூடிப் பழக வேண்டி உளது. அங்ஙனம் பழகுங்கால் தன் இயற்கையோடு ஒத்தவர்களுடன் நட்புக் கொள்ளவும் மாறுபட்டவர்களுடன் மாறு கொள்ளவும் தொடங்குகிறான். இந்நிலை மாறிப் பிறர் இயற்கை தன்னியற்கையுடன் ஒத்ததாக அமையாதவிடத்தும் கூட அவர்களுடன் சேர்ந்து வாழ முனைகிறான். இம் முயற்சியால் சகிப்புத் தன்மை பிறக்கிறது. தன்னினும் வேறுபட்ட கருத்துடையாருங்கூட இப்பரந்த உலகில் வாழ உரிமை பெற்றவர்களே என்று முழுவதும் உணரும் நிலையிலேதான் ஒரு மனிதன் பண்பாடு பெற்றவன் ஆகிறான். இத்தகைய பண்பாடு இல்லை எனில், வாழ்க்கை வறண்ட பாலை வனம் ஆகிவிடும். 'மனிதன் சமுதாயப் பிராணி' (Man is a social animal) என்ற பழமொழி உண்மையாவது இந்நிலையிலேதான். உலகிடைப் பிறந்ததன் பயன் இரு வகைப்படும். ஒன்று, ஆன்ம முன்னேற்றம்.

அது பிறர் உதவி இன்றித் தன் முயற்சியாலேயே நடைபெறுவது. இரண்டாவது, சமுதாயத்தில் உள்ள தன் போன்ற பிறர் நலமடையத் தன் வாழ்க்கையைச் செலுத்துவதாகும். இவ்விரு வகைப் பயனையும் அடைய வள்ளுவர் நூல் வகுக்கிருர். ஏனை யோர் நூலினும் குறள் சிறப்படைவது இத்துறையிலேயே ஆம். இவ்விரு பயனையும் அடைய இருவேறு வழி வகுக்காமல், ஒன்றன் மூலமே மற்ருென்றை அடையக் குறள் அடிகோலுகின்றது. இரண்டாவது பயனை அடையச் செய்யும் முயற்சியிலேயே முதற்பயனையும் அடைய வழி செய்கிறது.

## சமுதாயத் தொண்டன்

இல்லறவியல் முழுவதும் இவ்விரண்டாம் வழியை வகுப்பதேயாகும். அதிலும், 'புதல்வரைப் பெறுதல்' என்ற அதிகாரத்தின் இவ்விரு குறள்களும் சமுதாயம் நன்கு நடைபெறவே வழி காட்டுகின்றன. ஒருவன் எத்துணைச் சிறந்தவனுயினும், பிறர் வாழத் தன் வாழ்க்கையைச் செலுத்துபவனாய் இருப்பவனுயினும், அவன் எச்சமும் அவ்வாறு பயிற்றுவிக்கப்பட இல்லை எனில், பயனின்ருய முடியும்.

பிள்ளைகட்கு இயற்கை, செயற்கை என இரு இயல்புகள் உண்டு என்பது முற்கூறப்பெற்றது. செயற்கை முறையால் அவர்களை நல்லவர் ஆக்கும் வழி,

> 'தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
> முந்தி இருப்பச் செயல்.' (67)

என்ற குறளால் கூறப்படுகிறது. எனவே, இயற்கையாக அவர் மாட்டு அமைய வேண்டுவன

கூர்த்த அறிவும் சிறந்த மக்கட்பண்பும் ஆகும் என்பதை இங்குக் குறிப்பிட்டுவிட்டார். இங்ஙனம் இயற்கையாகவே இவ்விரண்டும் அமைந்து செயற்கையால் பெற வேண்டிய அனைத்தும் முற்றி இருக்கும் நிலையையும் பெற்றுவிட்டால், ஒருவன் பெறவேண்டிய பகுதி முழுவதும் பெற்றவனாவான். இத்தகைய மைந்தனைப்பெற்றவள் மகிழ்ச்சியடையக் கேட்பானேன்? அதிலும் அம்மகனைச் 'சான்றோன்' என்று பிறர் கூறக்கேட்ட தாய், ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும் என்பதிலும் வியப்பு என்னை? குறைபாட்டை அறியத் தாய் மனப் பான்மையால் முடியாது ஆகலானும், குணமும் குற்றமும் நாடிக் குணம் மிக்க வழியே 'சான்றோன்' என்று பிறர் கூறுவர் ஆகலானும், அவர்கள் கூறியதைக் கேட்ட பொழுது அவள் பெரிதும் உவக்கும் எனக்கூறினார் ஆசிரியர்.

இத்தகைய பிள்ளைகளைப் பெறுவதாலேதான் மனித மனம் விரிவடைகின்றது. தன்னலம் குடிகொண்டிருந்த மனத்தில் மனைவி இடம் பெற்று ஓரளவு விரிவடையச் செய்யினும், புதல்வர்ப் பேற்றின் பின்னரே மனிதன் முழுத்தன்மை அடைய முடிகிறது. அதன் பின்னரே சமுதாயத்தின் முழு உறுப்பாக ஒருவன் வாழ முடிகிறது. வாழை இருந்து பயன் உதவிய பின்னர் அதன் கிழக்கன்று தோன்றி அதே பயனை நல்குதல் போல, அவன் பிள்ளைகளும் ஏற்கெனவே பெற்றுள்ள அறிவு, பண்பு, கல்வி நலன் இவற்றால் சமுதாயத்திற்கு உதவும் சான்றோர்கள் ஆகின்றார்கள்.

## வாழ்வாங்கு வாழ்தல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலின் அடிப்படை எங்கு உளது? இவ்வினாவிற்கு விடை பலர்

பலவாறாகக் கூறுவர். ஆனால், எல்லா விடைகளை யும் சேர்த்து ஒரு முடிபு காண முற்படல் வேண்டும், எத்தகைய வாழ்க்கையில், தனக்கும் பிறருக்கும் மிகுதியான பயன் உண்டாகிறதோ, அத்தகைய வாழ்க்கையே 'வாழ்வாங்கு' வாழும் வாழ்க்கை என்ற முடிபுக்கு வருதல் கூடும். இந்த நிலையையும் சுருக் கிக் கண்டால், பிறர்பொருட்டு வாழ்வதே வாழ்க்கை யின் நோக்கம் என்ற உண்மை தெற்றென்ப் புல னாகும். மேலாகப் பார்க்கும்பொழுது அனைவரும் கடைப்பிடிக்க முடியாத ஒரு கொள்கை போலத் தோன்றும் இது. ஆழ்ந்து சிந்தித்தால், நாம் அனை வருமே வாழ்க்கையின் பெரும்பகுதியை பிறருக் காகவே வாழ்கிறோம் என்று அறிதல் கூடும். இது எவ்வாறு என்பதைக் காண்போம்.

### தன்னலப்பிண்டம்

சிறு குழந்தையாய் இருக்கும் பொழுது ஒவ் வொருவரும் தன்னலப் பிண்டமாகவே இருக்கிறோம் என்பதில் ஐயமின்று. புத்ததேவன்கூட இவ்விதிக்கு விலக்கன்று. தாய் தந்தையரை அறிந்துகொள்ளும் நிலை வந்த பின்புகூட இந்நிலை முற்றிலும் மாறுவ தில்லை. பிறருடைய நலத்தை ஆராயாமல் தன் னுடைய நலத்தைக் கவனிக்கவே அனைவரும் உளர் என்ற மன நிலையில் குழந்தை இருக்கக் காண்கிறோம் அல்லவா? சாதாரணமாகத் தானே விளையாடிக் கொண்டிருக்கிறது ஒரு குழந்தை. ஆனால், தன் தாயுடன் யாராவது ஒருவர் பேச வந்தவுடன் தாயின் கவனம் வேறு இடம் செல்வதைக் குழந்தை பொறுப்பதில்லை. அவள் கவனம் முற்றும் தன்பால் வரவேண்டும் என்ற எண்ணத்தால், இது வரை சும்மா விளையாடிய குழந்தை, தாய் பிறருடன் பேச

ஆரம்பித்தவுடன் அழத் தொடங்குகிறது. பேச்சை நிறுத்தித் தன்னைத் தாயானவள் தூக்கியவுடன் அழுகை நின்றுவிடுகிறது. ஆனால், சில வினாடிகளில் தாயின் மடியிலிருந்து இறங்கி விளையாட ஓடி விடுகிறது. இங்ஙனம் தொடங்கும் 'தன்னலம்' எளிதில் நம்மை விட்டுப் போவதில்லை. தோழர்களுடன் சேர்ந்து விளையாடும் குழந்தை கையில் வைத்திருக்கும் ஒரு பொருளைக் கேட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும். தன் பொருளைப் பிறரிடம் தர எளிதாக அக்குழந்தை உடன்படுவதில்லை.

## பெரியோர் தன்னலம்

'தன்னலம்' என்று கூறினால் வெறுக்கத்தக்க சொல்லாய் அது விளங்குகிறது. ஆனால், நடைமுறையில் நடைபெறுவது அதுதான். குழந்தை தன் தின்பண்டத்தைத் தர மறுப்பதும், ஒரு நாட்டார் பிற நாட்டாருக்கு விடுதலை தர மறுப்பதும் இதே அடிப்படையில் தோன்றுவனவே. பாரசீக எண்ணெய்க் கிணறுகளை அந்த நாட்டினர் தேசிய மயமாக்கக்கூடாது என்று ஆங்கிலேயர் ஏன் கரைந்தனர்? வடகொரியர் தென்கொரியர்மேல் படையெடுப்பது பற்றி அமெரிக்கரும் இரஷியரும் கரைவதன் கருத்தென்ன? சுருங்கக் கூறினால், 'சுயநலம்' என்ற சொற்பொருள் தான் இச்செயல்கள் எனலாம். ஆனால், இவ்வாறு கூறினால் அவர்கள் ஒப்புக்கொள்ள மறுப்பார்கள். என்றாலும், உண்மை உண்மையே! இளமையில் உடன் பிறக்கும் இத்தன்னலம் இறுதி வரை மனிதனை விடாது பற்றி இருத்தலும் உண்டு; வயது ஏற ஏற அதிகப்படுதலும் உண்டு. ஒரோவழி ஒரு சிலரிடம் இது குறைந்து நாளாவட்டத்தில் அற்றுப் போதலும் உண்டு.

## இரு வகைத் தன்னலம்

இங்குத் தன்னலம் என்று கூறுவது தனிப்பட்ட ஒருவனுடைய நலத்தையும், ஓர் இனத்தின் நலத்தையும் குறிப்பிடுவதாகும். தனிப்பட்ட ஒருவன் தன் சொந்த நன்மையை விட்டுவிட்டுப் பிறருடைய நலத்தை நாட முற்படும்பொழுது அது உயர்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது உண்மைதான். ஆனால், ஓர் இனம் முழுவதும் கூடித் தன் நலன் ஒன்றையே கருத்திற்கொண்டு அதன்பொருட்டுப் பிற சமூகத்தின் அல்லது இனத்தின் நலனைப் பாதிக்கக்கூடிய செயல்களைச் செய்தால், அதுவும் தன்னலம் என்றுதானே குறிக்கப்படும்? இந்தப் பரந்த பொருளிலும் முதலிற்குறித்த குறுகிய பொருளிலும், ஆக இரு பொருள்களிலுமே 'தன்னலம்' என்ற சொல் இங்குப் பயன்படுத்தப்படுகிறது.

தன்னலம் குழந்தையிடம் மிகுதியாகக் காணப்படுவதற்கு மனத் தத்துவ நூலார் பலவேறு காரணங்கள் காட்டுவர். அவை நமக்குத் தேவை இல்லை. தன்னிடம் உள்ள இப்பண்பைக் குழந்தை மறைக்க முயல்வதில்லை. ஆனால், பெரியவர்கள் கூடுமான வரை இதைப் பிறர் அறியாதபடி நடந்துகொள்கிறார்கள். இவ்வாறு அனைவரிடத்திலும் காணப்பட்டாலும், இப்பண்பு உயர்ந்தது என்று கூறுவதற்கில்லை. மிகத் தாழ்ந்த ஒரு குணந்தான் இது. இப்பண்பு நிறைந்த ஒருவன் சமுதாயப் பிராணி அல்லன். பலருடன் கூடி வாழ அவன் தகுதியற்றவனே ஆவன். ஆனால், இப்பண்போடு பிறக்கும் ஒருவன் தக்க வகையில் சமுதாயத்தில் வாழ வேண்டுமாயின் அதற்கு ஒரு வழிதான் உண்டு. அதாவது, இதனைக் கூடுமான வரை களைந்து எறிவதுதான். எவ்வள

வுக்கெவ்வளவு இது ஒருவனிடமிருந்து களையப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவன் சிறந்தவன் ஆகலாம்; சமுதாயத்தில் சிறப்புடனும் வாழலாம்.

**சீர்திருத்தம்**

எவ்வாறு இதனைக் களைவது? நம்மையும் அறியாமல் நாம் சீர்திருத்தத்தான் செய்கிறோம். குழந்தையாய் இருந்த பொழுது ஒருவருக்கு ஒன்று தர மறுத்தவன், பெரியவன் ஆனவுடன் தன் மனைவி மக்கள் என்பவர்க்குத் தன் பொருளைப் பகிர்ந்து கொடுக்க முன் வருகிறான்; ஏன்? பல சமயங்களில் தன் நலந்தீங்குகளைப் பாராது அவர்கள் நலத்துடன் இருக்கப் பாடு படுகிறான். இப்பொழுது பழைய தன்னலம் ஓரளவு விரிவடைகிறது. இன்னுஞ்சில காலங் கழித்துத் தன் மனைவி மக்கள் என்ற நிலைக்குப் பிறகு தன் சுற்றத்தார் என்பவர்கட்காகவும் தன்னுடைய வாழ்க்கை உளது என்பதை உணரத் தலைப்படுகிறான். அதன் பின்னர்த் தான் வாழ்க்கை நடத்தும் இடம், தெரு, ஊர், மாவட்டம், நாடு என்று அவனுடைய பற்று விரிவடையக் காண்கிறோம். ஆதியில் இருந்த தன்னலமே இங்ஙனம் விரிந்து இடம் தருகிறது. ஒரு சிலரைப் பொறுத்த மட்டில் அவர்கள் என்றும் ஒரே மாதிரியாக இருப்பதையும் உலகிடைக் காண்கிறோம். மனைவி மக்களுக்குச் சோறு போடுவதைக்கூடத் தருமக் கணக்கில் எழுதும் ஒப்பற்ற பிறவிகள் அவர்கள். ஆனால், பெரும்பாலார் முன்னர்க் கூறிய முறைப்படி விரிந்து செல்லும் பற்றுடையவரேயாவர்.

இனி இத்தன்னலம் ஏன் இவ்வாறு பரிணமித்து விரிகிறது என்பதைக் காண்டல் வேண்டும்.

இது தானாக விரிவடையும் ஒன்றா, அல்லது நாமாக இதனை விரிவடையச் செய்யவேண்டுமா? நாமாகத் தான் இதனை விரிவுபடுத்த வேண்டும். மனித மனத்தை அழுத்திக்கொண்டிருக்கும் ஒரு பெரிய கல்லாகும் இத்தன்னலம் என்பது. இதனை அப்பால் புரட்ட வேண்டுமானால், வலுவான ஓர் இரும்புக் கம்பி வேண்டும். அக்கம்பிதான 'அன்பு' என்பதாகும். அன்பு என்னும் கம்பியின் அடியில் 'உறுதி' என்னும் ஆப்பை வைத்து நெம்பினால், தன்னலம் என்னும் பெருங்கல் புரண்டுவிடும்.

அன்பு

அன்பு என்பதும் இயற்கையில் மனித மனத்தில் அமைந்துவிட்ட ஒரு பண்பாகும். இதனை நன்கு வளர்ப்பவனே முழு மனிதன் ஆக முடியும். இஃது இல்லாதவரை மனித இனத்திற்கூடச் சேர்த்தல் அரிது என்பர் ஆசிரியர் வள்ளுவர்.

> 'என்புஇல் அதனை வெயில்போலக் காயுமே
> அன்புஇல் அதனை அறம்,' (77)

> 'அன்பின் வழியது உயிர்நிலை; அஃதுஇலார்க்கு
> என்புதோல் போர்த்த உடம்பு.' (80)

என வரும் குறட்பாக்கள் இக்கருத்தை வலியுறுத்தல் காண்க. இவ்வன்புடையாரே சமுதாயத்தில் நன்கு வாழ முடியும். தன்னைத்தானே பெரிதும் பற்றி நிற்கும் இந்த அன்பு விரிந்து முதல் முதலில் குடும்பத்தில் படருகிறது. அந்நிலையை எளிதில் அறிந்துகொள்ள இயலும். எப்பொழுது ஒருவனுக்குக் குழந்தைகளிடம் உண்மை அன்பு சுரக்கிறதோ, அப்பொழுது 'குழலும், யாழும்' ஓரளவு அவனுக்குச் சுவைகுறைந்துவிடும். அவர்கள் மெய் தீண்டியவுடன்

உடலுக்கு ஒரு புதிய இன்பம் தோன்றும். அவர்கள் சிறு கை அளாவிய கூழ் அமிழ்தினும் ஆற்ற இனிமையுடையதாகக் காணப்படும். தனது ஐம் பொறிகளாலும் அவர்களுடைய இன்பத்தை ஒருவன் அனுபவிக்கத் தொடங்குகையிலேதான் அவன் அன்பு முழு விளக்கம் பெற்றதென்று கூற முடியும்.

இத்தகைய அன்பு ஒன்றே மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வகை செய்து, பின்னர் அவனை வானுறையும் தெய்வத்துள்ளும் ஒருவனாகச் செய்கிறது. தன்னலம் போல இயற்கையாகவே ஒருவன் மாட்டுத் தோற்றுகிற இந்த அன்பானது, அவனாலேயே போற்றி வளர்க்கப்படல் வேண்டும். அவ்வாறு வளர்ப்பதனாலேயே அவன் சமுதாயத்தில் சிறந்த உறுப்பினன் ஆதல் கூடும். முன் பின் அறியாதாரிடத்து அன்பு செலுத்திப் பழகுதல் எளிதன்று. எனவே, தன் மக்களிடத்திலேயே அதனை முதலிற்செய்து பழக ஆசிரியர் வழி வகுத்தார். தன்னலம் என்னும் பேய் பிடித்தவனை அப் பேயினிடத்திருந்து விடுவிக்கவே குழந்தைச் செல்வம் பயன்படுகிறது.

## இசை வெறுக்கிறதா?

இசை வெறுக்கிறதா உங்கட்கு? குழலும், யாழும் வெறுப்புத் தட்டுகின்றனவா? இவ்வினாவைக் கேட்டால் விடை தரப் பலரும் கூசுவர். உலக மகா கவி 'ஷேக்ஸ்பியர்' கூறியது போல 'இசையில் ஈடுபடாதவன் எக்குற்றமும் செய்வான்,' என்ற முறையில் தம்மைப்பற்றிப் பிறர் என்ன நினைப்பார்களோ என்ற கருத்தால் உண்மை கூற மாட்டார்கள். உலகில் பிறந்த மக்கள் அனைவரும் ஓரளவாவது இசை

யில் ஈடுபடத்தான் செய்வர். விலங்கினங்களிற் கூடப் பல இசையில் ஈடுபடும் என நூல்கள் கூறுகின்றன. மதங்கொண்ட யானையும் இசைக்குக் கட்டுப்பட்டு நிற்குமாம். 'காழ்வரை நில்லாக் கடுங்களிறு அன்று ஒருத்தல், யாழ்வரைத் தங்கியாங்கு' எனக் கலித்தொகை (பாலை. 1) கூறுவதால் இவ்வுண்மை நன்கு விளங்குகிறது.

இனிய மழலை

கண்ணன் குழல் வாசித்த பொழுது மாடுகளும் ஏனைய கொடிய விலங்குகளும் அவன் இசையில் ஈடுபட்டு அப்படியே நின்றுவிட்டன என்றும், ஆயர் குழல் ஊதினபொழுது 'மரங்கள் மலர் அசைவிலா; காளையாறும் கலித்து ஓடா' என்று கூறப்படுகிறது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இசையில் ஈடுபடாத மனம் உடையார் இருக்கவும் கூடுமா? இவ்வாறு இருக்கவும், ஆசிரியர்,

> 'குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்.' (66)

என்று கூறக் காரணம் என்னை? இக்குறளுக்கு உரை கூற வந்த ஆசிரியர் பரிமேல் அழகர், 'இசையைக் கேட்டவர் அவற்றினும் மழலைச் சொல் இனிது என்பர் என்பது குறிப்பெச்சம்,' என்று பொருள் எழுதிச் சென்றார்.

இக்குறளில் வள்ளுவப் பெருந்தகை கூறியது உயாவு நவிற்சி அணியா என்பது ஆராயத்தற்குரியது. இதற்கு முன்னர் உள்ள குறளிலும் 'அவர் தம் சொல் கேட்டல் இன்பம் செவிக்கு' என்று கூறப் பெறுகிறது. இவ்வாறு இரண்டு இடங்களிற் கூறவேண்டுமாயின், தக்க காரணமில்லாமல் ஆசிரியர் கூறமாட்டாரன்றோ?

### இசையில் ஈடுபடுபவர்

குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளில் இசை தோன்றுகிறது. இந்த இசையில் அனைவருமா ஈடுபடுகின்றனர்? இல்லையே! காரணம் என்ன? சிலர் இசையில் தம்மையே மறந்துவிடுகின்றனர்; சிலர், இசையைத் தலையிடியாகக் கருதுகின்றனர். ஈடுபடுத்தும் இயல்பு இசையினிடம் மட்டும் காணப்படுமானால், அனைவரையுமல்லவா அது ஈடுபடுத்த வேண்டும்? எனவே, இசையில் ஈடுபடுவதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு என்பது விளங்கும். ஒன்று, இசை ஈடுபடுத்தும் தன்மை பெற்றதாய் இருத்தல் வேண்டும். இரண்டாவது, அதனைக் கேட்பவர் தக்க மனநிலை உடையவராய், பண்பட்ட மனம் உடையவராய், இருத்தல் வேண்டும். இவை இரண்டும் சேரும்பொழுது இசை இனிமையாய் இருக்கிறது. இந்த நிலையில் என்ன நடைபெறுகிறது என்பதைக் காண்டல் வேண்டும்.

நல்ல பண்பட்ட மனம் உடைய ஒருவர் இசையைக் கேட்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருடைய நான்கு பொறிகளும் வேலை அடங்கிச் செவி ஒன்று மட்டுமே தொழிற்படுகிறது. மனமும் அச்செவிக்கு உறு துணையாய் இருந்து இசை இன்பத்தில் ஈடுபடுகிறது. கேட்கக் கேட்க மனம் அடங்கி ஒன்றிவிடுகிறது. இந்த 'ஒன்றல் தன்மை'[1] தான் இசை நமக்குத் தரும் பெரிய செல்வம். இந்நிலையில் ஒன்றி இருக்கும் ஒருவருக்கு மனம் மாறுபட்டாலும் இசை 'அபசுர'மாகிக் கெட்டாலும் மறுபடியும் ஒன்றல் தன்மையை அடைவது இசையில் இயலுமாயினும் அவ்வொன்றலின் பயனாக அன்பு,

1. Hormony

பிறப்பதில்லை. ஒன்றல் தன்மை நாளா வட்டத்தில் தன்னலம் என்ற இயல்பை மறக்க உதவும் என்பது உண்மையே. கலைஞன் 'தான்' என்ற அகங்காரத்தை மறந்து உயர்நிலை அடைவது இவ்வொன்றல் தன்மையாலேயே ஆகும்.

### இசை ஈடுபாடு போதாது

ஆனால், சமுதாயத்தில் ஓர் உறுப்பாய் இருந்து பிறருக்கும் தனக்கும் பயன்படும்படி வாழ்வை நடத்தவேண்டிய கட்டுப்பாடு உடைய ஒருவன், இத்தகைய ஒன்றல் தன்மை மட்டும் பெற்றிருந்து பயன் இல்லை. அவனுடைய தனிப்பட்ட முன்னேற்றத்திற்கு அது பயன்படுமாயினும், பிறருக்கு அவன் பயன்படமாட்டான். இசையில் ஈடுபட்டுத் தன்னை மறக்கும் இயல்பால் சமுதாயத்திற்கு ஒருவன் என்ன பயனை விளைக்க முடியும்? எனவே, சமுதாயத்தில் வாழும் ஒருவன் மனம் வேறு வகையில் பழக்கப் படுத்தப்பட வேண்டும். அவன் வாழ்க்கை நன்கு நடைபெற ஒரே வழிதான் உண்டு. அதாவது, அவன் அன்பு நிறைந்த மனத்தைப் பெறல் வேண்டும். அன்பைப் பெற வழி யாது? குழந்தைகளிடந்தான் மனிதனுடைய அன்பு நன்கு வளர்கிறது. குழந்தைகளிடத்தில் பழகுவதில் தனிப்பட்ட ஓர் இன்பத்தையும் அவர்கள் மழலையைக் கேட்பதில் ஒரு தனி மகிழ்ச்சியையும் எவன் பெற முடிகிறதோ, அவனே முழுத் தன்மை பெற்ற மனிதனாகிறான். மனிதன் முழுத் தன்மை பெற இது ஒரு வழி என்பதைப் பழங்காலத் தமிழன் நன்கு கண்டிருந்தான். இதனாலேயே இலக்கியத்திலும் குழந்தை இடம் பெற்றது. பிற்காலத்தில் குழந்தையைப் போற்றப் 'பிள்ளைத் தமிழ்' என்ற தனி இலக்கியமே தோன்றலாயிற்று.

இத்தகைய அரிய குழந்தை இன்பத்தில் ஈடுபடுவது எளிது என்பதும் நோக்கற்பாலது. மனிதன் பொறிகளின் வழி இசையை அனுபவித்துத் தன்னினும் வேறுபட்ட அந்த இசையில் சென்று ஒன்றுவதைக்காட்டிலும் சுலபமானது குழந்தையினிடம் ஒன்றுவது. குழந்தை என்பது தந்தையின் 'நகல்' அல்லது 'பிரதி' தானே? தானே வேறு வடிவமாய் இருக்கிற அக்குழந்தையிடம் ஒருவன் ஒன்றுவது எளிதுஅன்றோ? எனவே, குழந்தையிடம் உண்மையான அன்பு நிறைந்த ஒருவனுக்குக் குழலும் யாழும் ஓரளவு வெறுத்துவிடும் என்பது உண்மையன்றோ? இக்கருத்தை வலியுறுத்தும் அகநானூற்றுப் பாடல் ஒன்று நினைவு கூர்தற்குரியது.

## குழல் வெறுத்த தலைவன்

தலைவன் ஒருவன் பரத்தை வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டான். புதிய ஆடை அணிகளால் தன்னை அலங்காரம் செய்துகொண்டு தேர்மேல் ஏறி வருகின்ற அத்தலைவன், தன்னுடைய புதல்வன் வீதி வழியே தளர்நடையுடன் நடந்து வருவதைக் கண்டான்; தேர்ப்பாகனுக்குத் தேரை நிறுத்துமாறு உத்தரவிட்டான்; கீழே இறங்கிக் குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் வந்தான். குழந்தை அவனை விட மறுத்து அழத் தொடங்கிவிட்டது. தலைவன் வேறு வழியின்றித் தவித்தான். பரத்தை வீட்டில் அவன் வரவை எதிர்பார்த்து இசை முழக்கம் நடைபெறுகிறது. அவனை வா என அழைப்பது போல அந்த இசை அவனுடைய காதில் வந்து விழவும் குழந்தையினிடம் கொண்டுள்ள அன்பால் தலைவன் பரத்தைவீடு செல்லாமல் நின்றுவிட்டான். இக்கருத்தை அழகிய அகப்பாடல் குறிக்கிறது.

'இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி!
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்
மாண்தொழில் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்புதளர் போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவஎன்று இழிந்தனன் தாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகஞ் சிவண
புல்லிப் பெரும . .......... .. .. .......
இமிழ்கண் முழவின் இன்சீர் அவர்மனை
பயிர்வன போலவந் திசைப்பவும் தவிரான்
.................அழுங்கினன் அல்லனே......

(அகம். 66)

*இசையில் ஈடுபடுகிற ஒரு மனம் மட்டுமன்று இப்பாட்டில் காணும் தலைவனுடைய மனம். அதை யும்விட அவன் பரத்தை மாட்டு விருப்புக்கொண்டு புறப்பட்டான் அன்றோ? இவ்வாறு இருந்தும் அவன் இரண்டு இன்பங்களையும் துறந்துவிட்டு இருப்ப தற்குக் காரணமாய் இருந்தது எது? தலைவிக்கு வருத்தம் உண்டாகும் என்ற பெருநோக்கத்தால் அவன் நின்றுவிடவில்லை. அவ்வாறாயின், அவன் புறப்பட்டிருக்கவே மாட்டான். ஊரார் அவனை ஏளனம் செய்வார் என அஞ்சியதற்காகவும் அவன் நின்றுவிடவில்லை. அவ்வாறாயின், பலர் அறியத்*

தேரில் ஏறிக்கொண்டு புறப்பட்டிருக்கமாட்டான். பின்னர் ஏன் அவன் செலவு தடைப்பட்டது? மனைவி மாட்டுக்கொண்ட காதலினும், பிறர் பழிச்சொல்லில் கொண்ட அச்சத்தினும் வலிய ஒன்றால் அன்றோ அவன் போவது தடைப்பட்டது? அது எது? அவன் குழந்தை மாட்டுக்கொண்டிருந்த அன்பு தான். குழந்தையினிடம் இத்தகைய அன்புடைய ஒருவனுக்கு இசை வெறுத்துவிடும் என்பதில் ஐயம் என்ன? ஆம்! குழல் இனிது, யாழ் இனிது என்பர்; யாரென்றால், தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர். 'தம் மக்கள்' என்று ஆசிரியர் கூறியது ஆராயத் தக்கது. மேலும் 'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்' என்றும் கூறுகிறார் அன்றோ? பொதுவாகக் குழந்தைச் செல்வத்தில் ஈடுபட்டு இன்பம் அடையும் ஒரு நிலை எளிதன்று.

இல்வாழ்க்கையை அன்புப் பெருக்கத்திற்கு அடிப்படையாக வைக்கிறார் ஆசிரியர் என்பது முன்னமே கூறப்பெற்றது. அந்த அன்பு பெருக வேண்டின், அவன் குழந்தையிடந்தான் ஒருவனுக்கு அன்பு பெருக முடியும். இத்தகைய அன்பைத் தம் குழந்தையிடங்கூடப் பெறாது வாழும் சில 'புண்ணியவான்களும்' இவ்வுலகில் உண்டு. ஆனால், மனிதன் மனிதத் தன்மை அடையக் குழந்தை ஒரு நல்ல சாதனமாகும். ஒருவனுடைய அன்புவளர்ச்சி எந்நிலையில் உள்ளது என்பதை அறியத் தகுந்த அளவுகோலாகும் இது. என்றைக்கு ஒருவனுக்குத் தன் மக்களின் மழலை, இசையைவிட இனிமையுடையது ஆகின்றதோ, அன்றே அவன் இல்வாழ்வின் பயனைப் பெற்றுவிட்டான் என்றே கூறிவிடலாம்.

## அதிகார முறை வைப்பு

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால், 'அன்பு' என்ற ஒரு பண்பு அவனிடம் நிறைந்து இருத்தல் வேண்டும். இப்பண்பு ஒருவனிடம் காணப்பெறும் அளவை நோக்கித்தான் ஒருவனை ஆத்துமா என்றும் மகாத்துமா என்றும் பிரித்துக் கூறுகிறோம். வேண்டத்தக்க இப்பண்பை வளர்க்கும் வழி அறிந்துகொள்ள வேண்டாவா? அதற்கு உற்ற வழி இல் வாழ்வும் அதன் பயனாகிய குழந்தைப் பேறுமே என்று ஆசிரியர் வள்ளுவர் குறிக்கிறார். அன்புடைமை என்ற அதிகாரம் புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரத்தின் பின்னர் அமைந்திருப்பது அறிந்து மகிழ்வதற்குரியது. இவ்வதிகார முறை வைப்பு வள்ளுவர் செய்ததுதானா என்ற உண்மை இன்று பலராலும் ஆராய்ச்சி செய்யப்படினும் இங்ஙனம் சில அதிகாரங்கள் அவர் வகுத்தவை என்பதற்கு ஐயமின்று.

## இது வாழ்வா?

சிறு குழந்தை முதல் பெரியவர் வரை காணப்படும் இவ்வகன்ற உலகம் நன்கு வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படும் ஒரு கருவியாகும் அன்பு என்பது. இஃது இல்லையாயின், வாழ்க்கை அல்லது குடும்பம் என்று ஒன்று நடைபெற முடியுமா என்பதை நினைந்து பார்க்க வேண்டும். தாய்க்குக் குழந்தையிடம் அன்பு இல்லையானால், குழந்தை வளர்வது எப்படி? தந்தைக்குக் குடும்பத்தில் அன்பு இல்லையானால், குடும்பம் நடைபெறுவது எங்ஙனம்? சுருங்கக் கூறின், உலகமும், அதில் மக்களும் வாழ முடியாது, அன்பு இல்லையாயின். இது கருதித்தான் ஆசிரியர்,

'அன்புஅகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த்து அற்று.' (78)

என்று கூறினார். வலிய பாறையில் விறகுக் கட்டை தளிர்க்கப் போவதுமில்லை; அன்பு இல்லாத குடும்பம் நன்கு வாழப்போவதுமில்லை.

## போலி வாழ்வு

அன்பு என்னும் பண்பை ஒருவர் பெற்றிருக்கிறார் என்பதை எவ்வாறு அறிவது? இத்துணைச் சிறப்புப் பொருந்திய இப்பண்பை ஒவ்வொருவரும் பெற்றுள்ளது போலவே நடித்தால் அதனை எவ்வாறு நம்புவது? உண்மை அன்புடையாரை அறிதற்கு அவர் வாய் மொழியைக் கருவியாகக் கொள்ளலாமா? கூடாது என்கிறார் ஆசிரியர். அன்பிலாருங்கூட வாய்ச் சாமர்த்தியத்தால் அன்புடையார் போல நடிக்கவுங் கூடுமன்றோ? எனவே, அன்புடையாரை அறிய ஒரு வழி வகுக்கிறார் ஆசிரியர். அன்பு செய்யப்பட்டாரைக் கண்ட மாத்திரத்தே பொங்கி வழியும் கண்ணீரே அன்பை வெளிப்படுத்தும் சாதனமாகும். அன்புடையார் வாய் பேசாதுகூட இருக்கலாம். என்றாலும், அவர் கண்கள் உண்மையை உலகறியப் பறை சாற்றி விடும். அன்புடைய ஒருவனுக்கும், அவன் கொண்டுள்ள அன்புக்கும் தொடர்பு எவ்வாறுளது? அன்பு என்ற பண்பை ஒருவன் எவ்வாறு பெறுவது? பெற்று வளர்க்கக் கூடிய ஒன்றா அது? இருக்கலாம். ஆனால், பெற்றுவிட்ட பின் ஒருவனுடைய புறத்துணையாகிய வேட்டி, சட்டை போன்று வேண்டுமான பொழுது போடவும் கழற்றவும் கூடிய ஒன்று அன்று அது. மனிதன் உடம்பு

எடுத்ததன் பயன் அன்பு செய்தலேயாம் என்று கூறுகிறார் ஆசிரியர்.

‘அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.’ (73)

என்ற குறளால் பெறுதற்கு அரிய ஓர் உண்மையைக் கூறுகிறார். கேவலம் இந்த உலகில் மட்டும் செம்மையாக ஒருவன் வாழ்ந்தால் போதுமா? மறுமையிலும் அவன் சிறப்படைய ஒரு வழி உண்டானால், அதுவே அன்புடைமை ஆகும் என்கிறார். அன்புடையார் இம்மை மறுமை என்ற இரு பயன்களையும் பெறுவர். வீடு பேற்றை இப்பிறவியில் பெற்றுயர்ந்த பெரியார் அனைவரும் கையாண்ட சுருங்கிய வழி இஃது ஒன்றுதான். இயேசு நாதர், இராமகிருஷ்ணர் போன்ற ஜீவன் முத்தர்கள் வேறு என்ன அரிய காரியத்தைச் செய்தனர்? அன்புடைமை ஒன்றே அவர்கட்கு வீட்டை அளித்தது. திருத்தொண்டர் புராண வரலாறுகளை அறிந்தவர்கட்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். சிறுத்தொண்டர், இயற்பகையார், மெய்ப்பொருள் நாயனார் போன்ற அடியார்கள் செயற்கருஞ் செய்கை செய்தார்கள். ஆனால், ஆனாயர் போன்றோர் எவ்விதச் செயற்கரிய செயலையுஞ் செய்யவில்லை. அன்புடைமை ஒன்றே அவர்கள் வாழ்வை ஈடேற்றியது. இத்தகையவர்கள் கொண்டிருந்த அன்பு எப்படிப்பட்டது?

**அன்பே தாமாதல்**

இவர்கள் கொண்டிருந்த அன்பு வேறு இவர்கள் வேறு என்று பிரித்துக் காண்பது இயலாத காரியம். அன்பு எனும் பண்பைத் தாங்கினார்கள் இவர்கள் என்று கூறுவதற்கில்லை. இவர்களே அன்பினு

வடிவம் என்றுதான் கூற வேண்டி உளது. கண்ணப்பரைப் பற்றிக் கூற வருகின்றார் சேக்கிழார். தான் என்ற முனைப்பை அறவே களைந்து விட்டு இறைவரைத் தம் தோழராகவே மதித்து, அவருக்காக வேட்டை ஆட வந்த அப்பெருந்தகையை என்னென்று வழங்குவது? 'அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் பெருமை அளவிற்றோ!' என்று கூறுகின்றார் கவிஞர். இறைவரைப்பற்றிக் கூறிய இடங்களில் எல்லாம் 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே! அன்பெனும் குடில் புகும் அரசே!' என்றெல்லாம் கூறினார் வள்ளலார். ஆனால், சாத்திரஞ் செய்த திருமூலர், 'அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்,' என்று கூறியதோடு அமையாது, 'அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்,' என்றும் அல்லவா கூறிப் போந்தார்? 'அன்பே சிவமாவது' என்பதன் கருத்து என்ன? இறைவர் அன்பே வடிவாக உடையார் என்ற ஒரு பொருள் நிற்க. அன்பே இறுதியில் சிவமாக ஒருவரை ஆக்கிவிடும் என்பதும் ஒரு பொருள் அன்றோ? பிறவிக்கடல் நீந்த வேண்டும் என்று நினைப்பவர்க்கும் அன்புதான் புணையாகிறது. ஏனைய துறவு நிலை முதலியனவும் வீடு பேற்றைத் தரினும், இவ்வுலகில் கடுந்துன்பத்தை அனுபவிக்கச் செய்கின்றன அவை. ஆனால், இவ்வுலகிலும் இன்பம் அனுபவித்து மறுமையிலும் வீடு பேற்றை அளிக்க வல்லது ஒன்று உண்டு எனில், அது 'அன்பு' என்ற ஒன்றுதான். இது கருதியே ஆசிரியர்,

'அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு,'
'அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.' (75, 80)

என்று கூறினார்.

## அன்பின் இரு பயன்கள்

பிறவிக்கடல் நீந்தப் பெரும்புணையாகும் இவ்வன்பு, சமுதாயத்தில் ஒருவன் நன்கு வாழவும் வழி வகுத்துத் தருகிறது. இக்கால உலகில் வாழும் ஒருவன் காலையிலிருந்து மாலை வரை எத்துணைப் பேர்களுடைய உதவியை நாடி வாழ வேண்டியவனாய் உள்ளான்? 'கேவலம் பணம் ஒன்று மட்டும் இருந்தால் மன அமைதியுடன் வாழ்ந்துவிட முடியுமா? எவ்வளவு பணம் இருப்பினும் மனிதர் உதவி வேண்டும்,' என்பன போன்ற பழமொழிகள் எவ்வளவு உண்மையை அறிவுறுத்துகின்றன! மனிதர் உதவி தேவை என்றால் அதைப் பெறுதல் யாங்ஙனம்? எல்லா மனிதரையும் விலைக்கு வாங்குதல் என்பது நடைபெறக் கூடியதா? பணத்தைக் கண்டு பரக்க விழிக்காதவர்களை என் செய்வது? இத்தகையவர்களை நமக்கு நண்பர்களாகச் செய்வது எது? ஆசிரியர்,

'அன்புஈனும் ஆர்வ முடைமை; அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு,' (74)

என்ற குறளால் விடை கூறுகிறார். ஏழைய வசதி ஒன்றும் இல்லாதவர் பலர், பல நண்பர்களைப் பெற்று அரிய காரியங்களைச் சாதித்தலைக் காண்கிறோம். இவர்கள் செல்வாக்கின் காரணத்தை ஆராய்ந்து பார்த்தால், 'அன்பு' என்ற ஒன்றைக் கொண்டே இவர்கள் இப்பெருநிலையை அடைந்தார்கள் என்பதை நாம் நன்கு அறியலாம். அன்புடையார் சமுதாயத்தில் பெருஞ்செல்வாக்கு அடையக் காரணம், அவர்கள் தமக்கு என ஒன்றையும் ஏற்காமைதான். 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' (72) என்ற குறளை உண்மையிலேயே நடத்

திக் காட்டும் இயல்பினர்க்கு வேண்டும் சிறப்புத் தானே வந்து எய்தும்.

பழைய குறள்—புதிய பொருள்

உலகிடை நடைபெறும் செயல்கள் அனைத்தையும் ஆய்ந்து பார்த்தால் அனைத்தும் அன்பின் வழிப்பட்ட செயல்களாகவே இருக்கக் காணலாம். ஒருவனுக்கு மற்றவன் செய்யும் தீங்குகூட அன்பினால் செய்யப்படுவதுதான் என்றால், யார் நம்புவார்கள்! ஆனால், உண்மையில் உலகில் நடைபெறும் அனைத்துச் செயல்களும் அன்பினாலேயே நடைபெறுகின்றன. செயலளவில் இன்பம் பயப்பனவும், துன்பம் பயப்பனவும் எனச் செயல்கள் இருவகைப்படும். ஒரு தாய்க்கு இரண்டு குழந்தைகள் என்று வைத்துக் கொள்வோம். ஒரு குழந்தைக்கு வெப்பு நோயும், மற்றொன்றுக்கு வயிற்றுக் கடுப்பும் இருக்கின்றன. மூத்த குழந்தைக்குக் கசப்பு மருந்தும் மற்றொன்றிற்கு இனிப்பு மருந்தும் தருகிறாள் தாய்; கசப்பு மருந்தை உட்கொள்ளாத குழந்தையைக் காலில் போட்டுப் பிடிவாதப்படுத்திப் புகட்டுகிறாள். அதனால், அக்குழந்தை தன் தாய்க்குத் தன் மாட்டு அன்பு இல்லை என்றும், தனக்குக் கசப்பு மருந்தே தருகிறாள் என்றும், அடுத்த குழந்தைக்கு அன்புடைமையின் இனிப்பு மருந்து தருகிறாள் என்றும் நினைந்து கொண்டால், இப்பிழை யாருடையது? கசப்பு மருந்தை ஊட்டவேண்டித் தாய் குழந்தை துன்பத்தைப் பாராது காலில் போட்டு அமுக்கினது உண்மைதான். செயலளவில் இது அன்புச் செயலன்று; மறச் செயல்; கொடுமை உடைய செயல் என்றுதான் கூற வேண்டும். வழியே செல்கின்ற ஒருவனை மற்றொருவன் கத்தியால் குத்திவிடுகிறான்

என்றால் அதற்குரிய தண்டனை என்ன என்பதை நம்மில் பலரும் அறிவோம். ஆனால், அறுவை வல்லுனரான ஒரு வைத்தியர் நோயாளி ஒருவரை அறுக்கிறார்; அதற்குப் பதிலாக ஆயிரக்கணக்கான ரூபாய்களையும், நோயாளியின் நன்றியறிதலையும் பரிசிலாகப் பெறுகிறார். ஏன்? செயலளவில் மருத்துவர் செய்வது மறச் செயல்தான். 'ஐயோ! அம்மா!' என்று நோயாளி கதறுவதையும் பொருட்படுத்தாமல் அவனுடலை அறுத்தல் மறச் செயல்தானே? ஆனால், செயலளவில் மறமாய் இருப்பினும் அவருடைய கருத்து நோயாளிக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதன்றோ? இது கருதித்தான் ஆசிரியர்,

'அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.' (76)

என்று கூறினார். தாய் தந்தையர் மகனைக் கடிவதும், மருத்துவர் அறுத்து ஊறுபோக்குவதும் அன்பால் விளைந்த செயலேயன்றி வேறு இல்லை.

எனவே, சமூகத்தில் வாழ்பவனுக்கும், துறந்து வீடு பேற்றை நாடுபவனுக்கும் அன்பு இன்றியமையாது வேண்டப்படும் என்பது இதனாற்பெறப்படும்.

## இல்லறப் பயன்

அன்புடையார் செய்யும் இல்லறத்தில் விருந்தோம்பல் மிகுதியாகக் காணப்பெறும். விருந்தை உபசரிப்பதில் என்ன அவ்வளவு சிறப்பு இருக்கிறது என்று வினவத் தோன்றுகிறதன்றோ? விருந்தினரை எவ்வளவு தூரம் ஒருவன் போற்றி வாழ்கிறானோ, அவ்வளவு தூரம் அவன் சமுதாயத்தில் சிறந்து வாழ முடியும். விருந்து என்றவுடன் தன

உற்றார் உறவினருக்கு ஒருவன் செய்யும் உபசரிப்பைப்பற்றி நினைந்துவிடக்கூடாது. உற்றார் உறவினர் என்பவர் வேறு, விருந்து வேறு என்பதைக் காட்டவே "தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்" (43) என்று ஐந்து வகைப்படுத்திக் காட்டினார் ஆசிரியர். இங்கு ஒக்கல் என்று அவர் குறிப்பிடுவது உற்றார் உறவினர் என்பவரையே யாகும். எனவே, விருந்து என்றது இவரினும் வேறு பட்டாரையாகும். புதியவர்களாக வருபவர்களும் என்றோ ஒரு நாள் வருகின்றவர்களுமே விருந்து என்ற தொகையில் அடங்குவார்கள். மேலே கூறிய ஐந்து வகையினரையும் உபசரிக்க வேண்டுவது இல்லறத்தானின் கடமையாய் இருப்பினும், அவ்வைவருள்ளும் தலையாயவர் 'விருந்தினர்' என்பதைக் காட்டவே 'அன்புடைமை' என்ற அதிகாரத்தின் பின்னர் 'விருந்து ஓம்பல்' வைத்துள்ளார் ஆசிரியர்.

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவனும் தன் கடமைகளில் ஒன்றாக விருந்தோம்பலைக் கொள்ள வேண்டும் என்பதே ஆசிரியர் கருத்துப் போலும்! அன்றேல்,

'இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.' (81)

என்றுகூறியிருக்கமாட்டார், விருந்தினரை வரவேற்பதற்காகவே இல்லறம் நடத்துகிறோம் என்று அவர் கூறுவதில் எவ்வளவு உண்மைகள் அடங்கி உள்ளன! இல்லறம் நடத்துபவன் சமுதாயத்தில் ஓர் உறுப்பாகிறான். எனவே, நாட்டிற்கும் அவன் உற்ற ஒரு துணை ஆகிறான். அத்தகையவன் சமுதாயத்தோடு சேர்ந்து வாழவேண்டும் என்றால்,

அவனுக்கு நட்பு அதிகமாக இருத்தல் வேண்டும் நட்பினை மிகுதியாதற்கு விருந்தோம்பல் ஒரு சிறந்த வழி அன்றோ ?

ஓர் அறம்

இதன்றியும் மனிதனின் கடமை ஒன்றை நிறைவேற்றவும் விருந்தோம்பல் பெரிதும் பயன்படுகிறது. பசித்து வந்தவர்க்கு ஒரு பிடிச் சோறு தருதலைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு யாது உளது? ஏற்றலுக்கு உரிய மனப்பான்மை இல்லாமலும் அதற்கு மனம் துணியாமலும் உள்ள ஒருவரை எவ்வாறு உபசரிப்பது? அவர் எக்காரணத்தாலும் ஒருவரிடம் சென்று உணவு வேண்டும் என்று இரக்க மாட்டார். அத்தகைய ஒருவரை விருந்தினராகக் கருதி அழைத்து உபசரித்தாலன்றி, வேறு எவ்வழியில் அவரைப் போற்ற முடியும்? இது கருதியே போலும் விருந்தினரைப் புறத்தே வைத்து உண்ணலாகாது எனக் கட்டளை இடுகிறார் ஆசிரியர்.

“விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று.” (82)

என்ற குறளை உற்று நோக்குக. சாவாமையைத் தரும் அமிழ்தமாயினும் விருந்தைப் புறத்தே வைத்து உண்ணற்க என்று பொருள் கூறுவதைக் காட்டிலும் திரு அரசன் சண்முகனார் கூறியதாகக் கூறும் உரை இன்னும் அழகாக அமைவதைக் காணலாம். ‘விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவாம்’ என்று கூறுவாராம் அவர். விருந்தைப் புறத்தே வைத்துவிட்டு உண்ண வேண்டாவென்று கூறுவதைக்காட்டிலும், உண்டால் அது சாவைத் தவிர வேறு அன்று என்பதே இதன் பொருள்.

'உண்பது மருந்தாக இருந்தால் என்ன செய்வது? நோயுடையார் மட்டுமே உண்ண வேண்டிய மருந்தாயின் என் செய்வது?' என்பாரை நோக்கி, 'மருந்து எனினும், அவ்வாறு தனியே உண்டல் வேண்டற்பாற்று அன்று' என்று கூறுவது எவ்வளவு ஆழமும் அழகும் உடையது! பிறருக்குச் சோறு கொடுத்து அதனால் வறுமை அடைந்தார் உலகத்து இல்லை என்ற உண்மையைத் தெளிவுறுத்தவே விருந்தோம்புபவனுடைய வாழ்க்கை தரித்திரத்தால் பாழாகாது என்று பின்னும் கூறுகிறார்.

## பரந்த மனப்பான்மை

எதிர்மறை முகத்தான் அவன் தரித்திரத்தால் வாட மாட்டான் என்று கூறிய ஆசிரியர், அடுத்து உடன்பாட்டு முகமாகக் கூறத் தொடங்கி, 'விருந்து ஓம்புவான்' என்றும் கூறினார். கூடி வாழும் இயல்புடையவனாகிய மனிதன் விருந்தோம்பலின் மூலம் தனது இந்த இயல்பை வளர்த்துக் கொள்கிறான். மேலும், இவ்வுலகில் வாழத் தொடங்கிய அவன் கொஞ்சம் கொஞ்சமாகத் 'தன்னலம்' என்ற பேயினுடைய பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்பது முன்னமே கூறப்பட்டதன்றோ? அதற்குரிய வழி துறைகள் யாவை? அவ்வழி துறைகளில் ஒன்றுதான் விருந்து ஓம்பலாகும். விருந்தினரை வெறும் வாய்ச் சொல்லால் மட்டும் உபசரித்தல் போதுமா? அவர்கட்கு உணவு கொடுப்பது என்றால், அதனால் ஆகும் செலவு எவ்வளவு ஆகும்? ஒருவன் உடலை உழைத்துச் சம்பாதிக்கும் பொருளைச் செலவு செய்ய இதுதானா வழி? 'ஆம்' என்கிறார் ஆசிரியர். இவருக்கும் முன்னரே நக்கீரர் என்ற பெரியார், 'செல்வத்துப் பயனே ஈதல்; துய்ப்பேம் எனினே

**தப்புந பலவே!'** என்று கூறியுள்ளார். ஒரு மனிதன் தானாகப் பாடுபட்டு உழைத்துப் பெற்ற பொருளை எளிதில் ஈந்துவிட விரும்ப மாட்டான். ஆனால், இந்தப் பற்று உள்ளமே அவனுக்குப் பெருந்தீங்காகப் பின்னர் விளையப் போகிறது. மனிதனைப் பற்றிய தன்னலப் பேய் ஒழிய, விருந்தோம்பல் முதற்படி ஆகும். அதிலும், வேளாண்மை செய்பவன் பிறருக்குச் சோறு கொடுத்தலை ஒரு பெரும்பாரமாகக் கருதமாட்டான். எனவே, விருந்தோம்பலின் மூலமே அவனுக்குப் பரந்த மனப்பான்மை வருமாறு செய்யலாம்.

**புதிய காரணம்**

விருந்தோம்பலை இவ்வளவு அழுத்தமாக வள்ளுவர் கூறுவதற்குப் பிறிது ஓர் காரணமும் இருக்கலாமோ என ஐயுற வேண்டி உளது. இன்றுங்கூடத் தமிழ்நாடு உணவு நிலைமையில் 'சுயதேவை' அளவுக்குக் குறைவாகவே உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையில் உள்ளது. இன்றைய நிலைமையே இவ்வாறு என்றால், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இந்நிலை இன்னும் மோசமாகத்தானே இருந்திருக்கும்? இன்றுள்ள அளவு கூட அன்று விளைநிலங்கள் பண்படுத்தப்பெற்றுப் பயன் தந்திருக்க முடியாது. இன்று தமிழ்ச் சமுதாயம் பெருகியுள்ள அளவு தமிழ் மக்கள் கூட்டம் அன்று இல்லாமல் இருந்திருக்கலாம். எனவே, உணவு நெருக்கடியும் இவ்வளவு இல்லாமல் இருந்திருக்கலாமெனில், விளை நிலங்களும் குறைவாகவே இருந்திருத்தல் வேண்டும். மேலும், தமிழ் மக்கள் இடையே ஓயாது போர் ஏற்பட்டு வந்தமையின், அமைதியாக இருக்கும் காலத்தில் மட்டுமே அதிகமான வேளாண்மை

நடைபெற முடியும். ஓயாது போர் என்றால், இத னால் ஏற்படும் பொருள் அழிவும் ஆள் சேதமும் எவ் வளவு என்று எண்ணிப் பார்க்கவும் மனம் நடுங்கு கிறது! இந்நிலையில், உள்ள பயிர் நிலங்களைக்கூடச் செம்மையாகப் பயிர் செய்யப் போதிய ஆட்கள் இருக்கவியலாது அன்றோ? எனவே, உணவுப் பஞ் சமே நாட்டிலிருந்திருக்கும் என்பதில் ஐயமென்னை? இம்மட்டோடு இல்லை. உள்ள பயிர் நிலங்களும் இன்று போலப் பலரிடம் இருந்திருக்க இயலாது. உடையார் சிலரும் இல்லார் பலருமாகவே இருந்திருப்பர். 'இலர் பலராகிய காரணம்' என்ற குறளால் இவ்வுண்மை அறியப்படுகிறதன்றோ? உடையராகிய சிலரும் தம்பால் உள்ள பொருளைப் பிறர்க்குப் பகிர்ந்து தாராவிடின், இல்லார் கதி என்ன ஆகும் என்பது கூற வேண்டுவதின்று. அதிலும் ஏனைய பொருள்களைத் தாராளமாக வழங்கிவிட்டு உணவைத் தாராவிடினும் பயன் இல்லை. தரத் தக்கனவாய பொருள்களில் தலை சிறந்தது உணவே என்பது விளங்கும். ஆகவே, எல்லா வகை ஈகையினும் சிறந்தது உண்டி கொடுக்கும் ஈகையே யாகும். பழந்தமிழ்ப் பாடல்களை ஒரு முறை படிப் பவரும், 'பாணர், கூத்தர்' என்பவரை மறத்தல் இய லாது. இப்பாணர்கள் ஓயாது வறுமையில் உழலும் திருக்கூட்டம் என்பதை நன்கு அறிய முடிகிறது. இக்கூட்டம் விரும்புவதெல்லாம் நல்லுணவே ஆகும். அரசர்கள் தரும் பொன், வெள்ளி முதலிய பரிசில்களைக் காட்டிலும் அவர்கள் தரும் உண வையே பெரிதும் விரும்பி உள்ளனர் என்பது இவர் கள் கூற்றாக அமைந்த பாடல்களைப் படிப்பார் நன்கு உணர இயலும். இந்நிலையான பாடல்கள் நாட்டில்

அன்றும் இருந்த உணவுப் பஞ்சத்திற்கு அறிகுறியோ என நினைய வேண்டி உளது. இத்தகைய சூழ்நிலையில் பாட வந்த ஆசிரியர், விருந்தோம்பலை மிகுதிப்படுத்திக் கூறியது சாலப் பொருத்தம் உடையதே.

சூழ்நிலை நாட்டில் இவ்வாறு இருந்தமையின் விருந்து இடுபவர் தம்மைப் பெரியராக நினைத்துக் கொண்டு, விருந்தினரை மட்டமாக நினைக்கவும் இடம் உண்டு அன்றோ? அனைவரும் இவ்வளவு மோசமாய் இராவிடினும், ஒரு சிலராவது இத்தவற்றைச் செய்தல் இயல்பே அன்றோ? இது கருதியே ஆசிரியர்,

'மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.'

என்று கூறுவாராயினர். விருந்திடுபவர் தாம் செய்வதை ஏதோ பெரிய உபகாரமாக நினையாமல், கடமையைச் செய்வதாகவே நினைக்க வேண்டும். அதிலும், மகிழ்ச்சியோடு கடமையைச் செய்வது எவ்வளவு சிறப்புடையது! வெறுஞ் சோற்றை இட்டு, இன்முகம் காட்டவில்லையாயின், இட்டும் பயன் இல்லையாய்விடும். எனவே, இன்முகம் காட்டலே விருந்திடுவதினும் இன்றியமையாதது என அறிவுறுத்துகிறார் ஆசிரியர். விருந்தோம்பல் இல்லறத்தானுக்கு இன்றியமையாத கடமை என்றால், இன்முகங்காட்டி விருந்தினரை உபசரித்தல் அவ்விருந்து இடுதலினும் தலையாய கடமையாகும். அன்றைய தமிழர்களுக்கு வள்ளுவப் பெருந்தகை கூறிய இப்பொன்மொழிகள் இன்றைய தமிழ் நாட்டிற்கும் எவ்வளவு தேவை என்பதை உன்னிப் பார்ப்போமாக.

### தலைவியின் கண்கள்

அகவாழ்வின் இன்றியமையாத உறுப்பானவள் தலைவி. பின்னர்க் காணப்போகும் நற்றிணைப் பாடல்கள் அனைத்திலும் தலைவியின் அழகு முதலியன விரிவாகப் பேசப்படும். ஆனால், குறள் அத் தலைவியின் அழகு பற்றிப் பேசுவதே ஓர் அலாதியான அழகு. இதோ தலைவியின் கண்களைப் பற்றிக் குறள் பேசுகிறது.

பெண்ணைப் பற்றிப் பாடாத தமிழ்ப் புலவரே இல்லை என்று கூறிவிடலாம். புலவர் அனைவரும் கலைஞர்; கலைஞரோ, அழகில் ஈடுபடுபவர்; பெண்களோ, அழகின் இருப்பிடம்; எனவே, பெண்களைக் கவிஞர்கள் பாடுவதில் வியப்பொன்றுமில்லை.

பெண் அழகில் ஈடுபடுவதும் அவ்வழகு பற்றிக் கவிதை புனைவதும் கவிஞர் அனைவருக்கும் பொதுவெனில், சிறந்த கவிஞரைக் காண்பது எவ்வாறு? அனைத்துக் கவிஞரும் இவ்வொரு பொருளைப் பற்றிப் பாடினாலும் அவரவருடைய அனுபவத்தின் விரிவு, ஆழம், கற்பனை என்பவற்றிற்கேற்ப அவர்கள் கவிதைகளும் மாறுபடும். அழகில் ஈடுபடும் இயல்பு பொதுவாயினும், அவ்வழகை எங்கே, எவ்வாறு காண்பது என்பதில் வேறுபாடுகள் தோன்றக்கூடும். அழகைப் புறத்தே காண்பவர்களும் அகத்தே காண்பவர்களும் உண்டு.

பொருளில் அழகு எங்கே உறைகிறது என்பது பற்றித் தத்துவப் பேராசிரியர்கள் இன்னும் முடிந்த முடிபாக ஒன்றும் கூறவில்லை. பொருளிலேயே அழகு இருக்கிறது எனில், அப்பொருளைப் பார்ப்பவர் அனைவர்க்கும் அவ்வழகு காட்சி நல்கவேண்டும்.

உலகானுபவத்துடன் காணும்பொழுது இவ்வாறு இல்லை என்பது நன்கு விளங்கும். ஒருவர் அழகுடைய பொருள் என்று கூறுவதை மற்றவரும் அழகுடையது என்று ஒப்புமாறு இல்லை. இன்னுங் கூறப்போனால், அழகே வடிவமானது என்று ஒருவரால் மதிக்கப்படும் பொருள், மற்றொருவரால் அழகற்றது என்றுங் கூறப்படுதலைக் காண்கிறோம்.

'அவ்வாறாயின், அழகென்பது பொருளினிடத்து இல்லை, காண்பான் மனத்திடமே உள்ளது என்று வது கூறிவிடலாமா?' எனில், அதுவும் இயலுவதாக இல்லை. காண்பான் மனத்திடத்தேதான் அழகு இருக்கிறதெனில், பொருள் இல்லாமலும் அவன் அழகை அனுபவிக்க வேண்டும். அதுவும் இயலாத காரியம். எனவே, அழகென்பது பொருளினிடத்தும் காண்பான் மனத்தும் ஒரு சேரத் தோன்றுகிற ஒன்று என்றுதான் நினைய வேண்டியுளது. இக் கருத்தை மனத்துட்கொண்டு பார்க்கும் பொழுது பெண்ணினிடத்துக் காணப்படும் அழகும் இம்முறையில் அமைவதே என்பது விளங்கும்.

பெண்ணினிடத்து இருக்கும் அழகு காண்பானுடைய மனநிலைக்கு ஏற்பக் காட்சி நல்குகிறது. தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியைக் கண்டு தன் மனத்தை அவளிடம் பறி கொடுக்கிறான். அவள் புற அழகே முதன் முதலில் அவன் காதல்கொள்ளக் காரணமாயிற்று. அவனுக்கு இக்காதல் உணர்ச்சி தோன்றுவதன் முன்னர்த் தோன்றிய உணர்ச்சி யாதாய் இருத்தல் கூடும்? அழகுடையவர்களை அவன் இதற்கு முன் கண்டதில்லையா? நூற்றுக் கணக்கானவர்கள், சிறந்த அழகுடையவர்களைக் கண்டதுண்டு. ஆனால், அவர்களிடம் ஈடுபட்டு அவன் மனத்தை இழக்கவில்லை. இப்பொழுதோ

எனில், இந்தத் தலைவியைக் கண்ட மாத்திரத்தில் தன்னையும், தன் மனத்தையும் இழந்துவிட்டான். இவ்வாறு இழக்க மூல காரணமாய இருந்த உணர்ச்சி யாது? எவ்வளவு ஆராய்ந்து பார்த்தாலும் 'வியப்பு' என்ற உணர்ச்சியே அவன் முதலில் பெற்றது என்றுதான் கூறல் வேண்டும். இவ்வாறு வியப்படைய அத்தலைவன் அவளிடம் யாது கண்டான்?

நிறைந்த அழகைக் கண்டிருக்கலாம். ஆனால், அவளுடைய அழகைப் பிறரும் கண்டிருப்பாரல்லரோ? அவர்கள் ஏன் அவளிடம் ஈடுபடவில்லை? எனவே, அவளுடைய அழகு மட்டும் அவனுடைய ஈடுபாட்டுக்குக் காரணமாகாமல், அவனுடைய மனநிலையும் ஒரு துணைக்காரணமாயிருத்தல் கண்கூடு.

அவளுடைய அழகின் எப்பகுதியில் ஈடுபடக்கூடிய மனநிலை தலைவனுக்கிருந்தது? தூரத்தே தலைவியைக் கண்டான்; 'இவள் மானிடப் பெண்ணோ, அன்றித் தேவமகளோ!' என்று ஐயுற்றான்; பின்னர் அவள் நடை பயில்வதைக் கண்டவுடன் மயிலோ என்று ஐயுற்றான்; இன்னுஞ் சற்று நெருங்கிச் சென்று காண்கையில் அவளுடைய கனமான காதணிகள், அவள் தன் இனத்தைச் சேர்ந்தவளே என்று முடிவு செய்யச் செய்தன. இது வரை அவளுடைய கட்புலன் வேலை செய்ய அதன்பின் சென்ற மனத்திரையில் ஓடும் எண்ணங்களைக் கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை தம்முடைய காமத்துப் பாலின் முதற்குறளில்:

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.' (1081)

தலைவியின் பொது அழகையும், நடை அழகையும்

கண்ட தலைவன், அடுத்துக் கண்டது தலைவியின் கண்களேயாம். காமத்துப்பாலின் இரண்டாவது குறளிற் காட்சி தரும் தலைவியின் கண்கள் அப்பால் முழுதும் விரவிக் காட்சி தருவதுடன் 'குறிப்பறிதல்' என்ற ஓர் அதிகாரம் முழுவதையும் பெற்று விளங்குகிறது. காமத்துப் பாலில் மிகுதியும் இடம் பெற்று விளங்கும் தலைவியின் உறுப்புக் கண்களேயாம். 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை,' என்ற பழைய முதுரையை நினைந்து இவ்வாறு கண்களுக்குப் பெருமை தருகிறாரா ஆசிரியர்? ஆம். அம்முதுமொழியின் சிறப்பை உள்ளவாறு உணர்ந்தமையாலே தான் வள்ளுவர் இவ்வாறு கண்களை விவரிக்கிறார்.

தலைவியின் அழகில் தலைவன் ஈடுபடுவது இரு வகைகளில் அமையலாம். ஒன்று அவளுடைய புற அழகில் ஈடுபடுவது. தோல், தசை இவற்றாலாய கூட்டின் அழகில் ஈடுபடுபவர் பலருண்டு. கவிஞரிலும் பலர் இத்தகையரே. ஆனால், சிறந்த கலைஞருக்கு இவ்வழகு மட்டும் போதாது. எனவே, அவர் அக அழகைக் காண முற்படுகின்றனர். சங்க காலப் பாடல்களில் தலைவியை வருணிக்கின்ற பாடல்கள் எண்ணில. என்றாலும், அவற்றுள் பெரும்பான்மையானவை அவளுடைய கண்களைக் கூறாமல் விடுவதில்லை. தலைவியின் கண்களைத் தாமரை, வண்டு, கயல் என்பவற்றோடு உவமிக்கும்பொழுது வடிவு உவமையாக மட்டும் இராமல் வேறு காரணங் கருதியும் உவமிக்கப்படும். தலைவியின் உடல் அழகு சிறந்துளதென்பதில் ஐயமின்று.

ஆனால், இத்துணை அழகுடைய உடம்பினுள் உறையும் மனம் எத்தகையதோ! எவ்வாறு இம

மனத்தைக் காண்பது? அவளுடைய பேச்சால் ஓரளவு காணலாம் என்பது மெய்ம்மைதான். ஆனால், பேசும் முன்னர், பேசக்கூடிய இயல்பும் தகுதியும் வாய்ந்தவளா என்பதை அறிவது யாங்ஙனம்? தலைவியின் மனம் உடலைப் போல் மென்மையும் கருணையும் நிரம்பியதா என்று அறியவேண்டும். அவள் உறுதிப்பாடு உடையவளா என்பதையும் அறிதல் வேண்டும். இவை அனைத்தையும் அறிய ஒரே ஒரு வாய்ப்புத்தான் உண்டு. அவளுடைய மனத்தை அறியும் ஒரு பலகணி (ஜன்னல்) வேண்டும். மனத்தைப் பிறர் காணுமாறு காட்டும் பலகணி யாது?

ஒருவருடைய கண்களே மனத்தை அறிவிக்கும் பலகணி என்பர். ஏனைய புலவர்களைப் போலத் தலைவியை வருணிக்கப் புகுந்துவிடாமல், வள்ளுவர் இரண்டாம் குறளிலேயே தலைவியின் கண்களைப் பற்றிப் பேசத் தொடங்குகிறார். தலைவன், 'இவள் தேவப் பெண்ணோ, மயிலோ!' என்று ஐயுற்றுத் தெளிந்தான் என்று முதற்குறளில் கூறிய கவிஞர், இரண்டாம் குறளில்,

'நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து.' (1082)

என்று தலைவன் ஈடுபடும் உறுப்பினைக் கூறியது அறிதற்குரியது. 'நோக்கினாள்' என்று தலைவன் கூற்றாகத் தலைவி குறிக்கப்படுகிறாள். தலைவியை எத்தனையோ சொற்களால் தலைவன் குறிக்கலாம். அவ்வாறிருந்தும், 'நோக்கினாள்' (பார்க்கின்றவள்) என்று கூறுதல் வியப்பன்றோ? இதிலிருந்து அறியப்படுவதொன்று உண்டு. தலைவன் தலைவியி

னுடைய பார்வைக்கு அடிமையாகிவிட்டான. எனவே, அவளைக் குறிக்க நேர்ந்த முதல் சொல்லி லேயே எந்த உறுப்பில ஈடுபட்டாரே அந்த உறுப் பாலேயே அவளைக குறிககிருன. அனறேல, 'நோக கினை உடையாள' எனறு குறிப்பது பொருளறறுப் போயவிடும.

அடுத்து வரும குறளகளிலும தலைவியின கண் கள 'பேர் அமர்ககண', 'அமாததன கண', 'நோக்கம இமமூனறும உடைத்து', 'இவள கண்' 'மடநோக்கு' எனறு ஐந்து இடஙகளில் குறிபபிடபபடுகினறன.

தலைவியின் கணகளுக்கு இத்துணைப பெருமை தநதது போதாது எனறு கருதிய வளளுவப பெருந்தகை அடுத்துக் 'குறிப்பறிதல்' எனரோர் அதிகாரம ஏற்படுத்திபபத்துக்குறளிலும கணணின் பெருமையைப பேசுகிருா. எனவே, பெணணிடதது அழகைக் காண முறபடுபவன் அவள கண்ணிடத்தே அதனைக் காண முறபடவேணடும. இது அத்துணை எளிதான தன்று. பல காலம ஒருவரிடத்துப் பழகியவிடத்தும அவருடைய கண்ணிலிருந்து மன நிலையை அறிதல் பலருககு இயலாததாம. இது கருதியே ஆசிரியர்,

'பகைமையும கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.' (709)

எனறு கூறுகிருர். எனவே, கணகள் மூலம ஒருவர் மன நிலையை அறிய அனைவராலும முடியாதென் பதும, ஒரு சிலர்க்கே அது இயலும எனபதும பெற்ரும. தலைவியின் கணகளைக் கொண்டே காதலை அறிதல் வேணடும் எனற கருத்தை வளளுவர் குறிககிருர் எனபதுங் கணடோம. அவ்வாருயின்,

அனைவரும் கண்களைக் கொண்டு காதலை அளக்க அறிந்திருந்தால் ஒழியக் காதல் வாழ்வு வாழ முடியாது. கண்கள் மூலம் மனநிலையை அறிதல் அனைவர்க்கும் இயலாது எனில், காதல் வாழ்வு வாழ்வதும் அனைவர்க்கும் இயலாது என்பது பெறப்படும். இக்கருத்தை மனத்துட்கொண்டு,

'மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.' (1289)

என்ற குறளை ஆராயும் பொழுது உண்மை விளங்கும். பலரும் காதல் வாழ்வு வாழ்கிறோம் என்று நினைத்திருப்பினும் உண்மையில் காதலின் இயல்பை அறிந்தவர் மிகச் சிலரே என்பதைத் தலைவியின் கண்களை நேரடியாக 46 இடங்களிலும், கண்ணின் தொழிலை 23 இடங்களிலும் கூறுவதன் மூலம் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

வள்ளுவப் பெருந்தகை வகுத்த அக வாழ்வின் சில சிறந்த பகுதிகளை இதுகாறுங்கண்டோம். இச்சிறந்த முறையில் வாழ வேண்டும் என்று அவர் இலக்கணம் வகுத்ததற்கேற்பப் பழந்தமிழ் நாட்டில் சிலரேனும் வாழ்ந்திருத்தல் கூடும். அவ்வாறு வாழ்ந்தவர் வாழ்வை ஒட்டி இலக்கியம் தோன்றிற்று. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலிய நூல்கள் சிறிய பாடல்களின் மூலம் இவ்வகவாழ்வின் ஒவ்வொரு பகுதியைச் சிறப்பித்தன. அந்நூல்களுள் அதிகம் பயிலப்படாத ஒரு நூல் நற்றிணையாகும். எனவே, 'அகவாழ்வின் ஐந்து திணைகட்கும் சில உதாரணங்கள் அந்நூலிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளன. அவையே 'இலக்கியத்தில் வாழ்வு' என்னும் தலைப்பில் காணப்பெறுபவை.

# இலக்கியத்தில் வாழ்வு ★ ★

## குறிஞ்சி

அகவிலக்கியத்தில் குறிஞ்சித்திணை முதலாவதாக இருப்பது. இத்திணையில் கூறப்பெற்ற ஒழுக்கம் நடைபெறக்கூடிய இடம் மலையும் மலை சார்ந்த இடமுமாம். இது நடைபெறக்கூடிய காலம், குளிர்காலம்; பொழுது, நடு இரவு. இடம், பொழுது என்று வகுக்கப்பெற்ற இவற்றை முதற்பொருள் என்று இலக்கணம் கூறும். பாடல் அமைவதற்கு ஒரு நிலைக்களம் போன்றது இவ்விலக்கணம் வகுக்கும் வரம்பு.

தலைவனும் தலைவியும் சந்திப்பதும், கூடுவதும், இதனுடன் தொடர்புடைய செய்திகளும் குறிஞ்சித் திணைப் பாடலில் இடம் பெறும்.

### நீரின்று அமையா உலகம்

பெரியதொரு மலையடிவாரத்தில் அழகாய் அமைந்துள்ளது தலைவனுடைய வீடு. வீட்டைச் சுற்றிலும் வளமான நல்ல செடி கொடிகள் அடர்ந்

துள்ளன. அந்த வீட்டின் எதிரே உள்ளது ஒரு தாமரைத் தடாகம். அக்குளத்தில் நீர் நிறைந்திருப்பதால், தாமரை நன்கு செழித்து வளர்ந்துள்ளது. குளத்தின் கரையில் உள்ளவை வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்த சந்தன மரங்கள். ஒரு நாள் தலைவி முற்றத்தில் வந்து நின்றாள். அப்போது கதிரவன் உதித்த காலை நேரம். குளத்தில் உள்ள தாமரை தன் தலைவனாகிய சூரியன் வரவு கண்டு, முகம் மலர்ந்து, அவனுடைய கைகளாகிய கதிர்களைத் தன் முகம் முழுவதிலும் தடவுமாறு விட்டிருக்கிறது. தாமரையின் இந்த இன்பத் திளைப்பைப் பார்த்துக்கொண்டிருந்தன தேனீக்கள்.

எப்பொழுது தாமரை முகம் மலரும் என விடிகிற வரை காத்திருந்த அவ்வீக்கள், உடனே அம்மலரில் சேர்ந்து மொய்த்தன. ஏன்? தாமரையில் உள்ள தேனைக் கருதியே அவை புகுந்தன; புகுந்து தேனை உண்டன. அத்தேனை உடைய மலர் திறக்கும் வரையில் அவ்வீக்கள் அம்மலரைச் சுற்றிச் சுற்றிப் பன்னூறு தடவை வட்டமிட்டன. அம்மட்டோ! தம் இனிய குரலால் தாமரையின் பெருமையைப் பலவாறாகப் பாராட்டி யாழும் தோற்றுவிடும் இன்னிசை பாடின.

ஆனால், மலர் திறந்தவுடன் ஈக்கள் தம் பாடலை நிறுத்திவிட்டன; உடனே மலரினுட் சென்று தேனை வயிறார உண்டன; உண்ட பிறகு வாய் திறந்து மலருக்கு நன்றி பாராட்டவில்லை; அம்மலரை முன்போலச் சுற்றி வரவும் இல்லை; வாயை மூடிக்கொண்டு முன் பின் மலரைப் பார்த்து அறியாதவைகள் போல அகன்றுவிட்டன.

எந்தக் குளத்தில் இந்நிகழச்சி நடைபெறு கிறதோ, அந்தக் குளத்தின சொந்தக்காரியான தலைவி தன வீட்டு முற்றத்திலிருந்து இந்த ஈக்களின செயலைக கண கொட்டாமற பாாக்கிருள். அவளு டைய வியப்பு அதிகமாகிறது. 'என்ன ஈக்கள இவை! சிறிதும நாணமில்லாமல தாமரையைப பாராட்டிப பாடிச சுற்றி வந்து அதன தேனைக குடித்துவிட்டு இப்படி வாய பேசாமல திரும்பலாமா! எஙகேதான் போகின்றன இவை!'' என்று மீண்டும அவ்வீக்களையே பாாக்கிருள். பக்கத்தில் உள்ள சந்தன மரத்தை அடைகின்றன அவை. சந்தன மரப பூவை அவை நாடுகின்றன. மறுபடியும இதே பாடல்; இதே சுற்றல்; பிறகு அமைதியாய இருந்து தேனை உண்ணல். இவைகளே அஙகும நடை பெறுகின்றன!

இன்னுஙகொஞ்சம தன பார்வையை உயர்த திருள தலைவி. என்ன வியப்பு! எவவளவு பெரிய தேன கூடு! இந்த ஈக்களா இதத்துணைப பெரிய தேன கூட்டைக கட்டின! ஆம். இவையேதாம! எததனையோ இடஙகள இருகக, ஏன இவவளவு உயாந்த சந்தன மரததைப பிடித்தன? 'சிறுகக்கட்டிப் பெருக வாழ,' என்ற முதுமொழிபபடி 'பெருக' என்ற சொல்லுக்கு 'உயர' என்ற பொருளை நினைத்துவிட்டனவோ இந்த ஈக்கள! காரணம் திடீரெனத் தலைவிககு விளஙகுகிறது. ஆம! என்ன தான் தாமரை சிறந்ததாய் இருந்தாலும, அதில் கிடைக்கும தேனுக்குத தனி மணம கிடையாதல் லவா? ஆகவே, தாமரைத் தேனின பெருமை வெளிப பட வேண்டுமானல், அது சந்தன மரத்துடனும, சந்தனப பூவில் உள்ள தேனுடனும் சமபந்தப்படல்

வேண்டும். ஆகவேதான் தாமரைத் தேனுடன் சந்தன மரத்தைச் சம்பந்தப்படுத்தினர் போலும் ஈக்கள் !

இக்காட்சியில் ஈடுபட்டிருந்த தலைவிக்குத் திடீரெனத் தோழி முதல் நாள் கூறியது நினைவுக்கு வந்தது. தோழி மிகவும் அறிவாளி; குறிப்பு அறிபவள்; நேற்றுத் தலைவியிடம் பேச்சுவாக்கில் ஒரு காரியத்தையும் கூறிவிட்டாள். சில நாளாகவே தலைவன் ஒரு மாதிரியாய் இருக்கிறான்; திடீரென்று தலைவியின் நெற்றியை உற்றுப் பார்க்கிறான்; ஏன் என்று கேட்டால், 'ஒன்றுமில்லை. உன் நெற்றியில் உள்ள ஒளியைக் கண்டு மகிழ்ந்தேன்!' என்று கூறி விடுகிறான். இதனைத் தலைவி பெரிதாகப் பாராட்டவில்லை. மேலும், எப்பொழுதுமே அவனுக்கு அவளுடைய அழகில் ஒரு தனி ஈடுபாடு உண்டு. அவளுடைய உறுப்புக்களின் அழகை விரித்து விரித்துப் பேசுவதிலும், அதை அனுபவிப்பதிலும் அவனுக்கு விருப்பம் அதிகம். ஆனால், நேற்றுத் தோழி கூறியது தலைவியை மிகவும் அச்சுறுத்திவிட்டது. 'தலைவன் பொருள் தேடுவதற்காக வெளி நாடு செல்லப்போகிறான்,' என்பதே தோழி நீட்டி மடக்கிக் கூறியதன் கருத்து.

அவன் பிரியப் போகிறான் என்பதைக் கேட்ட தலைவி நடுநடுங்கிவிட்டாள். பிரிவின் துயரம் என்ன என்பதை முன்னரே களவுக் காலத்தில் அவள் அனுபவித்ததுண்டு. ஆனால், தலைவனை மணந்து கொண்டு அவனுடன் குடும்பம் நடத்தும் இந்நிலையில் அப்பொழுது பிரிவால் பட்ட வருத்தம் கனவு போல ஆகிவிட்டது; ஏன்—தலைவி அதை மறந்து கூடவிட்டாள். ஆனால், தோழி நேற்றுக் கூறியதை

மீட்டும் நினைவில் கொண்டு வந்த பொழுது தலைவன செய்த செயலுக்குப பொருள வேறு விதமாகவே பட்டது. ஏன அவன நெற்றியை உற்றுப பார்த் தான? ஏன அதன ஒளியில் ஈடுபட்டதாகக் கூறி ஞன்? இப்பொழுது அது ஒளியைத திடீரென இழநதுவிட்டதா? ஓஹோ! அவன் பிரிந்துவிட் டால், அந்த வருத்தத்தால் அவள வாட, அவளு டைய நெற்றி ஒளியை இழந்துவிடுமே என்று அஞ சித்தான் அப்படிப பார்த்தாஞே!

'இல்லை; அவ்வாறு இருக்க முடியாது,' என்று தலைவி நினைத்தாள. 'ஒரு வேளை அப்படி இருந் தாலோ!' என்ற எண்ணம மீட்டும மனத்தில் முளைத் தது. அவ்வாருயின், அவன வாயச்சொல் தவரு தவனஆயிற்றே என்ற எண்ணம மறுபடியும் அவள மனத்தில் உதித்தது.

களவுக காலத்தில் அவனை முதனமுறை சந்தித் துக் கூடிய பினனர், 'இனி ஒரு கணமும உன்னைப பிரியேன; பிரிந்தால், உயிர்வாழேன!' என்றல்லவா கூறினன? இதுவரை அவன கூறிய சொல்லை மீறு பவன் என்று அறியக்கூடவில்லையே! சாதாரண மனிதர்களாஞல சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி எதை யாவது கூறிவிட்டுப் பிறகு அதனை மறநதுவிடுவார் கள. ஆனல், தன தலைவனைப பற்றி 'உறுதியான சொல்லுடையவன்' என்ற முடிவுக்குத் தலைவி பல நாள முன்னரே வநதுவிட்டாள.

சிலரிடம பழகுவது கருமபை அடியிலிருந்து தின்பதுபோல இருக்கும. அதாவது, முதலில் 'ஆ! ஹோ!' என்று பழகிவிட்டு, நாட்கள செல்லச்செல்ல வெறுப்புத் தட்டும் வகையில் நடந்துகொள்வர்.

ஒரு சிலர் பழக்கம அல்லது நட்பு, நாளாக ஆக மிகச் சுவையுடையதாய் இருக்கும. அது கருமபை நுனியிலிருந்து தினபதுபோனறது ஆகும். தலைவனுடைய நடபு அத்தகையதனறோ? திருமணமாகி இததுணை நாட்கள் கழித்தும அந்நட்பில் தினந்தோறும புதிய இனபம அல்லவா காணகிறுள தலைவி? 'நீடுதோறும இனியன அவன்' என நினைககிறுள. மேலும, அவளைப் பிரிந்து இருக்க அவனுல் முடியாது எனபதையும பல முறை அவனே கூறியிருககிறுன. இது வரை பிரிநதிருந்ததும இல்லை அவன.

அப்படிப்படடவன இபபொழுது மடடும எவ்வாறு பிரிந்து வாழப போகிறுன? பிரிதல் எனற ஒனறு மட்டும அவன, அவள இருவருக்குமே இயலாத காரியம. தாமரையில தேன நுகாந்து சந்தன மரத்தை அடைந்து தேன கூடு வைக்கும ஈயைப போலத தலைவனும் அவளுடன இருந்து இனபம நுகர்ந்து உயர்ந்ததாகிய 'இல்லறம' எனனும மணம் அந்த இனபத்திறகுக் கிடைக்குமாறு செயது விடடான. வெறறினபம ஒனறையே கருதுபவனுயின, களவில் அனுபவிபபதுடன நினறிருபபான. ஆனுல, இல்லறமாகிய மணத்துடன கூடிய இனபமாகிய தேனை அலலவா அவன சேகரிததான! இநத ஈககளைப பாரத்தவுடன தலைவிககுத் தலைவன் செயகினற செயல் நினைவுககு வநதது.

இந்த நேரத்தில் தோழி உள்ளே இருந்து வெளியில் வநதாள, தலைவி குளத்தையும சநதன மரத்தையும மாறி மாறிப் பார்த்துவிட்டு, "ஆழ்ந்த சிந்தனையில் நிலை பெற்றுவிட்டதைக் கண்டாள்'' அவளும தலைவன பிரிவைப பற்றித்தான நினைநது

வருந்துகிறாள் என்று நினைத்த தோழி, தலைவிக்கு ஆறுதலாக ஏதோ கூறத் தொடங்குகிறாள். ஆனால், தலைவி அவளைப் பேசவிட்டால்தானே! இல்லை. 'தோழி, அவர் என்னுடைய நெற்றி அழகு கெட்டு ஒளி இழந்து போகும்படியாக விட்டுவிட்டு ஒரு நாளும் நம்மை விட்டு நீங்க மாட்டார்,' என்று ஒரேயடியாகக் கூறிவிடுகிறாள்.

"நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர்
என்றும் என் தோள் பிரிபு அறியலரே!
தாமரைத் தண் தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீம்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை,
நீர் இன்று அமையா உலகம் போலத்
தம் இன்று அமையா நம் நயந்து அருளி
நறு நுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பு அறியலரே?"

(நற்றிணை, 1)

[நின்ற சொல-தவறாத சொல்; நீடு தோன்று இனியா-நெடுங்காலம் பழகினும் இனிமையுடையவர், மீமிசை-மேலே; சாந்தின் தொடுத்த-சந்தன மரத்தில் கட்டிய; புரைய-உயர்ச்சியை உடையன; நறு நுதல்-மணம் பொருந்திய நெற்றி; பசத்தல்-ஒளி கெட்டுச் சாம்பல் நிறமடைதல்; சிறுமை உறுபவோ-சிறுமை செய்வாரோ?]

* * * *

இப்பாடலில் தலைவி, தலைவன் மாட்டுக்கொண்டுள்ள அன்பின் ஆழத்தைக் 'கபிலர்' என்ற புலவர் பெருமான் குறிக்கிறார். பெரியோர்கள் நட்பு (தலைவன் காதல்) தாமரைத் தேன், சந்தன மரத்தில் தேன் அடையானது போல உயர்ந்ததாகும். தலைவிக்குத் தலைவன் எவ்வளவு இன்றியமையாதவன் என்பதை

6, 7 அடிகள் விளக்குகின்றன. உலகத்திற்குத் தண்ணீர் எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு, தலைவன் தலைவிக்கு இன்றியமையாதவனும்.

காதல் என்பது கேவலம் கடைச்சரக்காக வாங்கப்படும் இந்நாளில் இத்தலைவியின் காதற்பெருமையும் ஆழமும் அறிந்து மகிழ்தற்குரியன. நம் முன்னோர் காதலையே கடவுளை அடையும் வழியாகக் கொண்டனர் என இலக்கியம் பேசுகிறது. காதல் இத்தகையதாய் இருப்பின், ஏன் அது முடியாது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

* * * *

பொன் வளையல்

தமிழ் இலக்கியத்தில் சாவா இடம் பெற்று வாழும் கவிதைகளில் எல்லாச் சுவைகளையும் (ரசம்) காணலாம். சில இடங்களில் சில சுவைகள் ஆழ்ந்து நோக்கிய வழியே புலனாகும்படி அமைந்துள்ளன. பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம், சுவை எட்டு எனக் கொண்டது; நகை முதலாக உவகை ஈறாக அவற்றிற்குப் பெயர்களும் தந்துள்ளது. (தொல். மெய்ப்பாட்டியல், 3.) இதனுள் நகை என்ற முதற்சுவையும் உவகை என்று இறுதியாகக் கூறப்பட்டதும் ஆய்தற்குரியன. உவகை என்பது மகிழ்ச்சி என்றே கூறப்படலாம். ஆனால், மகிழ்ச்சி காரணமாகப் பிறக்கின்ற நகைக்கும் தொல்காப்பியனார் முதற்சுவையாகக் குறிப்பிட்ட நகைக்கும் வேறுபாடு உண்டு. 'எள்ளல், இளமை, பேதைமை, மடமை' என்ற நான்கும் காரணமாக நகை தோன்றும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவ்வாறாயின், இதனை மேல்நாட்டுத் திறனாய்வாளர் 'Humour' என்பதனோடு ஒருவாறு ஒப்பிடலாம். ஒருவாறுதான் ஒப்பிடல் கூடுமே தவிர, இவை

இரண்டும் ஒன்று என்று நினைந்து யாரும் இடர்ப்படல் வேண்டா. நம்மவர் நகைச்சுவை தோன்றப் பேசிய இடங்களும், மேலை நாட்டார் 'ஹ்யூமர்' தோன்றுகிறது என்று கூறும் இடங்களும் வெவ்வேறானவை. இயற்கையில் தோன்றும் நகைச் சுவை ஒருவருடைய பேச்சின் மூலமும் செயலின் மூலமும் பிறரால் அனுபவிக்கப் பெறுகிறது. ஆனால், ஒவ்வொரு நாட்டினரின் பேச்சும் செயலும் பிற நாட்டினருடைய சொல் செயல்களினும் மாறு பட்டவை அல்லவா? எனவே, நாம் நகை தோன்றப் பேசும்பொழுது பிற நாட்டாருக்கு அங்கே அச்சுவை தோன்றுவதில்லை. அப்பிற நாட்டார் நம்மொழியை நன்கு கற்றிருப்பினுங்கூட, நகைச்சுவை தோன்றும் இடங்களை அவர் காண்டல் இயலாது. நமது மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமே இம்மொழியில் தோன்றும் நகைச்சுவையை நன்கு அனுபவித்தல் கூடும். ஆங்கிலப் படக்காட்சி கள் பார்க்கும் பொழுது இந்த அனுபவம் ஏற்படு தலைக் காணலாம். பேசிக்கொள்பவர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்; ஆனால், அதனைக் கேட்கும் நமக்கு அவர்கள் பேச்சு முற்றிலும் விளங்கினாலுங் கூட ஏன் சிரிக்கிறார்கள் என்பது பல சமயங்களில் விளங்குவதில்லை!

எனவே, மேலை நாட்டார் கூறும் 'ஹ்யூமரை' அப்படியே தமிழில் 'நகைச்சுவை' என்று கூறி விட்டதாக யாரும் நினைந்துவிட வேண்டா. பிறரைப் புண்படுத்தாத முறையில் அமையவேண்டும் நகைச்சுவை. பிறரிடம் காணப்படும் குறைபாடு களை எடுத்துக்காட்டும் பொழுதுகூட, அவர்களும் சேர்ந்து நகைக்குமாறு அது அமைய வேண்டுமே

தவிர, அவர்களை வருத்தத்தில் ஆழ்த்திவிடக் கூடாது. தம்பால் உள்ள குறைகளைத்தாம் எடுத்துக் காட்டுகின்றனர் என்று அறிந்தவிடத்தும் குறையுடையார் வருந்தாமல் ஏற்றுக்கொள்ளும் முறையில் அமைவதுதான் சிறந்த நகைச்சுவை எனப்படும். நகைச்சுவை தோன்றப் பேசும் வன்மை சிலரிடம் காணப்படும். ஆனால், இவ்வாறு பேசுவதால் யாதொரு பயனையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. அந்த நேரத்தில் பேச்சைக் கேட்பவர்கள் கை கொட்டிச் சிரித்து ஆர்ப்பரிப்பதைத் தவிர வேறு பயனைப் பேசுபவரும் கேட்பவரும் எதிர்பார்ப்பதில்லை.

ஆனால், இலக்கியத்தில் நகைச்சுவை தோன்றும்பொழுது இவ்வாறில்லை. நகை தோன்றச் செய்வதுடன் பெரியதொரு பயனையும் கருதியே இலக்கிய ஆசிரியன் நகைச்சுவையைக் கையாளுகிறான். அவன் கருதும் பயன் தனிப்பட்ட ஒரு மனிதனைத் திருத்தவேண்டும் என்பதாகவும் இருக்கலாம். அன்றேல், அவன் காலத்தில் காணப்பெற்ற சமுதாயம் முழுவதையும் திருத்தவேண்டும் என்ற நோக்கமாகவும் இருக்கலாம். இவையல்லாத மூன்றாவது வகையும் உண்டு. அகப்பாடல்களில் மருதத்திணைப் பாடல்கள் பலவற்றுள்ளும் நகைச்சுவை உண்டு. தலைவனுடைய நாட்டு வளனை விவரிக்கும் முகமாக அவனுடைய குறைபாடுகள் அனைத்தும் பேசப்பெறும், மேலாகப் பார்ப்பதற்கு நகைச்சுவை தோன்றினாலும், ஆழ்ந்து நோக்குகையில் தலைவனைத் திருத்த வேண்டும் என்ற ஆவல் அச்சொற்களுள் அடங்கியிருக்கும். எவ்வளவு பெரிய தவற்றையும் நகைச்சுவையுடன்

எடுத்துக் கூறினால், பிறர் மனம் நோவாமல் எடுத்துக் கூறலாம். நற்றிணையில் வரும் நுண்மையான நகைச்சுவை ஒன்றைக் காணலாம். அது மூன்றும் வகையைச் சேர்ந்தது.

பல வகையாலும் சிறப்பெய்திய தலைவன் அவன். அவளும் பெரிய இடத்துப் பெண்தான். அவன் கண்ட பெண்களிடமெல்லாம் மனத்தைப் பறிகொடுத்துத் தவிப்பவன் அல்லன். அவளும் அவ்வாறே. இவ்வாறு இருந்தும், அவ்விருவரும் ஒருவரையொருவர் சந்தித்தவுடன் காதல் கொண்டனர். 'கண்டதும் காதல்' என்று இக்காலத்தார் கூறும் வகையில் அமைந்ததன்று அவர்களுடைய காதல். பல பிறவிகளிலும் தொடர்ந்து வரும் ஒன்றுதான் தம்முடைய காதல் என்பதை அவ்விருவரும் நன்கு அறிந்துகொண்டனர். முதன் முறை இருவரும் சந்தித்துக் களவுப் புணர்ச்சியில் ஈடுபட்டனர். இதன் பிறகு பல முறையும் சந்திப்பதாகவே உறுதி பூண்டு இருவரும் பிரிந்தனர்.

முதன்முறை அவர்கள் சந்தித்தது ஒருவருக்கும் தெரியாது. விதிதான் தங்களைச் சேர்த்து வைத்தது என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். ஆனால், மறு முறை சந்திப்பது முதன்முறை போல அவ்வளவு எளிதாய் இல்லை. தோழியின் உதவி இல்லாமல் தலைவனைச் சந்திக்க முடியாது என்பதைத் தலைவி உணர்ந்தாள்; தலைவனும் இதனை நன்கு உணர்ந்தான். எனவே, இருவரும் தனித் தனியே தோழியிடம் பேசி அவளுடைய உடன்பாட்டைப் பெற்றுவிட்டனர்.

நாள்தோறும் வந்தான் தலைவன்; தலைவியைச் சந்தித்தான். ஆனால், அதற்குமேல் அவன் ஒன்றும்

செய்வதாகத் தெரியவில்லை. வாழ்நாள் முழுதும் களவொழுக்கத்தில் கழித்துவிட முடியுமா? அவள் நினைக்கிறாள் முடியாதென்று. ஆனால், அவன் அதுபற்றிக் கவலைப்படுவதாகவே தெரியவில்லை! குடும்பப்பொறுப்பு இல்லாமலே இன்பம் பெறுவதைச் சிறந்த வழி என்று கருதிவிட்டானோ? அவள் வாய் மூடி இருப்பதால் தலைவி படும் துயரை அவனுக்கு யார் எடுத்துரைப்பார்? தலைவியே கூறுதல் நலம் என்றுகூடத் தோழி கருதினாள். ஆனால், பண்பாடுடைய அவளுக்கு இதனை எடுத்துக்கூறுதல் பொருத்தமற்றது என்று கருதினாள் தலைவி.

ஒரு நாளில் எப்பொழுதோ ஒரு நேரத்தில் வருகிறான் அவன். அந்த நேரத்தில் அவள் எதிர்பார்த்து வரும் இன்பத்திற்கு மறுதலையாக அவனுடைய கடமை பற்றி நினைவூட்டுவது நாகரிகமற்ற செயலாகும் என்று கருதினாள் தலைவி. 'தலைவிக்குத் தோன்றும் இவ்வெண்ணங்கள் தலைவனுக்குப் புலப்பட்டதாகவே தெரியவில்லை. எத்தனை நாட்களுக்குத்தான் பொறுத்திருக்க முடியும்! தலைவன்மாட்டுள்ள அன்புகாரணமாகத் தலைவி பொறுத்திருக்கத் துணியலாம். ஆனால், ஊரார் வாய் சும்மா இராதே! சிறு தூற்றல் பெருமழையானாற்போல ஊரார் பழிச்சொல்லும் மிகுந்துவிட்டதே! இந்நிலையில் இதற்கொரு வழிகாணவேண்டும் என்று முடிவு கட்டினாள் தலைவி.

தலைவி சிறு குழந்தையாய் இருந்தபோது அவளுக்கு மருத்துவம் செய்து வந்தார் ஒரு மருத்துவர். அவளுக்கு மட்டும் என்ன? ஊரார் அனைவரும் நோயுற்ற பொழுது அவரிடமே சென்றனர். அவர்

எவ்வளவு அறிவும் ஆற்றலும் படைத்தவர்! அவர்

‘நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்.’ (948)

என்ற குறளை நன்கு அறிந்து கடைப்பிடிப்பவர். ஒரே நேரத்தில் இருவர் வயிற்று வலி என்று கூறிக் கொண்டு வருவர். இருவருக்கும் வயிற்று வலி தானே என்று அவர் ஒரே மருந்தைத் தருவதில்லை. வயிற்று வலியாகிய காரியம் ஒன்றேயாயினும், அதன் காரணம் வெவ்வேறாகலாம் அல்லவா? எனவே, ஒருவருக்கு இனிய மருந்தும், மற்றவருக்குக் கசப்பு மருந்தும் தருவார். கசப்பு மருந்து உண்பவர் தம்முடைய வருத்தத்தைத் தெரிவித்து எவ்வாறாயினும் தமக்கும் இனிப்பு மருந்து தரவேண்டுவர். ஆனால், மருத்துவர் அதற்கு ஒத்துக்கொள்ள மறுத்துவிடுவார். ‘நோய்க்கு மருந்தே தவிர நாவுக்கு மருந்து அன்று,’ என்று கூறிவிடுவார்; இதனால், நடுவு நிலை திரியாத அறவோர் என்ற பெயரையும் பெற்றுவிட்டார். பல காலம் அவர் இவ்வாறு செய்ததைத் தலைவி கண்டிருந்தாள். இப்பொழுது அவளுக்கு அவருடைய நினைவு தோன்றிற்று. அவர் செயலை எடுத்துக்காட்டுவதன் மூலம் தலைவனுக்கு அறிவு கொளுத்த முடிவு செய்துவிட்டாள்.

நேரடியாக ஒன்றைக் கூறுவதைக்காட்டிலும் மறைமுகமாகக் கூறுவது எளிது. அவ்வாறு கூறுவதிலும் நகைச்சுவை தோன்றக் கூறுவது இன்னும் நலம் பயக்கும். ஆனால், நகைச்சுவை ததும்பப் பேசக்கூடிய நிலைமையிலா தலைவி இருக்கிறாள்? எல்லையற்ற வருத்தத்தில் ஆழ்ந்திருக்கும் அவளால் சுவைபடப் பேசல் இயலுமா? பேச முடியும் என்று

சுவை இயல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். 'ஒவ்வொரு முறையும் ஒருவன் நகைச்சுவை ததும்பப் பேசும் பொழுதும் சிரிக்கும் பொழுதும் ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். அவனுடைய உணர்ச்சிகளை ஆழ்ந்து நோக்கினால் கண்ணீர் வரவழைக்கும் ஒரு நிலையிலிருந்தே' இந்த நகைச்சுவை தோன்றிற்று என்பதை அறிய முடியும்.[1] இவ்விலக்கணத்தைத் திருப்பி வைத்துப் பார்த்தாலும் இதில் உண்மை இருப்பது விளங்கும். எல்லையற்ற துயரம் தோன்றிய பொழுதும் சிரிப்பும் சிரித்தற்கு ஏற்ற பேச்சும் தோன்ற இடமுண்டு என்பதை அறிய முடிகிறது. மேலே கூறப்பெற்ற தலைவிக்கு எல்லையற்ற வருத்தத்திலேதான் நகை ததும்பப் பேசும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நகைச்சுவையுடன் வரும் பேச்சு ஏதாவது ஒரு காரணம் பற்றியே தோன்றல் கூடும். அக்காரணத்தை ஆய்ந்த திறனாய்வாளர் இவ்வாறு கூறினர்: 'நகைப்பேச்சு என்பது வைரம்போன்று ஒளி படைத்த ஓர் அனுபவமாகும். விளையாட்டில் எதிர்பாராமல் தோன்றிய அதிர்ச்சியோ, ஏமாற்றமோ [அது மனத்திருத்தியை உண்டாக்குவதாயின்) தோன்றும் பொழுதுதான் இந்த அனுபவம் கிட்டுகிறது.'[2]

1. For, in every case in which a man laughs humourously there is an element which, if his sensitivity were sufficiently exaggerated, would contain the possibility of tears. —*The Sense of Humour* by Max Eastman, P 21.

2. And a joke is a little node, or gem like moment in our experience created by the exact coincidence of a playful shock or disappointment with a playful or a genuine satisfaction —Ibid P 28.

தலைவியின் எல்லையற்ற நம்பிக்கை மெள்ளத் தகர்கிறது. தலைவன் நீண்ட காலமாகத் தன் எதிர்காலம் பற்றி ஒன்றும் கவலையுறாமல் இருப்ப தால், 'இது எவ்வாறு முடியுமோ!' என்ற ஐயம் முதலில் தோன்றிற்று. நாளடைவில் அந்த ஐயம் வளர்ந்து பெரியதாயிற்று. ஒரு வேளை அவள் அவனை நெருக்கிக் கேட்ட பொழுது அவன் தட்டிக் கழிக்கும் முறையிலோ, அன்றி அவள் மனம் அமை தியடையாத நிலையிலோ பேசியிருக்கலாம். இந்த ஏமாற்றம் அவளுடைய மனத்தில் ஆழப் பதிந்து விட்டது. இதன் பயனாகவே அவளுடைய பேச்சும் மாறுபட்டு வெளி வருகிறது. ஒரு நாள் தலைவன் வந் தான். ஆனால், தலைவியிடம் நேரே வந்துவிடாமல், ஒரு வேலி ஓரத்தில் மறைவாக நிற்கிறான். அவன் வந்து நிற்பதைத் தோழி தலைவி என்ற இருவரும் அறிந்தனர். அவனிடத்தில் நேரிற் கூற முடியாத ஒன்றை மறைமுகமாகக் கூற விரும்பினாள் தலைவி; அவன் இருப்பதை அறியாதவள் போலப் பேசத் தொடங்குகிறாள் தோழியை நோக்கி, தலைவன் தன்னை விட்டு நீண்ட காலம் பிரிந்திருப்பதால் தன் தோள்கள் மெலிந்துவிட்டன என்று கூறவேண்டும் அவளுக்கு. அதைத்தான் எவ்வளவு திறமையடக் கூறுகிறாள்! ஆத்திரத்துடனும் அழுகையுடனும் பேசவேண்டிய ஒரு நிகழ்ச்சியை ஆழ்ந்த நகைச்சுவை ததும்பப் பேசுகிறாள் தலைவி:

"தோழி, திருத்தமாகச் செய்யப் பெற்றனவும் ஒளி பொருந்தியனவுமான வளையல்களே வேண்டு மென்று யான் அழவும், என் தந்தையார் என்ன செய் தார் தெரியுமா? கடுமையான பிணியுடையவர்கள் விரும்பிய மருந்தைக் கொடாமல், அவர்கள் நோயை

ஆய்ந்து, அதற்கு ஏற்ற மருந்தையே தரும் அறமுடைய மருத்துவனைப் போலத் தந்தையார் எனது நிலையை உணர்ந்துகொண்டார். தலைவனோடு நமக்குப் பிரிவு நேரிடும்; அந்த நேரத்தில் நம்முடைய தோள் நெகிழும். அவ்வாறு நெகிழ்ந்தால், இந்த வளையல்கள் கழன்று வீழ்ந்துவிடுமே என்று ஐயுற்றவர்போல, மிகவும் இறுக்கமாக அமைந்துள்ள சிறிய வளையல்களையே போட்டுவிட்டிருக்கிறார்,' என்று கருத்துப்படக் கூறுகிறாள்.

'திருந்துகோல் எல்வளை வேண்டியான் அழவும்
அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல
என்னை வாழிய பலவே! பன்னிய
மலைகெழு நாடனொடு நம்மிடைச் சிறிய
தலைப்பிரிவு உண்மை அறிவான் போல
நீப்ப நீங்காது வரின்வரை அமைந்து
தோட்பழி மறைக்கும் உதவிப்
போக்குஇல் பொலந்தொடி செறீஇ யோனே!"

(நற்றிணை, 136)

'தலைவன் பிரிந்தபொழுது தோள் இளைத்தாலும் கழன்று விழாத வளையல்களாகப் பார்த்து எனக்குப் போட்டு அனுப்பினார் போலும் தந்தையார்! அவர் வாழ்க!' என்று கூறுவதில் நகைச்சுவை அமைந்துள்ளது. ஆனால், நுண்ணிதின் நோக்குவார்க்கேயன்றி மேலாகக் கற்பார்க்கு விளங்கா வகையில் அமைந்து கிடக்கிறது அந்தச் சுவை. தன் தோள்கள் இளைத்துவிட்டமையைத் தலைவன் ஆர்வமிகுதியால் காணவில்லையாகலின், சிரிப்புடன் பேசுவதுபோல அவ்வுண்மையை அவன் காது கேட்கக் கூறிவிட்டாள். என்றாலும், அந்த

நகைச்சுவையும அவளுடைய பெண் தன்மைக் கேற்ப அடக்க ஒடுககததுடன வெளி வருகிறது. வெடிச் சிரிபபுடன வரும சொறகளலல இவை; மெல்ல முலலையருமபு போனற பறகள மட்டும வெளியே தெரியுமபடியான புனசிரிபபுடன வரும சொற்கள.

இலககியத்தில் தோனறும இத்தகைய நகைச சுவைகட்கு ஒரு காரணம கூறுகினறனர் சிறநதய வாளர. மனித மனத்தின ஆழததை அது வெளிப படுததுகிறதாகலின, அதனைக காணடல் வேணடும.

"எதிர்பார்த்தது நடைபெறும பொழுது தோனறும இனபததையும் அது நடைபெறாத பொழுது ஏறபடும துனபததையும நம அறிவு எடை போடுகிறது. துனபநதான நேரும அநத இக்கட்டான நிலையில, மகிழசசி தரககூடியது எது வாயினும, அந்த ஒனறு கறபனை அளவிலேதான மகிழசசி தரும. எனறாலும், அறிவு அந்தக் கற்பனை மகிழச்சியைப பெறற விருமபுகிறது. இவவாறு கற்பனை மகிழசசியைப பெறுவதனமூலம, இனமையால் நேரும துனப உணாசசி தணிகிறது." [1]

தலைவன செயத கொடுமையால ஏற்பட்ட ஆறாத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும தலைவியைத் தந்தை செயது போட்ட இறுககமான வளையல்கள

1. Our brain is just balancing, as we might imagine upon that fine edge between pain and pleasure at the failure of what it had momently desired, when there looms into the void some unexpected ripe apple of a thing desired more, or desired at least deeply and continually, and with a hunger that can be relied on to be glad. And by this means that arbitrary trick of turning loss into gain is actually warrented and borne out by the facts. —Ibid Page. 28

பற்றிய நினைவு சிரிக்கச் செய்கிறது. ஏனைய சந்தர்ப்பமாயின், இது நகைப்பதற்குரிய செயலன்று. ஆனால், பிரிவினால் ஏற்பட்ட வருத்தத்தின் எதிரே தந்தையின் இந்தச் செயலிலும் ஒரு நகைப்பைப் பெறுகிறாள் தலைவி. இத்துணை நுண்ணிய முறையில் சுவைகளைப் பெய்து பாடும் தமிழ்க்கவிஞர் இனம் இன்று எங்கு மறைந்ததோ, தெரியவில்லை!

## 'நாடனை அறியலும் அறியேன்!'

தம்முடைய நெஞ்சால் உண்மை என்று அறிந்த ஒன்றை மறைத்துக் கூற முற்படுதல் தவறாக முடியும் என்று கூறினர், வள்ளுவப் பெருந்தகையார். ஆனால், உலக மக்களில் பெரும்பாலோர் அறிந்தும் அறியாமலும் இக்குற்றத்தைச் செய்துதான் வருகின்றனர். நெஞ்சறிந்தே பல சந்தர்ப்பங்களில் பொய் பேசுகிறார்கள். இவ்வாறு பேசுவதால் அந்த நேரத்தில் வரும் துன்பத்திலிருந்து விடுபடவே பல சமயங்களில் இவ்வாறு பொய் பேசுகின்றனர். இன்னுஞ்சிலர் பொய் கூற வேண்டிய இன்றியமையாமை இல்லாத பொழுதும் பொய் கூறுகின்றனர். இவர்கள் ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவர்கள். காரணமில்லாமல் ஏன் பொய் கூறுகின்றனர் என்று ஆராய்ந்தால், ஓர் உண்மை விளங்கும். இவ்வினத்தார் பொய் கூறுதலை ஒரு கலையாக வளர்த்துவிட்டனர். கலைப் பித்துப் பிடித்த கலைஞர்களுக்குத் தங்கள் கலையை மட்டும் மறக்க இயலாது; உணவின்றிப் பட்டினியால் வாடுவார்கள், ஏனைய எத்தகைய கடுந்தண்டனையை வேண்டுமானாலும் அனுபவிப்பார்கள். ஆனால், அவர்கள் விரும்புகிற கலையிலிருந்து அவர்களைப் பிரித்துவிட்டால், நீரிலிருந்து தரையில் எடுத்துப் போடப்பட்ட மீன் போல மூச்

சுத் திணறுவார்கள். இந்த இலக்கணமும கலைஞர் அனைவருக்கும் பொதுவானதே. எனவே, பொய பேசுதலைக் கலை போல வளர்த்தவர்கட்கும் இது உணமையாகும். அவர்கள எந்தத் துனபத்தை வேண்டுமானாலும அனுபவிக்கத் தயங்க மாட்டார்கள. ஆனால், ஒரு நாள் மட்டும பொய கலவாமல் பேசவேணடும என்று கட்டுபபாடு செயதுவிட்டால —பாவம—அவர்கள பாடு பெருந்திண்டாட்டமாயப போயவிடும்! இந்த வியபபான பிராணிகளிடம மற்றொரு புதுமையையும காணலாம. அதுதான காரணமில்லாமல் இவர்கள பொய பேசுவது. ஒரு பயனைக் கருதிப பொய பேசுபவர்களை நாம் மன்னித்துவிடலாம. ஆனால, எவவிதப பயனையும எதிர்பாராமல பொய்யைப பொயக்காகவே பேசும இயல்புடையவர்கள இவர்கள. ஆதலாலேதான் இவர்களைக் கலைஞர்கள என்று கூடக் கூறலாம போலத் தோன்றுகிறது.

ஏனைய கலைகளில் ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லை; இரண்டுதரத்தாரும ஒத்த மதிபபுடைய கலைஞராயவிடலாம, ஆனால, 'பொயக் கலை'யில மட்டும நம சோதரிமார்கள நம பக்கத்திற்கூட வர இயலாது. ஆணமக்களாகிய நமமுடைய இனத்தின தனி உரிமை இககலை. இககாலத்தில் வாழும நமக்கு மட்டும் இதனைக் கூறுவதாக யாரும நினைத்து மகிழ்ந்துவிட வேணடா. நமமுடைய முனனோர்கட்கும இது பொருந்தும. அதுவும 'காதல்' விஷயத்தில் இது முற்றிலும உண்மை. காதல சமபந்தமான விஷயஙகளில் தலைவன அஞசாது பொய உரையபான. ஆனால், ஒன்று; அந்நாளில பொய பேசிய நம இனத்தவனாகிய தலைவனுக்கும இன்று

வாழும் நமக்கும ஒரு சிறு வேறுபாடு உண்டு. அவ னுடைய பொயயால பிறருக்குத் தீமை ஏற்படுவ தில்லை. இன்று நாம் கூறும பொயகளால்........!

பழந்தமிழ நாட்டில் வாழநத தலைவனுடைய பொய ஒரு புறம இருக்க. சில சந்தர்பபஙகளில பெணகளும இதனைக் கையாண்டுளளார்கள. அவ வாறு அவர்கள பொய கூறவேண்டிய இன்றியமை யாமை ஏறபடுவதும அந்தச சமுதாய வாழவில உண்டு ஓர் ஆண் மகனும ஒருபெணமகளும் சோந்து தாமே களவு வாழக்கையில ஈடுபட்டாாகள. அப படி இருக்க ஊரார் அனைவரும அந்தப பெணணைப பற்றிததான் அலர் (பழி) தூற்றினர்கள. அவள மேல் வந்த பழிககு அவனும சரிபாதி காரணமா வான எனபதை ஏனோ அவர்கள அறிவதிலலை! அறிந்தாலும, அவனைக் குறறம கூறுவதும இல்லை. எனவே, தமமுடைய களவு வாழ்ககையைப பிறர் அறியாமல் மறைத்து ஒழுகவேணடுமெனறு அவன கவலைபபடவே இல்லை. இவ்வாழ்க்கை வெளிப்பட்டு விடககூடாதே என்ற கவலையெல்லாம-பாவம்-அந் தப பெண்ணுககும அவளுடைய தோழிககுமே உணடு. இதனால், சில சந்தர்பபஙகளில் தலைவியும தோழியும வேறு வழி இன்றிப பொய பேசி உளள னர். இலக்கியத்தில் எஙகோ இரணடொரு பாடல் கள் இத்தகைய காட்சியைச் சிததிரிககினறன.

அத்தலைவனிடம சில காலமாக அத்தலைவி களவில் ஈடுபட்டு வருகிறுள. இந்தச் சந்தர்பபத்தில் அவள தினைப்புனத்தில காவல் காதது வருவது அவளுடைய களவு வாழக்கைக்கு மிகவும உதவியாய் இருககிறது. தினைபபுனம் அவர்களுடைய வீட்டி

லிருந்து நெடுந்தூரத்திற்கு அப்பால் அமைந் திருக்கிறது. நீண்ட தூரத்தில் அமைந்துள்ள அப் புனத்திற்கும் வீட்டிற்கும் அடிக்கடி சென்று வருதல் என்பது இயலாத காரியம். எனவே, தலைவியும் தோழியும் இரண்டொரு பணிப் பெண்களுமே தினைப் புனத்தில் தங்குவார்கள். தினைப்பயிர் அறுவடை ஆகிற வரையில் அவர்கள் புனத்திலேயே தங்கி இருக்க வேண்டும். வீரக்குடியில் பிறந்த பெண்கள் ஆகலின், வேறு ஆண் மக்களின் துணை இன்றி அவர்கள் மட்டுமே அங்குத் தங்கியுள்ளார்கள். ஆண் மக்களின் வாடையே இல்லாமல் 'அலலி ராஜ்யம்' நடத்தும் தலைவி, ஏனைய தோழிகளோடு சேர்ந்து வாழ்க்கையை மிக இன்பமாகக் கழிக்கிறாள். என்றோ ஒரு நாள் அவள் தந்தை மகளைப் பார்த்துவிட்டுப் போக வருவான். மற்றொரு நாள் தாய் வருவாள். பிறிதொரு நாள் தலைவியின் உடன் பிறந்தார் வந்து அவளைக் கண்டு போதலும் உண்டு. அவளுடைய வாழ்க்கை தினைப்புனத்தில் நன்கு நடைபெற இன்றி யமையாத பொருள் ஏதேனும் தேவைப்பட்டால், அவர்கள் அதைக் கொண்டு வந்து தந்து போவார்கள். தந்தைக்கும் அண்ணன்மார்க்கும் குடும்பத்தைத் தாங்கவேண்டிய பொறுப்பு இருத்தலின், அவர்கள் புனத்திற்கு எப்பொழுதாவது வந் தாலும் நீண்ட நேரம் தங்க இயலாது. தாயும் குடும் பத்தைக் கவனிக்க வேண்டிய கடப்பாடுடையவள். ஆதலால், அவளும் அடிக்கடி வரமாட்டாள். வந்தா லும், இவர்களுடன் தங்கமாட்டாள். எனவே, தலைவி யின் பாடு கொண்டாட்டந்தான்!

இம்மாதிரி வாழ்க்கை நடைபெற்று வருகையிலே தான் ஒரு நாள் அவன் வந்தான். தலைவனும் தலை

வியும் ஒருவரை ஒருவர் பார்த்தனர்; உடன் காதலும் பிறந்தது. பின்பு இருவரும் தனியே சந்தித்தனர்; மகிழ்ச்சியுடன் காலத்தைக் கழித்தனர். தலைவனுடன் சேர்ந்த தலைவி, அந்த மலைப்புறமெல்லாம் சுற்றி அலைந்தாள்; அவனுடன் சேர்ந்தே மலைச் சுனைகளில் நீராடினாள்; அருவிகளிலும் குளித்து விளையாடினாள். இருவரும் நேரம் போவது தெரியாமல் வாழ்ந்து வரத் தலைப்பட்டனர். தலைவியின் உயிர்த் தோழிக்கு மட்டும் தலைவியின் இந்தப் புதிய வாழ்க்கை தெரியும். அவளும் தன்னால் இயன்ற அளவுக்குத் தலைவியின் வாழ்க்கை இன்பம் அடைய உதவுவாள். மற்றப் பணிப்பெண்களைப் பொறுத்த மட்டில் தலைவியின் புது வாழ்வு நன்கு தெரியாது. தெரிந்தாலும், அவர்கள் அவள் செயல்களில் ஈடுபடுவதுமில்லை. அவள் நடத்தையைக் கவனிக்க அவர்கள் யார்? புறத்திறகு வெளியிலிருந்து ஒருவரும் வாராத வரை தலைவியின் இன்ப வாழ்வு ஆறரோட்டம் போல நன்கு நடைபெற்றுத்தான் வந்தது.

தாயோ தந்தையோ வருகின்ற அந்த நேரத்தில் தலைவி பரணமேல் நின்றுகொண்டிருந்துவிடுதல் போதுமானது. என்றாவது தலைவியின் முகம் மாறுபட்டு இருப்பதாகத் தாய்க்குத் தோன்றும். அவளுடைய நடை, உடை, பாவனைகள் அனைத்திலும் கூடச் சில சந்தர்ப்பங்களில் வேறுபாடு தோன்றுவதுண்டு. அம்மாதிரி நேரங்களில் எல்லாம் அந்தப் பைத்தியக்காரத் தாய்க்கு மகள்மேல் ஐயந்தோன்றுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் தங்களைப் பிரிந்து இருப்பதால் இந்த மாறுபாடு ஏற்பட்டிருந்தாலும் இருக்கலாம் என்று அவள் நினைத்துக்கொண்டு சென்றதும் உண்டு.

தாய் இவ்வாறு வந்து சென்றுகொண்டிருந்த வரை தலைவிக்கு எவ்வித துன்பமும் நேரவில்லை. ஆனால், உலகத்தில் நாம் நினைத்ததை நினைத்தபடி நடைபெறுவதில்லை அல்லவா? அவ்வாறு நடைபெற்றால், இதனை உலகம் என்று தான் கூற முடியுமா? ஒரு நாள் தாய் வருவாள் என்று தலைவி சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், முதல் நாள் தான் அவள் வந்து போனாள். எனவே, அன்று ஊரிலிருந்து ஒருவருமே தன்னைக் காண வரமாட்டார் என்று நினைத்துவிட்டாள் தலைவி. எனவே, தலைவன் வந்தவுடன் அவனுடன் புறப்பட்டு விட்டாள். நேரம் போவதே தெரியவில்லை அவளுக்கு. மாலை நெடுநேரம் ஆய்விட்டது. ஏன் அதற்குள் அந்திபட்டுவிட்டது என்று கேட்கத்தான் அவளுக்குத் தோன்றுகிறது. தன்னால் காவல் காக்கப்பட வேண்டிய தினைப்புனம் என்ன கதியாயிற்றோ என்றுகூட அவள் கவலைப்படவில்லை.

அவள் எல்லையற்ற இன்பக்கடலில் திளைத்த படியே மாலை நேரத்தில் பரணை நோக்கி வந்தாள். பரண் அமைந்திருக்கும் இடத்திற்குச் சிறிது தூரம் வரை தலைவனே அவளைக் கொண்டு வந்து விட்டு விட்டுச் சென்றான். பரண்மேல் ஏறிச் சென்றாள் தலைவி. என்ன வியப்பு! அவள் தாய் அங்கே அமர்ந்திருந்தாள். காலதேவனைக்கூடத் தலைவி அந்த இடத்தில் அஞ்சாமல் சந்தித்திருப்பாள், ஆனால், அவளுடைய தாயை மட்டும் சந்திக்க விரும்பவில்லை என்ன செய்வது!

எவ்விதமான ஐயமும் கொள்ளாமல், "எங்கே அம்மா இவ்வளவு நேரம் சென்றிருந்தாய்?" என்று கேட்டுவிட்ட தாயையும், அவளுடைய கேள்வியை

யும் சற்றும் எதிர் பாராத தலைவி, வாயடைத்து நின்றுவிட்டாள். அவள் தாய் வேறு விதமாகப் புரிந்துகொண்டுவிட்டாள். தன் கோபத்தைத் எங்கே மகள் அறிந்துகொண்டு மனவருத்தம் அடைவாளோ என்று அஞ்சிய தாய், உடனே, "என் அம்மா, தினைப்புனக் காவலைக்காட்டிலும் முக்கியமான காரியம் என்ன இருக்கிறது? எங்குச் சென்றிருந்தாய்?" என்று கேட்டுவிட்டாள். 'புனக்காவலை விட்டுவிட்டு ஏன் போனாய்?' என்று தாய் கேட்டதும் தலைவி மிகவும் அஞ்சிவிட்டாள். தான் தலைவனுடன் இருந்ததைத் தாய் கண்டுவிட்டாளோ என்ற ஐயம் மகள் மனத்தில் தோன்றிவிட்டது. மேலும் தான் ஒரு தவற்றைச் செய்துவிட்டு அஞ்சி நிற்கையில் பிறர் யாது கூறினாலும், உண்மையை அறிந்துவிட்டார்களோ என்ற ஐயம் தோன்றுவது இயல்பு. 'பூசணிக்காய் திருடியவன் முதுகு வெள்ளை நிறம் ஏறி இருக்கும்,' என்று கூறினால், உடனே திருடினவன் முதுகைத் தடவிப் பார்ப்பது உறுதியன்றோ? எனவே, தாயின் இக்கேள்விக்கு, 'நான் எங்கும் வெளியே செல்லவில்லை,' என்று விடை இறுக்க நினைத்தாள் தலைவி. நன்கு பொய் கூறிப் பழக்கப் பட்டிருந்தால், பதறாமல் இவ்வாறு கூறியிருப்பாள். ஆனால், இதற்கு முன்னர்ப் பொய் கூறிப் பழக்கம் இல்லை தலைவிக்கு. எனவே, அவளையும் மீறி மெய்ம்மை வெளிப்பட்டுவிடுகிறது. மெய்ம்மையை மறைக்க வேண்டும் என்று முயன்றதால் வேடிக்கையான முறையில் விடை வெளி வருகிறது 'நான் தலைவனைப் பார்க்கவும் இல்லை; அவனை நான் அறியேன்; சுனையில் யாருடனும் சென்று நீராடவும் இல்லை,' என்று கூறுகிறாள்.

இவ்வாறு மகளிடம் ஒரு விடையை அந்தத் தாய் எதிர்பார்க்கவே இல்லை. இவ்விடையைக் கேட்டு அப்படியே தலையைத் தொங்கவிட்டுக்கொண்டாள் தாய். பதில் பேச அவளுக்கு வாய் ஏது? இனி மகளைத் தினைப்புனக் காவலுக்கு விடுவாளா என்பது ஐயந்தான்.

இவ்வாறு ஒரு நாள் நடந்ததாகவும் இனித் தலைவியின் நிலைமை யாதாகுமோ என்று கவலையுறுவதாகவும் தோழி கூறுகிறாள். தலைவன் பரணின் பக்கத்தே மறைந்துகொண்டிருக்கிறான். அவன் காதில் இது விழ வேண்டுமாம். இதைக் கேட்டவுடன் இனித் தலைவியைச் சந்திக்க முடியாதென அஞ்சி விரைவில் மணந்துகொள்வானாம்.

'இனிய தேன் பிலிற்றுகிற சாரலினிடத்துச் சிறிய தினைப்பயிரின் பெரிய கதிர்களைச் சிவந்த வாயையுடைய பசிய கிளிகள் திருடுமாறு விட்டு விட்டு நீ எங்கே சென்றுவிட்டாய் என்று தாய் கேட்டாளே! நீ அவள் எதிரே நின்று, 'அருவி ஒலிக்கும் மலை நாடனை நான் அறியேன்; கண்டதும் இல்லை. கிளியை ஓட்டும் கருவியைக்கொண்டு பூக்களைக் கொய்து, அவனுடன் சுனையில் ஆடவும் இல்லை,' என்று நீ பொய் கூறுவது போல் மெய்யைக் கூறிவிட்டாய். அதைக் கேட்டுத் தாய் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டாள். இனி உன்னைத் தினைப்புனக் காவலுக்கும் விடமாட்டாள். நம் கதி யாதாகுமோ!' என்கிறாள் தோழி:

"யாங்குஆ குவமோ அணிநுதல் குறுமகள்!
'தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர நீமற்று
எவ்வாய்ச் சென்றனை அவண்?' எனக் கூறி

அன்னை ஆனுள் கழற, முன்னின்று,
'அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
அறியலும் அறியேன்! காண்டலும் இலனே!
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து
சுனைபாய்ந்து ஆடிற்றும் இலன்' என நினைவிலை
பொய்யல் அந்தோ! வாய்த்தனை! அதுகேட்டுத்
தலைஇறைஞ் சினளே அன்னை
செலவுஒழிந் தனையால் அளியைநீ புனத்தே!'

(நற்றிணை, 147)

*[யாங்காகுவமோ — நாம் இனி எவ்வாறு ஆகப்போகிறோம்; தேம்படு சாரல்—இடம் அகன்ற மலைச்சாரல், பெருங்குரல்—பெரிய கதிர்; வெதிர்புனை தட்டை—மூங்கிலால் செய்த கிளியை விரட்டும் கருவி, பொய்யல் வாய்த்தனை—பொய் கூற முடியாமல் உண்மை கூறிவிட்டாய்; இறைஞ்சினள்—தொங்க விட்டாள், அளியை—நீ இவ்வாறு குடும்பம் நடத்தப் போகிறாய் என்று பிறரால் இரங்கத்தக்கவள் ]*

* * * *

'மன்ற மடவை வாழிய முருகே!'

*தலைவிக்கு உற்ற துணைவியாய் உள்ள தோழியின் சிறப்பையும் அவள் தலைவிக்குச் செய்த உதவியையும் பற்றிக் கூறும் பாடல் இது.*

*வானை முட்டும் மலை ஒன்று. பல வளங்களும் நிறைந்துள்ளன அங்கு. குறிஞ்சித் திணை என்றால் மலையும் மலையைச் சுற்றியுள்ள இடங்களுமே குறிக்கப்படும். இம்மலை நாட்டை ஆள்பவன் 'நாடன்' என்று பொதுவாகக் குறிக்கப்படுவான். அவனுடைய மலை பல வளங்களுக்கும் உறைவிடமாய் இருப்பதற்கு நீர்வளம் வேண்டுமல்லவா? அவ்வளத்தை அங்கு ஓயாமல் பெய்யும் மழை தருகிறது. ஆனால், மலையில் பெய்யும் மழை நில்லாமல் ஓடிவிடும்*

இயல்புடையது. எனவே, அம்மழை நீரைத் தேக்கி வைத்துக்கொள்ள, இயற்கை அன்னை குளங்களைத் தோண்டி வைத்திருப்பாள். அவற்றிற்குச் 'சுனைகள்' என்று பெயர் கூறுவர்.

பாறைகள் மூடிய சுனைகள் பக்கம் மாந்தர் செல்லவும் அஞ்சுவர். சின்னாட்களில் அவைகளும் கடவுள் தன்மை பெற்றுவிடும். இத்தகைய கடவுட் சுனையை உடைய மலைக்கு அவன் தலைவன். அவனுடைய மலையில் உள்ள இந்தச் சுனையில் மக்கள் செல்வதில்லையாகலின், அங்குத் தேவ மாதர்கள் வருவார்களாம். அவர்களைச் 'சூர் அரமகளிர்' என்று சங்கப் பாடல்கள் குறிக்கும். அத்தேவமாதர்கள் அந்தத் தலைவனுடைய மலையில் உள்ள கடவுட்சுனைக்கு வந்து, அங்கு மக்கள் பறிக்க அஞ்சி விட்டுச் சென்ற மலர்களைப் பறிக்கிறார்கள். அப்பூக்களைக் கவிஞன் 'பறியாக் குவளை' என்றே குறிப்பிடுகிறான். பறியாக் குவளை என்றால், மக்களால் பறிக்கப்படாத குவளை மலர்கள் என்பது பொருள். மக்களால் தீண்டப்படாத அக்குவளை மலர்களை அத்தேவ மாதர்கள் பறிக்கிறார்கள்; அக்குவளையுடன் சேர்த்துக் கட்டுவதற்காக, இரத்தம் போன்று சிவந்த நிறமுடைய 'காந்தள்' பூவையும் பறிக்கிறார்கள்; பிறகு அவை இரண்டையும் அழகு பொருந்தக் கட்டுகிறார்கள். அந்த மாலைகளை அணிந்துகொண்டு அத்தேவ மாதர்கள் ஆடுகிறார்களாம். பலர் சேர்ந்து ஆடும் அந்நாட்டியத்திற்கு இசை வேண்டும் அன்றோ? மலையில் சுனையின் அருகே வீழ்கின்ற அருவி சிறந்த பின்னணி இசையை அமைக்கிறதாம். இயற்கையில் பிறந்து வளர்கின்ற சூர் அர மகளிர் ஆடும் ஆட்டத்திற்கு அருவியின் 'ஓங்கார' ஒலி நல்ல பின்னணி

இசையாய அமைந்துவிடுகிறதாம. முருகப பெருமானுக்கு மிகவும உகந்த குறிஞசி நிலத்தில், அச செமமேனியானுககே உரிய மலையில், அவனுடைய சுனை என்று கருதி, மககள நெருஙக அஞசுகிற சுனைககரையில, அச்சுனையில் பூத்த குவளை மலாகளையும காநதட்பூவையும சூடிக்கொணடு சூர் அர மகளிர் நாட்டியமாடுகின்றனர், அருவியின ஓசையைப பினனணி இசையாகக் கொணடு. எனவே, அசசூர் அர மகளிரும முருகனுககு மிகவும விருபபமான அடியாாகள போலும!

இததுணைப பெருமை வாய்ந்த அருவி, சுனை முதலியவறறையுடைய மலைககுத தலைவன அவன; நமமைப போனற மனிதனதான. எனவே, அவனுககும நமமைப போலக காதல் முதலிய உணர்ச்சிகள உணடலலவா? அவனுககு ஒரு காதலி இருக்கிருள. அவளும அநத மலையை அடுதத சிறறூரில வாழநது வருகிருள. நீணட நாளாகவே அவனுககும அவளுககும நடபு உணடு. ஆனால,பிறா அறிய மணநது வாழும நிலைமையை அவர்கள இன்னும அடையவில்லை. ஆனல், ஒருவர் இனறி மறறவர் வாழ முடியாது எனறு கூறும அளவுககுக் காதல கொண்டவாகள. அவன ஏறததாழத் தினம ஒரு முறை சென்று தலைவியைக கணடு, அவளுடன மகிழ்ந்துவிட்டுவருவான: அபபொழுதெல்லாம அவளும் வீட்டில தஙகவிலலை. அவள வீடடை விட்டுச சற்றுத் தூரததேயுள்ள தினைபபுனததைக் காவல காதது வந்தாள. அவளும அவளுடைய உயிாத தோழியும சேர்நது புனததிலகாவல காத்து இருநதமையின, வேறு ஆடவா துணை இலலாமல இருந்தது. தலைவன முதன்முறை தலைவியைச சந்

பொழுது தோழிக்குத் தெரியாமலே சந்தித்தான். ஆனால், முதற்கூட்டம் முடிந்த பிறகே, தோழியின் தயவு இல்லாமல் தாம் இருவரும் நீண்ட காலம் இவ்வாறு களவுப் புணர்ச்சியில் இருக்க முடியாது என்பதைக் கண்டுகொண்டான்; எனவே, மறு முறை தோழியைச் சந்தித்துக் குறிப்பால் தன்னுடைய காதலை அவளிடம் கூறித் தலைவியைத் தான் சந்திப்பதற்குத் தோழியின் சம்மதியைப் பெற்று விட்டான்.

தடை இல்லாமல் நீண்ட காலம் அனுபவிக்கக் கூடியது என்ற இன்பம் ஒன்றும் இந்த உலகில் இல்லை. ஆதலால், தலைவனுடைய இன்பத்திற்கும் முற்றுப் புள்ளி வைப்பது போலத் திணைக்கதிர்கள் நன்கு முற்று அறுவடையாகிவிட்டது. திணைப்புனத் தில் வேலை முடிந்தவுடன் தலைவியை வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டனர். வீடு ஊரின் நடுவே இருக்கிறது. ஊருக்கோ, கட்டும் காவலும் மிகுதி. தலைவன் விருப்பம்போல வந்து தலைவியைக் கண்டு போக முடியவில்லை இப்பொழுது. எத்தனையோ முறைகள் வந்து தலைவியைச் சந்திக்க முடியாமற் போய்விட்டான். அவன் அடைந்த வருத்தம் கொஞ்சமன்று. ஆனாலும், அவன் ஆண் மகன் அல்லனோ! எனவே, தன் வருத்தத்தை அடக்கிப் பிறருக்குப் புலப்படா வண்ணம் மறைத்துக்கொண் டும், தன் பிற கடமைகளில் ஈடுபட்டும், கவலையை மறந்தும் வாழ்ந்து வருகிறான். ஆனால், தலைவியின் நிலைமை என்னுவது!

கட்டுக் காவல் மிகுந்த ஊரில், தன்னுடைய ஒவ்வொரு செயலையும் கூர்ந்து நோக்கும் தாயி னுடைய பாதுகாவலில் இருந்து வருகிறாள் தலைவி.

அவளுக்கு மட்டும் தலைவன் நினைவு இல்லையா? அவள் நேரம் முழுதும் அவனைப் பற்றிய நினைவிலே தான் கழிகிறது. ஆனால், அவள் படும் துயரை உயிர்த்தோழி தவிர வேறு யாரும் அறியவில்லை; அறியவும் முடியாது. அறிவதை அவள் விரும்பவும் இல்லை. ஆனால், பாரதியார் கூறியபடி, ஓய்வும் ஒழிதலும் இல்லாமல் அவன் உறவை நினைத்திருக்கிறது அவள் உள்ளம். மனத்தில் தோன்றிய இந்த வருத்தம் சும்மா விடுமா அவளை? அது மெள்ள மெள்ள அவளை அரிக்கத் தொடங்கிவிட்டது. உடலில் மெலிவு கண்டு கைவளைகள் தாமாகக் கழன்று விழலாயின. உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவில்லை; எதொன்றிலும் மனம் நாடவில்லை. தலைவியின் இந்த நிலையைத் தாயும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாள். என்ன செய்வாள் பாவம்! அவளுக்குத் தெரிந்த கைமுறை மருத்துவமெல்லாம் செய்து பார்த்துவிட்டாள். பக்கத்து வீட்டுப் பாட்டிமார்கள் வந்து பார்த்தார்கள். ஒரு முகமாக அவர்கள் தீர்ப்பும் கூறிவிட்டார்கள். தீர்ப்பு என்ன தெரியுமா? தலைவியைத் தெய்வம் பிடித்துக்கொண்டது என்பதுதான். அவள் தினைப் புனம் காவல் செய்துகொண்டிருந்த அந்த வேளையில், கடவுட்சுனை என்று தெரிந்துகொள்ளாமல் அதில் ஒரு வேளை சென்று குளித்து இருக்கலாம். கடவுட்பூ என்பதை அறியாமல் அதைச் சூடி இருக்கலாம். ஏதோ ஒரு காரணத்தால் தெய்வம் அவளைத் தீண்டிவிட்டது. அதைத் தணிப்பதற்கு வழி யாது? ஒரே வழிதான் உண்டு. அவளைப் பிடித்த தெய்வக் குற்றம் நீங்கும்படியாக வேலன் வெறியாட வேண்டும். இன்று நாம் பூசாரி என்று கூறும்

இனத்தான் அன்று வேலன் என்று வழங்கப்பட்டான். ஊரில் உள்ள பாட்டிமார் அனைவரும் கூடிச் சொன்ன இந்த முடிவைத் தாய் ஏற்றுக்கொண்டாள்.

வெறியாடுதலுக்கு உரிய சகல ஏற்பாடுகளும் ஆகிவிட்டன. ஆனால், இதனால் ஒரு பெரிய இடையூறு தலைவிக்கு உண்டு. உண்மையிலேயே அவளைத் தெய்வம் தீண்டியிருந்தால், வேலன் வெறியாடிய பின் அது தீர்ந்துவிடும். ஆனால், அவளைத் தலைவன் அல்லவோ தீண்டியிருக்கிறான்? வெறியாடியதால் யாது பலன்? மீட்டும் தலைவன் வந்து அவளைத் தொட்டால் ஒழிய அவளுடைய நோய் தீரப் போவதில்லை. எனவே, வெறியாடியதால் தலைவியின் நோய் தீரவில்லை என்பதை ஊரார் அறிந்துவிட்டால் பழி தூற்றுவார்கள். இவ்வாறு தலைவியை ஐயுற்றுப் பழி தூற்றுதலை 'அம்பல்' என்று பழந்தமிழ் இலக்கியம் பேசுகிறது. கொஞ்சம் 'கசமுச' என்று தூற்றப்பெறும் இதுவே பெரிதாகிப் பலரும் வெளிப்படையாகப் பேசும் நிலைமையில் 'அலர்' எனப் பெறும்.

இந்த நிலையில் தோழிக்கு வருத்தம் மிகுதிப்பட்டு விட்டது. எவ்வாறாவது அன்னை வெறி எடுப்ப முயல்வதைத் தடுக்க வேண்டும் என்று அத்தோழி, அன்னை காதில் விழும்படி சில வார்த்தைகளைக் கூறுகிறாள். இதுவே பாடல் அமைந்த விதம்.

"முருகப் பெருமானே, நீ நெடுங்காலம் இந்த மடமையோடு வாழ்வாயாக! தலைவியானவள், கடவுள் தன்மை பொருந்திய மலையிலுள்ள சுனைகளில் மலரும் குவளைப் பூவையும் உதிரம் போலச் சிவந்துள்ள

காந்தட்பூவையும் அழகு பொருந்தக் கட்டிக்கொண்டு பெரிய மலையின் பக்கங்கள் எல்லாம் அழகுபொருந்தச் சூர் அர மகளிர் அருவியின் இனிய ஓசையைப் பின்னணியாகக் கொண்டு ஆடும் மலைக்குத் தலைவனுடைய மார்பு தந்த வருத்தத்தால் உண்டான நோய் நின்னால் ஏற்பட்டதன்று என்பதை நீ நன்கு அறிந்திருந்தும், வேலன் வெறியாடும் களத்தில் இறுமாந்து அங்கே கொடுக்கப்படும் பலியை ஏற்றுக்கொள்வதற்காக வந்தவனே, நீ கடவுளாய் இருப்பினும் இருக்கட்டும்! திண்ணமாக நீ அறியாமை உடையவன்தான்!"

'கடவுள் கற்சுனை அடையிறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன்இயத்து ஆடும் நாடன்
மார்புதர வந்த படர்மலி அருநோய்
நின்அணங்கு அன்மை அறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்!
கடவுள் ஆயினும் ஆக!
மடவை மன்ற வாழிய முருகே!' (நற்றிணை, 34)

[அடை இறந்து—இலைகளை விலக்கிக்கொண்டு, அவிழ்ந்த—மேலே மலர்ந்துள்ள; குருதி—இரத்தம்; உரு கெழ—அழகு பொருந்த; அடுக்கம் பொற்ப—பக்க மலைகள் அழகு பொருந்த, இன் இயத்து—(பின்னணியான) இனிய வாத்தியமாக; படர்மலி அருநோய்—நினைப்பதால் மிகுதிப்பட்டு நீக்கமுடியாத அரியநோய்; நின் அணங்கு அன்மை—நீ தொட்டதால் வந்த வருத்தமன்று, அண்ணாந்து—மிக்க செருக்குடன்; கடம்பு—கடம்பம்பூ; கண்ணி—தலைமாலை.]

## போரும் அமைதியும்

சங்கப் புலவர்களுள் தலையாய பெருமை வாய்ந்தவர் 'கபிலர்' ஆவர். அவர் பாண்டிநாட்டிலே உள்ள திருவாதவூரில் அந்தணர் மரபில் அவதரித்தவர்; பரணர், இடைக்காடர் முதலிய புலவர் பெருமக்களோடு ஒருங்கு வாழ்ந்தவர். ஆரிய அரசனாகிய பிரகத்தன் என்பவனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்துவான் வேண்டிக் குறிஞ்சிப்பாட்டு என்றதொரு பாட்டைப் பாடினார். அவ்வொரு பாட்டின் மூலம் தமிழ்ச் சுவையை ஓரளவு அறிந்த அவ்வரசன், தமிழை நன்கு கற்றுத் தானும் தமிழ்க் கவி இயற்றும் அளவிற்குப் புலவனாயினன். கபிலருடைய வாழ்க்கையில் மிகச்சிறந்த பகுதி அவர் வள்ளல் பாரியினிடத்து நட்புக் கொண்டிருந்ததாகும். அவர், மூவேந்தரும் பாரியைக் கொன்ற பிறகு, பாரியின் மகளிர் இருவரையும் அழைத்துக்கொண்டு சென்று, ஓர் அந்தணரிடத்து அவர்களை ஒப்படைத்தார்; பின்னர்ப் பாரியின் பிரிவுத் துயர் தாங்காமல் வடக்கு முகமாய் இருந்து, இந்திரியங்களை ஒடுக்கி, உணவு உட்கொள்ளாமல் உயிர் துறந்தருளினார்.

அவர் பாடினவற்றுள் மிகப் பெரும்பகுதி குறிஞ்சித் திணை பற்றியது. ஆகலின், 'குறிஞ்சி பாடக் கபிலன்' என்ற முதுமொழியும் பிற்காலத்தெழுந்தது. அவர் பாடியனவாக நற்றிணையில் 19ம், குறுந்தொகையில் 29ம், ஐங்குறுநூற்றில் 100ம், பதிற்றுப்பத்தில் 10ம், அகநானூற்றில் 16ம், ஆக 174 செய்யுட்கள் கிடைத்துள்ளன. இவற்றை யல்லாமல் பத்துப் பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டும் அவர் பாடியதே. அப்புலவர் பெருந்தகை

பாடிய நற்றிணைப் பாடலுள் ஒன்றை (77) இங்குக் காண்போம்.

மலை போன்ற பெரிய யானையின் பிடரியில் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய மலையமான் திருமுடிக்காரி அமர்ந்திருக்கிறான். அவனைச் சூழக் கடல் போலப் பெரும்படை செல்கிறது. பறை கொட்டும் புலையன் மிக்க எக்களிப்போடு கொட்டிச் செல்கிறான். மிக நீண்ட தூரம் சென்ற பிறகு பகைவனுடைய புலத்தில் மலையமானின் மாட்சி மிகு சேனை புகுந்துவிட்டது. புதிய நாட்டைப் போர் செய்து வெல்லுகிற வரை அது படைகளின் வேலை. படைகள் போரிட்டு வென்று தந்த பின்னர் அரசியலாரின் வேலை தொடங்குகிறது. முதல் வேலையை விட இவ்வேலை கடினமானது. பாரியின் மாட்டுக் கழிபெருங்காதல் கொண்டு அவன் அவையில் நீண்ட காலம் வாழ்ந்த கபிலருக்கு இந்த அரசியல் நுணுக்கங்கள் நன்கு பிடிபட்டிருக்கும் அல்லவா? எனவே, அவர் தகுந்த சமயத்தில் இதனைப் பயன்படுத்துகிறார்.

ஒரு தலைவியைத் தலைவன் ஒரு நாள் சந்தித்தான். அதற்கு முன்னர் அவனும் அவளும் சந்தித்தது கூட இல்லை. ஆனால், இன்று இந்தச் சந்திப்பு எவ்வாறு ஏற்பட்டது? 'பால்வரை தெய்வம்' என்று கூறப்படும் 'விதி' தான் அவர்களைக் கூட்டுவித்தது. இதற்கு முன்னர் அத்தலைவனும் பல பெண்களைக் கண்டதுண்டு; அத்தலைவியும் பல ஆடவர்களைக் கண்டதுண்டு. ஆனாலும், இருவரும் தம் உறுதிப்பாட்டை இழந்ததில்லை. இன்று அத் தலைவனும் தலைவியும் சந்தித்தவுடன் ஒரு பெரிய போராட்டமே தொடங்கிவிட்டது. அவனும் நோக்

கிறான்; அவளும் நோக்கினாள். இருவரும் நோக்கிய 'நோக்கு எதிர் சென்று' 'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்.' ஆனால், இவ்வளவு விரைவில் இந்நிகழ்ச்சி நடந்துவிட்ட போதிலும், நடைபெற்ற போராட்டம் எளிதானதன்று. புதிய ஆடவன் தன் மனத்துள் இடம் பெற அவள் விரும்பவில்லை. அவள் பிறப்புடன் பிறந்த நாணமும் நிறையும் அப் புதிய ஆடவன் அவள் மனத்துள் இடம் பெறுவதைத் தடுத்து நிற்கின்றன. எனவே, அவை இரண்டும் ஒரு புறம் நின்று போரிடுகின்றன. ஆனால், அவள் மனமும் அன்பும் அவனை வரவேற்று நிற்கின்றன. ஆனால், இப்போராட்டம் பெரிய அளவில் நடைபெறுகிறது. தலைவனுடைய 'கண்கள்' தலைவியின் 'நாணம்' என்ற முதற் கோட்டையை அழிக்க வேண்டும். அதனை அழித்த பிறகு உள்ளே 'நிறை' என்று கூறப்படும் இரண்டாவது கோட்டை[1] இருக்கிறது. தலைவன் தன்னுடன் பிறந்த 'ஆண்மை' என்ற படைகொண்டு தலைவியின் நாணம், நிறை என்ற கோட்டைகளைத் தகர்க்கிறான். நெடுநேரம் வரை வெற்றி தோல்வி யாருக்கு என்று கூற முடியாதபடி போராட்டம் நடைபெறுகிறது. இப்போராட்டம் இந்த முறையில் ஒருவரிடம் மட்டும் நடைபெறுவதன்று. தலைவனிடம் உள்ள 'பண்பாடு' என்ற கோட்டையைத் தலைவியின் 'கண்கள்' தாக்குகின்றன. இவ்வாறு இருவரும் போரிட்ட நிலைமையில் இருவருக்கும் வெற்றி கிட்டிவிடுகிறது. 'காதற்போர்' ஒன்றிலேதான் இரண்டு கட்சியார்களுக்கும் வெற்றி கிடைக்கும்.

போரில் வெற்றி கிட்டியவுடன் அரசன் அமை

1. Second line of defence

தியை நிலை நாட்டும் வேலையை அமைச்சர்களிடம் ஒப்படைத்துவிட்டு இளைப்பாறுகிறான். தலைவனுக்கும் இத்தகைய போர் ஒன்று கிட்டியதன்றோ? அப்போரில் தலைவியின் நாணம் முதலியவற்றை வெற்றி கண்ட பிறகு அவன் இளைப்பாறத் தொடங்கினான். தலைவியும் தன் போராட்டம் முடிந்து வெற்றி பெற்றவுடன் இளைப்பாறுகிறாள். போரில் மிக்க அனுபவம் உடைய தலைவன் கூறுவது போல் அமைந்துள்ளது பாடல். இந்நிலையில் தலைவனுக்கு வியப்பு உண்டாகிறது. தன்னுடைய ஆண்மை முதலியவற்றை நினைந்து பார்க்கிறான். பகைவர்கள் தன் பெயரைக் கேட்டவுடன் நடுங்குவதை அவன் கண்டும் கேட்டும் இருக்கிறான். அத்தகைய வீரம் பொருந்திய தானா இந்நிலைக்கு வர நேரிட்டது என்று வியப்புடைகிறான். இவ்வாறு தன் தோல்விக்குக் காரணமாய இருந்தவள் தான் யார்? போர் புரிதலில் வல்லவனாகிய தன்னைத் தோற்கச் செய்தவள் ஒரு பெண்தானே! அதிலும் கலை நலம் நிரம்பப்பெற்ற ஒரு பெண்ணினாலா தான் தோல்வியடைய வேண்டும் என்று வியக்கிறான். மென்மையுடைய அப்பெண் தானும் வேறு படைக்கலங்களின் உதவியின்றித் தன் குவளை மலர் போன்ற கண்களால் அல்லவா வெற்றி கொண்டுவிட்டாள்? போர் என்றால் ஒருவரை ஒருவர் கோபித்துக்கொண்டல்லவா போரிடுவர்? ஆனால், அப்பெண் சிரித்துக்கொண்டல்லவா வெற்றி பெற்றாள்? குவளை மலர் போன்ற அவளுடைய கண்ணால் மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டே வெற்றியடைந்துவிட்டாள்.

இனி, இத்தனை எண்ணங்களும் தலைவன் மனத்தில் ஊடாடுகின்றன என்பதைக் கவிதை தெரிவிக்

கிறது. 'மலையமான் திருமுடிக்காரி பெரிய யானையின் மேல் ஏறிக்கொண்டு, புலையனின் துடிப்பறை ஒலிக்கப் பகைவருடைய நாட்டில் புகுந்து, அவர்களுடைய அரிய கோட்டையை அழித்து வெற்றி கொண்டு இளைப்பாறியது போல, நெஞ்சே, சிவந்த வேர்களையுடைய கிளை தோறும் தொங்குகிற பலாப் பழத்தின் சுளைகளையுடைய வீட்டு முற்றத்தில் மனைவியானவள் அருவியின் இனிய ஓசையில் உறங்க, சிற்றூரின் சேரியில் வாழும் கைத்தொழில் வல்ல வினைஞன் கையால் அறுத்துச் செய்த சங்கு வளைகள் தன் கையில் அழகு பொருந்த விளங்கும் தலைவியினுடைய குவளை மலர் போன்ற மையுண்ட கண்களில் தோன்றும் மகிழ்ச்சி பொருந்திய நோக்கமானது நம்மை இத்தலைவிபால் செலுத்துகிறது. (அம்மன்னன் வெற்றியின் பின்னர் அயாவுயிர்த்தது போல) நாமும் இவள் உடன்படும் வரை பொறுத்திருப்போம்.' என்னும் கருத்தமைந்த அக்கவி இது:

'மலையன்மா ஊர்ந்து போகிப் புலையன்
பெருந்துடி கறங்கப் பிறபுலம் புக்குஅவர்
அருங்குறும்பு எருக்கி அயாவுயிர்த் தாங்கு
உய்த்தன்று மன்னே நெஞ்சே! செவ்வேர்ச்
சினைதொறும் தூங்கும் பயம்கெழு பலவின்
சுளையுடை முன்றில் மனையோள் கங்குல்
ஒலிவெள் அருவி ஒலியில் துஞ்சும்
ஊரலம் சேரிச் சீறூர் வல்லோன்
வாள்அரம் பொருத கோண்ஏர் எல்வளை
அகன்தொடி செறித்த முன்கை ஒண்ணுதல்
திதலை அல்குல் குறுமகள்
குவளை உண்கண் மகிழ்மட நோக்கே.'

(நற்றிணை, 77)

[மா—யானை; கறங்க—ஒலிக்க; அருங்குறும்பு—காவல் பொருந்திய கோட்டை; எருக்கி—அழித்து; அயாவுயிர்த்தாங்கு—ஓய்வு எடுத்தது போல; உய்த்தன்று—செலுத்தியது, வாள் அரம் பொருத—கூரிய அரத்தால் அராவிய; கோண் ஏர்—வளைந்த அழகிய ஒண்ணுதல்—ஒளி பொருந்திய நெற்றி; திதலை-தேமல், குறுமகள்—இளம்பெண்; மடநோக்கு—இளமையுடைய பார்வை]

'அரசன் அரிய அரணை அழித்து இளைத்துப் போனதுபோல யானும் இத்தலைவியின் மனத்தின் திண்மையை நெகிழ்த்தி இளைத்துவிட்டேன். அரசன் அமைதியை நிலைநாட்டும் தொழிலை அமைச்சர் முதலானவர்க்கு விட்டுவிட்டு, தான் இளைப்பாறியது போல யானும் இத்தலைவியை என்னிடம் சேர்ப்பிக்கும் வேலையைத் தோழியிடம் விட்டுவிட்டு இளைப்பாறுவேன். ஆகலின், நெஞ்சே, நீ இனிக் கவலைப்பட வேண்டா,' என்ற குறிப்புப் பொருளும் இந்த உவமையால் பெறப்பட்டது.

இதனையடுத்துத் தலைவி அணிந்திருக்கும் வளையலின் வரலாறு பாட்டின் 5-ஆம் அடி முதல் 10-ஆம் அடி வரை பேசப்படுகிறது. இவ்வரலாற்றில் பிறிதோர் அழகும் தோன்றுமாறு கவிதை புனையப்பட்டுள்ளது. வளையல் அறுப்பவன் ஊர் வளம் பேசப்படுகிறது முதற்கண். பலா மரத்தின் கிளை தோறும் நல்ல பலாப் பழம் தொங்குகிறது. அப்பலா மரமும் வீட்டின் முன்றிலில் தழைத்து நிற்கிறது. அம்மரத்தின் அருகே வெண்மையான அருவி ஒலி செய்துகொண்டு வீழ்கிறது. அவ்வொலியே பின்னணி இசையாய் இருக்க, அக்கலைஞன் மனைவி உறங்குகிறாள். அவள் உ

கொண்டு இருக்கையில் அவளினருகே பக்கத்தில் அமர்ந்து வளையல்களைச் செய்கிறான். வளையல் அறுப்பவனுடைய காதல் வாழ்வின் படப்பிடிப்பாகும் இவ்வடிகள். அமைதி நிறைந்த வாழ்வு வாழ்பவனாகலின், அவன் கடமையைக்கூடக் கலை போலச் செய்கிறான். வளை அறுப்பது அவன் தொழிலேயாயினும், இன்று அதனை மகிழ்வுடன் செய்கிறான். ஆகலின், அது கலைபோலப் பரிணமிக்கிறது. உணவு நிறைந்த ஊரில் காதல் வாழ்வு வாழ்பவன் வளை செய்பவன்; அவன் அறுக்கும் வளைகள் கலையாகச் செய்யப்பெற்றவை. அத்தகைய வளையல்கள் தலைவியின் கையை அலங்கரிக்கின்ற காரணத்தால் தலைவியின் பிற்கால வாழ்க்கை வளம் நிறைந்ததாய், காதல் வாழ்வுடையதாய், செம்மை பொருந்தி இருக்கும் என்பதும் குறிப்பால் பெற வைத்தார் கவிஞர் திலகராகிய கபிலர்.

தலைவி தன் கண்களின் உதவியால் தலைவனை வென்றுவிட்டாள். தலைவனும் தன் ஆண்மையின் உதவியால் தலைவியின் நாணம், நிறை முதலியவற்றை வெற்றி கொண்டுவிட்டான். சில விநாடிகளில் இப்போராட்டம் நடந்து முடிந்துவிட்டாலும் இந்நிகழ்ச்சிகள் ஆழ்ந்த பொருள் ஆழம் உடையன. கபிலர் மலையமானின் போர் முறையையும், வெற்றியையும் பின்னர் அமைதியை நிலை நிறுத்தினதையும் நேரே கண்டிருக்கிறார். பின்னர், எங்கோ ஒரு முறை இக்காதலர் போராட்டத்தையும் அவர் கண்டிருத்தல் வேண்டும். தலைவன் வெற்றி கண்ட பிறகு தோழியின் உதவியை நாடுகிறான். அந்தத் தோழி மனம் இரங்கித் தலைவியை அவனிடம் சேர்த்து வைத்தால் ஒழிய அவன் அவளை அடைய

முடியாது. தான் போரிட்டு வெற்றி கொண்ட தலைமகளைத் தன்பால் சேர்ப்பித்து இல்லறம் நடத்துமாறு செய்யத் தோழியின் உதவியை நாடுகிறான். அரசன்—தலைவன்; பகைப்புலம்—தலைவி; பகைவர்கள் கோட்டை—தலைவியின் நாணம் முதலியன; அரசன் படைகள்—தலைவனின் ஆண்மை முதலியன; அரசன் அமைதியை நாட்ட அமைச்சரை ஏவி இளைப்பாறுதல் — தலைவனது வெற்றியின் பின்னர்த் தோழியை வேண்டித் தலைவியைத் தன்பால் சேர்க்கச் சொல்லுதல். இம்முறையில் உவமை அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற்குரியது.

* * *

## மடலேறுவது பற்றிய பாடல்

அறிவாலும் திருவாலும் நிறைந்தவன் அத் தலைவன்; நல்ல கல்வியும் மன உறுதியும், கொண்டது முடிக்கும் ஆற்றலும் உடையவன். இத்தகைய அவன் எதிர் பாரா விதமாக ஒரு பெண்ணைக் கண்டான். அதற்கு முன் அவன் ஆயிரக் கணக்கான பெண்களைக் கண்டதுண்டு. ஆனால், மனித சமுதாயத்தின் சரிபகுதியினரான அவர்களுள் அவன் மனத்தை ஒருவரும் கவரவில்லை. ஆனால், இன்று அப்பெண்ணைக் கண்டவுடன் தன் மனத்தைப் பறி கொடுத்துவிட்டான். ஒரு பெண்ணால் இம்மாதிரி தன் மனத்தைக் கவர முடியும் என்பதை அவன் அதற்குமுன் நினைத்ததுகூட இல்லை. அவளும் இம்மாதிரியே அத்தலைவனிடம் தன் மனத்தைப் பறி கொடுத்துவிட்டாள். அச்சம், மடம், நாணம் முதலியவற்றை உடையவள்தான் அத்தலைவி; சிறந்த குடியிற்பிறந்தவளும் ஆவள். ஆடவரைக் கண்டால் உடனே மனம் மாறுபடும் இனத்தைச் சேர்ந்த

வளலலள அவள். அவ்வாறு இருநதும, அவர்கள ஒருவரை ஒருவா காண நோநதது எனில அது விதியின விளையாட்டு எனறே இருவரும கருதினா. 'பால் வரை தெயவம கடைககூட்டக கணடனா' எனறு பழநதமிழா இககாட்சியை விரிததுரைத தனா. எதிர் பாரா விதமாக ஒரு நாள ஒரு சோலை யில இருவரும ஒருவரை ஒருவா எதிர்பபட்டனா. 'அணணலும நோக்கினுன ; அவளும் நோககினுள.' இருவரும பாாததுககொணட பாாவை மூலமாகவே ஒருவர் மறறொருவருடைய உளளததில் புகுந்து நிலையாயத் தஙகிவிடடனா. 'இருவரும மாறிபபுகு இதயம எயதினர்.' இக்காட்சியின பினனா இருவரும உளளமும உடலும் கலநதவாகளாய்ச சிறிது நேரம இருந்துவிட்டுப பிரிநதனா. அவவாறு பிரியும பொழுது அவள மிகவும வருநதினுள ; இனி எபபொழுது எவவாறு அவனைக காண முடியும எனறு அஞசினுள். 'அவன பலபடியாக அவளுககு அமைதி கூறினுன ; தன ஊர் மிக அணிததாகவே உளதெனறும, தினநதோறும அவளை வநது சநதிபபதாகவும கூறினுன.

தனது ஊர் மிகவும அணமையில்தான இருக் கிறது என்பதை மிகவும அழகுபடக் கூறுகிருன அத்தலைவன.

'பெணணே, அஞச வேண்டா' எம ஊரிடத் துளள மலை போனற பெரிய மாளிகைகள சுணணுமபு பூசபபெறறு மிக்க ஒளியுடன விளஙகுகினறன. அநதச சுணணாததின வெணமையான ஒளி படுவதால், உன ஊரில உள்ள கரிய நிறமுடைய குனறுகள அனைததும வெணமை நிறம பெற்று விளங்கும,' எனற கருததால,

"இருங்குன்ற வாணர் இளங்கொடி யே!இடர்
எய்தல்! எம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்துஒளி
பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்கும்
கனங்குழையே!"

(சிற்றம்பலக் கோவை, 15)

என்று தன் கலையறிவையும் காட்டி அவள் வருத்தத்தையும் போக்கினான். இருவரும் ஓரளவு ஆறுதல் பெற்றுப் பிரிந்துவிட்டனர்.

அத்தலைவன் ஒரு பெரிய நாட்டின் மன்னன். பற்பல அலுவல்களை உடையவன். எனவே, அவனுடைய வேலை காரணமாகச் சில நாட்கள் அத்தலைவியைச் சந்திக்க முடியவில்லை. ஒரு நாள் மிகவும் அவளுடைய நினைவைப் பெற்றவனாக முன்னர் அவளைச் சந்தித்த இடத்திற்குச் சென்றான். ஆனால், அவளை அங்குக் காண முடியவில்லை. அவனுடைய வருத்தம் மிகவும் அதிகமாகிவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் வருந்தினான். அவளுடைய ஊர் முதலியன அவனுக்குத் தெரியுமேனும், ஊரினுட்சென்று அவளைப்பற்றி விசாரிப்பது இயலாத காரியம். எனவே, தன் துயரத்தைப் பிறரிடம் கூறி வருத்தத்தை ஆற்றிக்கொள்ளக்கூட முடியாத நிலைமையில் பல முறை வருவதும் போவதுமாய் இருந்தான்.

இந்நிலையில் தலைவியின் பாடு மிகவும் திண்டாட்டமாகிவிட்டது. அவனாவது ஆண் மகன் என்ற முறையில் பல இடங்கட்குச் செல்வதாலும் பலருடன் பழகுவதனாலும் தன் துயரை மறக்கக்

கூடிய நிலையில் இருந்தான். ஆனால், அவளோ, பெண்! அவளுடைய வருத்தத்தை வெளியிடக் கூடமுடியவில்லை! என் செய்வாள் பாவம்! அவளுக்கு உயிர்த்தோழி ஒருத்தி உண்டு. அவளிடமாவது கூறித் தன் மன வருத்தத்தை ஆற்றிக் கொள்ளலாம் என்று நினைத்தாள். ஆனால், பல முறை நினைந்தும் துணிவு பிறக்கவில்லை. ஒருவரிடமும் கூறாமல் தன் துயரத்தைத் தானே பொறுத்துக் கொண்டு வருகின்றாள். உடல் இளைக்கத் தொடங்கிற்று, உணவு சரியாகச் செல்லவில்லை; பாலும் கசக்கும் நிலைமை அடைந்துவிட்டாள். படுக்கை நோவத் தொடங்கிவிட்டது. இரவில் அவள் நல்ல உறக்கம் பெற்றுப் பல நாட்களாகிவிட்டன. உடல் இளைப்பைக் கண்ட அவளுடைய தாய், மகளைத் தெய்வம் தீண்டிவிட்டதாகவே முடிவு செய்துவிட்டாள். தெய்வக் குற்றத்தைப் போக்கும் முறையில் வேலனை வைத்து வெறியாட முடிவு செய்துவிட்டாள்.

தலைவியின் பாடு மிகவும் இடைஞ்சலாகிவிட்டது. வேலன் வெறியாடிய பிறகும் அவளுக்கு உடல் தேறவில்லை என்றால், தாய் முதலானவர்கள் அவள் மேல் ஐயங்கொள்ளத் தலைப்பட்டுவிடுவார்கள். எனவே, தீவிரமாக இதுபற்றி ஆய்ந்து இறுதியாகத் தோழியிடம் கூற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள். இந்நிலையில் தோழியே ஐயப்பட்ட நிலையிலிருந்து உறுதிப்பாட்டுக்கு வந்துவிட்டாள். தான் உறுதியாக நம்புகிற ஒன்றை எவ்வாறு தலைவியிடம் எடுத்துக் கூறுவது என்பதுதான் அவளுடைய தொல்லை. வேறு வழி இல்லாமல் குறிப்பாக ஒரு நாள் பேசத் தொடங்குகிறாள். இத்தகைய ஒரு

வாய்ப்பை எதிர் பார்த்திருந்த தலைவிக்கு இது மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டது. எனவே, தோழியிடம் தன் தலைவனைப் பற்றிக் கூறிவிட்டாள். மேலும், அவனை விரைவில் அடையாவிடில், தன் பாடு மிகவும் திண்டாட்டமாகிவிடும் என்பதையும் அறிவித்தாள். தோழி அவளை அஞ்ச வேண்டா என்றும், விரைவில் அத்தலைவனையே மணந்து கொள்ளுமாறு செய்வதாகவும் உறுதி மொழி கூறினாள்.

இவ்வாறு தோழிக்கும் தலைவிக்கும் உரையாடல் நடைபெற்ற இரண்டொரு நாட்கள் கழிந்த பின் ஒரு நாள் தோழி தலைவனைக் கண்டாள். இவள்தான் தன் தலைவியின் உற்ற தோழி என்பதை அறிந்த தலைவன், தோழியிடம் பேசத் தொடங்கினான். ஆனால், தோழி சிறிதும் விட்டுக் கொடாமற் பேசினாள்; தலைவி படும் வருத்தத்தைச் சிறிதும் வெளிக்காட்டாமலும், பிடி கொடாமலும் பேசினாள். தலைவன் பாடு போதும் போதும் என்றாகி விட்டது. இறுதியாக அவன் தன் வருத்தம் முழுவதையும் வெளியிட்டான். அதிலும் பயன் இல்லாமற்போய்விடவே, தலைவன் தான் மடல் ஏறப் போவதாகவே கூறினான்.

மடல் ஏறுதல் என்பது அக்காலத்து வழக்கம். ஒரு தலைவன் தன்னால் விரும்பப்பட்ட தலைவியை மணந்துகொள்ள முயல்வான். ஆனால், சுற்றத்தார், தோழி முதலிய யாராலாவது தடை ஏற்படுமாயின், தன் தலைவியினிடம் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை வெளியிட மடல் ஏறுவதும் உண்டு. இலக்கியத்தில் காணப்பெறும் இம்மடல் ஏறும்

வழக்கம வாழக்கையில எவ்வளவு தூரம கடைப்பிடிக்கபபட்டது எனபதைத அறிதறகில்லை. இலக்கிய இலக்கணஙகளிற்கணடபடி மடல் ஏறுதல் என்பது வியப்பைத் தரககூடியதாம. பனை மரததின கருக்கினுல் செயயப்பெற்ற குதிரை ஒனறினமேல் தலைவன ஏறிக்கொளவான. தலைவியினுடைய உருவம தீட்டப்பெறற ஓர் ஓவியம அவனது கையில் இருககும. தலைவியினுடைய ஊரில சென்று அவளுடைய பெற்ருேரும சுறறததாரும இருக்கும இடத்தின் எதிரே செல்வான, அவர்கள பார்ததுக் கொணடிருக்கும பொழுதே அவவூரில் உள்ள சிறு பிளளைகளை விட்டு அக்குதிரையை இழுக்கச செயவான. பனங்கருககினுல் செயயபபெறற குதிரையாதலின, அது தலைவனுடைய தொடையைக கிழிககும. அவனுடைய தொடையிலிருந்து உதிரம பெருகும. இககொடுமையைக் காணச சகியாத சுறறத்தார் அத்தலைவியினுடைய பெறறோரைக கேட்டு அப்பெண்ணை இத்தலைவனுக்கே மணம முடிக்க ஏற்பாடு செயவர். தலைவன தலைவியினுடைய படத்தை எழுதிககொணடுதான அககுதிரையில் ஏறவேணடும எனற இந்தக் கட்டுபபாடு இலக்கியத்தில மிக அழகான சில பாடல்கள தோனறவும காரணமாயிற்று.

திருச்சிற்றம்பலக் கோவையார் என்பது 'மாணிக்கவாசகர்' என்று கூறப்பெறும் திருவாதவூர் அடிகளால் அருளிச செயயப்பெறறது. திருவாசகத்தை அருளிய அபபெருமானே இவவழகிய நூலையும் இயற்றியுளளார். கோவை எனபது ஒரு தலைவன தலைவியைக கண்டு காதலித்து அவளுடன களவு மணத்தில் ஈடுபட்டுப பின்னர்

அவனையே மணந்து வாழ்வதைப் பற்றிய பாடுவது. இந்த நிகழ்ச்சியை நானூறு பிரிவுகளாக வகுத்துக் கொண்டு பாடுவதே கோவை எனப்படும். தலைவன் தலைவியைக் காண்பது, 'இவள் தெய்வ மகளோ!' என்று ஐயங்கொள்வது போன்ற ஒவ்வொரு நிலைக்கும் ஒன்று முதல் பல பாடல்கள் பாடப்பெறும். பெரும்பாலும் இறைவனையோ, ஒரு பெரிய அரசனையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டே பாடப் பெறும் இந்நூல். மணிவாசகப் பெருமான் பாடிய கோவையாரின் பாட்டுடைத் தலைவன் சிதம்பரத்தின்கண் ஆனந்தத் தாண்டவம் புரியும் பொன்னம்பலவனே. அந்தச் சிறந்த நூலில் மடல் ஏறுதல் பற்றி வரும் பகுதி மிக அழகானது. தலைவன், 'நான் மடல் ஏறப்போகிறேன்,' என்று கூறுகிறான். தோழி, 'அது முடியாது,' என்கிறாள். தலைவன், 'ஏன் முடியாது?' என்று கேட்கிறான். அதற்குத் தோழி அழகாக விடை கூறுகிறாள். 'தலைவா, மடல் ஏற வேண்டுமானால், தலைவியினுடைய படத்தை எழுத வேண்டும் அன்றோ? எம் தலைவியின் படத்தைத்தான் எழுத முடியாதே! அவள் குரலுக்குப் பதிலாய் ஒரு யாழை எழுதும், அவள் பல் வரிசைக்குப் பதிலாக முத்துக்களை எழுதும்; கூந்தலுக்குப் பதிலாக மேகக் கூட்டத்தைப் பூவுடன் எழுதும்; அவள் உதடுகட்குப் பதிலாக ஒரு கொவ்வைக் கனியை எழுதும், இவை அனைத்தையும் தாங்கிக்கொண்டிருக்கும் ஒரு பூங்கொம்பு இருக்குமாயின், அதனைக் கொண்டு வாரும் மடல் ஏறுவதற்கு' என்று கூறுகிறாள் தோழி.

"யாழும் எழுதி எழில்முத்து
எழுதி இருளில் மென்பூச்-

சூழும் எழுதிஓர் தொண்டையும்
தீட்டிஎன் தொல்பிறவி
ஏழும் எழுதா வகைசிதைத்
தோன்புலி யூரனையாம்
போழும் எழுதிறுஓா கொம்பர்உண்
டேல்கொண்டு போதுகவே!”

(திருக்கோவையார், 79)

திருமங்கை ஆழ்வார் ‘சிறிய திருமடல்’ என்றும் ‘பெரிய திருமடல்’ என்றும் இம்மடலேறுதலை இரண்டு பாடல்களாக அருளிச்செய்துள்ளார். அவ்வழகிய பாடலிலும் ஆழ்வார்,

“பேர்ஆயிரமும் பிதற்றிப் பெருந்தெருவே
ஊரார் இகழினும் ஊராது ஒழியேன்நான்
வாரார்பூம் பெண்ணை மடல்.”

(சிறிய திருமடல், 78—80)

என்று அருளுவது காண்க.

நாம் கூறி வந்த தலைவனும் தோழியைக் கண்டு, தான் மடல் ஏறித்தான் தலைவியை அடைய வேண்டுமோ என்று கேட்கிறான். ‘மடல் ஏறி அதனால் பெறுகின்ற பழியுடன் தலைவியை அடைய வேண்டுமா? இதைவிடச் சாவு வருமேயாயின், அது எவ்வளவு சிறப்புடையதாக இருக்கும்!’’ என்று வருந்திக் கூறுகிறான் அத்தலைவன்.

“பனை மடலாலே செய்யப்பெற்ற குதிரையில் ஏறி, எருக்கம்பூ, பூளைப்பூ முதலியவற்றைச் சூடி, இடம்* அகன்ற பல ஊர்களிலும் நாட்டிலும் திரிந்து, அழகிய தலைவியின் நலங்களை எல்லாம் எடுத்துக் கூறிச் செல்லும் மடலேறும் தொழிலைச் செய்யாமல்,

என மனத்தைக் கட்டுப்படுத்தி, அதுவே நோயாக இருந்து இறந்து போவேனாயினை, அது எவ்வளவு நன்மையாக இருக்கும்! அகன்ற பெரிய ஆகாயத் திடத்தே இராகு விழுங்கிய பசிய கதிர்களை உடைய நிலவைப்போலக் கூந்தலுடன் விளங்கும் நெற்றியை யுடைய தலைவி யான் நினைக்குந்தோறும் என் எதிரே வந்து வினவி என்னை மெலியச் செய்கிறாள். அதனால் எனக்குக் காம நோய் மிகுதியாகி இருக்கிறது!” என்ற கருத்துடன் பாடல் அமைகிறது.

“மடல்மா ஊர்ந்து மாலை சூடிக்
கண்அகன் வைப்பின் நாடும் ஊரும்
ஒண்ணுதல் அரிவை நலம்பா ராட்டிப்
பண்ணல் மேவலம் ஆகி அரிதுற்று
அதுபிணி ஆக விளியலம் கொல்லோ?
அகல்இரு விசும்பின் அரவுக்குறை படுத்த
பசுங்கதிர் மதியத்து அகல்நிலாப் போல
அளகம் சேர்ந்த சிறுநுதல்
கழறும் மெலிக்கும் நோய்ஆ கின்றே!”

(நற்றிணை, 377)

[மடல்மா—பனங்கருக்கால் செய்த குதிரை; கண் அகன் வைப்பு—இடம் அகன்ற பூமி; ஒண்ணுதல்—ஒளி பொருந்திய நெற்றி, அரிவை—தலைவி; பண்ணல் மேவலம்—அலங்கரித்துக் கூறலை விரும்பேம்; விளியலங்கொல்லோ—சாக மாட்டேமா; அளகம்—கூந்தல். கழறும்—இடித்துக் கூறுகிறான்.]

இவ்வழகிய பாடலின் இறுதி நான்கு அடிகளிலும் தலைவியின் அழகைக் கூறுகிறான் தலைவன். ஆனால், அவ்வாறு கூறுமுகமாகவே அவளிடத்தில் தான் கொண்டுள்ள தணியாத காதலையும் வெளியிட்டுவிடுகிறான். ‘மடலேறித்தான் நான் இறக்க

வேண்டுமா? அது இல்லாமல் இந்தப் பாழ உயிர் போகவும மறுககிறதே'' என்று கூறுகையில் தலைவி இல்லாவிட்டால் தான இறந்து போவது உறுதி எனனும கருத்தையும பெற வைத்தான. மேலும், அவ்வாறு தான உயிர் விட நேர்ந்தால் அந்தப பழி தலைவியைததான சேரும எனபதையும கூறிவிட்டான்.

> ''காதல், காதல், காதல,
> காதல் போயிற்,
> சாதல், சாதல், சாதல்''

என்று கூறிய கவியரசர் பாரதியாரின மூதாதை போலும இத்தலைவன!

## பாலைத் திணை

பாலைத் திணை நிகழுவதாகக் கூறப்படும் இடம பாலை நிலம. காலம நல்ல கோடைககாலம, பொழுது நண்பகல்.

தலைவன தலைவியை விட்டுப பிரிவதும் அது பற்றிய பிற செயதிகளும பேசபபடும இத்திணைய பாடல்களில்.

தலைவியை விட்டுப் பிரிந்து சென்ற தலைவனுடைய மன நிலையை விளக்கும பாடல் இது:

### பொய்கையில் ஓடுமீன் வழி

ஒரு நாள தலைவன குளிப்பதற்காகக் குளத்திற்குச் சென்றான. நல்ல தாமரைத் தடாகத்தில் தண்ணீர் குளிர்ந்தும தெளிந்தும இருக்கிறது. அதன் அழகில் ஈடுபட்ட தலைவன, குளததுள இறங்கிக குளியாமல் கரையில் அமர்ந்து விட்டான. அவன மனத்துள் ஒரு பெரிய போராட்டம நிகழ

கிறது. நெடு நாளாகவே குடும்பத்தில் ஒரு குறை இருந்து வருகிறது. அக்குறையை எவரும் எடுத்துக் காட்டவில்லை. இன்னும் பார்க்கப்போனால் அது இல்லாததுபோலவே நடந்துகொள்கின்றனர். அக்குறை பொருட்குறைதான். வேண்டுமான அளவு பொருள் வசதி இல்லை. தலைவனுக்குப் பெரிய பெரிய குறிக்கோள்கள் உள்ளன. இவற்றை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமாயின், நிறையப் பொருள் வேண்டும். ஆனால், வீட்டிலே இன்றியமையாதவற்றை வாங்கக்கூடப் பொருள் முட்டுப்படுகிறது. தலைவனுக்கு உள்ளூறப் பெரிய கவலை தான். 'என்ன செய்தால் இக்கவலை தீரும்!' என்று ஆராய்ந்தான். முடிவாக, 'வெளியூர் சென்று பொருளீட்ட வேண்டும்,' என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

அவன் ஏதோ செயற்கரிய காரியத்தைச் செய்யத் துணிந்து விட்டவன் போல மகிழ்ச்சி அடைந்தான். ஆனால், இம்மகிழ்ச்சி மிகச் சிறிது நேரமே தங்கியிருந்தது. ஏன் எனில், 'பொருள் தேடுதல்' என்றாலே வெளி நாடு செல்ல வேண்டும் என்பதுதானே பொருள்? வெளி நாடு செல்லவேண்டும் என்றால் அது எத்துணைப் பெரிய காரியம் அந்த நாட்களில்? வெளி நாட்டில் வாழும் அந்த நாட்களில் என்ன தனிமை! நினைத்த பொழுதே நெஞ்சு நடுங்கும் தனிமை! ஏன்? அங்கு மக்களே இல்லையா? இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனாலும், தான் பல காலம் பழகிய தன் சுற்றத்தாரையும் உயிரினும் இனிய காதலியையும் விட்டுப் பிரிந்து வாழ வேண்டிய அந்தத் தனிமை! தலைவியை விட்டுப் பிரிவதை நினைத்தாலே போதும், பொருள் சேகரிப்பதில் உள்ள மகிழ்ச்சி எல்லாம் காற்றாய்ப் பறந்துவிடும்.

ஆனால், இப்பொழுது தலைவன் வீட்டிலேதான் இருக்கிறான். தலைவியின் இன்பத்தில் ஈடுபட்டிருக்கையில் ஓரோவழிப் பொருள் இல்லாத கவலை வந்து குறுக்கிடுகிறது.

இவ்வாறு பலவிதமான எண்ணங்கட்கு இடையில் அவதிப்பட்ட தலைவன், அன்று குளக்கரையில் அமர்ந்து தன் எண்ணங்களை ஓட்டிவிட்டிருக்கிறான். 'தலைவி, பொருள் தேடப் பிரிவு' என்ற இரண்டின் இடையே நடைபெற்ற போராட்டத்தில் ஒருவிதமாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டான் நேற்றைப் பொழுதில். எவ்வாறாயினும் கடமையை நிறைவேற்றப் போவது தான் ஆண் மகனுக்கு! தனக்கே முறை என்பதை உணர்ந்தான். தலைவியின் மாட்டுக் காதலில் திளைக்கும் அவனுடைய நெஞ்சங்கூட அவன் செய்யத் துணிந்ததே முறையானது என்று கூறிற்று. இனித் தடை என்ன? எவ்வாறாயினும் பொருள் தேடப் போய்விடலாம் என்ற முடிவுடனே தான் நேற்றைப்பொழுது முழுவதும், ஏன்—இன்று குளக்கரைக்கு வரும் அளவும் தலைவன் உறுதி பூண்டிருந்தான். ஆனால், இப்பொழுது குளத்தினுள் பார்த்துக்கொண்டிருக்கையில்...! ஆ! ஈதென்ன புதுமை! அவன் இதுவரை காணாத ஒன்றைக் கண்டுவிட்டானா? ஆம்! அவனுடைய உறுதி எல்லாம் குலைந்துவிட்டது போன்ற ஒரு முகக் குறிப்பு இதோ வெளிப்படுகிறது. தலைவன் இதோ வாய்விட்டுப் பேசுகிறான்:

'.......................................பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியில் கெடுவ.

(நற்றிணை, 16)

[பொருளானது, வாடாத தாமரை போன்ற மலர்களை உடைய குளத்தின் நடுவே மீன்கள் ஓடும பொழுது உண்டாகின்ற வழியைப் போல அழியத் தக்கது]

அதாவது, மீன்கள் ஓடும பொழுது வழி உண்டாவது போலத தோன்றி, அமமீனகள அபபாற் சென்ற மறு விநாடியே வழி என்ற ஒன்று இல்லாது போயவிடுகிறதன்றோ? அது போலப பொருள என்பதும பாடு பட்டுத தேடும பொழுது நிறையச் சேர்வது போலத் தோன்றிப பிறகு தான் இருந்த இடமும இல்லையாக மறைந்துவிடும ஒன்றாகும். இதனை வாய்விட்டுத் தலைவன கூறிககொண்டிருக்கும பொழுதே யாரோ ஒரு புலவர் இநதப் பொருளின் நிலையாமை பற்றிக் கூறியது அவன நினைவுக்கு வருகிறது. அவர் என்றோ ஒரு நாள பாடினர்:

'வீழுநர்க்கு இறைச்சியாய் விரல்கவர்பு இசைக்குங்கோல்
ஏழுமதம இசைகெட இடைநின்ற நரம்புஅறூஉம
யாழினும் நிலைஇல்லாப் பொருள்...... ........'

(பாலைக் கலி, 8)

[விரும்பிக கேட்பார்க்கு இன்பம் தருவதாய், விரலாலே வாசிககப்படுகிற நரமபு ஏழும், தாம் இருந்தும் பயன்படாதபடி வாசிககும் வில்லில அகப்பட்டு இடை நின்ற நரம்பு அறும்படியான யாழைக் காட்டிலும் நிலையில்லாத பொருள்]

மேலும அந்தப புலவர் பொருளின நிலையாமை பற்றித தொடர்ந்து பாடியதைத் தலைவன் இப பொழுது நினைவிற்குக் கொண்டு வந்தான்:

'மரீஇத்தான் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது
பிரியுஙகால் பிறர்எள்ளப் பீடுஇன்றிப் புறம்மாறும்
திருவினும நிலையில்லாப் பொருள்...........'

(பாலைக் கலி, 7)

[திருமகள், தான் விரும்பி மனத்தால் ஏறுக கொண்டவாகளை, தான் வந்து சேரும் பொழுது இருந்த நிலை போல இல்லாமல் பிரிந்து செல்லும் பொழுது பிறர் கண்டு கேவலமாய்ப் பேசும் அளவுக் குத் தாழ்த்திவிட்டுச் செல்லும தன்மை போல நிலை யில்லாத பொருள.]

அதாவது, புதுப் பணக்காரன ஆனவன் மீட்டும ஏழையானால், அவனது பழைய நிலை தானே என்று கருதாமல், உலகத்தார் அவனை மிகுதியும எள்ளி நகையாடுகிறார்களாம. முன்னர் ஏழையாய இருந்த பொழுது இருந்த நிலைகூட இப்பொழுது (இடையில பணக்காரனாகி மறுபடியும ஏழையான இபபொழுது) இல்லாமல் செயகிற திருமகள என்றபடி.

அந்தப் புலவர் பாடிய இந்த மூன்று அடிகளும் தலைவன நினைவிற்கு வந்தன. உடனே தான் கொணடிருந்த முடிவு ஆட்டங கண்டுவிட்டதைத் தலைவன உணர்ந்தான; எவவாறாயினும பொருள் தேடப் போக வேணடும என்ற முடிவு இபபொழுது தனபால் இல்லை எனபதை உணரத் தலைப்பட்டான. தான இது வரை கொணடிருந்த முடிவு நெகிழ்ந்த வுடன தலைவனுக்கு மீட்டும 'எது பெரிது?' என்ற வினாத் தோன்றத் தொடங்கிவிட்டது. தலைவியுடன கூடி இருப்பதைப் பெரிதென மதித்தால், பொருள தான இருக்கும இடந்தேடி வரப்போவதில்லை. ஆனால், கடமையை நிறைவேற்றப் பொருள தேவை என்று உணர்ந்து அதனைத் தேடப புறப்பட்டால், தலைவியுடன சேர்ந்து வாழ இயலப போவதில்லை. இதனிடையில் அவனுடைய நெஞ்சம மாறி மாறி அவனுக்கு அறவுரை கூறத் தொடஙகிவிட்டது.

தலைவி எதிரே இருக்கின்றவரை அவளுடைய அழகில் தானும் ஈடுபட்டு தன்னையும் ஈடுபடுத்திய நெஞ்சம், 'இவ்வளவு அழகுடையவளை வருந்த விட்டுப் போகலாமா? இது முறையா?' என்று எடுத்துக் கூறிற்று. ஆனால், அவளைப் பிரிந்து அப்பால் சென்றவுடன் உலகத்தார்க்கு அவன் ஆற்ற வேண்டிய கடமைகளை நினைவூட்டி, 'இனியும் சும்மா இருக்கலாமா? உடனே பொருள் தேடப் புறப்படு,' என்று இடித்துக் கூறத் தொடங்கிவிட்டது. எனவே, தன் நெஞ்சைப் பார்த்து அந்தக் குளக்கரையில் இருந்தபடியே தலைவன் கூறத் தொடங்கி விட்டான் :

'நெஞ்சே, தலைவி இன்பம் பெரிதென மதித்து இவண் இருந்துவிட்டால், பொருள் நம்மை வந்து அடையாது. பொருள் தேடும் கடமை இன்றியமையாதது என்று நினைந்து சென்று விட்டால், தலைவியினிடத்துப் பெறும் இன்பம் கைகூடாது. ஆனால், இரண்டினும் இன்பம் அடையக் கூடும் நீ. இங்கிருந்தால் தலைவியிடத்தே இன்பம் பெறுவாய். இவளை விட்டுப் பொருள் தேடச் சென்றாலோ, அவ் 'விடத்தும் இன்பம் பெறுவாய். ஆனால், என்னைப் பொறுத்தவரை இவளை விட்டு நீங்கி விட்டால் இன்பம் பெறுவது இயலாத காரியம். அப்படித்தான் இவளை விடுத் தேடப் போகிற பொருள் இவளைப் போல நிலைத்த இன்பத்தைத் தரக்கூடியதா என்ன! அதுவும் இல்லை. வாடாத பூக்கள் நிறைந்த குளத்தினிடத்து மீன்கள் ஓடும்பொழுது தோன்றும் வழியைப் போலத் தோன்றி, உடன் மறைந்துபோம் இயல்புடைய இப்பொருளுக்காக, நிலைபெற்ற இவள் இன்பத்தைத் துறக்க என்னால் இயலாது நீ வேண்டுமானால் அப்பொருளைத் தேடிச் செல்க.

யான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். பெரிய கடலால் சூழப்பெற்ற இவ்வுலகை மரக்காலாகக் கொண்டு ஏழுமுறை அளக்கக் கூடிய அளவு பெரும் பொருளைப் பெறுவதாயினும், நான் தலைவியை விட்டு வரமாட்டேன். கனமான குழையைக் காதுகளில் அணிந்த அவள் குளிர்ச்சி பொருந்திய செவ்வரி பரந்த தன் கண்களால் அடிக்கடி என்னைப் பார்க்கிறாள். அப்பார்வையால் தாக்குண்ட நான் இனி வரமாட்டேன்! இனி அந்தப் பொருள் எங்கேயாயினும் கெட்டுப் போகட்டும்! அப்பொருளை விரும்பிச் செல்வார் மாட்டு அது தங்கி வாழட்டும்!''

இந்த முறையில் பொருளபடத் தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறுகிறான்:

'புணரின் புணராது பொருளே; பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே; ஆயிடைச்
சேர்பினும் செல்லாய் ஆயினும் நல்லதற்கு
உரியை வாழிஎன் நெஞ்சே! பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியில் கெடுவ; யானே
விழுநீர் வியல்அகம் தூணி ஆக
எழுமாண் அளக்கும்விழுநிதி பெறினும்
கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்துஇனிது நோக்கமொடு செகுத்தனன்.
எனைய ஆகுக! வாழிய பொருளே!

(நற்றிணை, 16)

[புணரின்--தலைவியிடம் தங்கினால்; புணராது-சேராது, ஆயிடைச் சேர்பினும்-பொருள் தேடும் அவ்விடம் சேர்ந்தாலும், நல்லதற்கு உரியை-உனக்கு இன்பம் கிட்டும், விழுநீர்-கடல்; வியல் அகம்-அகன்ற உலகம்; தூணி-மரக்கால் என்னும் இரண்டு படி

கொண்ட ஓர் அளவு; சேயரி-சிவந்த வரிகள்; அமர்ந்தினிது நோக்கம்-இனிய பார்வை; செருந்தனன்-இவள் பார்வையால் என் ஆற்றல் அழிந்தேன்.]

இவள் இன்பத்தில் வெறுப்படையாமல் முதுமைப் பருவம் வரையில் இங்குத் தங்கிவிட்டால் பிறகு பொருள் தேடல் முடியாது என்ற கருத்தைத் தலைவன், 'புணரின் புணராது பொருளே,' என்றும், பிரிந்து சென்றுவிட்டால் இவள் இறந்துவிடுவாளாகலின், இனி வந்த பொழுது இவள் இன்பம் கிடைக்காது என்ற கருத்தைப் 'பொருள் வயின் பிரியின் புணராது புணர்வே,' என்றும் கூறி, அந்நெஞ்சுக்குக் குறிப்பாக 'நீயும் இங்குத் தங்க வேண்டுவதே முறை' என்று கூறுமுகமாக, 'நல்லதற்கு உரியை' என்று கூறின அழகு மீட்டும் ஒரு முறையன்றிப் பன்முறை படித்து மகிழத் தக்கதன்றோ!

இதே கருத்துப்படக் 'கடியலூர் உருத்திரங் கண்ணனார்' என்ற புலவர், 'பட்டினப்பாலை' என்றதொரு பெரிய பாடலைப் பாடியுள்ளார். கரிகாற் பெருவளத்தானுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமையைப் பலபடியாக எடுத்துக் கூறி, அப்புலவர் பெருமான், 'இத்தகைய ஒப்பற்ற பட்டினத்தையே எனக்குப் பரிசிலாக அக்கரிகாலன் தந்தாற் கூட யான் என் காதலியை விட்டு வரமாட்டேன்!' என்று கூறுகிறார், 301 அடிகளையுடைய அப்பாட்டில். அதில் மேற்சொன்ன கருத்து இதுதான்:

'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார்இருங் கூந்தல் வயங்கிழை ஒழிய...
வாரேன் வாழிய நெஞ்சே!'

தமிழன் கொண்ட காதற்சிறப்பை அறிய இவை சிறந்த எடுத்துக்காட்டுக்கள் அல்லவா?

* * * *

கடமையை நிறைவேற்றச் செல்லும் தலைவனுடைய மனப் போராட்டத்தை விளக்கும் பாடல் இது:

### தேய்புரிப் பழங்கயிறு

இந்தப் பரந்த உலகத்தில் என்று மனிதன் தோன்றினானோ, அன்றே அவனைத் தொடர்ந்து துன்பமும் தோன்றியது போலும்! மனிதன் ஆதியில் தனிமையாய்க் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்திருப்பான். குடி இருக்கக் குச்சு வேண்டும் என்று கவலைப்படாமலும், அடுத்தவேளை உணவுக்கு என்ன செய்வது என்பது பற்றி அவன் கவலை கொள்ளாமலும் வாழ்ந்த காலம் அது, பசியெடுத்த பொழுது ஆயுதங்களுடன் வெளியே சென்று, காட்டில் நிறைந்திருந்த விலங்குகளில் வேண்டுவனவற்றை வேட்டையாடி உண்டுவிட்டு, அடுத்த வேளை உணவுக்கு அதில் சிறிது மீத்து வைத்துக்கொள்ளவுங் கூடக் கவலைப்படாமல் இருந்த காலம்!

அத்தகைய நிலையில் அவனுக்குக் கடமை என்று கூறத் தக்கது ஒன்றும் இருந்ததில்லை. மனிதன் தன்னொத்த பிற மனிதருடன் கூடி வாழத் தொடங்கிய பின்னரே அவனுக்கெனச் சில கடமைகள் தோன்றுகின்றன. இதுவரைத் தன் உரிமையை அன்றிப் பிறரைப் பற்றிக் கவலை கொள்ளாது இருந்த அவனுக்கு இப்பொழுது புதிய அனுபவம் தோன்றுகிறது. சமுதாயமாகக் கூடி வாழத் தொடங்கியவுடன் தன் உரிமை, பிறர் உரிமை என்ற

இரண்டும் மோதத் தொடங்குகின்றன. தன் உரிமையில் சிலவற்றை விட்டுக்கொடுத்தால் ஒழிய நன்முறையில் பிறருடன் சேர்ந்து வாழ முடியாது என்பதை மனிதன் உணரத் தொடங்குகிறான்.

சமுதாய வாழ்வில் தோன்றும் இந்தச் சிக்கல் ஒரு புறம் இருக்கக் குடும்பம் என்று அவன் ஏற்படுத்திக்கொண்டு வாழும் வாழ்விலும் புதிய பல சிக்கல்கள் தோன்றுகின்றன. தலைவியினிடம் பெருங்காதல் கொண்டுதான் தலைவன் குடும்பம் தொடங்குகிறான்; அவளிடம் நிலைத்த இன்பம் காண ஒரே வழி குடும்பம் வைத்தலே என்று கருதித் தான் அதில் ஈடுபடுகிறான். ஆனால், குடும்பம் தொடங்கியவுடன் புதிய பொறுப்புக்கள் அவனை வந்து அடைகின்றன. குடும்பம் என்பது தானும் அவளும் சேவலும் இன்ப வேட்டை ஆட ஏற்பட்டது அன்று என்ற உண்மை அவனுக்குப் புலனாகிறது. அக்குடும்பம் காரணமாகத் தன்னை வந்தடைந்த பலரையும் காக்கும் பொறுப்பும் அவனை வந்தடைகிறது. தமது வறுமை காரணமாகவும், இயலாமைகாரணமாகவும் பல திறப்பட்டவர் அவனை வந்தடைகின்றனர்.

அத்தனை பேரையும் உணவு கொடுத்துக் காக்க வேண்டிய பொறுப்பு அவனுடையதாகிறது. இன்மை காரணமாக வந்தவருக்கு அவர் வேண்டும் பொருளைத் தருதலும், இயலாமை காரணமாக வந்தவருக்கு அவர் குறை முடித்துத் தருதலும் அவன் செய்ய வேண்டிய கடமைகளாகின்றன. இக்கடமைகளை அவன் செய்ய வேண்டுமாயின், அவனது காலம் முதலாவது வீணாகும்; இரண்

டாவது அவனுடைய பொருள் வீணாகும்; மூன்றாவதாகவும் மிக முக்கியமாகவும் அவன் மனைவியைப் பிரியவும் நேரிடும். எந்த ஒருத்தியைப் பிரியாமல் இருக்க ஒரே வழி குடும்பம் என்று நினைத்தானோ, அந்தக் குடும்பமே இன்று அவன் அவளை விட்டு நீக்கக் காரணமாய்விட்டது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு தலைவன் அகப்பட்டுக் கொள்கிறான். குடும்பம் வைத்தமையின் அப் பொறுப்புக்களைச் சரிவர நடத்தப் பொருள் தேடச் செல்ல வேண்டியுள்ளது. ஆனால், தலைவியின் மாட்டுக் கொண்ட அன்பு அவன் கடமையை உதறி விடத் தூண்டுகிறது. கடமைக்கும் அன்புக்கும் இடையே ஒரு பெரும்போராட்டம் தொடங்கிவிடுகிறது. 'கடமையே பெரிதாதலின், ஆண் மகனாகிய நீ அதற்கு இடையூறாக நிற்றல் கூடாது,' என 'அறிவு' அவனை இடித்துக் கூறுகிறது. ஆனால் அன்பால் நிறைந்த நெஞ்சம், 'கடமையாவது கத்தரிக்காயாவது! இரு!' என்று கூறுகிறது.

அறிவும் அன்பும் பெரும்போராட்டம் நிகழ்த்துகின்றன. ஆனால், இப்போராட்டம் நடைபெறுகையில் தலைவன் ஊரில் தலைவியுடன் வாழவில்லை. பொருள் தேடுதல் நிமித்தமாக வெளி நாடு சென்றுள்ளான். ஆனால், போன காரியம் இன்னும் முற்றிலும் முடியவில்லை.

நெஞ்சு பேசுகிறது 'தலைவியை விட்டுப் பிரிந்து எத்தனை நாட்களாகின்றன! உண்மையான அன்பென்பது இதுதானோ! அவளை நினைத்தாலும் அவள் உருவம் மனக்கண் முன் வந்து நிற்கிறதே!'

அறிவு:—என்ன, நெஞ்சே, இடங்கொடுத்தவுடன் ஒரே அடியாக உன் கதையைத் தொடங்கிவிட்டாயே! கடமை என்ற சொல்லை நீ எங்காவது கேள்விப்பட்டதுண்டா? ஆறு அறிவு படைத்த மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள வேறுபாடு யாது என்பதாவது உனக்குத் தெரியுமா?

நெஞ்சு:—அறிவே, என்ன? கடமை, மனிதன், மிருகம் என்று ஏதேதோ கதைக்கின்றாயே! தலைவியைப் பற்றி நீ நினைத்துப் பார்த்ததுண்டா? கடமையைப் பற்றிய பெரிய சொற்பொழிவு செய்ய வந்துவிட்டாயே! தலைவிக்குச் செய்ய வேண்டிய கடமை பற்றி உனக்கு ஏதாவது நினைவுக்கு வருகிறதா?

அறிவு:—நன்றாக நினைவுக்கு வருகிறது! தலைவி மட்டும் எனக்குச் சொந்தம் இல்லையா? அவளுக்கு ஓரளவு துன்பம் தந்துவிட்டது உண்மைதான். ஆனால், அவள் வருத்தப்படாமல் இருக்கவேண்டும் என்று அதற்காகக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் மற்றக் கடமைகள் என்ன ஆகும்?

நெஞ்சு:—என்ன அப்படி மற்றக் கடமைகளை மறந்துவிட்டது? வீட்டுக்கு முக்கியம் தலைவிதானே! அறிவே! அவள் இல்லாத பொழுது இல்லறம் என்பது இல்லையே! இப்பொழுது நீ பேசும் கடமைகள் எங்கிருந்து வந்தன? ஆகவே, உன் இல்லறம் நடைபெறுவதற்கு மூல காரணமான தலைவியை மறந்துவிட்டுக் கடமைகள் என்று கூறிக் கொண்டு திரிவதில் பயன் இல்லை என்பது உனக்குத் தெரியுமா?

அறிவு:— ஆனால், தலைவியை இன்பமாக வைத்துக் கொள்வதற்கு மட்டும் நாம் இல்லறம்

தொடங்கவில்லை. வீடு வைத்தவுடன் எத்தனையோ புதிய பொறுப்புக்கள் தோன்றுகின்றன. நீ கூறும் அந்தத் தலைவி மகிழ்ச்சியாக எப்பொழுது இருக்க முடியும்? வீட்டில் விருந்தினர்கள் வந்திருக்கும் பொழுது அடுப்பில் பூனை படுத்துக்கொண்டிருந்தால் தலைவி மகிழ்ச்சியாக இருப்பாளா? இல்லை என்று உதவி வேண்டி நிற்பவர்கள் கடைத் தலையில் நின்று கொண்டிருக்கையில் தலைவி மட்டும் அது பற்றிக் கவலைப்படாமல் உண்டு உடுத்து மகிழ்ச்சியாக இருக்க முடியுமா? நினைத்துப்பார்.

நெஞ்சு:—ஆம்! அவள் இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சியாக இருக்க முடியாது தான். அதற்காக அவள் தலைவனை விட்டுப் பிரிந்து தனியே வாடும்படி விட்டுவிட்டால் மட்டும் மகிழ்ச்சி ஏற்பட்டு விடுமா!

அறிவு:—பைத்தியக்கார நெஞ்சே, எப்பொழுதுமே துயரத்தில் ஆழ்ந்து இருக்கும்படியாகவா விட்டுவிடுகிறோம்? பொருள் தேட இங்கு வந்த நம் தலைவன் மட்டும் தலைவியை விட்டு இங்கேயே இருந்துவிடப்போகிறானா, என்ன! வந்த கடமை முடிந்து வேண்டிய பொருள் கிடைத்தவுடன் ஊருக்குத்தானே புறப்படப் போகிறான்?

நெஞ்சு:—அறிவே, நீயும் உன் தலைவனும் கடமையை முடித்துக்கொண்டு புறப்படும் வரை அருமைத் தலைவி உயிருடன் இருப்பாள் என்பது என்ன உறுதி? ஆ! அவளுடைய கரிய கூந்தல் முதுகில் தாழ்ந்து தொங்கிக் கொண்டிருப்பதை நினைப்பதும் ஓர் இன்பமாகிறது. அவளுடைய அகன்ற அழகிய விழிகள், ஆனை விழுங்கிவிடுவது போன்று

பார்க்கும் அந்தப் பார்வை, இவை இரண்டுடன் அவள் என்னைப் பிணைத்துவிட்டாளே! என் செய்வது?

அறிவு:—நெஞ்சே, ஏது! இவ்வளவு தூரத்திற்கு வந்தும் வந்த காரியத்தை மறந்துவிட்டுத் தலைவியைப் பற்றிய உன் எண்ணங்களைக் கேட்டுக்கொண்டிருந்தால் எனக்குக்கூட அறிவு மழுங்கிவிடும் போல இருக்கிறதே! சிறிது நினைத்துப் பார்; நாம் இவ்வளவு தூரம் வந்து, வந்த காரியத்தை முடிக்காமல் ஊர் திரும்பினால் நம் தலைவனுடைய பெயருக்கே ஓர் இழுக்கு உண்டாகாதா? அவனை அறியாமை உடையவன் என்று ஊரார் இகழமாட்டார்களா? பொறுத்தது பொறுத்தாய், நெஞ்சே, இன்னும் சற்றுப்பொறு! எடுத்த காரியத்தை முடித்துக் கொண்டு போகலாம்.

நெஞ்சு:—இனிப் பொறுக்க முடியாது! உடனே புறப்பட வேண்டும்!

இவ்வாறு தலைவனுடைய நெஞ்சுக்கும் அறிவுக்கும் ஒரு போராட்டம் நிகழ்ந்ததாம். அறிவு, நெஞ்சு என்ற இவை இரண்டின் இடைப்பட்ட தலைவன் பாடு மிகத் திண்டாட்டமாகிவிட்டதாம். அவன் பட்ட பாட்டிற்குக் காட்டும் உவமை மிகமிக அழகானது. இரண்டு வலிமை பொருந்திய ஆண் யானைகள், எதிர் எதிரே நின்று கொண்டு, புரிகள் தேய்ந்து போன பழைய கயிற்றைப் பற்றி இழுக்கின்றனவாம். அந்தக் கயிற்றின் நிலை எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறதாம் அவனுடைய நிலையும். இவ்வளவு அழகிய பாடலைப் பாடியவர் பெயர் கூடத் தெரியவில்லை! எனவே,

பிற்காலத்தார் அவர் பாட்டில் உள்ள இந்த அழகான உவமையைக்கருதி அவருக்கே 'தேய்புரிப பழங்கயிற்றினார்' என்று பெயர்கூட வைத்துவிட்டார்கள்.

"புறம்தாழ்பு இருண்ட கூந்தல் போதின்
நிறம்பெறும ஈர்இதழ் பொலிந்த உண்கண்
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும்.
செய்வினை முடியாது எவ்வம செய்தல்
எய்யா மையொடு இளிவுதலைத் தருமென
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல என்னும். ஆயிடை
ஒளிறுஏந்து மருப்பில் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்என வருந்திய உடம்பே!"

(நற்றிணை, 284)

[புறந்தாழ்பு-முதுகில் விழுந்து; போதின் நிறம பெறும-நெய்தற்பூவின் நிறமுடைய ; உண்கண்-ஆளை விழுங்குவது போன்ற கண்; செல்லல்-வருத்தம; எவ்வம் செய்தல-இகழ்ந்து விட்டுப்போதல; எய்யாமை-அறியாமை; இளிவு-இகழ்ச்சி, உறுதி தூக்கத் தூங்கி-உறுதிப்பாடு செலுத்தலினாலே செல்லாது; நனி-மிகுதி; ஒளிறேந்து மருப்பு-ஒளி படைத்த கொமபு, வீவது கொல்-அழிய வேண்டுமா?]

உண்மையான காதலும கடமை உணர்ச்சியும் ஒருவனுடைய மனத்தில போராட்டம நிகழ்த்துவதைச் சித்திரிக்கிறது இப்பாடல். இவை இரண்டில் எது சரியானது என்ற முடிவுக்குத் தலைவன வர முடியவில்லையாம. ஆகவே, எது சரியென்று கேட்டுக்கேட்டுக் கவலைப்பட்டு அவன் உடமபுகூட

இணைத்துவிடுகிறதாம். இன்றும் நம்மில் பலருக்குக் கவலை உண்டு. கவலை இல்லாதவர்களே இவ்வுலகில் இல்லை. ஆனால், இம்மாதிரியான கவலை உண்டா? அன்புக்கும் கடமைக்கும் போராட்டம் நம் மனத்தில் நிகழ்வதுண்டா? உண்மைக் காதல், உண்மைக் கடமை என்ற இரண்டுமே, அருகிய சரக்காகிவிட்ட இற்றை நாளில் இத்தகைய பாடல்கள் ஒரு பெரிய உறுதியையும் உணர்ச்சியையும்நமக்குத் தருகின்றன. இரண்டு யானைகளும் சம பலத்துடன் இழுக்கின்றன என்றமையிற் காதலும் கடமையும் சம பலத்துடன் தலைவனிடம் உள்ளன என்பதையும் கவிஞர் பெற வைத்துவிட்டார்.

* * * *

தலைவி பிரிந்து சென்றதை நினைத்து வருந்தும் தாயின் மனநிலை பேசும் பாடல் இது:

**'நினைத்தாலும் நெஞ்சு வேகிறது!'**

நல்ல கடுவேனில்; உச்சிப்பொழுது. இந்த வெயிலின் கொடுமையை நினைத்தாலும் உள்ளம் சுடுகிறது! சாதாரணமாக வெயிலில் நடப்பவர்கட்கே அதன் கொடுமையை அறிய முடியும் என்பர். ஆனால், சில சமயங்களில் வெயிலில் நடப்பவர்கள் எவ்விதக் கவலையும் இல்லாமல் சாவதானமாக நடந்து செல்லுதலைக் காண்கிறோம். ஏன்? அவர்களுடைய கால்கள் இரும்பால் ஆனவையா? அப்பாதங்களில் சூடு தாக்காமல் விட்டுவிடுமா? சூரியன் அவ்வாறு ஒருவரைச் சுட்டுப் பிறரைச் சுடாமல் விடுபவன் அல்லனே! எலும்பில்லாத புழுவையும் தனது அதிகாரம் நடைபெறும் இடத்திற்கு வந்து விட்டால் அவன் விடுவதில்லை. துடித்துத் துடித்து இறக்குமாறு செய்கிறான் புழுவை.

அத்தகைய கடு வெயிலில் இரண்டு பேர்கள செல்லுகிருர்கள். இன்னும் சறறு நெருங்கிச் சென்று பார்ககலாமா அவர்களை? ஓடித் தபபித்துக் கொளள வேணடிய வெயிலில் அவர்கள இருவரும ஏன மெளள நடக்கிருர்கள எனபது இபபொழுது தெரிகிறதா? ஆம! இதோ பின்னே செலகிற இபபெண் வேகமாக நடக்க முடியாதவள. முன்னே செல்லும இந்த ஆடவன இவள பொருட்டே மெல்லச் செல்கிருன். அவனுடைய மிடுககையும உடறகட்டையும தோள வலியையும பார்த்தால், அவன மிக வேகமாக நடக்கக்கூடியவன எனபது தெரிகிறது. ஆனல, ஏன அடிககடி பின தங்கிவிடுகிருன? இதோ பினனே வரும அபபெண் கொடியை நோக்கி ஏதோ கூறுகிருன். அவனுடைய முகத்தில் எவவளவு அனபு ததும்புகிறது! வீரனுடைய உடற்கட்டு அமைந்த அவனுடைய முகததில் இவவளவு அனபும குழைவும எஙகிருந்து பிறந்தன? ஐயமே இல்லை! இந்தப பெண்ணிடம திரும்பிப் பேசுந்தோறும பார்க்குந்தோறும அவனுடைய முகததில் அன்பும அருளும காட்சி அளிககினறன. இபபடி ஒரு பெணணிடம பேசும பொழுதெல்லாம ஒருவனுடைய முகத்தில அனபு தோனறுமாயின, அவன அவளுடைய காதலன தான என்று முடிவு செய்யலாம.

இந்தப் பெண்ணைப் பார்ததால், இவளிடம இளமை தாண்டவமாடுகிறது. இவளுடைய உடல் அமைபபில், பெரிய குடும்பத்தில வசதியுடன வளர்ந்த பொலிவு காணபபடுகிறது. இபபடிபபட்டவள இவ்வாறு கடுமையான வெயிலில் நடந்து பழகியிருத்தல் இயலாது. எனவே, இவள கால்கள

சூடு தாங்காமல் தள்ளாடுகின்றன. இவள் படும் பாட்டைக் கண்ட இவளுடைய காதலன் நின்று நின்று இவளுக்கு ஏதோ அமைதி கூறுகிறான். விளையாட்டாகப் பேசி, இவளை மகிழ்விக்கிறான். இவளுடைய கவலையை மறக்க வைக்க அவன் அரும் பாடு படுகிறான் என்பது நன்றாகத் தெரிகிறது.

இவளும் அவனிடம் பெருங்காதல் கொண்டுள்ளாள் என்பதில் ஐயமில்லை. அன்றேல், இக்கடு வெயிலின் கொடுமையை மறந்து, அவனுடைய சொற்களில் ஈடுபட்டு இவ்வாறு தன்னை மறந்து இவள் சிரிக்க இயலுமா? இத்துணைத் துன்பத்தையும் இவள் மறக்க வேண்டுமாயின் அவனுடைய சொற்களில் இவளுக்குள்ள ஈடுபாடு அளவற்றதாய் இருக்கவேண்டும். ஏன் இவ்வாறு இக்காதலர்கள் இந்த நேரத்தில் செல்ல வேண்டும்? அது ஒரு கதை.

இத்தலைவனுக்கும் தலைவிக்கும் நெடுநாட்களாகவே பழக்கம் உண்டு. முதன் முதலில் இவர்கள் இருவரும் எங்கு எவ்வாறு சந்தித்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. இவன், இவள், இவளுடைய உயிர்த் தோழி ஆகிய மூவருக்குமட்டுமே அது தெரியும். ஆனால், இத்தலைவியினுடைய சுற்றத்தார் இவர்களிடையே திருமணம் நடைபெற விடமாட்டார்கள் என்பதைத் தோழி அறிந்து கொண்டாள். வேறு வழியாது? மற்றொருவனுக்கு இப்பெண்ணை மணம் முடிக்க ஏற்பாடுகளும் செய்து விட்டனர் இவளுடைய சுற்றத்தார். நிலைமை மிகவும் மோசமாகிவிடும் போலத் தோன்றலாயிற்று. தோழி பார்த்தாள்; தலைவி வேறு ஓர் ஆடவனை மணத்தல் என்பது இயலாத காரியம். அத்தகைய நிலைமை

ஏற்பட்டால் இவள் இறந்துபடுவாளே தவிர அப் புதியவனை மணக்க இசையமாட்டாள். என்றாலும், தலைவியின் சுற்றத்தாரகளும் தலைவியின் நிலையைப் புரிந்துகொள்ளாவே மறுக்கிறாகள்.'

இந்நிலையில் தோழிக்கு இரண்டே வழிகள் தெரிகின்றன. ஒன்று தலைவியின் விதிப்படி ஆகட்டும் என்று விட்டுவிடுவது. இரண்டாவது, பலரும் தன்மேல ஐயங்கொண்டு பகைமை பாராட்டு வாரகள என்று அறிந்திருந்தும அதுபற்றிக் கவலை யடையாமல, தலைவிக்கு அவள விருமபியவனை அடையுமாறு உதவுவது. எந்தத் தோழியும தலை வியை முதல வழியில விடமாட்டாள. அவள் இறந்துபட நேர்ந்தால, இதைவிடக் கொடுமை வேறு யாது? எனவே, இரணடாவது வழிதான சிறந்தது என்ற முடிவுக்கு வந்து விட்டாள தோழி. தன்னுடைய சுற்றத்தார நிறைந்துள்ள இந்த ஊரில தலைவி விருமபியவனை மணந்து கொள்ளுதல் என்பது இயலாத காரியம். எனவே, தலைவனுடன தலைவி ஓடிவிடவேண்டும. இவவாறு தலைவனுடன தலைவி ஓடுவதை 'உடனபோக்கு' என்று இலக்கியம் கூறும. மேனாட்டார் இதனை இதே பொருளில் 'Elopement' என்று வழங்குவதும் அறி தற்குரியது.

தோழியின உதவியால் தலைவி தலைவனுடன் ஒரு நாள விடியற்காலையில் தன ஊரையும், தாய தந்தையரையும், சுற்றத்தாரையும விட்டுவிட்டு ஓடி விட்டாள். முதல நாள் மாலைப பொழுது வரை அந்த வீட்டில வாழ்பவர்கட்கு இதுபற்றி ஒரு குறிப பும தெரியவில்லை. இப்பெண்ணின் தாயக்கு

இவள் ஒரே பெண். வேறு ஆண் மக்கள் இருக்கலாம் எனினும், சீராட்டித் தன் மகள் என்று கூறி ஆடம்பரமாகத் திருமணம் செய்து வைக்க வேறு பெண்ணும் இல்லை. என் செய்வாள் அத்தாய்!

மறுநாள் பொழுது விடிந்ததும் மகளைத் தேடினாள். யாண்டும் காணவில்லை. தோழியை விசாரித்தாள். தனக்கு யாதொன்றும் தெரியாது என்று தோழி கூறிவிட்டாள். தோழிதான் தலைவியின் உடன் போக்குக்கு உதவி செய்தாள் எனினும், அவளே இப்பொழுது ஒன்றும் தெரியாதவள் போலத் தலைவியைக் காணவில்லையே என்று அழத் தொடங்கிவிட்டாள்! போதாக் குறைக்கு ஊரில் உள்ள பெண்டிர் அனைவரும் வந்து கூடிவிட்டனர்.

ஒவ்வொருவரும் தத்தம் கவலையை ஓரளவு தெரிவித்துக் கொண்டனர். சிலர் அத்தாயைத் தேற்ற முற்பட்டு விட்டனர், இது ஓர் இளம் பெண்ணின் வாழ்க்கையில் இயல்பு தான் என்பதை எடுத்துக் காட்டினர்; அறவழியும் இது தான் என்றும் எடுத்துக் கூறினர். எவ்வளவு சிறப்புடன் பெற்று வளர்த்தாலும், பெண்ணைப் பெற்று விட்டால் ஒருவனிடம் ஒப்படைக்கத்தானே வேண்டும்? இவ்வாறு அவர்கள் பலபடியாக எடுத்துக் கூறியும் தாய்க்குக் கவலை நீங்கவில்லை. சிலர் காரண காரியத்துடன் உவமைகள் கூறியும் அவள் கவலையைப் போக்க முயன்றனர். ஒருத்தி கூறினாள் பின் வருமாறு:

"அம்மா, நல்ல மணம் வீசுகிற சந்தனம் மரமாக மலையிலேதான் பிறக்கிறது என்றாலும், தான் பிறந்த மலையில் இருக்கும் வரை மலைக்கு அது பயன்படுவ

இல்லை. அங்கிருந்து பிரிந்து சென்று யாருடைய வீட்டிலோ சேர்ந்து விட்டால், அங்கு மணம் வீசு கிறது. ஆராய்ந்து பாருங்கள். உம்முடைய மகளும் அத்தகையவள் தானே?'' என்றாள்.

'பல்லுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்குஅவைதாம என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே!'

(பாலைக்கலி, 8)

மற்றொருத்தி வேறு ஓர் உதாரணம் தந்தாள்: ''நீவிர அணிந்திருக்கிற முத்துக்கள் கடலிலே தானே பிறந்தன? ஆனால், அவை கடலுக்கு ஒரு சிறிதும பயனபடாமல உம்மை அலங்கரிக்க வந்துவிட்டன. ஆய்ந்து பார்த்தால், உம மகளும அவவாறு தானே?'' என்றாள்.

'சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறபபினும் நீர்ககுஅவைதாம் என்செய்யும்?
தேருங்கால நுமமகள் நுமக்கும்ஆங்கு அனையளே''

(பாலைக் கலி, 8)

என்று கூறி, அத்தாயின துயரத்தைத் தணிகக முறபட்டனள். இவாகள எவவளவுககெவவளவு அவளுடைய துயரைத தணிகக அமைதி கூறினார் களோ, அவ்வளவுககவ்வளவு அவளுடைய துயரம எல்லை கடந்து விட்டது.

தாய் தனக்கு அமைதி கூறினவர் அனைவரை யும ஒரு முறை பாரத்தாள். இனனும் அவளுடைய வருத்தம அதிகமாயிற்று. மேலும, அவர்களமேல் அது கோபமாகவும மாறியது. ஏன தெரியுமா? அவளுக்கு அமைதி கூறவந்த அவர்கள் அவளைப்

போலவா இருக்கிறார்கள்? அவருள் ஒவ்வொருவருக்கும் இரண்டு மூன்று பெண்கள் உண்டு. ஒருத்தி இவ்வாறு தலைவனுடன் ஓடி விட்டாலும் மற்றப் பெண்கட்கு அவர்கள் மணம் செய்து வைத்து மகிழலாம். ஆனால், தன் நிலையை அவர்களுள் யாரும் ஆராய்ந்து பார்த்ததாகவே அவளுக்குத் தெரியவில்லை. அவளுக்கு இருந்தவள் ஒரே மகள் அல்லவோ? அந்த ஒருத்தியும் இன்று இல்லாமல் சென்று விட்டாளே!

அத்தாயும் அறியாதவள் அல்லள். ஒருவாறு தன் துயரத்தை மறந்துவிட்டு இருக்கவே முயல்கிறாள். ஆனாலும், என்ன கொடுமை! வீட்டைச் சுற்றி நொச்சிச் செடி வளர்ந்துள்ளது; நீலமணி போலப் பூக்களைப் பூத்துக் குலுங்கி நிற்கிறது. அதைப் பார்க்குந்தோறும் மகள் நினைவு வருகிறது. அச்செடியின் 'அடியில் அருமை மகள் விளையாடி வளர்ந்ததை அவள் எவ்வாறு மறக்க இயலும்! அவள் அமர்ந்து விளையாடிய திண்ணையை நினைக்க நினைக்கத் தாய்க்குப் பெற்ற மனம் வெடித்து விடும் போல ஆகிவிடுகிறது.

இது ஒரு மனத்தத்துவம். அண்மையில் அன்புடையவர்களை இழந்து விட்டவர்கட்கே இது தெரியும். இறந்தவர்களுடைய பொருள்களைக் காணும் போதெல்லாம் துயரம் புதிய வேகத்துடன் வெளி வரும். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இதனை அழகாக 'மகனை இழந்த தாய்' என்ற பாடலில் பாடுகிறார். இறந்த மகனைப் புத்தர் பிரான் எதிரே போட்டு அத்தாய் அழுவது இம்மன நிலையை நனகு விளக்குகின்றது. அக்குழந்தை விளையாடிய பொருள

களைக் காணும் பொழுதெல்லாம் தன துயரம புதிய உருவெடுததலை இதோ அத்தாய கூறுகிருள :

' சித்திரத் தேரும் சிறுபறையும கூடிஎனைப்
பித்தியிலும் பித்தி பெரும்பித்தி ஆக்குதையா!'

இதே போனற கருததைததான நறறிணைப பாட்டில் வரும அத்தாயும கூறுகிருள்.

"அறிவுள்ள அயல வீட்டவர்களே, உங்களைப் போல நான பல புதல்வியரைப பெறவில்லை. ஒரே பெணணைப பெறறேன. அவளும, போரில் மிக்க வலிமையையும கூரிய வேலாயுததைதயுமுடைய காளை ஒருவனேடு கடுமபாலை வனத்தின வழியே செனறுவிட்டாள. அவள் செனறுவிட்டமையின யான அவளமேல் கொணடிருந்த ஆசையை மறக கிறேன். எனினும, அவளுடன பழகியதை மறகக முடியவில்லை. ஆனல், நீஙகள கவலையை மறககு மாறு சொலகிறீர்கள. அநத ஒரே மகளை எவவாறு மறபபது? கணணுள வாழும பாவை வெளியே வந்து நடை பயினருல் அன்ன என மகள, நீலமணி போனற பூககள பூக்கும நொசசிச செடியின் அருகில விளையாடியதையும அவள விளையாடிய திணணையை யும எவவாறு எனனல் மறக்க முடியும? நினைத்தா லும நெஞ்சு வேகிறது!"

"ஒருமகள் உடையேன் மன்னே அவளும்
செருமிகு மொய்ம்பின் கூர்வேல் காளையொடு
பெருமலை அருஞ்சுரம் நெருநல் சென்றனள் ;
இனியே,
'தாங்குநின் அவலம் என்றிர் ; அதுமற்று
யாங்ஙனம் ஒல்லுமோ அறிவுடை யீரே !
உள்ளின் உளளம வேமே ; உண்கண்

மணிவாழ் பாவை நடைகற்று அன்னஎன்
அணிஇயல் குறுமகள் ஆடிய
மணியேர் நொச்சியும தெற்றியும் கண்டே.''
(நற்றிணை, 184)

[செரு—போர்; மொய்ம்பு—வலிமை, செருநல்—நேற்று, ஒல்லுமோ—முடியுமோ; உண்கண் மணி வாழ்பாவை—கண்ணினுள் வாழும் பாவை, தெற்றி-திண்ணை]

"மகள் சென்ற பாலையை நினைத்து வீட்டில் நிழல் தரும நொச்சியையும திண்ணையையும பார்த்தால் வருத்தத்தால் நெஞ்சு வெடிக்கிறதே!" என்ருள அப்பெற்ற தாய.

* * * *

'குடி வறன் உற்ற கொழுநன்'

தலைவியின தனிக்குடித்தனத்தில், அவள உறுதியைப்பற்றிப பேசும பாடலைப பார்ப்போம:

ஒரு பெரிய மாளிகை விணணைத் தொட்டு நிற்கிறது. அது மிகபபெருஞ்செல்வருடைய வீடெனபது கணட மாத்திரத்தில் யாரும அறிந்துகொள்ளுதல கூடும. வீட்டின வெளி முற்றத்தில் பெரியதொரு தென்னங்கீற்றுப பந்தல போடபபட்டிருக்கிறது. வீட்டின் சொந்தக்காரர் பொருட்செலவம பெற்றுள்ள அளவுக்கு மக்கட்செல்வம பெறவில்லை என்று நினைக்கத தோன்றுகிறது. அல்லாவிடில், இதோ வீட்டு வாயிலை விட்டு வெளியே வரும இந்த ஒரு பெண் குழந்தையைப் பாருங்கள. எவ்வளவு சிறந்த ஆடைகள், கண்டீர்களா? இவவளவு சிறிய குழந்தைக்கு இப்படி வைரத்தால் இழைத்த நகைகள போட்டிருக்கிருர்கள. பார்த்தீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? இந்தக குழந்தையைப பார்த்து முன ஒரு காலத்தில் ஒரு கவிஞன் 'நல்கூர்ந்தார்

செல்வ மகள்' என்று கூறிப்போனேன். அதன் பொருள் விளங்குகிறதா? 'நல்கூர்ந்தார்' என்பதற்கு வறுமையுடையவர் என்பது பொருள். வறுமையுடையவர்கட்கு எவ்வாறு செல்வ மகள் இருக்க முடியும் என்று கேட்கிறீர்களா? ஆம். நியாயமான கேள்விதான். ஆனால், 'வறுமை' எதில் ஏற்பட்டது என்று அறியவில்லையே! செல்வம் நிறைய உடையவர்கள். ஆனால், மக்கட் செல்வத்தில் வறுமையுடையவர்கள் என்பதே பொருள். 'ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு,' என்று கூறுவார்களே! அது போல ஒரே ஒரு குழந்தையை அருமையாகப் பெற்றுள்ளார்கள். இங்கே நாம் காணும் அம்மை இக்குழந்தையைப் பெற்ற தாயல்லள். ஆனால், தாயின் இடத்தில் இருந்து வளர்க்கும் செவிலித் தாய் ஆவாள். ஆம். 'நற்றாய்' என்று கூறப்படும் பெற்ற தாய்க்கு அடுத்தபடி இருப்பவள், 'செவிலித் தாய்' என்று கூறப்படும் இந்த வளர்க்கும் தாய் தானே? ஆதலாலேதான் இவ்வளவு உரிமையுடன் குழந்தையை அச்சுறுத்தும் நோக்கத்துடன் கையில் கோலை எடுத்துக்கொண்டு ஓடி வருகிறாள். இந்த மூதாட்டியை அடுத்து நிற்கும் அந்தப் பெண்ணின் கையில் இருக்கும் பொற்கிண்ணத்தைப் பார்த்தீர்களா? அதில் வெண்மையான பாலும் சோறும் இருக்கின்றன. பாற்சோற்றுக்கு உள்ள இனிப்பும் போதாது என்பதற்கு இச்சோற்றுடன் என்ன கலந்துள்ளார்கள் என்பது தெரியுமா? நாம் இக்காலத்தில் சுத்தமற்ற வெள்ளைச் சர்க்கரையை அல்லவா பயன்படுத்துகிறோம்? ஆனால், அந்நாளைத் தமிழர் பாலுக்கு இனிப்பூட்டத் தேனை உடன் கலந்தனர். எனவே, இக்குழந்தையின் பால் சோற்றுடன்

தேனைக் கலந்திருக்கிறார்கள். தேன் கலந்த பால் சோற்றைத் தங்கக் கிண்ணத்தில் ஏந்திக்கொண்டு பின்னர் இருக்கும் பணிப் பெண் ஏன் இங்கே வந்து நிற்கிறாள்? முதலில் ஓடி வந்த இந்தப் பெண் குழந்தைக்குச் சோறு ஊட்டவே இத்தனை பேர்களும் வந்துள்ளார்கள். இந்தக் குழந்தை, உணவை-பாலும் தேனும் கலந்த அந்த இனிய சோற்றை—உண்ண மறுக்கிறது. அம்மட்டோடு அன்றி, வெளியில் உள்ள பந்தலைச் சுற்றிச் சுற்றியும் ஓடுகிறது. வயது முதிர்ந்த நரை தோன்றிய பணிப்பெண்கள் இக் குழந்தையைப் பிடிக்க வேண்டி, தம் வயதை மறந்து குழந்தையின் பின்னர் ஓடுவது அதனைவிட வியப்பாய் இருக்கிறது! ஆனால், குழந்தை அவர்களின் கையில் சிக்காமல் இங்கும் அங்கும் ஓடுகிறது. இடை இடையே அப்பணிப்பெண்கள் தம் ஓட்டத்தை நிறுத்திக்கொண்டு குழந்தையை வேண்டுகிறார்கள்.

இது ஒரு காட்சி. வாழ்க்கைச் சித்திரத்தின் ஒரு பகுதி இது. இதோ! இனி மற்றொரு பகுதி தொடங்குகிறது. இங்கு நாம் காணும் பெண் நல்ல இளம்பருவம் உடைய நங்கை. இவளுடைய இயற்கை வனப்பைத் தவிர வேறு அழகு செய்யும் ஆடை அணிகளுள் ஒன்றும் இல்லை. உடையிலும், வீட்டுச் சூழ்நிலையிலும் எவ்வளவுதான் வறுமை தெரிந்தாலும், இவளுடைய முகத்தில் காணப்படுகிறது ஒப்பற்ற பொலிவு. வறுமை என்பது உடலைப் பிடிக்கும் பொழுது அது தான் தோல்வியடைகிறது. அவ்வறுமையால் பீடிக்கப் பெற்றவன் பணிய மறுத்துவிடுகிறான். எனவே, அவனுடைய உடை, உணவு, உறையுள் என்று கூறப்பெறும் இம் மூன்றும் கெட்டுவிடுகின்றன. ஆனால், அவனுடைய

முகத்தைப் பார்த்து யாரும் வறுமையுடையவன் என்று கூறிவிட முடியாது. இது கருதியே தான், 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு. அல்கா நல்குரவு அவாஎனப் படுமே,' என்று கூறினார் குமரகுருபர அடிகளார்.

இப்பொழுது நாம் காணும் இப்பெண்மணியின் புறத்தோற்றமும் சூழ்நிலையும் இவளுடைய வாழ்க்கை செல்வப் பாதையில் செல்லவில்லை என்பதையும், வறுமையில் நடை பெறுகிறது என்பதையும் நமக்கு அறிவுறுத்துகின்றன. என்றாலும் என்ன? இவளுடைய முகத் தோற்றத்திலே தான் எவ்வளவு பொலிவு காணப்படுகிறது!

இதோ இவளுடைய வீட்டினுள் சென்று காண்போம், எவ்வளவு சிறிய வீடு! ஆனால், எவ்வளவு தூய்மையாய் வைக்கப்பெற்றிருக்கிறது! அவ்வளவு பெரிய மாளிகையில் வாழ்ந்த இப்பெண், எவ்வாறு இவ்வளவு சிறிய வீட்டில் வாழக் கற்றுக் கொண்டாள்; தொட்டதற்கெல்லாம் பணிப் பெண்களை ஏவி வேலையை முடித்துக்கொள்ளும் பழக்கமுடைய இப்பெண், இப்பொழுது ஒரு பணிப்பெண் கூட இல்லாமல் எவ்வாறு வாழ்க்கை நடத்துகிறாள்? தனக்குச் சோறு ஊட்ட வேண்டும் என்று பிறரை எதிர் பார்த்து வளர்ந்த இப்பெண், இப்பொழுது எவ்வாறு தன் குடும்பத்தைக் கவனித்துக் கொள்கிறாள்? இவை அனைத்தும் ஒருபுறம் இருக்க இவள் இப்பொழுது தானே உணவு சமைக்கவும் தலைப்பட்டு விட்டாள். தங்கக் கிண்ணத்தில் தேனொடு கலந்த பாற்சோற்றைப் பிறர் வருந்தி வருந்தி ஊட்ட முயன்றது ஒரு காலம். ஊட்ட ஊட்ட உண்ண மறுத்ததும் அந்தக் காலம். இன்று

எத்தகைய மாறுதல்? தங்கக் கிண்ணம் என்று கூறுவதற்குக்கூட, ஒன்றும் இல்லை. வீட்டில் பழகும் சாமான்கள் அனைத்தும் நிலத்தாயின் அருளால் கிடைத்தவை தாம்! அனைத்தும் மண் பாண்டங்கள். அவற்றில் பாலும் இல்லை, தேனும் இல்லை; பழஞ்சோறுதான் இருக்கிறது. என்றாலும், அச்சோற்றை விருப்பமுடன் உண்கிறாள்! தான் மட்டும் உண்ணவில்லை! தன் கணவனுக்கும் விருப்புடன் அதனைப் படைக்கிறாள்.

இதோ! இந்த ஆண் மகன்தான் இவளுடைய காதற்கணவன் போலும்! இவனுடைய முறுக்கேறிய உடல் இவனுடைய வன்மையையும் பலத்தையும் காட்டுகிறது. ஆனால், அணிந்திருக்கும் உடை முதலியன, இவனுடைய குடும்பம் செல்வத்தில் வாழவில்லை என்பதை அறிவுறுத்துகின்றன. இருந்தாலும், வறுமையில் செம்மை உடையவளாகவே காணப்படுகிறாள். இவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்கிறாள் இப்பெண். வெறுங்கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு, இயந்திரம்போல மட்டும் இவள் செய்யவில்லை; முழு அன்புடன் கடமையைச் செய்கிறாள். இவளுடைய ஒவ்வொரு செயலிலும் மனத்தின் ஆழத்தில் படிந்திருக்கும் காதல் உணர்ச்சி குமிழியிட்டு வெளி வருகிறது.

இவ்வளவு அருமைப்பாட்டுடன் நடைபெறும் குடும்பத்தைக் காண இவள் தந்தையார் ஒரு முறை வந்திருந்தார்; மகளின் வாழ்க்கை முறையைக் கவனித்தார். பெற்று வளர்த்த அவருடைய மனம் அனுதாபத்தால் கரைந்து விட்டது. மகளுடைய

இந்த வறுமையைப் போக்கவேண்டும் என்று முடிவு செய்துகொண்டார். மிகவும் பக்குவமாக இவளை அணுகி, தாம் உதவி செய்வதாகக் கூறினார். அதுவும் உதவி என்ற பெயரால் அன்று. இவளுடைய பழைய வாழ்வை நினைத்துப் பார்த்த அவர், அதை இவளுக்கு நினைவூட்டினால் ஒரு வேளை அச்செல்வ வாழ்வை மீட்டும் விரும்புவாளோ என்று ஐயுற்றார், எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்; தம்மிடத்தில் பொருளுதவி பெறுவதில் தவறில்லை என்று பல வகையாகவும் எடுத்துக் காட்டினார். ஆனால், இவள் அவருடைய சொல்லை மறுத்து விட்டாள்; எந்த விதமான உதவியும் பெற மறுத்து விட்டாள். எத்துணைத் துன்பமுற்றாலும் தன் தந்தை யாரிடமிருந்து உதவி பெற இவள் விரும்பவில்லை; தன் கணவனுடைய பெருமைக்கு அவ்வாறு உதவி பெறுதல் இழுக்கு என்னும் முடிவுக்கு வந்தாள். கணவனும் உதவி பெறுதலை விரும்ப மாட்டான் என்பது இவளுக்கு நன்கு தெரியும்!

மாமனாருடைய செல்வத்தில் பங்கு பெற்று வாழ்தல் மிகவும் மானக்கேடானது என்பது அவனுடைய கொள்கை. அன்றைய நாளில் தமிழன் இவ்வாறுதான் கருதினான். எத்துணை வறுமையில் ஆழ்ந்துவிட்டாலும், தானாகச் சம்பாதியாமல் பிறர் பொருளை வைத்து வாழ்வது மானக்கேடானது என்பது தமிழனுடைய உறுதியான கொள்கை. இவற்றையெல்லாம் மனத்துட்கொண்டு இப்பெண் தன் தந்தையார் தருவதாகக் கூறிய செல்வத்தை மறுத்துவிட்டாள்.

இல்வாழ்க்கையை ஒரு நாள் இப்பெண்ணை வளர்த்து வந்த செவிலித்தாய் சென்று கண்டாள்.

மகளின் இக்கால வாழ்க்கை அவளுடைய கண்ணில் நீரை வரவழைத்துவிட்டது. இவளுடைய பழைய வாழ்க்கையையும் பால் சோறு உண்ண மறுத்த குறும்புத்தனத்தையும் மீட்டும் நினைந்து பார்த்தாள். கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. ஆனால், மகள் வறுமையில் செம்மையாக வாழ்க்கை நடத்துவதைப் பார்த்ததும், பெருமித உணர்ச்சி மேலிட்டு விடுகிறது. மீண்டும் தன் வீட்டிற்கு வந்தாள் செவிலித் தாய்; இவற்றையெல்லாம் நினைத்து ஒரு கவிதையாகப் பாடினாள். ஆனால், கவிதையைப் பாடியது போதனார் என்ற ஆண்மகனார். இதோ கவிதையைப் பாருங்கள் :

'பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொன்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்என்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்துஅரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிஇமெலிந்து ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுஉணர்ந் தனள்கொல்!
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்குஅறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையளே.

(நற்றிணை, 110)

[பிரசம்-தேன்; புடைப்பில் சுற்றும்-குஞ்சம் கட்டிய; முத்து அரிப்பொன் சிலம்பு-முத்தை உள் ஈடாக உடைய பொன் சிலம்பு; அரிநரை-மெல்லிய நரைத்த, பரிஇ மெலிந்து ஒழியப்-பின் தொடர்ந்து ஓடிப் பற்ற

முடியாமல் விட்டுவிட; குடிவறன் உற்றென-கணவன் வீடு வறுமையுற்றதாக, கொடுத்த தந்தை-பெற்று வளர்த்த தந்தை, கொழுஞ்சோறு-செல்வ உணவு; ஒழுகு நீர்—ஓடும் தண்ணீர், நுணங்கு அறல்—இடை இடையே கிடக்கும் மணல் திட்டுப்போல ஒரு முறை உணவு உண்டும் ஒரு முறை பட்டினி கிடந்தும் வாழும் வாழ்வு, பொழுது மறுத்து உண்ணும்-ஒரு பொழுது உணவு உண்டு மறு பொழுது உணவின்றி இருக்கும், சிறு மதுகையளே—சிறிய வன்மையை உடையவள்]

பழந்தமிழ்ப் பெண்மணிகள் வாழ்வில் ஓர் ஒப்பற்ற ஏடாகும் இப்பாடல். கவிதையைப் பன்முறை படித்துச் சுவைப்பதுடன் வாழ்விலும் நம் சோதரிகள் இம்மாதிரி வாழ முற்பட்டால் நாடு எத்துணைச் சிறப்படையும்!

## முல்லைத் திணை

முல்லைத் திணை காடும் காடு சார்ந்த இடமும் நிலைக்களாக உடையது.

தலைவன் கார் காலம் வந்தவுடன் மீண்டுவிடுவதாகக் கூறிவிட்டுப் போனான். அக்காலம் வந்தும் அவன் வரவில்லை. அவன் சொற்களில் நம்பிக்கையுடன் தலைவி பிரிவுத் துயரைப் பொறுத்துக்கொண்டு வாழ்கிறாள். தலைவன் வருகிறான் காட்டு வழியே. இவையே இத்திணையில் இடம் பெறுபவை.

### கற்பின் குறுமகள்

முல்லைத் திணையின் சிறப்பு யாதெனில், தலைவி தான்படும் துயரத்தைப் பிறர் அறியாமல் மறைத்து வாழ்தலேயாம். எத்துணைத்தூரம் தலைவன் பிரி

வுக்கு வருந்துவதாயினும். வீட்டில் உள்ள கடமைகளைத் துறத்தல் இயலாத காரியம். எனவே, அவன் கடமைக்கும் மனத்தில் தோன்றும் பிரிவுத் துயரத்திற்கும் ஏற்படும் போராட்டத்தில் தலைவியின் வெற்றியைக் காட்டுவதே முல்லைத் திணை. கடலத்தனைத் துயரம் ஏற்பட்டாலும் தமிழ்ப் பெண்கள் தம் துயரத்தைப் பெரிதாகப் பறை சாற்றிக் கொண்டு கடமையை மறந்து காற்றில் விடுவதில்லை. இந்த அரிய பண்பாட்டை எடுத்துக் கூறுவதாலே தான் முல்லைத் திணை பற்றிய பழந்தமிழ்ப் பாடல்கள் சிறப்புடன் விளங்கக் காண்கிறோம்.

தலைவியும் இளமையுடையவள்; தலைவனும் அப்படியே. ஆனால், கடமையைப் பெரிதென மதித்து அவன் பிரிந்து போய்விட்டான். தலைவியும் தன் துயரத்தை ஓரளவு மறந்து கடமைகளில் ஈடுபட முனைகிறாள். ஆனால், இவ்வுலகியற்கை எத்துணை விந்தையானது! கடமை மேற்செல்கிறவர்களைத் தடுக்க எத்தனை சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன வாழ்வில்! எந்தக் கடமையை நிறைவேற்ற யார் முற்பட்டாலும், தடைகட்குப் பஞ்சமே இராது. தலைவி மட்டும் இவ்விதிக்கு விலக்கானவளா? இளமையை மறந்து, தலைவனையும் மறந்து; கடமையில் கருத்தூன்றி நிற்கும் அவள் உறுதியைக் கலைக்க யார் யார் முற்படுகிறார்கள் தெரியுமா? முதலில் கார்காலக் கருமேகங்கள் திரண்டெழுந்து வருகின்றன. அம்மேகங்களைக் கண்ட மயில்கள் தம் தோகையை விரித்து ஆடத் தொடங்குகின்றன. ஆடும் மயிலின் அற்புதக் காட்சி தலைவிக்கு மனக் கிளர்ச்சியை உண்டாக்குகிறது. மயிலின் ஆட்டம் மனத்திற்கு அமைதி தரவில்லையே என வருந்திய தலைவி, வேறு

புறம் திரும்பினால், பகலில் மேயச் சென்ற மாடுகளும், உணவு தேடச் சென்ற புள்ளினங்களும் தம் துணையுடன் குலாவிக்கொண்டு இருப்பிடத்தை நாடி மீளுகின்றன. இவற்றைப் பார்த்தால் தொல்லை மிகுகின்றதென்று தலைவி வீட்டினுள் வந்தாலும் துன்பம் தொடர்கின்றது.

அஃறிணைப் பொருள்களாகிய விலங்குகள் மட்டுமா தலைவிக்கு வருத்தம் உண்டாக்க முற்பட்டன? உயர்திணையாகிய மனிதன் என்ன வாழ்கிறான்! அவனும் பிறருக்குத் துன்பம் தருகிறோமே என்ற எண்ணம் இல்லாமலேதான் தொழில் செய்கிறான். மாடுகளை ஓட்டிச் செல்லும் அவ்விடையன் சும்மா போகக் கூடாதா? போகவில்லை; வாயில் வேய்ங்குழலை வைத்து ஓயாமல் ஊதிக்கொண்டே செல்லுகிறான். அந்தப் பாவிக்கு வாய்தான் வலியாதா? ஏன் இப்படி ஊதி ஊதித் தலைவியின் உயிரை வாங்குகிறானோ, தெரியவில்லை! அவன் கண்டானா தலைவிக்கு இது வருத்தத்தை உண்டாக்கும் என்று! அவன் மகிழ்ச்சியாகத்தான் ஊதிக்கொண்டே செல்லுகிறான். அந்த இடையனுடன் உறவு கொண்டதா இந்தக் குயிலும்? ஏன் இதுவும் இப்பொழுது கூவத் தொடங்கி விட்டது? செவ்வானத்தையும் தென்றலையும் கண்டவுடன் குயிலுக்குக் 'குஷி' பிறந்து விட்டது. ஆனால், குயிலுக்குப் பிறந்த குஷியில் அது பாட ஆரம்பிக்கத் தலைவிக்கு இது தலை வேதனையாக அன்றோ ஆய் விட்டது! தலைவனை மறக்க முயன்ற தலைவிக்கு எத்தனை பகைகள் திரண்டெழுந்து விட்டன! மாலைக் காலம், செவ்வந்த அந்தி வானம், குயில், துணையுடன் வரும் மாடுகளும் பறவைகளும், இடையன், தென்றல், மயில், பிறைச்சந்திரன்—இவை

அனைத்தும் கார் காலத்தில் உள்ளவை. இவற்றை அடிப்படையிற் கொண்டு, இலக்கண ஆசிரியன் 'காரும் மாலையும் முல்லை' (தொல், அகத்திணை, 6) என்று கூறிப்போனான்.

இந்த நிலைக்களத்தை வைத்துக்கொண்டு ஒரு தலைவி படும் பாட்டை இதோ பிற்காலப் புலவன் ஒருவன் சித்திரிக்கிறான்.

"தண்ணமுது உடன்பிறந்தாய் வெண்ணிலாவே !
தண்ணளியை ஏன்மறந்தாய் வெண்ணிலாவே !
பெண்ணுடன் பிறந்ததுஉண்டே வெண்ணிலா வே! என்றன்
பெண்மைகண்டும் காயலாமோ வெண்ணிலாவே !"
"திக்கெல்லாம் தென்றல் புலிவந்து பாயுதே மன்மதா—குயில்
சின்னம் பிடித்தபின் அன்னம் பிடியாதே !"
(குற்றாலக் குறவஞ்சி, 24, 25)

இத்துணைத் துயரத்துடன் இருப்பினும், தலைவி தன் கடமையிலிருந்து தவறினதில்லை. அவளைத் தலைவன் நன்கு அறிவான். எனவே, பிரிந்து சென்று மீளும் பொழுது ஓயாமல் தலைவியைப் பற்றியே நினைந்துகொண்டு வருகிறான்; மீண்டு வரும் பொழுது குதிரைகள் பூட்டிய தேரில் வருகின்றான். தேரோட்டுபவனும் தலைவனுடைய மன நிலையை நன்கு அறிந்து, மிகவும் வேகமாகத்தான் தேரைச் செலுத்துகிறான். என்றாலும் என்ன! தலைவனுடைய மனம் செல்லுகின்ற வேகத்துடன் ஒப்பிட்டால், வேகமாகச் செல்கின்ற குதிரைகள் கூட ஓடாமல் மெள்ளச் செல்வதுபோலக் காட்சியளிக்கின்றன அவனுக்கு. எனவே, பாகனை நோக்கிப் பேசுகிறான் தலைவன்: "நம்முடன் வருகின்ற வீரர் விரைந்து வருதலாலே மிகவும் வருந்தியுள்ளனர். அவர்கள் இடையிற் கட்டிய கச்சையை அவிழ்த்து விட்டுக்கொண்டு

மெள்ள இடை இடையே தங்கி வருவார்களாக, இது வரை பயனபடுத்தாமல் வைத்திருந்த தாறறு முளளாலே குதிரையைக் குத்தியாயினும் விரைவில் செலுத்துக!'' என்கிருன் சென்ற வினை முடித்து மீளும தலைவன.

'விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்பழித்து அசைஇ
வேண்டமர் நடையர் மென்மெல வருக
தீண்டா வைமுள் தீண்டி நாம்செலற்கு
ஏமதி வலவ! தேரே.' (நற்றிணை, 21)

[விரைப்பரி-விரைந்து செல்வதால் வருந்திய; வீங்கு செலல்—மிக்க செலவினையுடைய, இளையர்—வீரர்; அரைச்செறி கச்சை—இடுப்பிற் கட்டிய கச்சை, யாப்பு—கட்டு; வைமுள்—கூர்மையான தாறறுக் கம்பு; ஏமதி—செலுத்துக.]

தலைவியை நினைத்துக்கொண்டு தேரை விரைவாகச் செலுத்தக் கட்டளை இடுகின்ற காலத்திலும தலைவன தன உயர்ந்த பண்பாட்டிலிருந்து நீஙக விலலை. திடீரென்று தலைவனுடைய தேர் வேகமாகப் போகத் தொடஙகினுல உடன வருகின்ற வீரர்கள ஓடுமபடி நேரிடுமனறே? அவர்கள அவ்வாறு ஓடிப பின் தொடர வேண்டிய இன்றியமையாமை போர்ககாலத்தில் உண்டு. ஆனுல, வேலை முடிந்து வீடு திருமபும நேரததில் அவர்களை ஓட வைப்பது முறையனறு. எனவே, தலைவன அவர்கள வேண்டுமளவு தஙகி இளைப்பாறிவிட்டுப் பினனர் வரட்டும எனகிருன.

பழந்தமிழனுடைய பணபாட்டைப் பார்க்க இது ஒரு தகக வாயபபாகும். சாதாரண நேரங்களில மிக்க பண்பாட்டுடன நடந்துகொளபவர்கள் கூட,

[illegible] ஒரு கவலை புகுந்துகொண்டால், பண் [illegible] பறந்துவிடுவர்; வேண்டியவர், வேண்டாத [illegible] பாதுபாடின்றி நடந்துகொள்வர். இங்குத் [illegible] யுடையவரெல்லாம தலைவியிடம் சென்று [illegible] அவர் தேரை விரைவாகச் செலுத்த [illegible] கட்டளை இடுகின்றன. ஆனால், அந் [illegible] தலைவன் உடன்வருபவர்களை மறந்து [illegible] அவர்களை வேண்டுமானால் சிறிது [illegible] இளைப்பாறிவிட்டு வரலாம் என்று [illegible] வேண்டாமையில், அவனுடைய பரந்த [illegible] வேறு சான்றும வேண்டுமா?

[illegible] காரியம் நடைபெற வேண்டுமானால் [illegible] துயரம் அதனால் ஏற்படும [illegible] கவலைப்படாத 'பெரிய மனிதர் [illegible] கண்டுகொண்டிருக்கிறோம' [illegible] கவலைப்பட முடியுமா சார்! [illegible] மனிதர்கள் வாய் கூசாமல் பேசு [illegible] ஆனால், தான் விரைவாகச் [illegible] தலைவன கட்டளையைக் [illegible] இனைடி...... [illegible] தாற்றுக்கம்புக்கு [illegible] என்பதாகும். குதிரை [illegible] வைத்திருப்பது முறை [illegible] பயன்படுத்தும [illegible] 'அக்கம்பு கையில [illegible] அடிக்கத்தானே?' என்று [illegible] ஆனால், பயனபடுத்தாமல் [illegible] உண்டாக்க மட்டும் வைத் [illegible] அப்பழக்கமிறன். அதைப் [illegible] கூறும பொழுது கூடத்,

'தீண்டி' (மெள்ளத் தொட்டு) என்ற சொல்லாலே தான் கூறுகிறான்.

தன்னோடு பலகாலும் பழகுகின்ற குதிரையி னிடத்து அவன் கருணை காட்டுகிறான் என்பது மிகுதியும் பாராட்டற்குரிய ஒன்று அன்று. அஃறிணையாகிய குதிரையினிடத்தும் அவன் கருணை யுடையவன் என்பதற்காகவே அவனைப் பாராட்டு கிறோம். ஆனால், அதிகம் பழகியதாலும், அதனால் தான் பயன் பெறுவதாலும் ஒரு வேளை அவன் அதனிடத்து அன்பு பாராட்டுகிறானோ என்று நினைக்கத் தேவை இல்லை. அவன் இயல்பாகவே இப்பண்பாடுடையவன் என்பதையும் நாம் அறி யப் பாடல்கள் உள்ளன.

ஒரு தலைவன் வினை முற்றி மீண்டு வருகிறான். வருகின்ற காலமோ, கார் காலம். வரும் வழியோ, அடர்ந்த காட்டு வழி. கார் காலம் ஆகலின், காடு முழுவதும் பூத்துக் குலுங்குகின்றது. அப்பூக்களி னிடத்து வண்டுகள் மொய்க்கின்றன. எவ்வாறு அவை வருகின்றன? இரட்டையாக, துணையோடு புணர்ந்தவையாய் வருகின்றன. அவ்வாறு வண்டு கள் நிறைந்துள்ள வழியில் தலைவன் தேரில் வருகிறான். தேரில் மணிகள் நிறையக் கட்டியுள் ளன. தேர் வேகமாக வரும்போது மணிகள் ஒலிக்கு மல்லவா? காட்டில் திடீரென்று இவ்வாறு மணி ஒலி கேட்குமானால், துணையுடன் மகிழ்ந்து தேன் உண்ணும் வண்டுகள் அச்சத்தால் ஓட நேரிடுமே! துணையுடன் மகிழ்ந்திருக்கும் அவை பிரிந்து செல்லத் தான் காரணமாய் இருக்க விரும்பவில்லை அத்தமிழ் மகன். அதற்காக யாது செய்கின்றான்? தன் தேரில் உள்ள மணிகளின் நாவைப் பிடித்துக்

கட்டிவிட்டான். தன்னோடு தொடர்புள்ள மக்களிடத்துக்கூட அன்பு காட்டாத இக்காலத் தமிழன் எங்கே, ஏதோ வண்டுகள் மகிழ்ச்சியுடன் இருப்பதற்குத் தான் இடையூறாக இருத்தல் கூடாதென்று மணியின் நாவைக் கட்டும் அக்காலத் தமிழன் எங்கே! அவன் பண்பாட்டின் உச்சியை எட்டிப் பிடித்தவன் என்பதைக் கூறவும் வேண்டுமா?

"பூத்த பொங்கர் துணையொடு வதிந்த
தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்"
(அகநானூறு, 4)

[பொங்கர்—சோலை; தாது உண் பறவை—மகரந்தம் உண்ணும் வண்டு; பேதுறல்—மயக்கமடைதல்]

வாழ்வின் குறிக்கோளை நன்குணர்ந்த இத் தலைவனுக்கு ஏற்ற தலைவியே வீட்டில் உறைகின்றாள். அவளும் ஏதோ வாழ்கின்றோம் என்று கருதி வாழாமல், ஓர் உயரிய குறிக்கோளுடனே தான் வாழ்கின்றாள். தலைவன் பிரிந்திருக்கின்ற காலத்து அவள் கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பினும் மனம் முழுவதையும் அவன்பாற் செலுத்தி வாழ்கின்றாள். இல்லறம் நடத்தத் தொடங்கிய அன்றிலிருந்தே விருந்தோம்பலைத் தன் தலையாய கடமையாகக் கொண்டாள் தலைவி.

'இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.' (குறள், 81)

என்றல்லவோ பொதுமறை கட்டளை இடுகின்றது? எனவே, தலைவி விருந்தோம்பலில் எத்துணை இன்பம் அடைகிறாள் என்பதைத் தலைவன் அவளைப் பிரிந்து வாழும் பொழுது நினைந்து பார்க்கிறான்.

அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்' (நற்றிணை, 142)

[அல்லில் ஆயினும்—இராப்பொழுதில் ஆனாலும்; விருந்தைக் கண்டால் உவக்கின்றாளாம் தலைவி. அளவு மீறிய விருந்தினர் வரினும் சலியாது உபசரிக்கின்றாளாம்.]

'விருந்து ஒழிவறியாப் பெருந்தண் பந்தர்
வருந்தி வருநர் ஓம்பி... ..... .... ....'

'நேரங் கெட்ட நேரத்தில் எங்கேயாவது உணவு விடுதி இல்லாத ஊரில் வேறு வழியில்லாமல் யார் வீட்டிற்காவது நீங்கள் விருந்தினராகச் சென்றதுண்டா? சென்றிருந்தால், இப்பழைய பாடலில் வரும் தலைவியை நினைக்க நேரிடும்.

இத்தகைய ஓர் உயர்ந்த குறிக்கோளுடன் தலைவி வாழ்கிறாளாகலின், அத்தலைவனும் மனக் கவலையின்றி வாழ முடிந்தது, கடமைகளைக் கவனிக்கவும் முடிந்தது. தலைவனிடத்து அவள் என்ன சிறப்பைக் கண்டாள். இத்துணை மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு? இதோ கூறுகிறாள் ஒரு தலைவி.

"அம்ம வாழி தோழி! காதலர்
நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய
சொல்புடை பெயர்தலோ இலரே."
(நற்றிணை, 289)

இத்தகைய தலைவனுடன் வாழ்வதாலேதான் அவள் முல்லை சான்ற கற்பின் குறுமகளாக வாழ முடிந்தது.

* * *

இமய நம்பிக்கை

தலைவனைப் பிரிந்துள்ள காலத்துத் தலைவியின் மனநிலையைச் சித்திரிக்கிறது இப்பாடல்:

பலரும் ஒன்று கூடி வாழ வேண்டிய கட்டுப்பாடுடையது இக்காலச் சமுதாயம். சாதாரணமாக இருவர் ஒன்று கூடி வாழத் தொடங்கினாலே கருத்து வேறுபாடுகள் தோன்றிவிடும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்தாலொழிய, அவ்வாழ்வு சிறப்பதில்லை. எப்பொழுது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வர்? அன்புள்ள பொழுது தான் என்று கூறத் தேவை இல்லை. ஒருவர்மேல் கொண்ட அன்பு காரணமாகத்தானே அவர் செய்வது நாம் விரும்பாததாக இருப்பினும், விட்டுக் கொடுக்கிறோம்? இவ்வன்பு எவ்வாறு தோன்றுகிறது? இவ்வினாவிற்கு விடையளிக்க ஒருவனாலே தான் முடியும். அவனே அனைத்தையும் ஒரு காரணம் கருதிப் படைக்கும் இறைவன். அவனையல்லாத பிறர் அன்பு செய்யலாம்; அன்பைப் பெறலாம். ஆனால், ஏன் அன்புண்டாகிறது என்ற வினாவிற்கு விடை கூறல் இயலாது.

அன்புடையார் மாட்டு இயல்பாகவே நம்பிக்கையும் உண்டாகிறது. இந்நம்பிக்கை இல்லையாயின், அடிப்படை அன்பு விரைவில் ஆட்டங்கண்டு விடும். பல சந்தர்ப்பங்களில் அன்புடையார் மாட்டுச் சிலர் கொண்டிருக்கும் நம்பிக்கை நமக்கு வியப்பை உண்டாக்கும். ஏதோ ஒரு செயல் நடைபெற்றது. நாம் அனைவரும் அது நடைபெற்றதை நேரே கண்டிருக்கிறோம். ஆனால், அதனைக் கண்ட நாம் செயலிலீடுபட்டவர்களிடத்து அன்பு கொள்ளவில்லை. எனவே, செயலைச் செயலாகவே

காண்கிறோம். தவிர, அதற்கு வேறு பொருள் கற்பிப்பதுமில்லை, கற்பிக்க நமக்குத் தோன்றுவதுமில்லை. ஆனால், அந்நிகழ்ச்சியைப் பற்றி அவர்களிடத்து அன்புடையார் மாட்டுக் கூறிப் பாருங்கள். அவர்கள் நம்ப மறுத்து விடுவார்கள். நிகழ்ச்சியின் மெய்ம்மையை நீங்கள் உறுதிப்படுத்திக்காட்டினாலும் அவர்கள் அதற்கு வேறு ஒரு பொருள் கூறுவார்கள். இது உலகியற்கை. அன்புடையார் மாட்டும் அவர்கள் செய்யும் செயலினிடத்தும் நம்பிக்கை இருப்பது உலகியற்கை, மனித இயல்புங்கூடவாம்.

ஒரு நல்ல தலைவனும் தலைவியும் கூடி இன்பமாக இல்லறம் நடத்துகின்றனர். ஆனால், எத்துணை இன்பமாக இல்லறம் நடத்தினாலும் வெறும் பானை உலையில் ஏற முடியாது! எனவே, பல்வேறு பொறுப்புக்களை மேற்கொண்ட தலைவனுக்குப் பொருள் தேட வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. என் செய்வான் பாவம்! அன்பே வடிவான அருமைத் தலைவியை விட்டுப் போகவும் மனம் வரவில்லை. அழைத்துக்கொண்டு செல்லலாம் என்றால், காட்டு வழியை நினைக்கையிலேயே அச்சமாக இருக்கிறது. ஆனால், கடமை வாயிற்படியில் நின்று அவனை அழைக்கிறது. பல நாள் தலைவன் ஆய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். காதலுக்கும் கடமைக்கும் இடையே நடந்த அப்போராட்டத்தில் கடமை வெற்றிபெற்றுவிட்டது.

தலைவன் பொருள் தேடப் புறப்பட்டான். தலைவியும் அவன் போராட்டத்தை அறிந்துகொண்டாளாதலின், மேலும் தடை கூறி அவனுடைய வருத்தத்தை மிகுதிப்படுத்தாமல், வழி அனுப்ப

முனைந்துவிட்டாள். ஆனால், அவளுடைய மனத்தினை அடித்தலத்தில் தோன்றிய ஒரு பரபரப்பினால், அவனை எவ்வாறாயினும் கேட்டுவிட வேண்டும் என்று பல நாளாகச் சிந்தித்தாள். பல சந்தருப்பங்களில் கேட்கவும் முயன்றாள். ஆனால், அச்சொல் வாயிலிருந்து வெளி வந்தால் தானே! என்ன செய்வது! 'அவன் எப்பொழுது மீள்வான்?' இது தான் அவள் கேட்க விரும்பிய வினா. ஆனால், வீட்டுப் பிரிவது பற்றிய பெரும்போராட்டத்தை அவள் நடத்திக்கொண்டிருக்கும் பொழுது, 'எப்பொழுது வருவீர்கள்?' என்றுகேட்பது எவ்வளவு தவறானது? எனவே, 'இன்று கேட்கலாம், நாளை கேட்கலாம்' என்று கருதிக்கொண்டிருந்தாள்.

இதோ நாளுங்குறித்து இன்று புறப்படுகிறான் தலைவன். இச்சந்தருப்பத்தில் எவ்வாறு கேட்பது? நல்ல வேளை! அவனே வாய் திறந்து அவள் கேளாமல் கேட்ட வினாவிற்கு விடை கூறிவிட்டான், எப்பொழுது மீளப்போகிறேன் என்பது பற்றித்தானே அவள் கேட்க விரும்பினாள்? இதோ அவனே அவளைப் பார்த்துக் கூறுகிறான்; 'தலைவி, நீ அஞ்ச வேண்டா. வருகிற கார் காலம் தொடங்கியவுடன் யான் 'மீண்டுவிடுவேன்!' கார் காலம் வீட்டில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய காலம் என்பதை அவன் அறியானா? எனவே, உறுதியாக அவன் கூறினான். ஒரு வேளை அவள் மனம் அதிக வருத்தம் அடையாமல் இருக்கட்டும் என்ற கருத்தினாலே தான் கூறினானா? யார் கண்டார்கள்? அப்படியும் கூட இருக்கலாம்! போனவிடத்தில் அவன் விரும்பிய பொழுது திரும்பி வர அங்கு என்ன, பொருள் கொட்டியா கிடக்கிறது? அள்ளிக்கொண்டு வேண

டும் பொழுது திரும்பிவிட முடியுமா? இவற்றை எல்லாம் அவன் ஆய்ந்து பாராமலா கூறியிருப்பான்! தோழிக்குக்கூட அவன் சொற்களில் நம்பிக்கை பிறக்கவில்லை.

ஆனால், இத்தலைவியோ ஒரு விதமான பெண்! தலைவனிடத்து எத்துணைக் காதல் கொண்டிருக்கிறாளோ, அத்துணை நம்பிக்கையும் வைத்திருக்கிறாள். எனவே, அவன் மீண்டு வருகிறேன் என்று கூறிய கார்ப்பருவத்தை அப்படியே ஆழமாக மனத்தில் பதித்துக் கொண்டாள். அவன் சொற்களில் யாதோர் ஐயமும் தோன்றவில்லை இவளுக்கு. இது இயலுமா என்ற வினாவும் இவள் உள்ளத்தில் தோன்றவில்லை! அப்படியானால், இவள் என்ன, அறிவில்லாதவளா? யாரும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய இந்த எளிய வினாக்கள்கூட இவள் மனத்தில் தோன்றாமைக்குக் காரணம் யாது? தோழிக்குப் புரியும் வினாக்கள், அவளினும் மேம்பட்ட தலைவிக்கு விளங்காவா? நன்றாய் விளங்கியிருக்கும். ஆனால், இவளுடைய விளக்கத்தை மற்றொன்று முன்னின்று மறைத்து விட்டது. அதுவே இவள் அவன்மேற்கொண்ட பெருநம்பிக்கை. அவன் கூறினான்; இவள் அதனை ஏற்றுக்கொண்டாள். இதனை யார் மறுக்கமுடியும்? பிறர் கூறிய சொற்களானால், இவளும் அவற்றை ஆய்ந்து பார்த்துப் பொய்ம்மை மெய்ம்மை ஆராய்ச்சியில் ஈடுபடுவாள். ஆனால், இப்பொழுது பேசியவன் யார்? இவளுடைய தலைவன் அல்லனோ! அவனா இவளை ஏமாற்றுவான்; அவனும் இவளும் வேறு அல்லவே! அப்படி இருக்க, அவன் சொற்களில் இவள் ஐயங்கொள்ளக் காரணம் இல்லையன்றோ? அவனுடைய சொற்களில்

பொய் தோன்றுமா! இதென்ன வேடிக்கை! சந்திர னில் நெருப்புப் பிறக்குமா? என்றுவது திங்களில் தீத் தோன்றினால், அன்று தான் அவனுடைய சொற்களில் பொய் தோன்றும்.

'குன்றகல் நன்னுடன் வாய்மையில் பொய்தோன்றின்
திங்களுள் தீந்தோன்றி அற்று' (குறிஞ்சிக்கலி, 5)

இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாள் தலைவி தலைவனுடைய சொற்களில். எனவே, இவள் நம் பிக்கை, இவள் அதிகம் வருந்தாமல் இருக்கத் துணை செய்கின்றதன்றோ?

நாட்கள் ஓடி மறைகின்றன. வீட்டில் உள்ள சுவர்களில் (அழகான 'காலண்டர்கள்' இல்லாத காலம்) தலைவன் சென்ற பிறகு வந்து போன நாட் களைக் கோடிட்டு வைத்தாள் தலைவி; சில நாட்களில் நின்று அக்கோடுகளைப் பார்த்துப் பெருமூச்செறி வாள். சென்னைப்பட்டினம் போன்ற நகரங்களில்— அல்ல நகரங்களில்-பஸ்ஸை எதிர்பார்த்து நிற்பவர் கள் 'கியூ' வரிசை நீள்வது போலத் தலைவி கிழித்த கோடுகள் நீண்டன. ஆனாலும், தலைவன் வந்த பாடில்லை. தலைவிக்கு வருத்தம் மிகுந்ததே தவிர, நம்பிக்கை தளரவில்லை. இக்காலம் போலக் காலண் டர்கள் இருப்பதானால், இன்ன நாளில் வருவேன் என்று அவனுங் கூற முடியும்; இவளும் அந்த நாளை எதிர்பார்க்க முடியும். ஆனால், அந்நாட்களில் அவ்வாறில்லை. எனவே, அவனும் கார் காலத்தில் 'வருகிறேன் என்று கூறினான். கார் காலம் (மழைக் காலம்) என்று தொடங்கும் மழை பெய்யத்தொடங் கினால் கார்காலம் என்று கூறிவிட முடியுமா? அன்றி, ஐப்பசி தொடங்கிவிட்டது.. எனவே, இது கார்

காலம் என்றுதான் கூறிவிட முடியுமா? இரண்டும் சேரவேண்டும். அப்பொழுது கூட உறுதியாக இது கார் காலம் என்று கூற முடியாதன்றோ?

தலைவன் பிரிந்து சென்று பல நாட்களாகிவிட்டன. மழை தொடங்கிவிட்டது. “மழைக் காலத்தில் பூக்கும் கொன்றை பிடவம் முதலியன பூக்கத் தொடங்கிவிட்டன. தலைவி மனவருத்தம் அடையத் தொடங்கிவிட்டாள். அவள் வருத்தத்தைக் கண்ட தோழியின் பாடு தரும சங்கடமாகிவிட்டது! என்ன செய்தால் தலைவியின் துயரம் ஆறும்? தலைவனைக் கொண்டு வந்து நிறுத்தினால், தலைவி வருத்தம் தீர்வாள். ஆனால், அது நடக்கக் கூடிய செயல் 'அன்றே! தோழி நன்கு ஆய்ந்து ஒரு முடிவுக்கு வந்தாள். தலைவன் வரவில்லையே என்ற வருத்தத்தைக்காட்டிலும் தலைவிக்குக் கார்காலம் வந்துவிட்டதே என்ற வருத்தம் மிகுதி. ஆனாலும், இவ்வளவு துயரத்தின் இடையிலும் தலைவன் சொல் தவற மாட்டான் என்ற நம்பிக்கை மட்டும் இவளிடம் இருக்கிறது. இந்த நம்பிக்கையை நன்கறிந்த தோழி இதன் மூலமே தலைவிக்கு ஆறுதல் அளிக்க முடிவு செய்தாள். எவ்வாறு ஆறுதல் அளிப்பது?

‘நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்’ (குறள், 948)

என்றார் பொதுமறையாசிரியர். தலைவியின் நோய் யாது? தலைவன் இன்னும் வரவில்லையே என்ற வருத்தந்தான். ‘இன்னும்’ என்பதுதானே நோயின் முதல்? அதாவது, அவன் கூறிச் சென்ற கார் காலம் வந்தும் அவன் வரவில்லையே என்ற வருத்தம். இது கார்காலம் அன்று என்று நிரூபித்துவிட்டால்,

தலைவியின் துயரத்தின் அடிப்படை நீங்கிவிடும், நல்ல கார் காலத்தை எவ்வாறு, 'இது கார்காலம் அன்று' என்று கூற முடியும்? சாதாரணமானவர்களை இது கார் அன்று என்று கூறி ஏமாற்ற முடியாது.

ஆனால், தலைவியை ஏமாற்றிவிடலாம் எனத் தோழி நினைக்கிறாள். இது எவ்வாறு முடியும் என்று நினைக்கத் தோன்றுகிறதா? நன்றாக முடியும் மனித மனத்தின் கூறுபாட்டை நன்கு அறிந்தவர்கட்கு. ஒருவர் மிகுதியும் நோய் வாய்ப்பட்டிருப்பதைக் காணச் செல்கிறோம். நற்பேறின்மையின் நாம் சென்ற நேரத்தில் அவர் இறந்து படுதலும் கூடும். நோயாளி இறந்துவிட்டதை நாம் அறிவோம். ஆனால், நோயாளியின் தாயோ, அன்றி மனைவியோ, இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தன்னால் அன்பு செய்யப்பட்ட ஒருவர் இறந்துவிட்டார் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது இந்தப் பகுத்தறிவுடைய மனித மனம்! உயிர் பிரிந்துவிட்ட நேரத்திற்கூடப் பெரிய மருத்துவர் ஒருவரை அழைத்து வந்து காட்ட முற்படுபவர் எத்துணைப் பேர்! ஏன்? அவர்களுடைய அன்பின் அடிப்படையில் பிறந்த நம்பிக்கை அத்தகையது! ஆதலாலேதான், இறப்பாகிய நிகழ்ச்சியை—கண்ணெதிரே காணும் நிகழ்ச்சியை-நம்ப மறுத்து, 'எவ்வாறாயினும் இந்த மருந்து உட்செல்லுமா!' என்று உயிர் பிரிந்துவிட்டவர் வாயில் மருந்தை ஊற்றுகின்றார்கள்!

மனித மனம் இத்தகைய விசித்திரம் நிறைந்த ஒன்று. இதனை அடிப்படையிற்கொண்டே தோழி தலைவியின் வருத்தத்தைத் தணிக்க, அன்றேல், ஓரளவு குறைக்க முற்படுகிறாள். தலைவி கண் எதிரே

மழை பெய்கிறது; மயில் ஆடுகிறது; கொன்றை பூக்கின்றது. ஆனால், எப்பொழுது மழை பெய்தாலும் இவை நிகழுகின்றனவா? இல்லையே! கோடை மழை பெய்யும்பொழுது மயிலின் ஆட்டமும், கொன்றை பூத்தலும் நிகழுகின்றனவா? இல்லையே! ஆனாலும் என்ன? சாதாரண மன நிலையுடையவர், மழை பெய்தல் முதலியவை தனி நிகழ்ச்சிகளாயினும், ஒன்றுடன் ஒன்றைத் தக்க முறையில் தொடர்பு படுத்திக் காண்பர். ஆனால், மனம் மாறுபட்டு, அல்லது கலங்கியிருப்பவர்க்கு இத்தொடர்பு எங்கே விளங்கப் போகிறது! தலைவி மனம் கலங்கியிருக்கிறாள்.

அவளுடைய கலக்கத்திற்குக் காரணம் யாது? தலைவன் கார்காலம் தொடங்கியவுடன் வந்துவிடுகிறேன் என்று கூறிப் போனான். இதோ கார் காலம் தொடங்கிவிட்டதுபோலக் காணப்படுகிறது. ஆனால், தலைவன் வந்தபாடில்லை. தலைவன் வாராமையின், இது கார் காலம் அன்று என்று கூறி விடலாமா? அல்லது இது கார்காலந்தான் எனினும், அவன் வரவில்லை என்று கூறிவிடலாமா? இதுவே தலைவியின் கலக்கம். இவ்விரண்டினுள் ஏதாவதொன்றுதான் உண்மையாக இருத்தல் கூடும். எது உண்மை என்று அறிய முடியாமல் இவள் வருந்தும்பொழுது தோழி இவளுடைய உதவிக்கு வருகிறாள். எவ்வாறு? 'தலைவன் வரவில்லை என்று கவலையுறாதே! இது கார்காலம் அன்று,' என்று கூறுகிறாள் தோழி. கண்ணெதிரே காண்பதை இல்லை என்று எவ்வாறு கூறுவது என்று நினைக்கிறீர்களா? இதோ தோழி கூறுகிறாள்;

'மழை பெய்கிறதே இந்த மேகம் என்று நினைக்கி

றுயா? தலைவி, கலங்காதே! அறிவில்லாதது இந்த மேகம்! மறதியினுல் நீரை உண்டாலும், உண்டதன பயன இல்லாமற் போய்விடுமா? நெருப்பில் மறந்து கையை வைத்துவிட்டால் சுடா மல் விடுமா? நீரை உண்ட உடனே மேகம சூல் கொண்டுவிட்டது. சூலின முடிவு யாது? மழையாகப பெய்துதானே ஆகவேண்டும்? வேறு வழி இனமையால், மழையைப் பெயதுவிட்டது. இந்த மேகம செய்த முட்டாள செயலினுல் எதத னைப பொருள்கள அந்த முட்டாள பட்டத்தை ஏற றுக் கொளகினறன? மழை பெய்தவுடன (தவறுத லாகத்தான) அஃறிணைப பொருள்களாகிய பிடவு (முல்லை), காந்தள், கொனறை முதலியன பூத்து விட்டன. அவை அறிவுடைய பொருள்களாயின, இது கார்காலமனறு எனறு அறிந்திருக்கும. பாவம! அஃறிணைப் பொருளகளாதலின், கார் காலம என நமபிப பூததுவிட்டன. அவைகளினமேல் தவறு இல்லை. எல்லாம இந்த முட்டாள் மேகம மறதி யால் செயத வேலையாகும. நீயும (பகுத்தறிவுடைய நீயும) இது கார்காலம் என நமபிக்கொண்டு, 'செல் லத் தொலையாததும நீரில்லாமல் வரண்டு போனது மும ஆன நீண்ட வழியினிடத்து வேட்டியை விரித் தது போன்ற வெயில் வீசுகினற கொடுமையால் காணபார் நெஞ்சு நடுஙகும கொடிய காட்டினகண் செனற காதலர் 'வருகிறேன' எனறு கூறிச் சென்ற பருவம இது தானே எனறு கேட்கிறுய. இது அனறு அபபருவம.'

இந்த முறையில் தோழி பேசுவதாக அமைந் துள்ளது பழநதமிழப் பாடல்களுள் ஒனறு. ஆய்ந்து நோக்குமபொழுது மனித மனத்தின் கூறுபாட்டை

2000 ஆண்டுகட்கு முன்னர் இருந்த தமிழர் எவ்வாறு நுணுக்கமாக அறிந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறதன்றோ? இதோ பாடல்!

"நீர்அற வறந்த நிரம்பா நீள்இடைத்
துகில்விரித்து அன்ன வெயில்அவிர் உருப்பின்
அஞ்சுவரப் பனிக்கும் வெஞ்சுரம் இறந்தோர்
தாம்வரத் தெளித்த பருவம் காண்வர
இதுவோ? என்றிசின் மடந்தை! மதியின்று
மறந்துகடல் முகந்த கமஞ்சூல் மாமழை
பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்
காரென்று அயர்ந்த உள்ளமொடு தேர்வுஇல்
பிடவுங் கொன்றையும் கோடலும்
மடவ ஆகலின், மலர்ந்தன பலவே."

(நற்றிணை, 99)

[நிரம்பா—செல்லத் தொலையாத; உருப்பின்—வெப்பத்தையுடைய; பனிக்கும்—நடுக்கத்தைச் செய்யும்; வரத் தெளித்த—வருவதாக உறுதி கூறிய; மதியின்று—அறிவின்றி; இறுத்த-பெய்த; வண்பெயல்-வளப்பம் பொருந்திய மேகம்; அயர்ந்த—சந்தேகித்த; கோடல்—காந்தள் பூ; மடவ—அறிவற்றவை ]

பெய்கின்ற மழையையும், பூக்கின்ற கொன்றை, காந்தள், முல்லை முதலியவற்றையும் மறுத்து, தலைவன் சொல் தவறமாட்டான் என்று தலைவி கொண்டிருக்கும் இமயமலையை ஒத்த நம்பிக்கை வாழ்வதாக! பெண்டிர் இத்துணை நம்பிக்கை கொண்டிருந்தமையின், அற்றை நாள் சமுதாயம் வாழ்ந்தது. இன்றும் நாம் தமிழரெனத் தலை தூக்கித் திரிய இது வாய்ப்பும் வழியும் வகுத்தது.

## நெய்தல் திணை

நெய்தல் திணை கடலிலும் கடல் சார்ந்த இடத்திலும் நடைபெறுவது. மாலைக் காலம் இதற்குரிய காலம் என்பர்.

தலைவன் பிரிவை ஆற்றாளாய தலைவி வாய்விட்டுப் புலம்புவதை அறிவிக்கும் நெய்தல் பாடல்கள். இக்கருத்து இல்லாமல் கடலும், கடலைச்சார்ந்த பொருள்களும் பேசப்படுவதனாலும் நெய்தல் என்ற பெயர் வருதலும் உண்டு.

தலைவியின் உயர்ந்த பண்பாட்டை விளக்குவது இப்பாடல்:

### புன்னை மரத் தங்கை

இவ்வுலகம் தோன்றிய நாளிலிருந்தே இதிற் காணப்பெறும் பொருள்கள் காண்பார்க்குப் புதுமையை நல்கின. புல் பூண்டில் தொடங்கி, மனிதனில் முடிவு பெறும் பல்வேறு உயிர்த் தொகுதிகள் இவ்வுலகில் உள்ளன. சிலவற்றை உயிருடைய பொருள்கள் என்று கண்டுகொள்ளக்கூட மேல் நாடுகட்குப் பத்தொன்பது நூற்றாண்டுகள் ஆயின. 'செடி கொடிகட்கும் உயிர் உண்டு. அவைகளுக்கு உணர்ச்சி கூட உண்டு,' என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டக் கூட இந்நாட்டு அறிவியல் துறை வல்லுனரான ஸர். ஜே. ஸி. போஸ் அவர்களாலேதான் இயன்றது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போஸ் அவர்கள் இவ்வுண்மையைப் புற உலகிற்கு இயந்திர சாதனத்தின் மூலம் மெய்ப்பித்துக் காட்டினார் என்பது போற்றத் தக்கது. ஆனால், இந்நாட்டிற்கூட அப்பொழுதுதான் இவ்வுண்மை காணப்பட்டது போலும் என்று நினைந்து விட

வேண்டா. வேத காலத்திறகூட வடநாட்டாரும, தெனதிசையில் வாழும தமிழரும் இவ்வுண்மையை அறிந்திருந்தனர். தாவரஙகட்கும் உயிர் உணடு எனற உணமையை அறிநததோடு நிறுத்திவிட்டனர் இற்றை நாள அறிவியல் நூலார். ஆனால், பழங்காலததில் நம நாட்டில் வாழ்ந்த பெரியோர் இவ்வுண்மையை அறிந்ததோடு நிலலாமல், இனனும ஒரு படி மேலே செனறு, இத்தாவர உயிர்கட்கும நமககும உள்ள தொடர்பைக்கூட அறிநதனர்; தாவர உயிர்களுடன உறவு கொண்டாடவும தொடங்கினர்.

மிகப் பழைய நூலாகிய 'தொல்காபபியம' தமிழ மொழியினுடைய இலக்கணத்தை அறிவிக்கும நூல் அதுமொழி இலக்கணத்தைமட்டும அறிவிபபதுடன் நினறுவிடாமல், அமமொழி பேசும தமிழர்களுடைய வாழ்ககைக்கும இலககணம் வகுததது. இபபெருமை உலகப பலவேறு மொழி இலககணங்களுளளும தமிழ மொழி இலக்கணமாகிய தொல்காபபியம ஒனறுக்கு மட்டுமே உண்டு. அத்தொல்காபபியத்திறகூடத் தாவரங்கட்கும உயிர் உண்டு எனற உண்மை பேசபபடுவது வியபபே அல்லவா! 'ஒனறறிவதுவே உறறறிவதுவே' எனபது சூத்திரம. இது நன்கு விளங்குதற்பொருட்டு ஓரறிவு உடைய பொருள்கள யாவை எனக் கூறத் தொடங்கி,

"புல்லும் மரனும் ஓர்அறி வினவே;
"பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

என்றும் பேசுகிறது தொல்காப்பியம பொருளதிகாரம், மரபியல் 27, 28-ஆம சூத்திரஙகளில். இதன பொருள் 'புல்லும மரமும ஓர் அறிவுடைய; பிறவும

அக்கிளையும் பிறப்பும உள்ளன,' என்பதாம். புல்லுடனும மரத்துடனும் கிளையாக உள்ள பிற உயிர்கள் புதர், கொடி என்பன. அதைவிடச் சிறப்பான உண்மை இரண்டாம அடியிற்பேசப்படுகிறது. மக்களானும், விலங்களானும் பெறப்பட்ட குழந்தைகளும தொடக்கத்தில் ஓர் அறிவினவாகவே உள்ளன என்கிறார் தொல்காப்பினூர். இவற்றால் தாவரங்களை உயிர்ப பொருள்களாகவும மக்களுடன தொடர்புடையனவாகவும் கொள்கிறார் என்பதும் நன்கு விளங்கும. இக்கருத்தை மேலும வலியுறுத்தவே போலும இத்தாவரங்களின இளங்கன்றுகட்குத் தொல்காப்பியனார் பெயரிடு முறை அமைந்துள்ளது'

> 'பிள்ளை, குழவி, கன்றே, போத்தெனக்
> கொள்ளவும அமையும ஓர்அறிவு உயிர்க்கே.'
>
> (மரபியல், 24)

இன்றுங்கூட இந்நாட்டில் 'தென்னம்பிள்ளை' 'என்று கூறும மரபு உண்டு. தாம பெற்றெடுக்கும பிள்ளைகளையும 'பிள்ளை' என்ற சொல்லால் குறிப்பிட்டுத் தென்னை மரத்தின கன்றையும அதே பிள்ளை என்றசொல்லால் குறிப்பிடுவதானல், இரண்டையும ஒன்றாகவே கருதினர் இததமிழர் என்பதற்குச் சான்றும வேறு வேண்டுமோ!

இனி இக்கருத்துச் சங்கப பாடல் ஒன்றில் மிகவும விளக்கமாகப பேசப்படுவதைக் காணலாம். ஒரு செல்வருடைய மகள் தன தோழிகளுடன சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தாள். பெண்களுடைய விளையாட்டுக்கள் ஆண்களுடைய விளையாட்டுகளைபோல இராமல், அமைதியும் சாந்தமும் உடையனவாகவே இருக்கும. அப்பெண் மகளிர் விளையாடும ஆடல்களில் ஒரு வகை, கும்பலாகக்

குவித்த மண்ணில் ஒருத்தி ஏதாவது ஒரு பொருளை ஒளித்து வைப்பதும், ஏனையோர் அதுஉள்ள விடத்தைத் தேடாமல் உடனே கண்டு பிடிப்பதுமாகும். இன்றுங்கூடச சில இடங்களில் குழந்தைகள் இவ விளையாடடை ஆடுவதுண்டு. 'கிச்சுக்கிச்சுத் தம பலம்' என்ற பெயருடன இது ஆடபபெறும். இத் தகைய விளையாட்டில் ஈடுபட்டிருந்த அசசெல்வரின் மகள், புன்னை விதையை உளளே ஒளிககும காயாக வைதது விளையாடினாள். இரவு நேரம் வநதவுடன உளளே ஒளித்த விதையை எடுக்காமல் அவள் வீட்டுக்குசசென்றுவிட்டாள். அனறிரவு மழை பெய ததது. அடுதத இரண்டு நாட்களில் அபபுன்னை விதை முளைத்துவிட்டது.' தான மறந்து விட்டுச் சென்ற புன்னை விதை செடியாக முளைத்தது கணட அந்தச் சிறுமி, அதனிடம தனிதத அன்பு பாராட் டினாள், பாலும நெயயும விட்டு அதை வளர்க்க ஆரமபித்தாள். செடி நனகு வளரவதைக கணட அவளுடைய தாய மகளுககு ஒரு நல்லுரை பகர்ந் தாள். "மகளே, நீ அனபுடன வளர்ககும இந்தப் புன்னைச் செடியை ஒரு செடி என்று மட்டும நினைந்து வளர்கக வேண்டா; உன உடன பிறந்த தங்கை யாகவே கருதிககொள். உன்னைக்காட்டிலும நல்ல பணபுகள இதனிடம நிறைந்துள்ளன. என்றே நாம் ஒரு நாள நீர் ஊற்றுகிறோம். அன்றேல், பல சந்தருபபங்களில நீர் ஊற்றக்கூட மறந்துவிடுகி றோம. அவவாறு மறந்துவிட்டாலும், மரம் நம மாட்டுப் பகைமை பாராட்டுவதில்லை; பிற்காலத்தில் பூழும* நிழலும தருகிறது; அது மட்டும அன்றி, தன்னையே வெட்டி வீழ்த்தக் கோடரியுடன் வருபவ னுக்கும் அவன வெயிலில் வாடாமல் நிழல் தந்து

உபகரிக்கிறது. இவை அனைத்தைக் காட்டிலும் மற்றொரு சிறப்பும் மரத்தின்பால் உண்டு. மக்கள் தங்களிடம் உயிரும் பொருளும் உள்ள வரைதான் உதவி செய்வார்கள். எத்துணைப் பெரிய உபகாரியும் இறந்த பிறகு யாருக்கும் பயன்படுவது இல்லை அல்லவா? ஆனால், இந்த மரத்தைப் பார்; மரம் வாழும் பொழுது பழமும் நிழலும் தந்து பயன்படுவதுடன், இறந்து விட்ட பிறகும் எரித்தற்குரிய விறகாய் இருந்து பயன் படுகிறது. எனவே, இம் மரம் நீ வளர்த்த மரம்; உன்னினும் சிறந்த உன் தங்கையாகும்.” என்று கூறினாள். தாய் இவ்வாறு கூறியது அச்சிறுமியின் மனத்தில் ஆழப் பதிந்து விட்டது.

சிறுமி வளர்ந்து பெரியவள் ஆகிவிட்டாள். என்றாலும், அவள் மனத்தில் தோன்றிய எண்ணம் மட்டும் மாறவேயில்லை. புன்னை மரத்தைப் பார்க்கும் தோறும் அதைத் தன் தங்கையென்றே கருதிவிட்டாள். சிறுமி தலைவியான நிலையில் அவளுக்கு ஒரு தலைவன் கிடைத்துவிட்டான். தலைவனோடு களவில் ஈடுபட்டாள். அவள் கடற்கரையில் இருக்கும்போது இந்த நட்பு உண்டாகியிருக்கலாம். கடற்கரையில் மீன் உலர்த்தும் தொழிலில் தலைவி ஈடுபட்டிருக்கலாம். பரந்த கடற்கரையில் காலைப் பொழுதில் பரதவர்கள் கூடி மீன் பிடிக்கக் கட்டு மரங்களுடன் கடலினுட் சென்றுவிட்டால் மாலையிலேதான் மீள்வார்கள். ஆதலின் பகற்பொழுது முழுவதும் தலைவன் தலைவியைச் சந்திக்க நல்ல வாய்ப்பாய் இருந்தது. தாழம் புதர் நிறைந்துள்ள சோலைகள் மிக்கு இருத்தலின், பிறர் கண்ணில் படாமல் சந்திப்பதற்கு வாய்ப்புக்கள் இருந்தன போலும்! பல நாட்களாகவே இந்நிகழ்ச்சி

நடைபெற்று வந்தது. இந்நிலையில் தலைவி கடற் கரையில் பார்க்க வேண்டிய அலுவல் முடிந்து விட்டது. அவளைப் பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். முன்போலத் தலைவனை அடிக்கடி சந்திக்க முடியவில்லை. எனினும், தலைவன் விடுவதாக இல்லை. அவன் மெல்லத் தோழியின் உதவியை நாடினன். தோழி, அவனுடைய வருத்தத்தையும் தலைவியின் துன்பத்தையும் கண்டு ஒருவாறு மனம் இரங்கினள், பகல் நேரத்தில் அவன் வந்து போக ஏற்பாடு செய்தாள்; அவன் வந்து தங்களைச் சந்திப்பதற்குரிய ஓர் இடத்தைக் குறிப்பிட்டாள். இதனைப் 'பகற்குறி' என்று இலக்கண நூல் பேசும். அந்த நேரத்தில் தோழி தலைவியும் தானும் வெளியிற்செல்வது போல வீட்டாருக்குப் போக்குக் காட்டிவிட்டுப் புறப்படுவாள்; தான் முன்னரே தலைவனிடம் குறிப்பிட்டுள்ள இடத்திற்குத் தலைவியை அழைத்துக்கொண்டு செல்வாள்.

இம்முறையில் ஒரு நாள் தலைவன் வந்தான். ஒரு புன்னை மரம் நன்கு தழைத்து வளர்ந்திருந்தது. பூரிப்பும் இளமையும் செழித்துக் கொழிக்கும் தன் காதலியைச் சந்திக்க இம்மரநிழல் மிகவும் பொருத்த முடையது என நினைந்துவிட்டான் அவன். பாவம்! அவனுக்கு இம்மரத்தின் வரலாறு எவ்வாறு தெரிய முடியும்? ஆனால், தோழியும் தலைவியும் இம்மரத்தின் அருகே வரக்கூட நாணினர்; ஏன்? வரவே மறுத்துவிட்டனர். தலைவனுக்கு ஒரே வியப்பு உண்டாயிற்று.

அதற்குள் தோழி அவனை நோக்கி, "ஐயனே, இப்பரந்த கடற்கரையில் இன்னும் எத்தனையோ

மரங்கள் இருக்கின்றனவே! அவற்றுள் ஒரு மரத் தடிக்குச் சென்றுவிடுங்கள்," என்று கூறினாள். தலைவனின் வியப்பு இன்னும் அதிகமாகி விட்டது. இவ்வாறு தலைவி மறுப்பதற்குரிய காரணத்தைத் தோழியிடம் கேட்டான். இதோ தோழி பேசுகிறாள்.

"புதிதாக வந்த பாணர்கள் பாடும் மெல்லிய இசைப் பாட்டைப் போல வெண்மையான வலம்புரிச்சங்குகள் ஒலிக்கும் விளங்கிய கடல் நீரை உடைய நெய்தல் நிலத்தலைவரே, யாம் ஒரு நாள் விளையாடும் எம் தோழிகளுடன் வெளிறிய கடற்றுறை மணலில் சென்று விளையாடி இருந்தோம். அப்பொழுது ஒரு புன்னை விதையை மணலுள் புதைத்து விளையாடிவிட்டு வரும் பொழுது அவ் விதையை மறந்துவிட்டோம். மீட்டும் அவ்விடம் சென்று காணுகையில் அப்புன்னை விதை வேர் ஊன்றி முளைத்து நின்றது. அது கண்டு நெய் கலந்த பாலுடன் கூடிய நீரை விட்டு அதனை வளர்த்தோம். எம் அன்னை அதனைக் கண்டு மகிழ்ந்து, 'நீங்கள் வளர்த்து வரும் இப்புன்னையானது நும்மினும் சிறந்தது அன்றோ! இது நும்முடன் பிறந்த தங்கையாகும்,' என்று அதன் சிறப்பைக் கூறினாள். 'எனவே, எம் தங்கையாகிய அதன் எதிரே நாம் சந்திப்பது மிகவும் நாணம் தருவதாய் உளது! அதன் எதிர் நகைத்து விளையாட மிகவும் வெட்கப் படுகிறோம். நீ எம் தலைவிக்கு அருள் புரிவதாயின் இன்னும் எத்தனையோ மரங்கள் இங்குள்ளன காண்!"

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய

நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்ப்ப,
'நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்' என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே;
அம்ம நாணுதும் நும்மொடு நகையே!
விருந்திற் பாணர் விளர்இசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்க! நீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமார் உளவே." (நற்றிணை, 172)

[ஆயம்-தோழியர் கூட்டம்; காழ்மூழ்-முற்றிய விதை முளை; நுவ்வை-உம்முடைய சோதரி; விருந்திறபாணர்-புதிய பாணர்; விளர் இசை-மெல்லிய இசை; வான்கோடு-வெண்மையான சங்கு; நரலும்-ஒலிக்கும்; துறை கெழு கொண்க-கடற்றுறையின் தலைவனே.]

புன்னை மரத்தையும் உடன் பிறந்த தங்கையாகக் கருதி, அதன் எதிரிலும் தலைவனுடன் விளையாட மறுத்த தலைவியின் பண்பாடும், புன்னையைத் தங்கை என்று கூறிய தாயின் பண்பாடும் அறிந்து மகிழ்தற்குரியன! இவ்வாறு பிறர் பார்க்கத் தலைவனைச் சந்திப்பது வெட்கமாகிறது என்று குறிப்பால் அவனை விரைவில் வந்து மணந்துகொள்ளக் கூறுகிறாள் தோழி.

* * * *

சமய சஞ்சீவியாகிய தோழியின் அறிவுத்திறனை விளக்கும் பாடல் இது.

**எம் ஊரில் தங்கலாமா?**

நெய்தல் நிலக் கருப்பொருள் என்று கூறத்தக்கவை பனை புன்னை முதலிய மரங்களும்; நாரை, சுறா முதலிய பறவை விலங்குகளும்; மீன் முதலிய உணவுகளும் ஆகும். இந்நிலத்

இல் வாழும் மக்கள் 'பரதவர்' என்று குறிக் கப்படுவர். தலைவன் 'துறைவன்' என்றும் 'சேர்ப்பன்' என்றும் வழங்கப்படுவான். உரிய பொருள் என்று கூறத்தக்கது தலைவி தலைவனைப் பிரிந்து ஆற்றாமையால் அரற்றும் நிலைமைதான். பெரும்பாலும் தலைவனும் தலைவியும் குடும்பம் நடாத்துகிற காலத்தில், பொருள் தேடவோ, போர் செய்யவோ தலைவன் பிரிந்து சென்றுவிடுவான். ஒரு காலத்தைக் குறிப்பிட்டு அந்த நாளில் வந்து விடுவதாகக் கூறிப்போனாலும், தவிர்க்க முடியாத பல காரணங்களால் அந்த நாளில் வர இயலா மல் போவதும் உண்டு. அவ்வாறாயின், தலைவி சில காலம் பொறுமையுடன் இருப்பாள். பின்னும் தலைவன் வரவில்லையாயின், அவள் துயரம் தாங்க மாட்டாமல் வாய்விட்டு அரற்றுதலும் உண்டு. இவ் வாறு அவள் துயரைக் கூறும் பாடல்களை 'நெய் தல் திணைப் பாடல்கள்' என்பர். இவ்வாறு உள்ள பாடல்கள் 'உரிய பொருளால்' நெய்தல் என்ற தொகுப்பைச் சேரும். இன்னும் சில சந்தர்ப்பங்களில் கற்புக் காலம் அல்லாத களவுக் காலத்திலும் இத்த கைய பாடல்கள் தோன்றுவதுண்டு. களவில் தலைவி எவ்வளவு துயரம் அடைந்தாலும் அத்துயரைப் பிறர் அறிய வெளிக்காட்டல் இயலாது. எனவே, அவள் துயரைப் பெரிதுபடுத்திக் காட்டாமல் பாடல் அதனைக் குறிப்பால் மட்டும் சுட்டுவதுண்டு.

தலைவி துயரைப் பெரிதாகக் காட்டாத பாடல் களை எவ்வாறு நெய்தல் திணை என்று பிரிப்பது?

நெய்தலுக்குரிய கடல், மீன் பிடித்தல், நாரை, சுறு முதலியன பேசப்பட்டாலும், அப்பாடலை நெய் தல் என்றே குறிப்பர். இவ்வாறு முதற்பொருளா

ளும், கருப்பொருளாலும் நெய்தல் என்ற பெயரைப் பெற்ற பாடல் ஒன்றைக் காண்போம்:

கடலை நம்பி வாழும் வாழ்க்கை இடர் மிகுந்த வாழ்க்கையாகும். காலையில் கடல்மேல் உணவு தேடிச் செல்பவர், மாலையில் தவறாமல் திரும்பி வந்து விடுவர் என்ற உறுதி இல்லை. ஒரு மணி நேரத்தில் கடலில் எத்தகைய வேறுபாடுகள் தோன்றும் என்பது கூறவியலாது. எனவே, நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் இயற்கையிலேயே உடல் உரமும் மனத்திண்மையும் படைத்தவர்களாய் இருப்பார்கள். துன்பம் நேர்கையில் அதற்கு அஞ்சிக் கையற்று விடாமல் அதனை ஆற்றி இருப்பதே மனத்திண்மை என்று கூறப்பெறும். துயரத்தை ஆற்றி இருப்பதால் துயரத்தை அனுபவிக்கவில்லை என்று கூறுதல் தவறாகும்.

நல்ல கடல் துறைக்குத் தலைவன் அவன். கடல் படு செல்வம் அனைத்தும் அவனிடம் நிரம்ப உள்ளன. ஆனால், அவன் மனம் அவற்றால் அமைதியைப் பெற முடியவில்லை. மனத்தில் அமைதியை உண்டாக்கும் காதலியை எதிர்ப்பட்டான் ஒருநாள்; அதுவும் ஒரு கடற்கரையில். கடற்கரை என்று கூறினவுடன் சென்னைக் கடற்கரையையும் ஆங்கு வரும் கூட்டத்தையும் நினைந்துகொண்டு அவதியுற வேண்டா. தலைவன், தலைவியைச் சந்தித்த இடம் அமைதியானதும், மக்கள் நடமாட்டம் அற்றதுமான ஒரு கடற்கரை. கடல் காதலை மிகுதிப்படுத்தும் இயல்புடையது என்பது பழந்தமிழர் கொள்கை. 'நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி, நேரம் கழிவதிலும் நினைப்பின்றியே சாலப் பலப்பல நற்பகற் கனவில் தன்னை மறந்த லயம் தன்னில் இருந்தேன்

என்று பாரதியார் பாடியதும் இக்கருத்தை வலியுறுத்தும். கடற்கரையில் தனியே காணப்பட்ட அக்காரிகை அத்தலைவன் மனத்தைக் கவர்ந்துவிட்டாள். பல நாளும் கடற்கரைக்கு வரும் பழக்கம் உடையவன் அவன்; அவளும் அவ்வாறே. ஆனால், ஒரு நாள் அவனும் அவளும் ஒருவரை ஒருவர் கூர்ந்து நோக்கினர்; காதல் பிறந்தது. அன்றிலிருந்து அவனும் அவளும் பலவிடங்களில் தனியே சந்தித்தனர்.

அவர்கள் ஒழுக்கம் மெள்ளத் தோழிக்கு எட்டியது. தோழியும் தலைவியைப் போல ஒத்த வயதினள்; ஆகலின், தலைவியின் இவ்வாழ்க்கை மாற்றுப்பாட்டில் அதிகம் வியப்படையவில்லை. 'நடக்கவேண்டிய ஒன்றுதானே இது.' என்று கருதி இருந்துவிட்டாள் போலும்! நாட்கள் பல சென்றன. தலைவன் தலைவியருடைய நட்பு நாளுக்கு நாள் பிறைமதி போல வளர்ந்துகொண்டே வந்தது. அந்த அளவில் அது மகிழ்ச்சிக்குரிய செயல்தான். ஆனால், இது எவ்வாறு சென்று முடியப்போகிறதோ என்ற ஐயம் தோழிக்குத் தோன்றிவிட்டது. தலைவன் மிக உயர்ந்தவன், பண்பாடுடையவன். எனவே அவன் தலைவியைக் கைவிட்டுவிட மாட்டான் என்றாலும், எத்தனை நாட்களுக்குத்தான் இவ்வாறு மறைமுகமாகவே அவன் வந்து திரும்புவது? மறைந்து ஒழுகும் களவு ஒழுக்கத்தில் அதிக இன்பத்தைப் பெறுகின்றான் தலைவன் என்ற நினைவு தோழிக்கு. தலைவி மட்டும் அதில் மகிழ்ச்சி அடையவில்லையா? அடையத்தான் செய்கிறாள். ஆனாலும், அவள் பெண்தானே! பெண்களுக்கே உரிய எத்தனையோ கவலைகள் அவளைப் பிடித்து ஆட்டுகின்றன. என்ன

செய்வாள் பாவம்! வீட்டில் தாய், அண்ணன்மார் தந்தை என்ற அனைவரும் என்ன நினைப்பார்களோ என்ற அச்சம், ஒரு புறம்; ஊரில் உள்ள பெண்டிர் தாம் எப்படிப்பட்டவர்! தாம் உண்டு, தம் வேலை உண்டு என்று இருக்கப்படாதா? அதுதான் போகட்டும். இப்பெண்டிர் அனைவரும் பிறக்கும் பொழுதே பாட்டிமார்களாயப் பிறந்துவிட்டார்களா! ஒவ்வொருத்தியும் இளமையுடையவளாய் இருந்திருக்க மாட்டாளா! அந்தக் காலத்தில் தான் வாழ்ந்த வாழ்வை ஒவ்வொருத்தியும் நினைத்துப் பார்க்கமாட்டாளா? வேறு வேலையே இல்லாதவர்கள் போல இப்பெண்கள் ஏன் இப்படித் தலைவியைப் பற்றிப் பேசி அவள் பாவத்தைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்?

அம்மம்ம! ஒரு நாளில் எப்பொழுதோ வருகிறான் தலைவன். அவனுடன் அவள் கழிக்கும் சில நாழிகை நேரத்திற்காக அவள் அனுபவிக்கும் தண்டனைதான் எவ்வளவு! அவன் பிரிவால் உண்டாகும் துயரம் ஒரு புறம். அதனைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டி ஏசும் ஊர்ப் பெண்கள் ஒரு புறம். இவை இரண்டின் இடைப்பட்டு அவள் படும் பாடு ஒருபுறம்! இவை எல்லாம் தலைவனுக்கு எங்கே தெரியப் போகின்றன! தலைவியின் நினைவு வந்தவுடன் அவன் புறப்பட்டுவிடுகிறான். பகல் என்றும், இரவு என்றும், மழை என்றும், வெயில் என்றும் அவன் பார்ப்பது இல்லை. அவன் வரும் வழியிலேதான் எத்துணை அச்சந்தரும் தொல்லைகள்! 'தன் இசைகை கொண்டலையும் சிங்கம்; அதன் சத்தத்தால் கலங்கும் யானை' போன்றவை. வரும் வழியிலேதான் எத்துணை ஆறுகள்! அவற்றில் முதலைகள் எத்தனை! நினைக்கும் பொழுதே நெஞ்சு

நடுங்குகிறது! இவை அனைத்தையும் கடந்து அவன் வருகிறான் என்று நினைத்தாலே, அவன் வந்த பிறகு பெறும் இன்பம் வேண்டாம் என்று கூறத் தோன்றுகிறது. அவனோ, இவற்றுள் ஒன்றுக்கும் கவலைப்படுபவனாகவே தெரியவில்லை. வழியில் வரும் ஏதம் தலைவி படும் துயரம் இவை இரண்டில் ஏதேனும் ஒன்றுக்காவது அவன் அஞ்ச வேண்டுமே! அதுதான் இல்லை. நாட்கள் கழிகின்றன. திருமணம் செய்துகொண்டு வாழ வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு எழுந்ததாகத் தெரியவில்லை.

நாட்கள் செல்லச் செல்லத் தலைவியின் வருத்தம் எல்லை கடக்கிறது. தோழி ஒருத்திக்குத்தான் தலைவியின் துயரம் எவ்வளவு என்பது தெரியும். தலைவனைக் கண்டு பலபடியாகக் குறிப்பாகத் தோழி பேசிப் பார்த்தாள். அவனுடைய காதில் அச் சொற்கள் ஏறுவனவாகத் தெரியவில்லை. நயமாகப் பல முறையும் தம் குறையைச் சொல்லி வருந்து முகமாகப் பல கூறிப் பார்த்தாள். அவனிடம் நேரே கூறிய முறைகளைவிடப் பல முறை அவன் காதில் விழும்படியாகவும் கூறினாள். இவ்வாறு அவள் கூறுவதைச் ‘சிறைப்புறமாகக் கூறியது’ என்று புலவர் கூறுவர். இவ்வாறு மறைமுகமாகப் பல முறை கூறியும் தலைவன் திருமண ஏற்பாடு ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டமையின், அத் தோழி ஒரு நாள் மாலைப் பொழுதில் தலைவனைக் கண்டு நேரே அவனிடம் பேசத் தொடங்கிவிட்டாள்.

பகல் நேரத்தில் தலைவியைச் சந்திக்க வந்தான் தலைவன். அவன் புறப்படுவதற்குள் மாலை முற்றி இருள் கவிய ஆரம்பித்துவிட்டது.

*"மிகவும் உயர்ந்த ஆகாயத்தில் திரிகின்ற செழுமையான கதிர்களை உடைய சூரியன் பெரிய மலைப் பக்கத்தில் மறைந்து விட்டான். ஆதலால், கடற்கரையில் யாரும் போக்குவரத்து இல்லை. இறால் மீன்களைத் தின்றுவிட்டு எழுந்த கரிய கால்களையும் வெண்மை நிறத்தையும் உடைய நாரைகள், உப்புக் குவட்டின் மேலே பறந்து சென்று, கரிய கிளைகளையுடைய புன்னை மரத்தின் கிளைகளில் தம் துணையுடன் தங்கிவிட்டன. தண்டுடன் கூடிய நெய்தல் மலர், மறையும்படியாக நீர் பெருகுகிற கழியில் துணையுடன் கூடிய சுறா மீன்கள் வழங்குகின்றன. இரவிலும் ஒலிக்கின்ற கடலில் பல விளக்குகளை எடுத்துக்கொண்டு எம் சுற்றத்தார் மீன் பிடிக்கச் சென்றுவிட்டார்கள். ஆதலால், அலைகளின் பிசிர் வீசும் கடல் மத்தளம் போல ஒலிக்கிற எம்முடைய ஊரில் இன்றிரவு தங்கிவிட்டுப் போனால் யாது குறை ஐயா?"*

"சேய்விசும்பு இவர்ந்த செழுங்கதிர் மண்டிலம்
மால்வரை மறையத் துறைபுலம் பின்றே;
இறவுஅருந்தி எழுந்த கருங்கால் வெண்குருகு
வெண்குவட்டு அருஞ்சிறைத் தாஅய்க் கரைய
கருங்கோட்டுப் புன்னை இறைகொண் டனவே;
கணைக்கால் மாமலர் கரப்ப மல்குகழித்
துணைச்சுறா வழங்கலும் வழங்கும்; ஆயிடை
எல்இமிழ் பனிக்கடல் மல்குசுடர்க் கொளீஇ
எமரும் வேட்டம் புக்கனர்; அதனால்
தங்கின் எவனோ தெய்ய பொங்குபிசிர்
*முழவுஇசைப் புணரி எழுதரும்
உடைகடல் படப்பைஎம் உறைவின் ஊர்க்கே?'

(நற்றிணை, 67)

[மால் வரை-பெரிய மலை; துறை புலம்பின்றே. கடற்கரையில் ஆள நடமாட்டம் இல்லை; இறவு. இருள்; வெண்குவட்டு-உப்புக் குவட்டில்; அருகு சிறைத்தாஅய்-அரிய சிறகை வீசிப்பறந்து; இறை. தங்குதல்; கணைக்கால்-கொழுத்த தண்டு; எல இமிழ்-இரவு சூழ்ந்த, முழவு-மத்தளம்; உடை கடல்-அலைகள் மேல் எழுந்து வீழ்ந்து உடைகிற கடல்]

திருமணம் ஆவதற்கு முன் தலைவியின் வீட்டில் தங்கிச் செல்லலாம் என்று கூறுவது இயலாத காரியம் என்பதைத் தலைவன் அறிய மாட்டானா? தோழிக்கும் அது தெரியாதா? இருவருக்குமே நன்கு தெரியும். ஆனால், ஏன் தோழி இவ்வாறு கூறினாள்? இவ்வாறு கூறுவதன் உட்பொருளை நன்கு அறிந்தாவது தலைவன் மணம் செய்து கொண்டு வீட்டில் தங்கமாட்டானா என்ற எண்ணம் தான்?

கடல் துறையில் யாரும் இல்லை என்றதனால் அவன் மீண்டு போகும்பொழுது கள்வரால் இடைஞ்சல் ஏற்படக் கூடும் என்பதைக் குறிப்பிட்டாள். நாரைகள் கூட மாலைக்காலத்திலே தம் பேடைகளோடு கூட்டில் உறையச் செல்கின்றன என்ற குறிப்பால், 'ஆண் மகனாகிய நீ இன்னும் மணம் செய்துகொண்டு குடும்பம் வைக்காமல் தனி வாழ்க்கையில் களவே சிறப்பென்று கருதி வாழலாமா?' என்றும் இடித்துக் கூறினாள். கேவலம் கொல்லுதலையே தொழிலாகக் கொண்ட சுறாக்கூட்டத் துணையுடன் வாழ்கிறதென்று எடுத்துக் காட்டுதலில் எவ்வளவு எள்ளல் குறிப்பைப் பெய்துவிடுகிறாள் அத்தோழி! 'எம் சுற்றத்தார்கள் கடலில் மீன் வேட்டைமேல் சென்றுள்ளார்கள்.' என்பதால்

வீட்டில் ஒருவரும் இல்லையென்பதைக் குறிப்பிட்டு விட்டு, 'நீர் இந்த நேரத்தில் செல்வது கூடத் தகாது.' என்பதையும் 'எம் சுற்றத்தார் கடற்கரையில் இருப்பர்' என்னும் குறிப்பால் சுட்டுகிருள்.

## மருதத் திணை

அகத்துறை இலக்கியத்தில் குறைந்த அளவு பாடல்களைக் பெற்றிருப்பது மருதத் திணையேயாம். வயலும் வயல் சார்ந்த இடமும் இதற்கு நிலங்களம், விடியற்கால நேரம் இதற்குரிய பொழுதாகும்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, தவருன செயல்களில் ஈடுபட்டுவிட்டு, விடியற்காலம் மீள்கிருன். அந்நிலையில் தலைவி அவனுடன் பிணங்கிக் கொள்கிருள். அவர்கள் ஊடலை (பிணக்கை) அடிப்படையாகக் கொண்டு தோன்றுவன இப்பாடல்கள்.

'பெயரன் பிறந்தான்.'

தவறு செய்த தலைவன் வருந்துகிறதைச் சித்திரிக்கிறது இப்பாடல்.

மருதம் என்ற இத்திணையுள் தலைவன் தலைவியரிடையே தோன்றும் சிறு பிணக்குகள் கூறப்பெறும். பிணக்குகள் எப்பொழுது தோன்றும்? ஒருவருக்கு விருப்பம் இல்லாத ஒரு செயலை மற்றவர் செய்ய நேர்ந்தால்தானே வருத்தம் நேரிடமுடியும்? தலைவன் எது செய்யினும் தலைவிக்கு அது விருப்பத்தைத் தருதலின், குடும்பக் காரியங்களில் பிணக்கு ஏற்பட வழியில்லை. மேலும், தலைவனே, தலைவியோ, தமக்கென்று தனிப்பட்ட ஒரு செயலையும் செய்வதில்லையாகலானும், எது செய்யினும் அது குடும்ப நலன் கருதியே செய்யப

படுதலானும் பிணக்குத் தோன்ற வழியில்லை. எனவே, மருதமாகிய ஊடல் தோன்ற ஒரே ஒரு காரணந்தான் எஞ்சியது. தலைவன் தலைவியை ஏமாற்றிய வழியே ஊடல் தோன்றலாயிற்று. தலைவி தனக்கு என்ன கொடுமையைத் தலைவன் இழைத்தாலும் பொறுத்துக்கொள்வாள். ஆனால், அவன் வேறு ஒருத்தியை விரும்பினான் என்று கண்டால் பொறுக்கமாட்டாள். 'வீட்டில் சோற்றைப் பங்கிட்டாலும் வாழ்க்கையைப் பங்கிடமாட்டாள்,' என்பது இன்றும் தென்னாட்டில் வழங்கும் பழமொழி.

'இத்துணைச் சிறந்த காதல் மணம் புரிந்து கொண்ட தலைவனா வேறு ஒரு பெண்ணை விரும்பினான்?' என்று கேட்கத் தோன்றுகிறதா? ஆம்! அவனேதான் இவ்வாறு செய்தான். அவன் இவ்வாறு செய்வதற்காகவே பெண் குலத்தின் ஒரு பகுதியைப் பிரித்துப் 'பரத்தையர்' என்று அவர்கட்குப் பட்டமும் சூட்டி, ஊரின் ஒதுக்கில் இடம் கொடுத்து வைத்திருந்தான். அவருள் 'காதற் பரத்தையர், இற்பரத்தையர், சேரிப் பரத்தையர்' என்ப பல பிரிவினர் உண்டு.

ஒரு சில ஆடவர் இச்சேரிகட்கும் சென்று வந்தனர் போலும்! ஒரு நாட்டில் வாழும் மனிதர் அனைவரும் சிறந்த பண்புடையராகவே இருத்தல் வேண்டும் என்று எதிர்பார்த்தலும் இயலாத காரியம். பலவேறு பண்பாடுடைய மக்களும் கலந்ததுதான் சமுதாயம் என்று கூறப்படும். இத்தகைய மனப் பண்புடையவரும் பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்தனர். இவர்கள் வாழ்வு பற்றியும் ஒரோ வழிக் கவிஞன் பாடல்கள் பாடினான். அவற்றை மருதத்

திணைப் பாடல்களாகப் பிற்காலத்தார் தொகுத்தனர். தலைவன் இவ்வாறு பரத்தையின் வீட்டுக்குச் சென்று வந்த பொழுது தலைவி அது பொறுக்க மாட்டாமல் அவனை வீட்டினுள் அனுமதிக்க மறுத்து விடுவாள். தலைவன் பாடு திண்டாட்டமாய்ப் போய்விடும். இதுமாதிரி சந்தருப்பங்களில் தலைவன் பிறருடைய உதவியை நாடி, அது சாக்காக வீட்டினுள் நுழைவதும் உண்டு. அவன் உதவி வேண்டுபவர்கள் தோழி, விருந்தினர் குழந்தை என்ற மூன்று இனத்தவராவர். தோழியை வேண்டிக் கொள்ள, அவள் தலைவியிடம் தூது நடந்து தலைவனை மன்னித்துவிடுமாறு கூறுதலும் உண்டு. தலைவனிடம் பேச்சு வார்த்தைகள் இல்லாமலே தலைவி குடும்பம் நடத்திக்கொண்டு வரும் வேளையில் தலைவனுடைய நற்காலத்தின் அறிகுறியாக விருந்தினர்கள் வந்து சேர்தலும் உண்டு. விருந்தினரின் எதிரே தலைவி தன் கோபத்தைக் காட்டுதல் பண்பாட்டுக்கு விரோதமன்றோ? எனவே, விருந்தினரைக் கண்டவுடன் அவள் கோபம் தணிந்துவிடுவாள். இன்னும் சில சந்தருப்பங்களில் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு அது சாக்காகத் தலைவன் உள்ளே வந்துவிடுதலும் உண்டு. இவை அனைத்திற்கும் உதாரணமாகப் பல பாடல்கள் காணலாம்.

மனித வாழ்க்கையின் விரும்பத்தகாத ஒரு பகுதியை விளக்குவதுதான் மருதத்திணைப் பாடல். அந்தச் சமுதாயத்தில் வாழ்ந்த மக்களுள் ஒரு சிலரே இந்தத் தவறான வாழ்க்கையைக் கைக்கொண்டிருக்கக்கூடும் என்று நினைப்பது பொருத்தந்தானே?

அதற்கேற்பவே அகத்துறைப் பாடல்களில் மருதத் திணைப் பாடல்கள் நூற்றுக்குப் பத்து விதமே உள்ளன. நூறு ஆண் மக்கள் வாழ்கின்ற ஓர் இடத்தில் பதின்மர் ஓரளவு பொருந்தா ஒழுக்கம் உடையவராய் வாழ்வதனால் பெருந்தீங்கு எதுவும் விளைந்துவிடப் போவதில்லை.

சமுதாயத்தைப் பொறுத்த மட்டில் இவ்வகை வாழ்க்கை விரும்பத்தகாததாயினும், கவிதையுலகில் மருதம் பற்றிய பாடல்கள் மிக்க சுவையுடையன வாய் இருக்கின்றன. பரத்தையர் வீடு சென்று வந்த தலைவனைப் பற்றிக் கூறும் பாடல்கள் ஒருபுறமிருக்க, அப்பரத்தையரைப் பற்றியும் அவர்களுடைய மனோதத்துவம் பற்றியும் கூறுகிற பாடல்களும் சில உண்டு.

தங்களுடைய வாழ்க்கை இழிந்தது என்றோ, தவறானது என்றோ, அப்பரத்தையர்கள் கருதிய தாகத் தெரியவில்லை. தம்மாட்டு வந்து செல்லுகின்ற தலைவன்மார் தம்முடைய வீட்டில் தலைவியிடம் அஞ்சி நடுங்குகின்றதைக் கண்டு அவரை எள்ளி நகையாடுகின்ற அளவுக்கு அவர்கள் மனத்திடம் படைத்தவர்களாய் இருந்திருக்கின்றார்கள். தலைவியர் மாட்டு அச்சமிருப்பினும் மீட்டும் மீட்டும் தம்பால் தலைவர்கள் வருகின்ற காரணத்தாலும், தமக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்து போற்றுகின்ற காரணத்தாலும், தாங்களும் சமுதாயத்தின் ஒரு சிறந்த உறுப்பெனவே அப்பரத்தையர் கருதிக்கொண்டனர். இந்நிலையில் உலகப் பெரியாருள் ஒருவரான 'டால்ஸ்டாய்' எழுதிய 'குரூட்டர் சொனட்டா' என்ற கதை நினைவுகூர்தற்கு உரியது. உணவு விடுதி ஒன்றைக் கண்ட டால்ஸ்டாய் உள்ளே செல்லு

கிறார். அங்கே சில பெண்கள் கேளிக்கையில்பொழுது போக்குவதைப் பார்த்து, "நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?" என்று கேட்கின்றார். அவர்கள் சிரித்துக்கொண்டே, "நாங்கள் சும்மா தான் இருக்கிறோம்," என்று விடை பகருகிறார்கள். அதை நம்ப முடியாத டால்ஸ்டாய் விடுதித் தலைவரைப் பார்க்கின்றார். உடனே அத்தலைவர் மிக்க சினத்துடன் அப்பெண்களைப் பார்த்து, "பேதைகளே, நீங்களெல்லாம் பரத்தையர்கள் என்பதை அவருக்குத் தெரிவியுங்கள்," என்று கூறுகிறார். ஆனால், அப்பெண்கள் அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பதைப் பார்த்த டால்ஸ்டாய், விடுதித் தலைவரைப் பார்த்து, "ஐயா, நாமெல்லாம் (ஆண்களெல்லாம்) நல்லவர்களாய் இருந்துவிட்டால் இப்படிப்பட்டவர்கள் சமுதாயத்தில் இருக்க வேண்டுவதில்லை அல்லவா?" என்று கூறினாராம்.

பரத்தையரின் மனோ நிலையை விளக்க இவ்வோர் உதாரணத்துடன் நற்றிணைப் பாடல் ஒன்றையும் பார்ப்போம்:

தலைவன் பரத்தை வீட்டில் வந்து பல நாட்களாய்த் தங்கிவிட்டான். இவன் வீட்டை விட்டு வருகிற காலத்தே தலைவி சூல் முதிர்ந்திருந்தாள். எனவே, பரத்தையின் இல்லம்புக்க தலைமகன், வீடு செல்ல வேண்டும் என்னும் நினைவின்றி, இங்கேயே தங்கிவிட்டான். இந்நிலையில் ஒரு நாள் அவனுக்கு மகன் பிறந்த செய்தியைச் சிலர் வந்து கூறினர். எவ்வளவுதான் தலைவியை மறந்தவன் போல இங்குத் 'தங்கிவிட்டாலும், மகன் பிறந்துவிட்டான் என்று கேள்விப்பட்டவுடன் வீடு திரும்ப வேண்டும் என்ற எண்ணம் வாராமலா இருந்துவிடும்? எனவே,

தன் வீட்டுக்குச் செல்ல முடிவு செய்துவிட்டான். ஆனால், அம்முடிவைக் கொண்டு செலுத்துவதில், இரண்டு பெரிய அல்லல்கள் உள்ளன. முதலாவது, இத்தனை நாட்கள் தங்கிய பரத்தை வீட்டை விட்டு எவ்வாறு திடீரென்று புறப்படுவது என்பதாகும். இரண்டாவது, இத்தனை நாட்கள் எட்டிப் பாராத தன் வீட்டுள் இப்பொழுது எப்படித் திடீரென்று நுழைவது என்பதாகும். இவ்விரண்டு தொல்லைகளையும் ஒரே வகையில் தீர்க்க முனைகிறான் தலைவன். இரவு நடு யாமத்திற்குமேல் புறப்பட்டால் இரண்டு வீட்டில் உள்ளவர்களும் நன்கு உறங்கிக்கொண்டிருப்பார்கள். எனவே, அந்த நேரத்தில் புறப்பட்டுத் தன் வீட்டுள் புகுந்துவிடலாம் என அவன் முடிவு செய்துவிட்டான். ஆனால்; பரத்தையை இவ்வளவு எளிதாக ஏமாற்ற முடியுமா? எனவே, அவள் அவன் செய்தவை அனைத்தையும் பார்த்துக் கொண்டேயிருந்தாள். தலைவனுடைய சுற்றத்தார் அனைவருக்கும் பெருத்த மகிழ்ச்சி உண்டாயிற்று. எப்படியோ தலைவன் அப்பரத்தையை ஏமாற்றி விட்டு இன்று தப்பித்துக்கொண்டு வந்தானே என்று மகிழ்ந்திருக்கின்றனர்.

ஆனால், பரத்தைக்கு மட்டும் உண்மை தெரியும். அவன் தான் விட்டதாலேதான் போக இயன்றதே தவிரத் தன்னை ஏமாற்றிவிட்டுச் செல்லவில்லை என்பதையும் அவனுடைய சுற்றத்தார்கள் காதில் விழும்படி கூறிச் சிரிக்கிறாள்.

"பெரிய காவலையுடைய தலைவனுடைய பெரிய மாளிகையில் நீண்ட நாவையுடைய ஒளி பொருந்திய மணியானது அடித்தது. ஒலி உண்டாக்குகின்ற தென்னங்கீற்றால் மிடைந்து அலங்கரிக்கப்பெற்ற

முற்றத்தில் வெண்மையான மணல் பரப்பப்பட்டிருக்கிறது. முன்பு தலைவன் பரத்தை வீட்டுக்குச் செல்கையில் அவனைச் சுற்றிப் பாணர் கூட்டம் காவல் காத்துச் சென்றதைப் போல இப்பொழுது தலைவி வீட்டில் ஆராய்ந்த ஆபரணத்தை அணிந்த மகளிர் நற்சொல் கேட்டுச் சூழ்ந்து ஏற்றத்தில் நிற்கின்றனர். நறுமணம் கமழும் விரிப்பு விரித்துள்ள நல்ல படுக்கையில் செவிலித்தாயுடன் சமீபத்தில் பிறந்த புதல்வன் உறங்கிக்கொண்டிருக்கிறான். பிணி அண்டாமல் இருக்க வெண்சிறு கடுகை அரைத்து எண்ணெயுடன் கலந்து, அதனால் தலை முழுகிய ஈரத்துடன் அழகு விளங்கும் மேனியையுடைய தலைவி தன் இரண்டு இமைகளும் ஒன்றுடன் ஒன்று பொருந்த உறங்குகிறாள். அத்தகைய நடு இரவு நேரத்தில் அகன்ற நீர்த்துறையையுடைய தலைவனும் கள்ளனைப்போல அவனுடைய வீட்டினுள் நுழைந்தான், தலைவனின் தந்தையின் பெயரை வைத்துக்கொள்ளக் கூடிய மகன் பிறந்த காரணத்தால்."

"நெடுநா ஒண்மணி கடிமனை இரட்டக்
குரைஇலைப் போகிய விரவுமணற் பந்தர்ப்
பெருமபாண் காவல் பூண்டென ஒருசார்த்
திருந்துஇழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறிஉற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈர்அணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த
நள்ளென் கங்குல் கள்வன் போல
அகன்துறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே." (*நற்றிணை, 40*)

[நெடு நா ஒண்மணி-நீண்ட நாவையுடைய மணி கட்டி இருத்தலின் செல்வ மிகுதி கூறினார், இரட்ட-ஒலிக்க; பெரும்பாண-தலைவனைப் பரத்தை வீட்டுக்கு அழைத்துச் செல்லும் தொழிலுடையவன்; விரிச்சி-நல்லசொல் (சகுனம்)கேட்டல், வெறி-வாசனை; அறுவை-அறுக்கப்பட்டது, துணி; புனிறு நாறும்-ஈன்ற அணிமை தோன்றும்; ஐயவி-வெண் சிறு கடுகு (இதனைக் கலந்தால் பேய் முதலியன அண்டா எனப் பழந்தமிழர் நம்பினர்); நெய்யாட்டு-எண்ணெய் முழுக்கு, யாக்கை-உடம்பு, சிறந்தோன் பெயரன்-தலைவனுடைய தந்தை(சிறந்தோன்)க்குப் பெயரன்.

* * * *

## 'வாரீரோ விருந்தினரே?'

தலைவன் தவற்றைத் தலைவி காணும் முறையைக் கூறும் பாடல் இது.

விடியற்கால நேரம்—கதிரவன் உதயம் செய்ய இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது. என்றாலும், ஓரளவு வெளிச்சம் தோன்றிவிட்டது. இந்த நேரத்தில் ஒருவன் முக்காடு இட்டுத் தலையை மறைத்துக்கொண்டு, ஊரின் வெளிப்புறத்தே இருந்து வருகிறான், ஏதேனும் ஒலி அண்மையில் கேட்டாலும் மிகுந்த அச்சத்துடன் திரும்பிப் பார்க்கிறான். அவ்வளவு கோழையா இவன், அரவத்தைக் கேட்டு அஞ்சுவதற்கு? இல்லை. தன்னை இந்த நிலையில் யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதே இவனுடைய நோக்கம் போலும்! ஏன் இவ்வாறு பிறரைக் கண்டு அஞ்சுகிறான்? ஒரு வேளை பிறர் பொருளைத் திருடிவிட்டு வருகிறானோ? அவ்வாறு தெரியவில்லை. இவன் முகத்தைப் பார்த்தால் உயர்ந்த இடத்தைச் சேர்ந்தவன் என்று கூறத் தோன்றுகிறதே தவிரத் திருடன் என்று கூற நா எழவில்லை, அவ

வாருயின இவன் ஏன இவ்வாறு அஞச வேண்டும்? ஆம்; ஏதோ செய்யத் தகாத செயல் ஒன்றைச் செய்துவிட்டு வருகிருன் போலும்! 'செய்யற்க சான்ருேர் பழிக்கும் வினை,' என்ற குறளை மறந்து விட்டு ஏதோ தவறு செய்திருக்க வேண்டும்.

இவனுடைய இளமை இவன் என்ன தவறைச் செய்திருக்கக் கூடும் என்று நாம் ஊகிக்க இடம் தருகிறது. மனிதர்கள் தவறு என்று அறிந்திருந்தும் செய்யும் தவறுகள் பல. அவற்றுள் ஒன்றும் பெரிய தவறு ஒழுக்கக் கேடுதான். தன்னுல் காதலித்து மணம் செய்து கொள்ளப்பெற்ற மனைவி வீட்டில் இருக்கிருள். அவளையும் தானே தேடிப் பிடித்துக் காதலித்தான். கொடுப்பாரும் அடுப்பாரும் இல்லாமல் அவளுடன் நீண்ட நாட்கள் களவு வாழ்க்கையில் ஈடுபட்டான். அத்தோழி இவனை எத்துணை முறை கண்டு கேட்டாள்! நேரடியாகவும் குறிப்பாகவும் தலைவி படும் பாட்டை எடுத்துக் கூறினுள்; மணம் செய்துகொண்டு வாழ வேண்டுவதன் இன்றியமையாமையை எடுத்துக் கூறினுள்; இவ்வாறு களவு நடைபெறுவது நீண்ட நாட்கள் நடைபெற முடியாது என்பதை எடுத்துக் காட்டினுள்; என்ருவது ஒரு நாள் தலைவியினுடைய தந்தை அல்லது அண்ணன்மார்களிடம் அகப்பட்டுக்கொள்ள நேரிடும் என்று அச்சுறுத்தினுள்; களவுக் காலத்தில் சில மணி நேரமே பெறக்கூடிய இன்பத்தை இடையீடுபடாமல் அனுபவித்துக் கொண்டிருக்கலாமே என இவனுடைய ஆசையைத் தூண்டிவிட்டுப் பார்த்தாள். இவ்வளவு தூரம் அவள் கூறியும் இவன் அதற்காக எல்லாம் அசைந்து கொடுத்தால்தானே! ஒன்றுமே நிகழா

ததுபோல இவன தினம பகலிலும இரவிலுமாக வநது போகிறான. இவனுககு மட்டும தோழி கூறும காரணங்கள தெரியாதவைகளா? தெரிந்திருந்தும பினனா ஏன களவை நீடடித்துக் கொண்டிருககிறான்? இத்தனை தொல்லைகளையும மீறி இவன் களவை நீடடிக்கிறான என்றால, அதில் ஏதோ சிறபபு இருக்க வேண்டும.

பிறர் அறியாமல் செயகிற ஒவவொரு செயலிலும் மனிதன இனபததை அடைகிறான போலும்! ஆகையால், களவு வாழக்கையில் அதிக இனபம பெறுவதாக எண்ணி,' தலைவன களவை நீட்டித்தான போலும்! இதே தலைவன தான் இபபொழுது குடுமபம நடத்துகிறான, அதே தலைவியுடன, ஆனால், திடீரென்று ஒருநாள இவனுக்குப பழைய ஞாபகம எங்கிருந்தோ வந்துவிட்டது போலும்! பிறா அறிந்தால எளளி நகையாடுவா என்று அறிந்திருந்தும, இவன பரத்தை வீட்டிற்குப் போய்வர முடிவு செயதுவிட்டான. இவனமேல் அதிகத் தவறு கூறவும காரணம இல்லை. இவன ஒரு கலைஞன. இவனுடைய கலை மனம பிறருடைய அங்க நெளிவுகளிறகூட ஓர் அழகைக் காண்கிறது. பாடலைககொண்டு இவன எவ்வளவு கலையுளளம படைத்தவன என்பதை அறிதல் கூடும. எனவே, எங்கோ ஒருநாள ஒரு பரத்தையின் ஆடல பாடலகளைக் கணடும கேட்டும மகிழ்ந்தான். முதலில் அவளுடைய கலையிலே தான இவன ஈடுபட்டான; கலையுளளம எததுணைச சிறந்ததாக இருப்பினும, அதனால் சில தீமைகளும விளைதல் கணகூடு

கலை உளளம் என்றால் அது எளிதில் உணர்ச்சி வசப்படக கூடியது என்பதை அறிந்து

கொள்ளலாம். உணர்ச்சி எவ்வளவுக்கு எவ்வளவு மிகுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு கலையில் ஈடுபட முடியும். எனவே, கலையும் உணர்ச்சியும் கைகோத்துச் செல்லும் இயல்புடையன என்பதையும் அறியலாம். உணர்ச்சி மிகுந்துவிட்ட பொழுது மனிதன் அறிவையும் நடுவு நிலையையும் இழக்க நேரிடுகிறது. அறிவை இழக்கும்பொழுது செய்யத் தகுவன இவை, தகாதன இவை என்ற பாகுபாடு மறைந்துவிடுகிறது. உதாரணமாக, கோபம் என்ற உணர்ச்சியை எடுத்துக்கொள்வோம். எத்துணைச் சிறந்த பெரியவர்களும் கோபம் உற்ற பொழுது தவற்றைச் செய்துவிடுகின்றார்கள். கோபம் தணிந்த பிறகு தாமே தம் செயலைக் கண்டு வெட்கித் தலை குனிகின்றனர். என்றாலும், மறுமுறை கோபம் வாராமல் இருப்பதில்லை. எனவே, கோபம் முதலிய உணர்ச்சிகள் மிகும்பொழுது அறிவும், நடுவு நிலையும், ஆராய்ச்சியும், நன்மை தீமை முதலிய பாகுபாடும் விடைபெற்றுக்கொள்ளும் என்பது தெளிவு. இக் காரணத்தாலேதான் சிறந்த கலைஞர்கள் 'வாழ்க்கையில் பெரும்பாலும் தவறிவிடுகிறார்கள்.

இறைவனிடம் செலுத்தப்படும் பத்தி உணர்ச்சி ஒன்று நீங்கலாக, ஏனைய உணர்ச்சிகள் அனைத்தும் இத்தீமையை ஓரளவு செய்யாமல் இருப்பதில்லை. பரத்தையின் ஆடல் பாடலைக் கண்டு கேட்டு மயங்கிய தலைவன், அவ்வாடல் பாடல்களிலேதான் முதலில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால், உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றிய இந்த ஈடுபாடு மெள்ள அவன் அறிவை மயக்கிவிட்டது. நாட்கள் செல்லச் செல்ல, அக்கலையில் இருந்த ஈடுபாடு அக்கலைப் பொருளில் செலலத் தொடங்கி

விட்டது. பரத்தையின் ஆடலில் கொண்ட ஈடுபாடு மெள்ள அவளிடமே செல்லத் தொடங்கிவிட்டது. ஒரு நாள் அவள் வீடு சென்றே வந்துவிட்டான்.

இவ்வாறு இவன் பரத்தை இல்லம் சென்று மீண்டும் தன்னுடைய வீட்டில் புகுந்தான். தன் வீட்டில் தன் வரவைத் தடுக்க யாருக்கும் உரிமை இல்லை என்பதைப் பறை சாற்றுபவன் போல மிகக் இறுமாப்புடன் வீட்டினுள் நுழைந்துவிட்டான். அங்கே தலைவிக்கு இவனுடைய செயல் தெரிந்து விட்டது. அவள் ஒன்றுமே பேசவில்லை. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் இரண்டு வகையில் நடந்துகொள்ளும் இரண்டு வகையான தலைவியர்கள் உண்டு. ஒரு வகையார் உடனே தலைவனிடம் பெரு வாய்ச் சண்டை இடத் தொடங்கிவிடுவர். தலைவன் பாடு முதலில் வருந்தத்தக்கதாக இருப்பினும், உடனே தலைவியின் கோபம் ஆறிவிடும். அதிலும் வாய் திறந்து கூச்சலிட்டுச் சண்டை பிடிப்பவர் உடனே தம் கோபம் ஆறிவிடுவர். ஆனால், இரண்டாம் வகையைச் சேர்ந்தவரே அஞ்சத் தக்கவர். இவர்கள் வாய் திறந்து சண்டை செய்வதில்லை. ஏன்? தங்கட்குப் பிடிக்காத நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்துவிட்டால் வாய் திறவாமல் இருந்துவிடுவர்; சிலரைப் போலக் கூச்சல் இடுவதில்லை. தம் கடமைகளுள் ஒன்றும் தவறுவதும் இல்லை. ஆனால், தமக்குத் தீங்கிழைத்த கணவரிடத்து முகந்தந்து பேசமாட்டார்கள். இவர்களுடைய இச்செயல் அக்கணவன்மார்களை வாள்கொண்டு பிளப்பதுபோல இருக்கும். இம்மாதிரி இனத்தைச் சேர்ந்த தலைவி ஒருத்தியுடன் வாழும் தலைவன் தான் பரத்தை வீடு சென்று மீண்டான். தலைவி வாய் திறந்து ஒரு வார்த்தையும்

பேசவில்லை. இவனுடைய வீட்டிலேயே இவன் புதியவன் போல இருக்க வேண்டியதாய்விட்டது. தன்னுடைய நிலைமையைக் குறித்து இவன் வருந்துகிறான். எவ்வாறு இருந்தால் இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து நீங்க முடியும் என்பது இவனுக்கு நன்கு தெரியும். ஆம். விருந்தினர் இப்பொழுது வந்துவிட்டால் தலைவியின் கோபம் போய்விடும். எனவே, வீட்டுத் திண்ணையில் அமர்ந்து இத் தலைவன் உள்ளே நடமாடும் தலைவியைப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறான். 'யாரேனும் விருந்தினர் வந்து நம்மை இப்பொழுதுகாப்பாற்றமாட்டார்களா!' என்ற கவலையில் ஆழ்ந்து இருக்கிறான்.

'எருமைக் கன்றுகள் தூண்தோறும் கட்டி இருப்பதால் அழகு மிகுந்த வீட்டினகண், வளைந்த குண்டலங்களை அணிந்த தலைவி, சிறிய மோதிரம் செறித்த மெல்லிய விரல் சிவக்கும்படி வாழை இலையின் அடிக்காம்பு பெரிதாய் இருக்கிறது என்பதால் அதனைக் கிழித்துவிட்டுப் பரிகலம் அமைத்துவிட்டுச் சமையல் அறையில் புகை படிந்த கண்களுடனும் நெற்றியில் வியர்வையுடனும் இருக்கும் இப்பொழுது நம்மிடம் பெருங்கோபம் கொண்டுள்ளாள். இப்பொழுது யாராவது விருந்தினர்கள் வருவார்களாக! விருந்தினர் வந்துவிட்டால் இவள் கண் கோபத்தால் சிவப்பதில்லை; புன்சிரிப்புடன் கூடிய முகத்தினை உடையவளாய் இருப்பாள். ஆதலால், பிறகு நாம் இவளுடன் மகிழ்ந்து இருக்கலாம்,' என நினைக்கிறான்.

"தடமருப்பு எருமை மடநடைக் குழவி
தூண்தொறும் யாத்த காண்தகு நல்லில்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை

சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாழை ஈர்ந்துஅடி வல்லிதின் வகைஇப்
புகைஉண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அம்மா அரிவை;
எமக்கே வருகதில் விருந்தே; சிவப்பாள் அன்று;
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே."

(நற்றிணை, 120)

[தடமருப்பு-வளைந்த கொம்பு; மடநடைக் குழவி-தளர்ந்த நடையுடைய கன்று; காண்தகு-அழகிய; கொடுங்குழை-வளைந்த மகர குண்டலம்; செழுஞ்செய் பேதை-செழுமையான சிவந்த நிறமுடைய இவள்; தகைபெற-அழகுசெய்ய; பிறைநுதல் .. துடையினள்-தனது பிறைச் சந்திரன் போன்ற நெற்றியில் தோன்றிய சின்ன வியர்வைத் துளிகளைப் புடைவையின் தலைப்பால் துடைத்துக்கொண்டு; நப்புலந்து-நம்மேல் கோபித்துக்கொண்டு, அட்டிலோளே-சமையல் கட்டில் உள்ளாள், சிவப்பாள் அன்று-கோபத்தால் கண் சிவக்க மாட்டாள், சிறிய முள .. ..கம்மே-சிறிய முள்ளைப் போலும் இவள் பற்களால் சிரிப்பதைப் பார்க்கலாம்.]

தலைவி கோபித்துக்கொண்டு சமையல் கட்டில் இருக்கின்ற இந்த நேரத்திற்கூட அவளுடைய குழையணிந்துள்ள முகத்தையும், வாழைப் பட்டையை உரிக்கையில் சிவந்துபோன கையையும், சமையல் செய்வதால் உண்டாகும் வியர்வையைத் துடைத்துக்கொள்ளும் அழகையும் காண்கிற இத் தலைவன் ஒரு சிறந்த கலைஞனாகத்தான் இருத்தல் வேண்டும். எனவேதான் இவன் வாழ்க்கையில் இத்தவற்றைச் செய்துவிட்டான் போலும்!

* * * *

'நான் இறந்தால் தொல்லை தீரும்!'

இருவரும் விட்டுக் கொடாத பொழுது அவர்களைச் சேர்த்து வைக்கத் தோழி கையாண்ட தந்திரம் இது.

இரண்டு பேர் மனம் மாறுபட்டுப் பூசலிடும் பொழுது இடை நின்று நீங்கள் சமாதானம் செய்ய முற்பட்டதுண்டா? சண்டை வலுவாக நடைபெறும் பொழுது சமாதானத்திற்குப் போகிறவர் மிகவும் வன்மையுடையவராய் இருத்தல் வேண்டும். பல சமயங்களில் சண்டை இடும் இருவருமே சேர்ந்து இடை நிற்பவரை அடித்துவிடுதலும் உண்டு. எனவே, போரிடுபவர்களிடையே அமைதியை நிலை நாட்டப் போவது அவ்வளவு இனிய செயல் அன்று. ஆனால், எல்லா இடங்களிலும் இந்நிலை ஏற்படும் என்று கூறுவதற்கில்லை. பல சமயங்களில் பூசல் இடுகிறவர்களைப் பொறுத்தே இடை நிற்பவர் நிலைமை முடிவு செய்ய முடியும். பூசலிடுபவர் பண்பும் நாகரிகமும் உடையவர்களாக இருப்பின், இடை நிற்பார் நிலை அவ்வளவு தீமையுடையதாகிவிடாது. எவ்வளவு மாறுபாடும் சினமும் இருந்தாலும் எல்லை கடந்து போகாமல் காக்கின்றவர்களும் உண்டு அல்லவா? கணவன் மனைவியர் போராட்டம் பெரும்பாலும் இந்த வகையையே சேரும். பண்புடைய தலைவனும் தலைவியும் கூடி வாழ்க்கை நடத்தும் பொழுதும் சில சந்தர்ப்பங்களில் கருத்து வேறுபாடு தோன்றிவிடுகிறது. அப்பொழுதும் பூசல் ஏற்படும். ஆனால், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்லும் மனப்பான்மை காரணமாக உடனே அம்மாறுபாடு நீங்கிவிடுவர். இத்தகைய போராட்டங்களில் பெரும்பான்மை மனைவியும் சிறுபான்மை

கணவனும் விட்டுக்கொடுத்தல் இயற்கை. பெரும்பாலும் போராட்டத்தின் காரணத்தை ஒட்டித்தான் இம்முடிவும் ஏற்படும்.

சில சந்தர்ப்பங்களில், போராட்டத்தின் காரணத்தை ஒட்டி இப்பூசல் நீண்ட நாட்கள் நடைபெறுவதும் உண்டு. கணவன் ஒழுக்கக்கேடு செய்கிறான் என்பதை எந்த மனைவியும் எளிதில் மன்னிக்க மாட்டாள். இன்றும் தென்தமிழ் நாட்டில் 'வட்டில் சோற்றைப் பங்கிட்டாலும் வாழ்க்கையைப் பங்கிடமாட்டாள்,' என்று வழங்கும் பழமொழி இக்கருத்தை வலியுறுத்தி நிற்கின்றது. கணவன் செய்த தவறு எதுவாயினும், அதனை முழு மனத்துடன் மன்னிக்காத மனைவியே இல்லை என்று கூடக் கூறிவிடலாம். ஓயாமல் மனைவியை அடிக்கும் கணவன்மார்—ஒரு நாளில் இருபத்து நான்கு மணி நேரமும் 'பீப்பாயில்' மிதக்கும் 'பெருங்குடி' மக்களான கணவன்மார் — திருமங்கலியத்தையும் திருடிச்சென்று அஸ்வமேத யாகத்திற்கு (குதிரைப் பந்தயம்) பலியிடும் கணவன்மார் என்னும் இத்தகைய கணவன்மார் அனைவரையும் மன்னித்து விடுகின்ற மனைவிமார் உண்டு. இன்னும் சில குடும்பங்களில் மேலே கூறிய அனைத்துப் பண்பாடுகளையும் ஒருங்கே பெற்ற கணவன்மாரும் உண்டு. இவ்வளவு தீய பண்புகள் நிறைந்திருந்தும், அக்குடும்பங்களில் நாம் சற்றும் எதிர்பாராத ஒற்றுமை நிலவுவதுண்டு. அம்மனைவிமார் தம் கணவர்களை நல்லவர்கள் என்றும், சேர்க்கை காரணமாகவே கெட்டுவிடுகிறார்கள் என்றும் கூறுவதைக் கேட்டு வியவாமல் இருக்க முடியாது. இவ்வளவு குற்றங்

பெருந்தன்மையோடு மன்னித்துவிடும்

ஒரு மனைவிகூட மன்னிக்க முடியாததும் விரும்பாததுமான ஒரு குற்றம் உண்டு. அந்தக் குற்றத்தை ஒரு கணவன் செய்துவிட்டால், வேறு துறைகளில் அவன் எவ்வளவு சிறந்தவனாயினும், அவன் மனைவி அதற்குத் தாள மாட்டாள். இதன் அடிப்படை மனத்தத்துவம் யாதாக இருக்கலாம் என்று அறிதற்கில்லை. தன்னை ஒத்த வேறு ஒரு பெண்ணைத் தன்னுடைய கணவன் நாடினான் என்று நினைக்கும் பொழுது அம்மனைவியினுடைய 'அகங்காரம்' தாக்கப்படுகிறது. தன்னிடத்து இல்லாத எந்த அழகைத் தன் கணவன் அப்பிற பெண்ணிடத்துக் கண்டான் என்ற எண்ணம் முதலில் தோன்றும் போலும்! தன்பால் இல்லாத ஒன்றை அவள் பெற்றிருந்த காரணத்தாலேயே தலைவன் அவளை விரும்பினான் என்ற நினைவு தோன்றியவுடன் பொறாமைதான் முதலில் தோன்றுகிறது. தன்பால் அந்த ஒன்று இல்லையே என்ற நினைவு தோன்றுந்தோறும் அவளுடைய அகங்காரம் ஆயிரம் புண்ணைப்பெறுகிறது. எனவே, கணவன் தனக்கிழைத்த தீங்கை மிகப் பெரிதாக நினைக்கிறது மனைவியின் மனம். ஏனைய குற்றங்களை அவன் புரிகையில் தலைவிக்கு நேரடியாக அதிக 'நஷ்டம்' ஒன்றும் ஏற்படுவதில்லை. ஒரோவழிப் பொருள் நட்டம் முதலிய தோன்றினாலும், தன் மாட்டு அவன் வைத்திருக்கும் அன்புடன் தலைவி இந்த நட்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறாள். எனவே, இந்த நட்டம் பெரிதாகப் படுவதே இல்லை. பிறர் அவனுடைய செயலையும் அவன் அழிக்கும் பொருளையும் கண்டு அஞ்சுகின்றனர்; அவனிடங்கூட முறையிடுகின்றனர். ஆனால், அவர்கள் அவனுடைய செயலில் ஒரு பகுதியைத் தான் காண்கின்றனர். அவர்கள் காணாததும

காண முடியாததுமான மற்றொரு பகுதியை அவள் ஒருத்தி மட்டுமே காண முடியும். அந்த மற்றொரு பகுதிதான் அவன் அவளிடம் காட்டும் அன்பு. அவன் காட்டுகின்ற கண்ணால் காணமுடியாத அன்பின் எதிரே அவனுடைய ஏனைய தவறுகள் அனைத்தும் மறைந்துவிடுகின்றன. ஆதலால், தான் அவளிடம் கொண்ட அன்பு குறையாமல் அவன் எத்தனைப் பிழைகள் செய்தாலும், அவள் அவற்றைப் பெரிதாக மதிப்பதே இல்லை. இன்றில்லாவிடினும் நாளை அவன் திருந்திவிடுவான் என்ற உறுதியான நம்பிக்கையில் அவள் மகிழ்ச்சியுடன் வாழ்நாளைக் கழிக்கிறாள். நாகரிகம் மிகுந்துவிட்ட குடும்பங்களில் இந்தப் பண்பாட்டைக் காண முடியாது. காரணம், நாகரிகம் (தற்கால ரகம்) மிகும் பொழுதே போலித்தன்மையும், உள்ளொன்று வெளியொன்றுமாக நடந்துகொள்ளும் இயல்பும் உடன் தோன்றிவிடுகின்றன. எனவே, ஒருவர் மாட்டு ஒருவர் காட்டும் அன்பு, வருத்தம், வெறுப்பு முதலிய அனைத்துமே ஓர் எல்லைக்கு உட்பட்டுப் பிறர் அறியாவாறு காட்டப்படுகின்றன. ஆதலாலேதான் போலி நாகரிகம் மிகுந்த குடும்பங்களில் மேலே கூறிய தலைவி இயல்பை நன்கு காண்டல் இயலாது. ஆனால், போலி நாகரிகம் முற்றாமல் உள்ளத்தே தோன்றும் உணர்ச்சியை மறைக்காமல் வாழ்ந்து வரும் கிராமத்துக் குடும்பங்களில் இன்றும் இந்தப் பண்பாட்டைக் காணலாம்.

மேலே கூறிய முறையில் உள்ளத்து உணர்ச்சியை ஓரளவு வெளிப்படையாகவே காட்டப் 'பழகிய தலைவி ஒருத்தி; அவள் இல்லறம் நடத்தத் தொடங்கியது கருத்தொத்த கணவனுடனேதான். அந்தக்

கணவனும் அவளும் தமிழர் முறைப்படி முதலில் களவு வாழ்க்கையில் ஈடுபட்டுப் பின்னர்க் கற்புநெறி கடைப் பிடித்தவர்தாம். அந்த நாளில் அவன் அவள் மாட்டுக் கொண்டிருந்த காதலுக்கு எல்லையே இன்று என்று கூறலாம். தன் காதலைப் பலபடி யாக எடுத்து அவளிடம் அவன் கூறியதும் உண்டு. அந்த நாட்களில் அவளைத் தவிர அவன் வேறு பெண்களைக் கண் எடுத்துக்கூடக் கண்டதில்லை. அவளைப் பொறுத்த மட்டில் உலகில் வேறு பெண் களே இல்லை என்றுகூடக் கூறிவிடும் நிலையில் இருந்தான். ஒரு நாள் அவன் இந்தத் தலைவியை உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டான். இதனை 'உடன் போக்கு' (Elopement) என்றுகூறும் இலக்கியங்கள். அவ்வாறு இத்தலைவன் இத் தலைவியைக் கூட்டி வரப் பேருதவி புரிந்தவள் இத் தலைவியினுடைய தோழிதான். எங்கோ சென்ற இவர்கள் இறுதியில் திருமணம் முடித்துக்கொண் டனர். திருமணம் முடிந்து குடும்பம் வைத்த பிறகு தலைவி தன்னுடைய உயிர்த் தோழியை வர வழைத்துத் துணையாக வைத்துக்கொண்டாள். இவர்களுடைய இல்லறம் நன்றாகத்தான் நடை பெற்று வந்தது.

நாட்கள் சென்றன; தலைவன் முன் போல இல்லை என்பதைத் தலைவி மெள்ள உணரலானாள். அவளை விட்டுச் சிறிது நேரம் பிரிந்திருக்கவும் விரும் பாத தலைவன், இப்பொழுது ஏதாவது ஒரு சிறு காரணத்திற்காகவும் பிரிந்து இருக்க முற்பட்டான்; நாளாவட்டத்தில் இரவு நேரங்களிற்கூட வீட்டில் தங்காமல் வெளியே இருக்க முற்பட்டான். தலை விக்கு இது மிகப் பெரிய ஏமாற்றமாகவும் வருத்த

மாகவும் இருந்தது. யாரிடம் அவள் தன் வருத்தத்தைத் தெரிவிக்க முடியும்? தலைவன் எங்கோ பரத்தையர் வீட்டிற்குச் சென்று வருகிறான் என்று ஊரார் மெல்லப் பேசிக்கொண்டது தலைவியின் காதில் விழுந்தது. திடீரென்று மிகுதியும் கலவரமடைந்த அவள், தோழியிடம் குறிப்பாக இதைத் தெரிவித்தாள். தன்னைப் போல அவளும் இதைப் பெரிய துன்பமாகக் கருதி வருந்துவாள் என்று தலைவி எதிர்பார்த்தாள். ஆனால், என்ன ஏமாற்றம்! தோழி இது பற்றிக் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. 'என்ன! இவள் என்னுடைய தோழிதானா!' என்று அவள் மேல் பெரிய சீற்றங் கொண்டாள் தலைவி.

தோழிக்குத் தலைவியிடம் அன்பு இல்லையா? தலைவன் தவறு இழைக்கிறான் என்பது அவளுக்கு மட்டும் தெரியவில்லையா? நன்றாகத் தெரிகிறது! என்ன செய்ய வேண்டும் என்று அவள் ஆராய்ந்து பார்த்தாள்; தலைவனை நெருங்கிச் சண்டை போடலாமா என்று கூடக் கருதினாள். ஆனால், அதனால் பயன் உண்டாகுமா? தலைவிதான் ஓயாமல் தலைவனுடன் பிணங்கிக்கொண்டு சண்டையிடுகிறாளே! தலைவனைச் சண்டையிட்டு நல்வழிக்குத் திருப்புவதாயின், எப்பொழுதோ தலைவியே திருப்பி இருக்கலாம். சண்டை இட்டு அவனை மாற்றமுடியாது என்பதற்குத் தலைவியே சான்றாகிவிட்டாள். எனவே, தோழி மேலும் சிந்தித்தாள். எஞ்சியுள்ளது ஒரேவழிதான். அன்பு வழியால் அவனைத் திருத்தினால் என்ன? அன்புக்குக் கட்டுப்படாதவர் எவரேனும் உண்டா? ஏன் உலகை வெல்லக்கூடிய அன்பு இத்

தலைவனிடம மட்டும் பயன் இல்லாமல் போக வேண்டும? தலைவியிடம் நிறைந்த அனபுடையவன தான் அவன! ஆண்களுக்குரிய சில தவறுகளும் அவனிடம் இருககின்றன. தான் செய்யும காரியத்தால் தலைவிக்கு ஒனறும் தீங்கு நேராது எனறு அவன் நினைத்துககொண்டிருக்கிருன. அதனுலே தான அவன் தவருன வழியில செனறுகொண்டே இருக்கிருன. இந்த நிலையில் அவனை இடித்துப பேசிப் பயன் இல்லை. அனபு வழியில் அவன தவற்றை எடுத்துக்காட்டவேண்டும. தலைவிக்கு—அவனால் பெரிதும விருமபபபடும தலைவிக்கு—அவன் எவ்வளவு பெரிய தீமையைச் செய்து கொண்டிருக்கிருன எனபதை எடுத்துககாட்டவேண்டும். அபபொழுது அவன தானுகத் திருந்திவிடுவான எனபது தோழியின எண்ணம. இவவெண்ணத்தை மெள்ளத் தலைவிக்கு எடுத்துக் கூறினுள் தோழி. அவள் ஒரேயடியாகக் தோழியினமேல் சினந்து கொண்டாள். தோழிககுக்கூடத் தன்மேல் அனபு இல்லை என்றும, அதனுலேதான் தனக்காகப் பரிந்துகொணடு தலைவனிடம சண்டை இடவில்லை என்றும ஆத்திரத்துடன கூறினுள். தோழியினமேல் வந்த சினத்தை எல்லாம தலைவி தலைவனமேல் காட்டினுள. எனறு ஒரு நாள வீடு தேடி வருகிற அவனை இம்மாதிரிச் சினங்கொணடு வெருட்டுதலினுல் மேலும தீமை ஏற்படுமே தவிர நனமை விளையாது எனபதைத் தோழி மட்டுமே உணர்கிருள். எனன செய்வது? தலைவனுக்காகப பரிந்து பேசினுல் தலைவியின் சினத்திற்கு• ஆளாக வேணடும. தலைவியுடன் சேர்ந்து தலைவனைச் சினந்து கொண்டாலோ, தலைவன ஒரேயடியாய்ச் செனறுவிடும் பெரியதொரு தொல்லை வந்

துவிடும் என அஞ்சுகிறாள் தோழி பாவம்! அவளுடைய நிலைமை மிகக் கேவலமாகி விட்டது.

ஒருநாள் தலைவன் எதிர்பாராவிதமாக வந்தான். தோழி சென்று அவனுக்கு இன்முகங் காட்டி உள்ளே வருமாறு உபசரித்தாள்; பிறகு தலைவியிடம் சென்று தலைவன் வந்துள்ள செய்தியை அறிவித்தாள். தலைவி தன்னை அலங்கரித்துக் கொண்டு தலைவனைச் சென்று வரவேற்கவேண்டும் என்று தோழி வற்புறுத்தினாள். தலைவி பெருஞ் சினங்கொண்டு தலைவனையும் தோழியையும் வெறுத்துப் பேசினாள். இந்த நிலையில் மனம் நொந்துபோன தோழி பேசுகிறாள். இருவர் சண்டையிடும் பொழுது சமாதானம் செய்துவைக்கப்போன தோழியின் அனுபவம் இதோ பேசப்படுகிறது.

வயல் அருகில் பலா மரம் பெரியதாய் நிற்கிறது. அப்பலாமரத்தில் உள்ள இலைகளைக் கூடு போலச்செய்து சிவந்த சுளுக்கி எறும்புகள் (முயிறு) முட்டை இட்டுள்ளன. அவ்விலைக்கூடுகளுள் சிவந்த எறும்புகளும் முட்டைகளும் நெருங்கி வாழ்கின்றன. வயலில் மீன் உணவை நாடி வந்த நாரை பலா மரத்தில் உள்ள இக்கூட்டினுள் நீண்ட அலகை வைத்து உறிஞ்சுகிறது. நாரை உறிஞ்சியவுடன் உள்ளே உள்ள சிவந்த எறும்புகளும் அவற்றின் வெண்மையான முட்டைகளும் வயலில் உதிர்ந்துவிடுகின்றன. அவை உதிர்ந்துகிடப்பது செந்நெல்லும் வெள்ளை அரிசியும் கலந்து கொட்டிக் கிடப்பதுபோல இருக்கிறது. அத்தகைய மருத நிலங்களையுடைய தலைவன் பரத்தை மகளிர் பலரை முயங்கும் விருப்பத்தால் நம்முடைய வீட்டினுள்ளே வாராமல் இருக்கின்றான். ஒருவேளை அவன் வரினும் அந்த நேரத்தில் நம்மை

நிறத்தையுடைய தலைவி அவனுடைய பெருந்தன்மையை விரும்பி அவன்மேல் கொண்டுள்ள கோபத்தை விடவும் இல்லை. அன்னி என்பவனும் பெரிய மன்னனாகிய திதியன் என்பவனும் ஒரு புன்னை மரம் காரணமாகச் சண்டை இட்டனர். இறுதியில் புன்னை மரத்தை வெட்டி வீழ்த்திய பிறகே இருவரும் அமைதியடைந்தனர். அதுபோல இத்தலைவனும் தலைவியுமாகிய இருவரும் இடையில் நிற்கின்ற நான் இறந்தால்தான் தம்முடைய சண்டையை நிறுத்துவர் போல இருக்கிறது!" என்ற கருத்தில் தோழி கூறுவதாக அமைந்துளது பாடல்.

"பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி நாரை உரைத்தலின் செந்நெல்
விரவுவெள் ளரிசியில் தாஅம் ஊரன்
பலர்ப்பெறல் நசைஇநம் இல்வா ரலனே!
மாயோள், நலத்தை நம்பி விடல்ஒல் லாளே!
அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இருபெரு வேந்தர் பொருகளத்து ஒழித்த
புன்னை விழுமம் போல
என்னொடு கழியும்இவ் விருவரது இகலே."

(நற்றிணை, 180)

[பழனம்-வயல், பாகல்-பலா மரம்; முயிறு சிவப்பு நிறமுடைய சுறுக்கு எறும்பு; மூசு-நெருங்கு; குடம்பை-கூடு, உரைத்தலின்-உதிர்த்தலால்; தாஅம்-பரந்து கிடக்கும், நசைஇ-விரும்பி; நலம்-பெருந்தன்மை; அன்னி-ஒரு சிற்றரசன்; பெரியன்-திதியன் என்பான்]

'புன்னை மரம் வெட்டுண்ட பிறகே திதியனும் அன்னியும் பகைமை ஒழிந்தது போல, யான் ஒழிந்த பிறகே இவர்கள் பூசல் தீரும் போலும்!' என்று துகொள்கிறாள் தோழி.